யூகி முனி

வாதாங்க தீக்ஷாவிதி 300
வாத வைத்திய விளக்கம் 200
மதி வெண்பா 100

உரைக்குறிப்புகளுடன்

தாமரை நூலகம், சென்னை – 26.

யூகிமுனி

வாதாங்க தீக்ஷைவிதி - 300
வாதவைத்ய விளக்கம் - 200
மதிவெண்பா - 100

பதிப்பாசிரியர்

ஆர்.சி. மோகன்

தொலை பேசி எண் - 23620249.

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி,
வடபழனி, சென்னை - 600 026.

தாமரை வெளியீடு எண் : 149
முதல் பதிப்பு : ஜூன் - 1995
இரண்டாம் பதிப்பு : பிப்ரவரி- 2004
மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி 2014
நான்காம் பதிப்பு ஆகஸ்ட் 2021

நூலைப்பற்றி

உரிமைபெற்றது

நூலின் பெயர்	:	யூகிமுனி வாதாங்க தீக்ஷைவிதி 300 வாத வைத்ய விளக்கம் 200, மதி வெண்பா 100
பதிப்பாசிரியர்	:	ஆர். சி. மோகன்
வெளியிட்டோர்	:	தாமரை நூலகம் 7, N.G. O. காலனி 3வது தெரு வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	:	2021
உரிமை	:	பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	:	21 செ. மீ. x 14 செ. மீ
அச்சுத்தாள்	:	16.கி. வெள்ளைத்தாள்
எழுத்துக்கள்	:	10 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	207+8
பிரதிகள்	:	1000
நூல் விலை	:	ரு. 125.00
அச்சிட்டோர்	:	கிரியேட்டிவ ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை - 34

பதிப்புரை

இந்நூலில் யூகிமுனிவர் தம்மைத் தேரையரின் மாணவர் என்று குறிப்பிட்டுக் கூறிக் கொள்கிறார். தேரையரைப் போலவே மருத்துவத்தைப் பற்றி மிகப் பல நூல்களை இயற்றியுள்ளார்.

யூகிமுனிவரின் நூல்களின் தனிச்சிறப்பு அவற்றின் எளிமைதான்! எல்லோருக்கும் புரியக்கூடிய மிக எளிய நடையில் கும்மி, சிந்து, விருததப் பாக்களில் மருத்துவத்தைக் கூறியுள்ளார். இவருடைய பாடல்களை நினைவு வைத்துக் கொள்வது சுலபம்.

வாதாங்க தீட்கைஷ விதி 300, வாத வைத்ய விளக்கம் 200, மதிவெண்பா 100 என்ற மூன்று நூல்கள் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன. படிப்பவர்கள் எளிதில் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக உரைக் குறிப்புகள் சற்று விரிவாகவே தரப்பட்டுள்ளன.

சித்த மருத்துவம் பயில்பவர்களுக்கு இந்நூல் ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த இந்த நூலினை பாதுகாத்து வைத்திருந்து மறுபதிப்பு செய்ய அனுமதி அளித்த ஆவணக் காப்பகத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

வணக்கம்.

எஸ்.பி.ராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்.

திருமதி. எஸ்.மாலதி, இ.ஆ.ப.
ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி ஆணையர். தமிழ்நாடு ஆவணக்காப்பகம், எழும்பூர், சென்னை-8.
கடித எண்.7548/ஆநூ/95 நாள் 16.6.95

அனுமதிக் கடிதம்

பொருள் : தமிழ்நாடு ஆவணக்காப்பகம-நூலகம்-"யூகிமுனி வாதாங்க தீக்ஷைவிதி-300, வாத வைத்ய விளக்கம்-200, மதிவெண்பா-100"-மறுபதிப்பு செய்தல் அனுமதி- வழங்கப்படுகிறது.

பழைய அரிய தமிழ்நூல்களைக் காப்பாற்றி, மக்கள் படிக்க வகை செய்யும் வண்ணம், அரிய தமிழ்நூல்கள் மறுபதிப்புச் செய்யும் திட்டம் ஒன்றினை தமிழக அரசு கல்வித்துறை அரசாணை நிலை எண் 362, கல்வி, நாள் 20 92-.ல் வெளியிட்டுள்ளது. அத் திட்டத்தின்படி யூகிமுனி வாதாங்க தீக்ஷைவிதி 300, வாத வைத்ய விளக்கம் 200, மதிவெண்பா 100" என்னும் நூலை மறுபதிப்பு செய்வதற்காக தாங்கள் செய்து கொண்ட மனு ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

ஆணையருக்காக,
எஸ்.மாலதி
ஆணையர்
16.6.95

பெறுநர்: தாமரை நூலகம்
7, என்.ஜி.ஓ. காலனி,
வடபழனி, சென்னை-26.

பொருளடக்கம்

யூகிமுனி மதிவெண்பா 100

யூகிமாமுநி
வாதாங்க தீக்ஷைவிதி 300

காப்பு - நூற்பெயர்

சத்தியென்ற வுமையவள்தன் பாதம் போற்றிச்
சதாசிவத்தின் மகன் பாதந் தலைமேல் சாத்தி
நித்தியமா மநுதினமும் போற்றி நின்று
நினைவாக ஆயுள்வே தத்தைத் தானும்
பத்தியாய் வாதாங்க முந்நூறாகப்
பதிவான தீக்ஷைவிதி சுருக்க மாகச்
சுத்தியா யாராய்ந்து எடுத்துச் சொல்வேன்
சொரூபமா யிதின் விரிவைப் பார்த்துத் தேரே 1.

வாதமுபதேசித்த பரம்பரை

தேரவே சிவன் சொல்ல அம்மை சொல்லச்
சிறப்பான அஸ்வினியுஞ் சொல்லக் கேட்டு
ஆரவே யஸ்வினியும் நந்திக் கோத
அடைவான நந்திதன் வந்த்ரிக் கோத
சாரவே தன்வந்திரி அகஸ்த்தி யர்க்குச்
சாற்ற அகத் தியருரைக்கப் புலத்தியர்க்கு
நாரவே புலத்தியருஞ் சந்தோஷித்து
நலமாகத் தேரருக்குச் சொன்ன வாறே. 2

சொன்னதொரு தேரருமே மனது கூர்ந்து
சொற்பெரிய யூகிமுனிக் குபதே சித்தார்
நன்னயமா யூகிவட மொழியைப் பார்த்து
நலமாகப் படித்துமே யுழைத்துத் தேறி
இந்நிலத்தி லாயுளுவின் வேத மாக
இன்பமா யுலகத்தோர் பிழைக்க வேண்டிப்
பின்னையொன்று மிணையில்லா வாதாங் கத்திற்
பிரபலமாய் வாதத்தைச் சொன்னேன் பாரே. 3

இந்நூலில் கைபாக மனைத்துஞ் சொன்னேனெனல்

பாருமே களங்குமுதல் சிந்து ரங்கள்
பதிவான சவுக்கார மெழுகு தானும்
ஆருமே தூமமுதல் வேதை மார்க்கத்
தடைவான கைபாக வரிசை தானுங்

காருமே யெண்ணெய்முத லப்பா கேளு
கருதியே வகைவிபர மாகச் சொல்லி
ஏருமே முந்நூற்றில் முடித்துச் சொன்னேன்
இதமான பொருளெல்லா மியல்பாய்க் கேளே. 4

சவுக்காரக் குழம்பினால் கல்லுப்பைச் சுண்ணஞ்செய்து ஜெயநீராக்கிடின் அதனாற் சகலசரக்குங் கட்டுமெனல்

கேளுமே தீக்ஷைவிதி தன்னில் தானுங்
கெடியான நந்திசொன்ன சவுக் காரத்தை
ஆளுமே அதைவைத்துக் குழம்பி னாலே
அன்பான புழுகுடனே வீரங் காரம்
பாழுமே போகாமல் தெளி விறுத்துப்
பதிவான சவுக்காரக் குழம்பு தானே
நீளுமிவ் வுலகத்தில் நெறிகைக் கொண்டு
நிலையாகச் செய்திடிற்பின் நிகழ்வு பாரே. 5

பாரேநீ சவுக்காரக் குழம்பைத் தானும்
பதிவாகக் கல்லுப்பி லிட்டே யாட்டி
நாரேநீ புடம்போடப் பொங்கி நீறும்
நலமான கடுஞ்சுண்ண மாகும் பாரு
வாரேநீ சாரத்தை யிடையே சேரு
வடிவாக நீராகு மார்க்க மெத்த
தாரேநீ சகலசரக் கெல்லாங் கட்டுந்
தடையறவே சுருக்கிடவே யெல்லாங் கட்டே. 6

கட்டியதோர் சரக்குகளில் வேதை கோடி
கசடற்ற களங்குசெம்பு கோடி கோடி
தொட்டியதோர் கட்டுவகை கோடா கோடி
துடியான சிங்கிவகை களங்கு கோடி
முட்டியதோர் பழுக்கும்வகை கோடா கோடி
முத்திருஞ் சிந்தூரங் குளிகை கோடி
பட்டியதோர் கொடுப்புபழுப் பினங்கள் கோடி
பகரரிது முந்நூறும் பயின்று பாரே. 7

துரிசுச் செப்பெடுக்கும் மார்க்கங் கூறல்

பயின்றுபா ரின்னமொரு களங்கு சொல்வேன்
பதிவான யூகிமுனி பயின்ற வாறே
நயின்றுபா ரிதுசுளுவு முன்னே பாரு
நதியான சேம்பெடுக்கும் வகையைக் கேளு
தயின்றுபா ரரப்பொடியும் பலமும் பத்து
தாட்டிகமா யெலுமிச்சம் பழச்சா றிட்டு

தயின்றுபார் மூன்றுநா ளூர வைத்துத்
    தப்பாமல் மூன்றாம்நா ளிறுத்துக் கொள்ளே. 8

கொள்ளவே சொல்லுகிறே னுற்றுக் கேளு
    கெடியான துருசதுவும் பலமோ பத்து
மெள்ளவே நாறும்பூ பலமும் பத்து
    மேன்மையாய்க் கல்வத்தி லிதனைக் கொட்டித்
துள்ளவே அயநீரா லரைத்து வில்லை
    துடியாகக் காயவைத்துச் சொல்லக் கேளு
வள்ளலே கிளிஞ்சிலென்ற சுண்ணம் நேரே
    வகையாகக் கல்லுப்பைச் சேர்த்துக் கொள்ளே 9

சேர்த்துமே அரைத்துநீ வில்லைக் குத்தான்
    சிறப்பாக மேல்கவசம் கவனமாய்ச் செய்து
பார்த்துமே கெஜபுடமாய்ப் போட்டெ டுக்கப்
    பதிவான வில்லையது கறுத்திருக்கும்
வார்த்துமே கறுப்பதனைக் கல்வத் திட்டு
    வகையான வெண்காரஞ் சேர்த்த ரைத்து
மூர்த்துமே வில்லைபண்ணிக் காய வைத்து
    முடிவான புடம் போட்டு எடுத்துப் பாரே. 10

இதற்கு வெடியுப்புத் திராவகம்

எடுத்துமே பார்த்தவுடன் கறுப்பு மாகும்
    இதமான வில்லைதனை யப்பால் வைத்து
அடுத்துமே திராவகத்தைச் சொல்லக் கேளு
    அடைவாக வெடியுப்பு பலமோ பத்து
நடுத்துமே சீனமது இருபத்தைந்து
    நலமாக விரண்டுமே பொடித்துப் போடு
வடுத்துமே வாலையென்ற சட்டி மூடி
    வகையான அடுப்பேற்றி யெரித் திடாயே. 11

எரித்திடவே முன்னீர்தான் வெள்ளை யாக
    இதமாக வெள்ளையைத்தான் தள்ளிப் போடு
அரித்துமே புகைநீர் தான் மஞ்சளாக
    அடைவாக விருக்குமந்த நீரைத் தள்ளு
கரித்துமே கடைநீர் தான் மஞ்ச ளாகக்
    கனிவாகக் கடைநீர்தான் வாங்கிக் கொண்டு
வரித்துமே அரக்கென்ற குப்பி தன்னில்
    வடிவாகத் குப்பியடை வைத்துக் கொள்ளே. 12

வைத்துமே முன்வில்லை கல்வத் திட்டு
    வகையாகக் கடைநீரா லரைத்து வில்லை

சித்துமே வில்லைகட்டி ரவியில் போடு
சிறப்பாக முன்கவசம் மேலே கட்டி
நத்துமே கஜபுடமாய்ப் போட்டெடுத்து
நலமாகக் குகையிட்டு உருக்கித் தீரு
பத்துமே கசடற்றுச் செம்பு மாகும்
பதிவான செம்பினது பருவங் கேளே. 13

பருவமென்ன சொல்லுகிறேன் செம்பு தானும்
பதிவான பொன்போலே கண்விட் டாடுந்
துருவமாஞ் செவ்வலரிப் பூப்போ லாகும்
துடியுள்ள செம்புதான் வேதை யாகும்
மருவுமிவ் வுலகத்தா ரெவரு மெச்ச
வடிவான பொருளாகும் செம்பு தானுங்
கருவமாஞ் செம்பொன்னு மிதுவே யாகுங்
காயசித்தி லோகசித்தி கண்டு பாரே. 14

கண்டுபார் செம்பினது பெருமை தன்னை
கர்த்தாவால் சொல்லவே முடியா தையா
நண்டுபார் சித்தர்தா னிந்தச் செம்பை
நாதாக்கள் ஒளித்துமே மறைத்த செம்பு
கொண்டுபார் பொன்னுக்கு இதுவே யாதி
கொள்ளுவாய் சித்திக்கு இதுவே முத்தி
நிண்டுபா ரயச்செம்பு இதுவே யாச்சு
நீடூழி காலமெலாம் வாழ லாமே. 15

வாழலா மிச்செம்பைக் கண்ட போதே
வடிவான மதிபழுக்குந் தங்க மாகுந்
தாழ்விலாக் குபேரனைப் போல் வாழ்வுண்டாகுந்
தாட்டிகமாய்ச் செல்வம் வருந் தானே கண்டு
சூழவே வாதங்கை கட்டிப் போச்சு
தொல்லுலகி லரசாளத் துவக்க மாகுங்
காழலாம் ஞானசித்தி கடிசி லாகும்
கனிவான தங்கமிது கடிசி லாமே. 16

அயச்செம்பு

கடிசாகப் போகாம லயத்தைத் தானுங்
கருத்துறவே நீராக முறித்துக் கொள்ளு
படிசாகத் துருசுகெந்தி சேர்த்த ரைத்துப்
பதிவாகப் புடம்போடக் கருப்ப தாகும்
வடிவாகப் பாகமாய்ச் செய்து கொள்ளு
வளமான செம்பைமுந்தி வடிவ மாகக்
கொடிசாகச் சாத்திரத்தை யுழைத்துப் பாரு
கோடியுகம் வாழலாம் குணம தாமே. 17

குணமான அயச்செம்பை முன்னே பார்த்துக்
கூடியே சிவயோக வழியில் நில்லு
மணமாகச் செய்திடிலோ மார்க்க மாகும்
மாண்டிறந்து போகாமல் சிந்து ரஞ்செய்
பிணமான வதுபோல வாதஞ் சுட்டுப்
புரட்டாகப் போச்சுதென்பா ருலகவாதி
பணங்காண அயச்செம்பைக் கண்ட போது
பதிவான துயரமெல்லாம் போகுந் தானே. 18

துயரமென்ன அயச்செம்பைக் கண்ட போதே
துடியான சிவயோகஞ் சூக்ஷ மாகும்
அயரமென்ன ஆதிஅயங் கண்ட போதே
அடைவான சித்தியெல்லா மடைவு மாகுங்
கயரமென்னக் காயசித்தி யிதுவே யாதி
கடாட்சித்து யூகிமுனி கருணை கூர்ந்து
நயரமென்ன நாதவேதஞ் சொன்ன நீதி
நாடியே பார்த்திடவே சித்தியாமே. 19

சித்தியா மயச்செம்பு பலமும் பத்து
சிறப்பான தங்கமது பலமும் பத்து
நத்தியே யீ திரண்டு முருக்கிக் கொண்டு
நலமாகத் தகடடித்துச் சொல்லக் கேளு
முத்தியே கெந்தியது இடையே சேர்த்து
முதன்மையாம் பாணியா லரைத்துக் கொண்டு
வித்தியே தகட்டின்மேல் பூசிப் பூசி
விதமாக ஐந்துபுடம் போட்டுக் கொள்ளே. 20

போட்டிடவே அதராக நொறுங்கிப் போகும்
போக்கோடே நிறமென்ன கருப்பு மாகும்
ஆட்டிடவே கருப்பென்று மயங்க வேண்டாம்
ஆதியாங் குருவாகு மறிந்து பாரு
வாட்டிடவே வெள்ளியது பலமும் பத்து
வகையாகத் தகடாக அடித்துக் கொண்டு
நாட்டிடவே புகைநீரில் மூன்று நாளில்
நலமாகப் போட்டெடுத்து உருக்கிடாயே. 21

உருக்கிடவே மாசற்று வெள்ளி யாகும்
உத்தமனே யிருபதுக்கு ஒன்று ஈய
நருக்கிடவே மாற்றென்ன வேழு மாகும்
நலமான மாற்றைநீ விற்றுக் கொள்ளு
பெருக்கிடவே ஜீவனத்துக் கிடமே பண்ணிப்
பெலமான தேசங்க ளலைந்து சுற்றி
வருக்கிடவே குளிகைகட்டிப் பறந்து ஏறு
வகையான பொருளறிந்து வடிவாய்த் தானே. 22

வடிவான வுப்புக்குங் காவிக் கப்பா
வாகாகப் புடமிறங்குத் தங்கமாகுந்
துடியான சொல்லறிந்தான் ஞானி யாவான்
தொல்லுலகில் செம்பறிந்தோன் யோகி யாவான்
மடியான தரித்திரவா னறிய மாட்டான்
மாயமாம் வாதியவ னறிய மாட்டான்
குடியாகச் செய்தவனு மறியா னப்பா
குணங்கெட்ட வாதியை நீ கூடத் தள்ளே. 23

தள்ளியே யொருமனதா யயத்தை நீயுந்
தடையறவே யெடுத்துமே சொல்லக் கேளு
முள்ளியே யெலுமிச்சம் பழச்சாற் றுள்ளே
முக்கியமா யூரவைத்து நீரி றுத்துக்
கள்ளியே கழுவியதை வெளியாய்ப் பண்ணிக்
கனக்கவே புடமிட்டு எடுத்துக் கொள்ளு
துள்ளியே யுருக்கிடவே செம்பு மாகுந்
துடியான செம்பைநீ யெடுத்திடாயே. 24

எடுத்துமே செம்பைத்தான் மதியி லீய்ந்து
இதமாகச் சீவனங்கள் பண்ணிக் கொள்ளு
அடுத்துமே யதின்பின்னே ஞானம் பாரு
அடைவான காயசித்தி யுடனே யர்குந்
தடுத்துமே போகாமல் நூலைப் பாரு
தாட்டிகமாய்ச் சகலமுந்தான் சித்தியாகுங்
கொடுத்திடுமே ரசவாதங் கொள்ளை கொள்ளை
கூகூகூ விதன்பெருமை கூறலாமே. 25

கூறலா மேமமென்ற வித்தைக் கப்பா
குணமாக அயத்தைநீ குறிப்பாய்ப் பாரு
ஆறலாம் பொன்னென்ற வித்தை யப்பா
அடைவான கெந்திதான் தாயுமாச்சு
மாறலாந் துருசென்ற ராஜா வாலே
மதியான சத்தாச்சு வர்ணமாச்சு
பாரெல்லாம் புகைநீரா லெல்லா மாச்சு
மதிவான வாதத்தைக் கண்டு பாரே. 26

தாளகச் செம்பு

கண்டுகொள்ளு தாளகத்தன் செம்பு சொல்வேன்
கனமான செம்புதான் பலமோ பத்து
பண்டுகொள்ளு சுத்தியது சொல்லக் கேளு
பதிவான வெடியுடனே சீனங் கூட்டித்
துண்டுமே கழுதையின்றன் கத்தத் தாலே
துடியாக வரைத்துமே குழம்பாய்ப் பண்ணி

வண்டுகொள்ளு செம்பை நீ தகட டித்து
வகையாக வேழுமுறை காய்ச்சித் தோயே. 27

இதற்குத் தாளகக்கட்டு

தோய்க்கவே செம்புகட்டி நொருங்கிப் போகுந்
தொல்லுலகில் செம்புசுத்தி நல்ல தாகும்
ஆய்க்கவே யிச்செம்பு பலமோ பத்து
அடைவாகக் குகையில்வைத் துருக்கிக் கொள்ளு
நாய்க்கவே தாளகமும் பலமோ பத்து
நலமாக வெடுத்துமே சுக்கா னீரில்
பாய்க்கவே யதில்வைத்து எரித்துப் போடு
பதிவாக வுருகியது சிவந்து போமே. 28

சிவக்குமே முருக்கம்பூ நிறம தாகுஞ்
சிறப்பாக வெடுத்துமே யுடைத்துக் கொள்ளு
தவக்குமே முன்குகையில் ரவியில் தானுந்
தடையறவே கிராசம்நீ யிடையே தானும்
அவக்குமே செம்புவெண் கலமாய்த் தோன்றும்
அடைவாக வுடைத்திடவே வுடைந்து போகும்
பவக்குமே வுடைந்தசெம்பைக் கல்வத் திட்டுப்
பதிவான புகைநீரா லரைத்திடாயே. 29

அரைத்துமே வில்லை பண்ணிக் காயவைத்து
அடைவாக கஜபுடத்தில் போட்டு வாங்கிக்
கரைத்துமே யெடுத்துப் பார் களங்க மாகுங்
கதிபெறவே வெண்கார மிட்டு ருக்குப்
பரைத்துமே செம்பாகு முருக்கம் பூப்போல்
பதிவாக வேதையிது பலனு மாகுஞ்
சரைத்துமே செம்பினது மகிமை சொல்லச்
சதாசிவனு முன்பின்னாய்த் தயங்கி னாரே. 30

தயங்கினா ரிச்செம்பை பார்த்துத் தானுந்
தண்மையுடன் சித்தருமே தயங்கிப் போனார்
மயங்கினா ரிதனுடைய ஆட்டைப் பார்த்து
மயமான ரிஷிதேவர் மயங்கினார் பார்
கயங்கினா ரளவற்ற வேதை யாகுங்
கடிதான தாளகந்தா னதிக வேதை
குயங்கினா ரிதனுடைய ஆட்டைத் தானும்
குணமாக முந்நூறில் கொட்டி னேனே. 31

கொட்டினேன் தாளகத்தின் செம்பி னோடே
குணமான தங்கந்தான் சேர்த்து ருக்கிக்
கட்டியே தகடாகத் தட்டிக் கொண்டு

க்காரியமாய்க் கெந்தியது இடையே சேர்த்துப்
பட்டியே யரைத்துமே தகட்டில் தானும்
பதிவாகத் தடவியே புடமும் நான்கு
வட்டியே போட்டிடவே நொருங்கிப் போகும்
வாகாகக் கருப்பாக விருக்குந் தானே. 32

கறுப்பாக விருக்கிறது எல்லாந் தங்கங்
கருணைபெற வெடுத்துமே சொல்லக் கேளு
வெறுப்பாக வெண்ணாதே நினைத்தி டாதே
வெருளாதே சொல்லுகிறே னுற்றுக் கேளு
பொறுப்பாக முன்மதியைப் போட்டு ருக்கிப்
பிரபலமாய்க் கொடுத்திடவே தங்கமாகும்
முறுப்பாகத் தீக்ஷைவிதி தன்னில் சொன்னேன்
முந்நூறில் வாதாங்கம் மூடிப் பாரே. 33

பாருமே தாளகந்தான் வேதை கோடி
பதிவான கெந்தியினா லதிலுங் கோடி
தாருமே புகைநீரால் வேதை கோடி
பதிவான சவுக்காரக் குழம்பினாலே
வேருமே நீற்றினங்கள் கோடா கோடி
வெருளாதே துருசினா லதிலுங் கோடி
காருமே கைம்முறையால் வேதை யாகுங்
கருத்துவைத்துச் செய்திடவே சித்தி யாமே. 34

சித்தியே யாகுமென்று யூகி சொன்னார்
ஜெகத்திலே வாதிமா ரறியா மற்றான்
பத்தியாய்க் கெந்தியைத்தா னன்பி னோடே
பதிவாகக் கொடுத்துமே எடுத்துப் பார்த்து
நத்தியாய்ச் சத்தாகிப் போச்சு தென்று
நலமாக வெடுத்தெறிவார் வாதிமார்கள்
சத்தியாய்ச் செம்பைத் தானெடுக்கா தாலே
சகலமுந்தான் சித்தியிலை தகர்த்துச் சாடே. 35

தகர்த்துமே சாடினால் தங்க மாகுந்
தாக்காட்டா லேமமில்லை தரணி யோர்க்கு
இகத்துள்ளே வாதமில்லை சித்தி யில்லை
யேங்கியே திரிந்திடுவா ரூலுத்த வாதி
தொகுப்பாகச் சொற்கேட்டுச் சுட்டோர் கோடி
தொகையில்லா வகைகெட்டுத் திரிவா ரப்பா
பகையாகச் சொல்லவில்லை யுற்றுப்பாரு
பதிவாக விதியாளி பார்ப்பான் பாரே. 36

செம்புக்கிராசம்

வேதைதா னிப்படிக்குப் பாரான் வாதி
விரைந்துமே வெள்ளிதன்னி லீயந் தன்னைக்
காதைதா னிட்டுமே யூதி யூதிக்
கடைகெட்டுத் திரிந்துமே வாதி மார்கள்
பாதைதான் பொய்யென்பார் புரட்டர் தாமும்
பதிவான பதியறியார் மூடர் தாமும்
வாதைதான் படாமலே செம்பு கெந்தி
வடிவாகக் கிராசமதைப் போட்டி டாயே 37

போட்டிடவே செம்புதா னொருங்கிப் போகும்
பேரான புகைநீரா லரைத்து வில்லை
தாட்டிகமாய் ரவியில் வைத்துக் காயப்போடு
தப்பாமல் புடமிட்டே யுருக்கிப் பாரு
காட்டிடவே செம்பாகுஞ் சிவப்பு மெத்த
கருணைபுரி செம்பதனை யெடுத்துநீயும்
பாட்டிடவே மதிதனிலே கொடுத்தா யானால்
பதிவான பொன்னாகும் பலனு மாமே. 38

பலனாக வாதாங்க முந்நூற் றுள்ளே
பார்த்திடவே யேமமாம் நியம மெத்த
பிலனாகப் பார்த்தாக்கா லெல்லாந் தோன்றும்
புரட்டாகச் சொன்னதனா லென்ன லாபங்
கலனாகக் கலனறிந்தால் வாதி யாவான்
கருத்தில்லா வாதிதான் காண மாட்டான்
பிலவானா யிருந்ததினால் முரடனாவான்
புரட்ருட்டுச் செய்யாமல் வேதை பாரே. 39

வேதைதான் வருகிறது அரிதே அய்யா
வித்தகனார் பத்தியுள்ள பேர் களுக்குப்
போதைதான் போக்கோடே வருகும் பாரு
பொல்லாதார் மதிமயங்கித் திரிகு வார்கள்
காதைதான் பட்டுமே பொய்யென் பார்கள்
கருதினோர் தங்களுக்குப் புத்தி சொல்லு
நாதைதா னில்லாமல் நல்லோ ருக்கு
நலமான தாளகத்தின் செம்பு சொல்லே 40

இன்னதில்லாமலிது உதவாதெனல்

சொல்லவே செம்புதன்னை விட்டா னாகிற்
சிறப்பான வாதமெல்லாம் பொய்யாய்ப் போகும்
பையவே சவுக்காரந் தன்னை விட்டாற்
பதிவான நீற்றினங்க ளெல்லாம் போகும்

நையவே துருசதனை விட்டா னாகில்
நலமான சத்துவகை யெல்லாம் போகுங்
கையவே தங்கத்தை விட்டா னாகிற்
கனகமது இல்லையிதைக் கருத்தாய்ப் பாரே. 41

பாருமே கல்லுப்பு விட்டா னாகிற்
பதிவான சரக்கெல்லாங் கட்டொண் ணாது
வாருமே கெந்திதன்னை விட்டா னாகில்
வடிவான வாதமெல்லாம் விழலாய்ப் போகுஞ்
சாருமே மனந்தனையே விட்டா னாகிற்
சரியான யோகமில்லை சித்தியில்லை
நாருமே துருசுக்குள் செம்பை விட்டால்
நலமான யேமமில்லை நடத்தை பாரே. 42

நடத்தைபார் துருசில்லா சத்தை யெல்லாம்
நலமான வூர்கடக்கத் தள்ளிப் போடு
கடத்தைப்பார் தங்கமில்லா களங்கமெல்லாங்
காரியமா யப்பாலே யகற்றிப் போடு
விடத்தைப்பார் சிந்தூர மில்லா வேதை
விருப்பமாய்க் காயசித்தி முறையு மில்லைத்
திடத்தைப்பார் யூகிமுனி சாஸ்திரத்திற்
சிறப்பான கைப்பாகந் திறமை பாரே. 43

திறமைபார் புகைநீரு மில்லை யாயிற்
சிறப்பான களங்கெல்லாம் வசப் படாது
வறமைபார் துருசில்லாக் களங்கமெல்லாம்
வாசலிலே தள்ளிவிடு வன்மை யில்லைக்
கறமைபா ருப்பில்லாக் கட்ட தெல்லாம்
வாசலிலே போட்டிடவு மிகவு நன்று
துறமைபார் புத்தியில்லா வாதி யோர்க்குச்
செய்தாலும் பொய்யாகுந் திறமை பாரே. 44

வெள்ளி சுத்தி

திறமைபார் வெள்ளியைத்தா னெடுத்து நீயுந்
திரமாக வங்கத்தைக் கொடுத்தே யூத
வறமைபார் கொடுத்தூத வேண்டா மய்யா
வடிவாக வூதினா லீயந் தானுங்
கறமைபார் போகாது சொல்லக்கேளு
காரணமாய்க் கருக்கவெள்ளி யிருந்தா லுந்தான்
கறமைபார் திராவகத்திற் போட்டாற் செம்பு
கசடற்றுத் திராவகத்திற் கிளம்பு மாமே. 45

கிளம்பிட்டுத் துருசைப் போல் நிறமு மாகுங்
கெடியாக வெள்ளியைத்தா னெடுத்து நீயுந்
தளம்பிடவே வெண்காரங் கொடுத்து ருக்கு
தடையறவே வுருகியே சுத்த மாகும்
வளம்பிடவே யிப்படிக்குச் செய்யாவிட்டால்
வாதமென்ற சொல்லெல்லாம் வழக்கு மாகுங்
களம்பிடவே கைபாக மாகச் செய்து
கருதினால் இரசவாதங் கணக்கு மாமே. 46

களங்குக ளெல்லாவற்றையுஞ் செம்பாக்கி ஈயவாடை போக்கி அந்தச் செம்பை வெள்ளியிற் கொடுத்தால் மதிபழுக்கும், மாற்றாகும் பொன்னாகும் எல்லாஞ் சித்தியாகும் எனல்.

கணக்காகக் களங்குவகை செய்தா யாகிற்
காரணமாய்க் களங்குக்குட் செம்பை நீயுந்
துணக்காக வெடுத்துமே சொல்லக்கேளு
துடியாக மதிதனிலே தாக்கிப் பாரு
வணக்காக வுட்கொண்டு நுழையும் பாரு
வகையான பொன்னாகும் மாற்று மாகுந்
திணக்கமா யெல்லாமுஞ் சித்தி யாகுஞ்
சிறிதான லோகமெல்லாம் பழுக்கும் பாரே. 47

பழுக்குமே கோத்தீயஞ் செம்பில் நின்றாற்
பதிவான வெள்ளிதனில் நுழைந்தபோது
தழுக்குமே யூதிடவே சிதறிப் போகுந்
தாக்காகப் பொறுமியது தகர்ந்து போகுங்
கழுக்குமே வுருவமெல்லாங் காணா தோடுங்
கனகமது இல்லையிது கருதிப் பாரு
வழுக்குமே வாதமென்ற சொல்லும் பொய்யாம்
வடிவான பொருளில்லை மருவிப் பாரே. 48

மருவவே சொல்லுகிறே னுற்றுக் கேளு
மனமொத்து வாதத்தைப் பாக மாக
நருவவே செய்துமே நவின்றே யுண்டு
நலமான துருசைநீ நாடிப் பாரு
பருவவே வுன்னுடைய தரித்திர மெல்லாம்
பதிவாக ஓடியே பயந்து போகும்
வருவதுவும் லாபம்வரும் வண்மை யாகும்
வடிவான பொருளைநீ வகையாய்ப் பாரே. 49

வகையென்னச் சொல்லுகிறே னுற்றுக் கேளு
வகையான வகையறிந்து களங்கு தன்னைக்

தொகை யென்னச் செய்துமே செம்பு செய்து
துடியாகப் பொன்செய்து கடையில் விற்று
முகையென்னச் செம்புதா னாகும் பாரு
முடிவான களங்கதுவு முடிவு மாகுந்
தொகையாகப் பொருளறிந்து துரகம் பார்த்துத்
துப்புரவாய்ச் செய்தாக்கா லெல்லாமாமே. 50

கௌரியால் அயமுருக்கல்

ஆமேதா னிரும்பு அரப்பொடியும் பத்து
அலறவே கல்வத்தி லிட்டுக் கேளு
காமேதான் கௌரியது இடையே சேர்த்துக்
கலங்காம லுருக்கிடவே யுருகும் பாரு
பூமேவும் வெள்ளிமணிப் போலே யாகும்
புருவமா யிடைக்கிடைதான் துருசு செம்பு
நாமேதான் சேர்த்துமே யுருக்கிக் கொள்ளு
நலமாக வுடைத்துமே யுருககி டாயே. 51

அயச் செம்பு

உருக்கிடவே ஐம்முறையிப் படியே செய்து
உண்மையா யுடைத்துமே சொல்லக் கேளு
நெருக்கிடவே புகைநீரா லரைத்து வில்லை
நேராக விருஜாம மரைத்து நீயும்
பருக்கிடவே வில்லை தட்டிக் காயப் போடு
பதிவாகப் பெரியபுடம் போட் டெடுக்கக்
கருக்கிடவே காரமிட்டு உருக்கித் தீரு
சுசடற்று ரவியாகுங் கண்டு கொள்ளே. 52

கொள்ளவே செம்பாகுந் தங்கம்போலாங்
கொடுமையாய் மதிதனிலே யெட்டுக்கொன்று.
கள்ளமாய்க் கொடுத்திடவே யேழுமாற்றுக்
கணக்காகப் புடமிறங்கு மிந்தச்செம்பு
துள்ளவே பிச்செம்பு போலேபாரு
துடியாகச் சகலமுந்தா னிதுவேபோலத்
தள்ளாடிப் பார்த்திடவே சித்தியாகுஞ்
சகலசித்தி யாடலாந் தாக்கிப் பாரே. 53

தாக்கிடவே யிரும்பதுவுஞ் சொல்லக்கேளு
தண்மையாய்ப் புகை நீரில் செம்புதன்னை
வாக்கிடவே யெடுத்துமே சொல்லக்கேளு
வகையாயகக் கைப்பாக மாகச் செய்து
நோக்கிடவே யிரும்பை விட்டால் வாதமில்லை
நுணுக்கமா யெல்லாமுஞ் சித்தியாகும்

பாக்கிட்டால் பல்சிவக்கும் வேதைமார்க்கம்
    பதிவாக வெல்லாமுஞ் சித்தியாமே. 54

சித்தியே யாகவென்றா லிரும்பைப் பாரு
    ஜெயமாகும் பொருளாகுந் தீர்க்கமாகும்
முத்தியா யாகவென்றான் மூலம்பாரு
    முடியுமட்டுங் களங்காத முடிக்கப்பாரு
நத்தியே திரிந்து நீ ஞானம்பாரு
    நலமாக யோகசித்தி காயசித்தி
புத்திமா னாகவே யிருந்து நீயும்
    பிரபலமா யுலகத்திற் புகழ்ந்துபாரே. 55

புகழ்ந்துபார் வாதத்தைச் செய்துகொள்ளு
    புத்தியாய்ப் பொன்விற்றுச் செலவுசெய்து
நகழ்ந்துபார் பொன்னில்லாப் போனாற்கேளு
    நாடியே வெள்ளிவித்தை நலமாய்ப்பாரு
அகழ்ந்துபார் ஞானசித்தி யுடனேயாகும்
    ஆராய்ந்து பார்த்தக்கா லெல்லாஞ்சித்தி
துகழ்ந்துபார் அரக்கில்நின்ற சாயம்போலத்
    துடியாகப் பார்த்துமேசெய்து கொள்ளே 56

செய்திடவே வாதமெல்லாஞ் சித்தியாகுஞ்
    சிறப்பான தீக்ஷவிதி தன்னில்தானும்
மெய்யாகக் களங்குசௌக் காரஞ்சொன்னேன்
    மேன்மையாய்ச் சவுக்காரக் குழம்பைவைத்துக்
கைத்திடவே யுப்பெல்லா நீற்றச்சொன்னேன்
    கலக்கமற்றுப் பார்த்திட்டு உழைத்து நீயும்
வையகத்தி லுழைத்துமே செய்துதேறு
    வலுவாக வுழைத்தக்கா லெல்லாமாமே. 57

ஆமேதான் சவுக்காரக் குழம்பினாலே
    ஆடலாம் வெகுகோடி வித்தைதானும்
வாமேதான் வித்தையது தெரிந்துபோனால்
    வையகத்திற் சித்தரைப்போல் வாழ்வீர்காணும்
பூமேவு நிலந்தனிலே யிருக்கவென்றாற்
    போக்கான சௌக்காரக் குழம்பைப்பாரு
நாமேதான் சொல்லிவிட்டோம் வாதாங்கத்தி
    னலமாகச் சித்தியிலே வண்மைதானே. 58

கெந்திபஸ்பம் செய்ய தீக்ஷ

வண்மைதான் கெந்தியதின் சுண்ணந்தன்னை
    வகையாகச் சொல்லுகிறேன் வாதாங்கத்திற்
கண்மைதான் கெந்தியது பலமோபத்து

கணக்காக எருக்கிலையின் பாலில்தானுந்
தண்மைதான் தோய்த்துமே யெட்டுநாளில்
தடையறவே போட்டுவரக் குடிக்கும்பாரு
உண்மைதான் குடித்ததொரு கெந்திதானும்
உற்றுமே பார்த்திடவே வெள்ளையாமே. 59

கெந்தகக் கட்டு

வெள்ளையாங் கெந்திதான் மடிந்து போகும்
வேதையாங் கெந்திக்கு எடையேசீனந்
தள்ளையாஞ் சுண்ணத்தைச் செய்துகட்டு
தாக்கவே பெருங்கவசங் கட்டித்தானும்
பள்ளையாம் பெரியபுடம் போட்டெடுக்கப்
பதிவான கெந்தியது பஸ்பமாகுந்
துள்ளையாம் பஸ்பத்திற் சௌக்காரத்தைத்
துடியாக விட்டுஇரு ஜாமமாட்டே 60

கெந்திச் சுண்ணம்

அரைத்துமே வில்லைதட்டி ரவியில்போட்டு
அன்பாகக் காயவைத்துச் சொல்லக்கேளு
நிரைத்துமே ஐந்துசுண்ணக் குகையில்வைத்து
நேர்ப்பாகப் புடம்போடக் கெந்திதானும்
பரைத்துமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
பதையாமற் சுண்ணத்தை யெடுத்துக்கல்வத்
தரைத்துமே சவுக்காரக் குழம்பைவிட்டுத்
தாக்கியே அரைத்துவில்லை கட்டிடாயே. 61

கட்டியே யைம்முறையிப் படியேபோடு
கசடற்றுக் கெந்திகடுஞ் சுண்ணமாகும்
விட்டுமே கெந்தியது சுண்ணமானால்
விதமான சூதந்தா னுடனேகட்டும்
பட்டுமே சூதமெடை கெந்திச்சுண்ணம்
பதிவாகச் சேர்த்துமே புகைநீராற்றான்
தட்டுமே யரைத்திடவே வில்லை தட்டித்
தாக்காகப் புடம்போடச் சூதநீறே. 62

சூதமே நீறானால் சொல்லக்கேளு
சுருதியாய்ச் செம்புதான் தங்கமாகும்
பாதந்தான் பூமியிலே நடக்கவென்றால்
பகையாமற் ககனசித்தி யாகும்பாரு
வாதந்தான் கைகட்டி வாய்புதைத்து
வடிவாக யேவலாய்க் கேட்கும்பாரு

நாதந்தான் பொன்னாகும் வேதையாகும்
நலமான கருவதனை நாடிக்கேளே. 63

நாடிப்பார் கெந்தியது சுண்ணந்தன்னை
நலமாகச் செம்புருக்கி நூறொன்றிட்டாற்
பாடிப்பார் தங்கமது உடனே யாகும்
பதிவான ஆட்டெல்லாங் கெந்தியாட்டு
காடிப்பார் கெந்தகந்தான் வேதைமெத்த
கனிவாக நடராஜர் சமைத்த நேர்மை
வாடிப்பார் தங்கமது அதிகமாகும்
வடிவாக பெருமைதனைச் சொல்லொண்ணாதே. 64

ஒண்ணாதே கெந்தகத்தின் பெருமைதன்னை
யுற்றுமே முனிசித்த ராலே சொல்லக்
கண்ணாக முடியாது பெருமைதானுங்
காரணமாய்ச் சித்தர்கரு முறைமறைத்தார்
விண்ணோர்கள் பெரியோர்கள் சொல்லப்போகா
விதமாகக் கெந்தகத்தின் ஆட்டுதன்னைப்
பண்ணாக நூல்தனிலே சொல்லிப் போட்டேன்
பதிவான யூகிமுனி பண்புள்ளோரே. 65

துருசுடன் கெந்திசேர்த்துருக்கினால் வெண்கலம் போலிருக்குமெனல்

பண்புள்ள யூகிமுனி யாய்ந்துதேர்ந்தார்
பதிவாகத் துருசுடனே கெந்திசேர்ந்தால்
நண்பாக வெண்கலம்போ லாகும்பாரு
நலமான வெண்கலத்தைச் செம்பாய்ப்பண்ணத்
தண்பாகத் தெரியாத படியினாலே
தாக்கான வாதமெல்லாம் பொய்யாய்ப் போச்சு
வண்பாகச் சொன்ன தினா லென்னலாபம்
வடிவான விதியறிந்தால் வாதமாமே. 66

வாதமென்ன செய்தவர்க்கு உடனே செம்பு
வடிவாகச் சேர்ந்துமே கெந்திதானும்
நீதமாய்ச் சேரவெண் கலம்போ லாகும்
நிலையாகு மிச்செம்பை யெடுத்தானானாற்
காதமென்ன மதியினிடம் கொடுத்தபோது
கதிபெறவே பொன்னாகுங் கருணைமெத்த
சூதமென்ன கெந்தகத்தின் சுண்ணஞ் சேரச்
சூக்ஷமாய் மாற்றாகுஞ் சூக்ஷமாமே. 67

சூக்ஷமாய்க் கெந்தகத்தினுழைந்த செம்பைச்
சொரூபமாய்ப் பார்த்தாக்காற் றங்கந் தோன்றும்

ஆக்ஷமென்ன ஆயிரத்து எட்டுமாற்று
அருகுகட்டிப் புடத்திற்கு இறங்கும்பாரு
வாக்ஷமா யிவ்வேதை நிஜமதாகும்
வடிவாகப் பொருளறிந்த வாதிமானே
நீக்ஷயென்ன தசவாய்வைக் கட்டநீயுந்
தீக்ஷவிதி தன்னிலே சொல்லினேனே. 68

மேல் கூறியதைச் சிந்தாமணி-வாதகாண்டமிரண்டு உலா-கொம்மி-பள்ளு முதலிய நூல்களிற்பாரேனல்

சொன்னதொரு மதிசிந்தா மணியும்பாரு
சொற்பெரிய வாதகாண்ட மிரண்டும் பாரு
வன்னதொரு ஞானஉலா தன்னைப்பாரு
வடிவான ஞானத்தின் கொம்மிபாரு
நன்னயமாய்ப் பள்ளுதனிற் றொகையறிந்து
நாடாத சித்தியெல்லாம் நவிலப்பாரு
கன்னியமாய்ப் பொருளறிந்து கைப்பாகம்பார்
கணக்கறிந்தால் வேதைதான் கருதிப்பாரே. 69

கருதியொரு தாளகத்தின் செம்புசொல்வேன்
கணக்காக அறிந்துமே சொல்லக்கேளு
நருதியொரு தாளகந்தான் பலமோபத்து
நலமாகக் கற்சுண்ண நீரில் தானும்
வருதியே நாண் மூன்று ஊரவைத்து
வடிவாக எடுத்துமே சொல்லக்கேளு
தருதியே சோதித்து எடுத்துப்பாரு
தண்மையாய் வெள்ளையா யிருக்கும்பாரே. 70

பார்த்ததொரு வெள்ளையைத்தா னெடுத்துக் கொள்ளு
பதிவாக சீனத்தின் சுண்ணமேலே
கார்த்ததொரு பெருங்கவச மாகக்கட்டுக்
கனிவாகக் காயவைத்துப் புடத்தைப் போடு
தார்த்ததொரு தாளகந்தான் நீற்றுப்போகுந்
தாக்காக நீற்றினதை யெடுத்துக் கொள்ளு
பார்த்ததொரு கல்வத்தி லிட்டுக்கேளு
பதிவான சவுக்காரக் குழம்பிலாட்டே.. 71

ஆட்டியே வில்லை தட்டிக் காயப்போட்டு
அன்பாகச் சீனத்தின் சுண்ணம்நேரே
பாட்டியே கவசமிட்டுப் புடமாய்ப்போடு
பதிவான தாளகந்தான் சுண்ணமாகுந்
தேட்டென்ன இதற்கீடோ கண்டுபாரு

ஜெயமான தாளகத்தின் சுண்ணநேரே
வாட்டியே சூதபஸ்ப நிறுத்துக் கொண்டு
வகையாக சவுக்காரக் குழம்பிலாட்டே. 72

குழம்பான சவுக்காரத் தாலேயாட்டிக்
கொள்ளவே யிப்படியே ஐந்துதொந்தம்
அழும்பாகப் போட்டுமே சொல்லக்கேளு
அடைவாகத் தானுமது கட்டிப்போகும்
நழும்பான செம்புருக்கி நூறிலொன்று
நாடிடவே திசைமாற்றாம் நவின்றுபாரு
கழும்பான வுப்புக்குங் காவிக்குந்தான்
காரியமாய்ப் புடமிறங்குந் தங்கந்தானே. 73

தானேதான் சதாசிவனான் முடியாதப்பா
தயவான இப்பொன்னி னேர்மைதன்னை
வானேதான் தாளகத்தின் வேதைதன்னை
வாய்திறந்து சொல்லவுமே ஆகாதப்பா
நானேதான் அரிதான பொன்னுக்கப்பா
நலமாக மாற்றில்லை ஆணியில்லை
கானேதான் அகஸ்தியர்தான் சொன்னநேர்மை
கனிவாக யான் கண்டு சொல்லினேனே. 74

சொல்லினேன் தீகைஷவிதி முந்நூறுந்தான்
சுயமாக இல்லையென்று வாதாங்கத்தில்
நல்லவே சொல்லிவிட்டே னிந்தநூலை
நலமாகப் பார்த்துமே செய்துகொள்ளு
கல்லவே வாதாங்க முடிவுமாகுங்
கருத்துவைத்தாற் பொன்னெல்லா முடனேயாகும்
நல்லவே யிதையறிந்து செய்தானாகில்
நாடாத சித்தியெலலாம் நாடும்பாரே 75

நாடுமே தாளகத்தை விட்டால்வர்ணம்
நலமாகச் சித்தியில்லை நாட்டம்பாரு
பாடுமே தாளகத்தை விட்டாற்றங்கம்
பதமாகச் சித்தியில்லை பதிவுமெத்த
காடுமே தங்கத்தை விட்டால்வர்ணங்
கலனாகுங் காடுபுக்கும் வர்ணமில்லை
பாடுமே பாஷாணம் விட்டால்வெள்ளி
பலனில்லை யென்றுமே பரிந்துபாரே 76

பரிந்துபார் வாதாங்கந் தன்னிற்றானும்
பதிவாகச் செம்பினது நேர்மைதன்னை
அறிந்துபார் கைப்பாக மாகச்செய்து

அடைவாகச் செய்தாக்காற் பலனுமாகுஞ்
செறிந்துபார் தாரத்தை யிவ்வாறேசெய்
தெரியாத வாதிக்குத் தெரிந்துபோகும்
கரிந்துபார் புகைநீரே யில்லாவேதை
கனிவாகச் சொல்லெல்லாம் வீணாய்ப்போமே. 77

வீணாகப் போகாமற் சவுக்காரததை
விருப்பமாய்ப் போகாமல் வைத்துத் தேறு
நாணாக மனந்தன்னை நோகப்பண்ணி
நாட்டிலே சொல்லாமன் மனத்தையூணு
காணாகப் போகாமற் கெந்திதன்னைக்
கலக்கமற்று நீற்றியே கருணைகூர்ந்து
வாணாளை வாங்காமல் தாளகத்தை
வகையாக வைத்திடவே சித்தியாமே. 78

சித்தியாஞ் சவுக்கார மில்லாச்சுண்ணஞ்
சிறப்பாக லோகத்தில் பழுக்காபாரு
பத்தியாந் தங்கமில்லாக் களங்கமெல்லாம்
பதிவான மட்டமில்லை யறிவுபாரு
சத்தியா யுபரசங்க ளில்லாச்செம்பு
சதிராக வொன்றுமில்லை தன்மைபாரு
வித்தியாய்க் கைப்பாக மில்லாவேதை
விடிவில்லை யெல்லாமு முத்தியாமே. 79

முத்தியாம் வேதையொன்று சொல்லக்கேளு
விருப்பமாய் அயம்பலமு மொன்றுபோடு
சித்தியாய்த் துருசுபத்துப் பலமும்போடு
சிறப்பாகக் கெந்தியது பலமூன்று
நத்தியே யிவைமூன்று மரைத்துக்கேளு
நலமான புகைநீரா லரைத்தேயுண்டை
சத்தியாய் ரவியில்வைத்துக் காயப்போடு
சரியாக வெடுத்துமே சொல்லக்கேளே. 80

வெட்டையாயிருக்குஞ் செம்பைப் பஞ்சமித்திரத்தி லுருக்கிச் சாய்க்கவெனல்

சொல்லவே புடம்போட்டு எடுத்துக் கொண்டு
சிறப்பாகக் குகையில்வைத் துருக்கிப்போடு
நல்லவே ரவிபோலச் செம்புமாகும்
நலமாகச் செம்பெல்லாந் தங்கம்போலாம்
பல்லவே பஞ்சமித்தி ரத்தில் சாய்த்தால்
பதிவான செம்பெல்லாந் தங்கம்போலாங்

கல்லவே செம்பெடுத்து மதியில்பத்து
கனமாகக் கொடுத்திடவே சொல்லக்கேளே. 81

கேளுமே மாற்றென்ன ஐந்துமாகுங்
கெடியான எடைக்கெடைதான் தங்கம்சேர்க்க
ஆளுமே மாற்றென்ன எட்டுமாகும்
அருகுகட்டிப் புடத்திற்கு இறங்கும்பாரு
நாளுமே யிச்செம்பைப் பண்ணித்தேர்ந்து
நலமாக ஜீவனத்தில் கிடமாய்ப்பாரு
வாளுமே செம்பைத்தான் முதன்மையாக
வடிவாகப் பண்ணவே சித்தியாமே. 82

இன்னின்னதை முறையே பார்க்கவேண்டு மெனல்

சித்தியே மயச்செம்பை முன்னே பாரு
சிறப்பாக வதன்பின்னே கெந்திபாரு
முத்தியா மதன்பின்னே சவுக்காரம்பார்
முடிவுவந்த இடமெல்லாஞ் சீனத்தைப்பார்
நத்தியா யதன்பின்னே தாளகத்தை
நலமாக வதன்பின்னே பாகம்பாரு
கத்தியே திரியாமல் செம்புதன்னைக்
கருத்துவைத்தா லெல்லாமுஞ் சித்தியாமே. 83

சாரக்கட்டு

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறுப்பாகச் சாரத்தைக் கசிவெடுக்க
முத்தியாய்க் கற்சுண்ணம் நடுவேவைத்து
முக்கியமா யிருஜாம மெரித்துபோடப்
பத்தியாய்ச் சாரமது கசிவுபோகும்
பண்பாக இன்னமொரு பாகங்கேளு
நத்தியாய்ச் சீனமது சேர தொன்று
நலமாகப் பொரித்துமே சொல்லக்கேளே. 84

சீனச் சுண்ணஞ் செய்து சாரத்தின்மேல்
கவசங்கட்ட வெனல்

கேளுமே வெண்கருவுங் கூடவிட்டுக்
கெடியாக வரைசீனம் பில்லைதட்டி
நாளுமே காயவைத்துப் புடத்தைப்போடு
நலமாகக் கடுஞ்சுண்ணஞ் சீனச்சுன்னம்
பாழுமே போகாமல் சுண்ணந் தன்னைப்
பதிவாக வெண்கருவா லரைத்துச்சாரம்
வாழுமே கட்டியே காயவைத்து
வடிவாகச் சொல்லுகிறேன் வண்மைகேளே. 85

சாரச் சுண்ணம்

வண்மையாய்க் கிளிஞ்சில்நீர்க் குள்ளேவைத்து
வடிவாகத் தீயெரிப்பாய் நான்குசாமம்
நண்மையா யெடுத்துப்பார் தங்கம்போலாம்
நயமான சாரத்தைச் சுண்ணஞ்செய்ய
கண்மையாய்ச் சீனமது சுண்ணஞ்சேர்த்துக்
கடுமையா யரைத்திடவே யூதிப்போடு
நண்மையாஞ் சாரமது சுண்ணமாகும்
நலமான வேதையெல்லாம் சாரந்தானே. 86

சார ஜெயநீர்

சாரத்தில் சாரமிட ஜெயநீராகும்
க்ஷணத்திலே நாகமது கட்டிப்போகும்
பாரத்தில் செம்புதான் பழுக்கும்பாரு
பக்குவமாய் வெண்ணெய்போ லாகும்பாரு
வேரற்ற மரந்தானுந் தளிர்க்கும்பாரு
வெருளாதே சாரத்தில் வெகுபோக்குத்தான்
நீரற்ற விடந்தனிலே ஜீவஜந்து
நிலையில்லா திருக்குமப்பா நேர்ந்துபாரே. 87

பாருமே சாரத்தின் ஜெயநீர்தன்னில்
பக்குவமாய் நாகத்தை யுருக்கிச் சாய்க்கக்
காருமே நாகமது சவுடுதீர்ந்து
கனிவாக நாகமங்கே கட்டிப் போகுஞ்
சாருமே ரவிபழுக்கும் வேதையாகும்
க்ஷணத்திலே சகலமெல்லாஞ் சித்தியாகும்
பாருமே சாரத்தை விட்டானானால்
சகலமுமே சித்தியில்லை தண்மைதானே. 88

தண்மையாய்ச் சாரமதை ராமதேவர்
தாக்கியே சகலமெல்லாங் கட்டிநீற்றிக்
கண்மையாஞ் சாரத்தால் வெகுஆட்டுத்தான்
கலக்கமற் றாடினா ராடுமாட்டு
வண்மையாம் நாற்கோடி சாரத்தாலே
வகையாக நாகத்தைக் கட்டிநீற்றி
உண்மையாய் வாதமது பண்ணிஞானம்
உற்றுமே பார்த்திட்டு இருந்தார்தானே 89

இருந்திட்டார் சிவயோகி யாயிருந்து
எழிலான குளிகைமுதல் பார்த்திட்டார்பார்
நருந்திட்டார் சித்தியெல்லா மாச்சுபாரு
நவச்சார மென்றதனால் குளிகைபண்ணிக்

கருந்திட்ட மலைமுழைஞ்சில் குளிகைசெய்து
கலக்கமற் றிருந்திட்டார் ராமதேவர்
அருந்திட்ட வெல்லாமுஞ் சீனத்தாலே
ஆச்சரியஞ் சீனந்தா னாகவாச்சே. 90

ஆச்சென்ற வெண்கண்டர் சீனமாகும்
அறிவில்லா வாதிதான் துரிசைநீற்றிக்
காச்சென்ற நீராதே போனதாலே
கனிவாக வாதம்பொய் யென்பாரப்பா
மூச்சென்ற ததுவடங்கிச் சரிநில்லாது
முனையான சுழிமுனையில் நின்றுதேறு
வாச்சென்ற விதியாளி கண்டுகொள்வான்
வகையில்லான் காண..ன்பார் மருவிப்பாரே. 91

மருவிப்பார் சித்தர்முனி ரிஷிகள்தேவர்
மாட்டியே துரிசுமுதல் சுண்ணம் பண்ணி
அருளிப்பார் சூதத்தைக் கட்டிநீற்றி
ஆண்மையாய் குளிகைமுதல் பண்ணித்தேர்ந்து
வருவிப்பார் இரசவாத யோகியாவார்
வடிவான சமாதியிலே யிருந்துதேறு
கருவிப்பார் கேள்வியினால் சுட்டுசுட்டுக்
காணாம லிந்தவர்தாங் கோடிதாமே. 92

கோடிபேர் சுட்டுமே யொன்றுங்காணார்
குணங்கெட்ட மடையாப்பா வொன்றுங்காணார்
தேடியே யிதோஆச்சு ஆச்சுதென்பார்
குணமில்லார் மணமில்லார் குடிகெடுப்பார்
தேடிப்பார் சாஸ்திரத்தைத் தேடமாட்டார்
தெருவிலே யலைகுவா ரொன்றுமில்லை
நாடியே வாதாங்க முந்நூற்றுள்ளே
நாட்டிலுள்ள அதிசயமுஞ் சொன்னேன் பாரே 93

சொன்னதெல்லாஞ் தீக்ஷவிதி தன்னில்தானுஞ்
சுருக்காக வீதிரண்டும் ஒத்துப்பார்த்துக்
கன்னல்போல் தொகைவகையாய் கண்டுபேசிக்
கணக்கறிந்து பொருளறிந்து கண்டுகொள்ளு
இந்நிலத்தில் பொருளறியா னுலத்தவாதி
எப்போதும் போலவே சாரந்தன்னை
நன்னயமா யுழைத்தக்கால் வாதமாகும்
நாடியே பொருளறிந்தால் வாதியாமே. 94

வாதியாஞ் சாஸ்திரத்தை யறியாமற்றான்
வகையில்லாச் சரக்குகளைப் பார்த்துப் பார்த்துச்

சோதியா ததனாலே வாதம்பொய்யாஞ்
சூஸ்திரத்தையறியாமல் தவிப்பார்பாரு
கோதியே பாராமல் குணமுமில்லை
குடிகேடு செய்திடுவா ருலுத்தரப்பா
பேதியா திதுவெல்லாம் பிறழ்ந்துபோகும்
பிரபலமாய் ஞானத்தைப் பேணிப்பாரே.

நாகக்கட்டு

பேணிப்பார் நாகத்தை யிலுப்பைநெய்யில்
பிரபலமா யுருக்கிநீ சாய்த்துக் கொண்டு
ஊணிப்பார் சாரத்தை மேலேபோடு
உற்பனமாய்ப் புகையடங்குங் கட்டித்தீரும்
நாணிப்பார் புகையடங்குஞ் செம்புதன்னில்
நலமாக இருபதுக்கு வொன்றேதாக்கு
தாணிப்பார் மாற்றென்ன திசைமாற்றாகுந்
தடையற்றுக் கடைதனிலே விற்றுக்கொள்ளே. 96

விற்றுமே செலவழித்து ஞானந்தன்னை
விரும்பியே பார்த்திடவே வெளியாய்த் தோன்றும்
சித்துமே செய்துநீ ஜெபத்தைப் பண்ணு
சிறப்பாக மோகத்தைத் தெளிந்துபாரு
முத்தியே பலனாகும் வேதையாகும்
முடியுமட்டும் ஞானத்தை விரும்பிநில்லு
சித்தியா வெல்லாமுஞ் சித்தியாகுஞ்
சீக்கிரத்தில் ஞானத்தைப் பார்த்திடாயே. 97

சீனச்சுண்ணம்

பார்த்திடவே யின்னுமொரு வேதைமார்க்கம்
பதிவாகச் சொல்லுகிறே னுலகத்தோர்க்கு
ஏத்திடவே வுவர்மண்ணுஞ் சுண்ணம்நேரே
உண்மையாய்க் கலந்துமே காய்ச்சிக்கொள்ளு
நார்த்திடவே சீனமது நான்குசேரு
நலமாகப் பொரித்துமே கல்வத்திட்டு
வார்த்துமே சவுக்காரக் குழம்பினாலே
வகையாக அரைத்துவில்லை கட்டிக்கொள்ளே. 98

கட்டியே வில்லைதட்டிக் காயப்போடு
கனமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
நட்டியே யெடுத்துப்பார் சுண்ணமாகும்
நலமாகச் சவுக்காரக் குழம்பினாலே
வட்டியே யரைத்துவில்லை காயவைத்து
வடிவாகப் பின்பொருகால் புடத்தைப்போடு

வட்டியே கடுஞ்சுண்ணஞ் சீனச்சுண்ணம்
வகையறவே சொல்லுகிறேன் தண்மைபாரே. 99

வெடியுப்புச் சுண்ணம்

தண்மையாஞ் சீனத்தின் சுண்ணந்தன்னைத்
தடையறவே வெடியுப்பு ஐந்தாங்காச்சல்
வண்மையாய்ச் சேர்த்துமே யிடையேதானும்
வகையாகச் சேர்த்தரைத்து வில்லைதட்டி
நண்மையாய்ப் பழச்சாறு விட்டரைத்து
நலமான சட்டியிட்டு எரிநேர்ஜாமம்
உண்மையாய் நீறியது சுண்ணமாகும்
உருதிபெற்ற சுண்ணமது வுற்றுப்பாரே. 100

உற்றுப்பா ரிப்படிக்குச் சீனச்சுண்ணம்
உறுதியா யைந்துமுறை சேர்த்தேயூது
நற்றுப்பார் கடுஞ்சுண்ண மாகும்பாரு
நலமான வெடியுப்புச் சுண்ணமாச்சு
கற்றுப்பார் சாஸ்திரத்திற் சொல்லவில்லை
கனிவான வாதாங்கந் தன்னிற் சொல்னேன்
சிற்றுப்பார்வெடியுப்புப் பெருமைதன்னைச்
சிறப்பாக அரனாலு முடியாவாறே. 101

துருசுச் சுண்ணம்

முடியாது வெடியுப்புப் பாகமாக
முற்றுபெறச் செய்துமே சுண்ணந்தன்னில்
கடியாமற் சாரத்தை யிடையேசேரு
கருணைபெற நீறாகும் நீறுதன்னில்
வடியாக வீரமொடு பூரமிட்டு
வகையாக வைத்துமே சொல்லக்கேளு
துடியாக துருசுநீர் சுருக்குப்போடு
துப்புரவாய்ப் பத்துநாள் போட்டுப்பாரே. 102

போட்டுமே துருசுதான் சுக்கான்போலப்
பெருமையாய்க் கட்டியே யிருக்கும்பாரு
நாட்டுமே வங்கமென்ற சுண்ணந்தன்னை
நலமாக மேல்கவசம் நாடிப்போடு
பாட்டுமே குக்குடமாய்ப் போட்டுக்கொண்டு
பதிவான கடுஞ்சுண்ணந் துருசுச்சுண்ணந்
தீட்டுமே அம்பரத்தில் செருக்கியோடுந்
திடமான துருசுதான் வேதையாமே. 103

வேதையாந் தில்லம்பால் படிகறந்து
விருப்பமாய்ப் பணவெடைதான் பாலிலிட்டுக்

காதையாம் போட்டிடவே முரிந்துபோகுங்
கனிவான சரக்கெல்லாஞ் சொன்னாற்கட்டும்
நாதையாம் உப்புமுத லிருபத்தைந்தும்
நலமாகக் கட்டாகும் வேதையாகும்
பாதையா யிதுபோகும் போக்குத்தானும்
பதிவான ஜயமாகும் பண்புள்ளோரே. 104

பாஷாணக்கட்டு

பண்பாக வெள்ளைப்பா ஷாணந்தன்னில்
பதிவாகச் சுருக்கிடவே கட்டிப்போகுந்
தண்பாகத் தீக்ஷைவிதி தன்னிற் சொன்னேன்
தடையறவே யிதுசேர்த்து வெள்ளிபண்ணு
உண்பாரை யுடுப்பாரைப் பார்த்துஏங்கி
உறுதியாயிருக்கவே வேண்டாமையா
நண்பாகப் பாகமாய்ச் செய்துகொள்ளு
நானிலத்தில் தபசியா யிருந்திடாயே. 105

இருந்திடவே வெள்ளைப்பா ஷாணம்போல
இதமாகக் கெவுரியையிப் படியேபண்ணு
நருந்திடவே தாளகமிப் படியேபண்ணு
நலமாக லிங்கத்தைப் பண்ணித்தேறு
கருந்திடவே கார்முகிலிப் படியேபண்ணு
கனமான வாதமிப்படியே யாச்சு
பருந்திடவே கட்டாகு மெழுகுமாகும்
பதிவரவே விதியாகும் பண்புள்ளோரே. 106

பண்புள்ளோர் விதியாளர் கண்டுகொள்வர்
பதியில்லார் காணாம லலைகுவார்பார்
திண்பாகத் திண்ணியமே பேசிக்கொள்வர்
திருடரப்பா அவரைத்தா னம்பவேண்டாம்
உண்புள்ளோ ரொருவரது பேச்சைக்கேட்டு
உறுதியில் லாமலே யலைகுவார்பார்
நண்பாகக் கெட்டபுத்தி யாயிருப்பார்
நானிலத்தி லவர்களுக்கு நரகமாமே. 107

நரகமா மிவ்வேதை நிஜமாகும்
நாடியே பாகமாய்ச் செய்துகொள்ளு
உரகமாம் உள்ளபடி சொன்னேன்பாரு
உற்றுமே பார்த்தக்கா லெல்லாமாகும்
முரகமாம் பண்ணாத வாதிமார்கள்
முகமினுக்கித் தலைதுளக்கிப் பேசுவார்பார்
நரகமா மிவர்பேச்சை நம்பவேண்டாம்
நாடியே பார்த்திடவே நலமதாமே. 108

நலமாக வெடியுப்பு ஜெயநீர்தன்னில்
    நாடியே சரக்கெல்லாங் கட்டிக்கொள்ளு
உலகமாம் ஜெகமெல்லாஞ் சித்தியாகும்
    ஒழுங்காக எல்லாமுஞ் சித்தியாகுஞ்
சிலகமாம் வெடியுப்பே ஆதியாகுஞ்
    சிக்கெனவே பார்த்தக்கால் தோன்றுந்தோன்று
முலகமாந் தோன்றாமல் செய்யவேண்டாம்
    ஒவ்வாத படியெல்லாஞ் செய்யவேண்டாம். 109

செய்யவே உலகத்தில் வாதிமார்கள்
    சொற்பமாய் மூலிகையில் வெடியுப்பைத்தான்
மய்யவே அரைத்துமே புடத்தைப்போட
    மதியாகக் கரியாகப் போகும்பாரு
நய்யவே ஜெயநீர்தான் பண்ணிப்பண்ணி
    நலமாகச் சரக்கைத்தான் துவைத்துவாட்டி
மெய்யாக ஜெயநீர்தா னாச்சுதென்பார்
    மதிகெட்ட வாதிதாஞ் சொல்லுவாரே. 110

சொல்லுவார் பலபேச்சுச் சொல்லுவார்பார்
    சுருதியில்லை சாஸ்திரத்தைப் பொய்யேயென்பார்
வல்லமையாய்ப் பேசுவார் மாயக்காரர்
    வடிவுடைய வெல்லாமும் பொய்யேயென்பார்
நல்லவாய்ப் பேசியே கழுத்தறுப்பார்
    நாடியே சித்தியெல்லாம் வெடியுப்பாலே
பொல்லாமை யில்லாமல் மார்க்கமாகப்
    புஞ்சையாங் கோபத்தைப் போக்கிப்போடே. 111

போக்கியே சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்துப்
    பொறுமையாய்ப் பாகமாய்ச் செய்து கொண்டு
நோக்கியே சமாதியிலே நின்றுதேறு
    நொடிக்குள்ளே ரசவாதஞ் சிக்கிப் போகும்
பாக்கியமா யெல்லாமுஞ் சித்தியாகப்
    ப்தியாகும் விதியாளி வெடியுப்பைப்பார்
நோக்கியே யாறுமுறை வெளியாய்ப்போகும்
    நுணுக்கமெல்லாம் வெடியுப்புத் தன்னாலாமே. 112

ஆமேதான் சீனத்தைச் சுண்ணம்பண்ணு
    அடைவாகப் பின்னேதான் வெடியுப்பைப்பார்
காமேதா னதன்மேலே சாரம்பாரு
    கருத்துண்டாம் வாதமெல்லாஞ் சித்தியாகும்
பாமேதான் சகலமுந்தான் சித்தியாகும்
    பதிவாகுந் துருசென்ற சுண்ணந்தன்னை

வாமேதான் சித்தியெல்லா மெளிதிலாகும்
வடிவான துறையறிந்த வாதிதானே. 113

வாதிதானென்று சொல்வார் நூலைக்காணார்
வாய்பேச்சால் கட்டலைந்து மாளுவார்பார்
நீதியாய்க் கண்டனென்பார் பொன்னைத்தானும்
நிலையில்லை பொன்தனையே காட்டுவார்பார்
சாதிபெற நான் செய்தே னென்பார்பாரு
சொரூபநிலை தெரியாதா ருலுத்தவாதி
ஆதியென்ற பொருளைத்தா னறியாரப்பா
ஆச்சுதே வெள்ளிவித்தை சுருக்குதானே. 114

வெள்ளி வித்தை

சுருக்காகச் சொல்லுகிறேன் வெள்ளிவேலை
சுப்பிரமா யிதுலகுவு முன்னேபாரு
நருக்காகப் பார்த்திடவே சித்திசித்தி
நாணயமா யிவ்வேலை நாடிப்பாரு
டீருக்காகக் கல்லுப்பு படிதானெட்டு
பதிவாக நல்லதண்ணீர் படியீரெட்டு
வருவாக வப்புதன்னி லூற்றிக்கொண்டு
வகையாகச் சுண்ணாம்பு படிதானொன்றே. 115

ஒன்றாகப் போட்டுமே காச்சக்கேளு
உறுதியாய் வடிகட்டித் தெளிவிறுத்து
நன்றாகக் காச்சியே யுறையப்பாரு
நலமாக வுறைந்தபின்பு நாட்டங்கேளு
கன்றாக மறுசட்டி அகப்பையாலே
காரணமாய் மொண்டுபுது சட்டியிட்டு
வன்றாக வொட்டவே காச்சிப்போடு
வகையாக நீர்போகக் காச்சிப்போடே. 116

போடவே சட்டிநடு பள்ளஞ்செய்து
பேர்பெரிய ரசந்தானுஞ் சேரதென்று
நாடவே நடுவதனில் இரதம்விட்டு
நலமாக மேல்சட்டி மூடிப்போடு
காடவே சீலைமண்தா னேழுசெய்து
கருத்துறவே பன்னிரண்டு ஜாமந்தானும்
நாடவே யெரித்திடவே வுயரவேகி
நலமாக இருக்குமது பதங்கமாமே. 117

ஆமேதான் சட்டியைநீ பிரித்துக்கொண்டு
அடைவாக மயிர்க்குச்சி யாலேதானே
போமேதான் வழித்துமே பதங்கந் தன்னைப்

போக்காகக் கல்வத்தி லிருசே ரிட்டு
நாமேதான் வெள்ளையென்ற பாஷாணத்தை
நலமாக எடைசேர்த்துக் கல்வத் திட்டு
வாமேதான் வெடியுப்பு நீரா லாட்டி
வடிவாக நாற்சாம மரைத்துக்கொள்ளே. 118

அரைத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
அடைவாகச் சட்டியிட்டு நடுவில்வைத்துப்
பரைத்துமே மேல்மூடி சீலைசெய்து
பதிவாக அடுப்பேற்றி யிருஜாமந்தான்
கரைத்துமே யெரித்திடவே வுயரவேறுங்
கனிவாக வெடுத்துமே மயிர்க்குச்சாலே
துரைத்துமே யெடுத்துஅரை வில்லையாக்கித்
துடியாக முன்போல எரித்திடாயே 119

எரித்துமே யிப்படிக்கு ஐந்துஅப்பா
இயல்பாக வெரித்தெடுத்து வைத்துக்கொண்டு
நரித்துமே வெள்ளீயம் பலமுமொன்று
நலமான தாளகமும் பலமுமொன்று
கரித்துமே தாளகத்தைப் பொடியாய்ச் செய்து
கனிவாக வங்கத்தி லுருக்கிக்கொண்டு
பரித்துமே யிடைசமமாய்க் கொடுநொருங்கும்
பதிவான இன்னமொன்று பகரக்கேளே. 120

பகரவே சாரத்தை யிடையேசேர்த்துப்
பதிவாக வரைத்துமே யுருக்கித்தீரு
நகரவே வெள்ளீயஞ் சுத்தியாச்சு
நலமாக வெள்ளிபோ லோசைகேட்கும்
வகரவே குகையிலிட் டுருக்கிக் கொண்டு
வடிவாக நூற்றுக்கு ஒன்றுதாக்கிப்
பகரவே வெள்ளியது பத்துமாற்று
பகராரிய வங்கத்தின் பெருமைதானே 121

தானென்ற காரீயங் குத்தியூது
தடையறவே வோடாது நிற்கும்பாரு
வானென்ற வெள்ளியைத்தான் விற்றுக்கொண்டு
வ்ரிசையாய் ஜீவனமும் பண்ணித்தேரு
கானென்ற சிவயோக நிஷ்டைபாரு
கருத்துவைத்தால் வெள்ளிவித்தை வருகும்பாரு
ஊனென்ற சுழிமுனையில் நாட்டம்பாரு
உற்றுணர்ந்தா லெல்லாமுஞ் சித்தியாமே. 122

சித்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாக வெள்ளைப்பா ஷாணத்தாலே

முத்தியாய் வெள்ளியது ஆச்சுபாரு
முடிவான யோகத்துக் கிதுதானாதி
சத்தியா யிதைவிட்டால் வெள்ளியில்லை
சரியான பாகமாய்ச் செய்துகொள்ளு
நத்தியே சகலமுந்தான் சித்தியாகும்
நலமான பொருளறிந்த வாதியாமே. 123

வாதியாம் பொருளறிந்தால் சொல்லக்கேளு
வகையான வெள்ளியைத்தா னறியவேண்டும்
நீதியாய்ச் சகலசித்தி யாடவேண்டும்
நிலையான பொருளறிய வேண்டுமப்பா
கோதிலா தறிந்தவனே சித்தன்சித்தன்
கொடுமைபெறச் சொன்னாக்கா லொன்றுமில்லை
பாதிமதி யணிந்தவனே யாடும்வித்தை
பதியறியார் விதியொளி காண்பான்பாரே. 124

பார்க்கவே வெள்ளிவித்தை சொன்னநேர்மை
பதிவான பொருளறிந்து பண்புபார்த்துச்
சேர்க்கவே ஒருமுறைதான் தப்பிற்றானாற்
சிறப்பாக மும்முறைதான் செய்துகொள்ளு
ஏர்க்கவே கைப்பாகந் தப்பிற்றானால்
ஏழைபோ லிருக்காதே பின்னும்பாரு
வார்க்கவே பார்த்திடவே சித்தியாகும்
வளமான பொருளறியார் மாடுதானே 125

மாடுதா னொருபோக்கா யுருக்கும்பாரு
மனிதருக்கு ஒருபோக்குந் தெரியாதப்பா
காடுதான் நாடுபோல் திரிவார்பாரு
கனிவாகப் பொருளறியார் காட்டுவாதி
நாடுதான் நாட்டிலுள்ள வாதிமார்கள்
நலமான பொருளைபறி யாமற்றானும்
பாடுமா பாடியவர் முடியப்பாடி
பதமில்லை யென்பார்கள் வாதிமாரே. 126

வாதிதான் பாடுபட்டுப் பலனுமில்லை
வடிவாகப் பொருளுமில்லை யென்பாரப்பா
நீதிதா னறியாதா ரிவ்வாறந்தோ
நிகழ்த்துவா றுண்மயினை நெறியினோரார்
பாதிமதி யணிந்தபரம் பொருளின் செய்கை
பாரதனி லெவரறிவார் பரிந்துபார்க்கின்
சோதிதான் பிரித்ததுபோல் சொல்வாரப்பா
சுருதியிலே யாராய்ந்து துலக்கம்பாரே. 127

துலக்கமாஞ் சீனத்தைச் சுண்ணஞ்செய்து
துடியாக வெடியுப்பு தன்னில்சேர்த்து
பலக்கமா யரைத்துவில்லை காயவைத்துப்
பதிவாகும் ஜெயநீராய்ச் செய்துகொள்ளு
வலக்கமாஞ் சகலமெல்லாஞ் சுண்ணஞ்செய்து
வடிவாக நீற்றியதை யெல்லாங்கட்டுந்
துலக்கமாம் ஜெயநீரா லெல்லாமாகுந்
துடியாகச் சரக்கெல்லாம் கட்டுமாமே. 128

ஆமேதான் தீக்ஷவிதி ஐந்து தன்னில்
அடைவாக வெள்ளிதான் செய்யச்சொல்லி
நாமேதான் சொல்லிவிட்டோம் வாதாங்கத்தில்
நலமாகப் பொருளறிந்து வாதிமார்கள்
காமேதான் கருத்தாகச் செய்து கொள்வார்
கருத்தில்லார் செய்யவே மாட்டாரப்பா
பூமேவும் நிலந்தனிலே யிருக்குமட்டும்
பொறுமையா யிருந்துமே செய்துகொள்ளே. 129

சமஸ்தமும் வெள்ளியினாலாக வேண்டும்
அதனால் முன்னேயதைச் செய்கவெனல்

கொள்ளவே சகலமுந்தான் சித்தியாகும்
கூறான சித்தியெல்லாந் தீயிலாச்சு
நள்ளவே வெள்ளியென்றா லெளிதோவல்ல
நலமாக மதியைத்தான் செய்து கொள்ளு
கள்ளமாய்த் திரியாதே நூலைப்பாரு
கருத்தாக நூலென்றால் கற்கக் கேளு
முன்னமாய்க் கேள்வியினால் சுடவும்வேண்டாம்
முடியுமட்டும் பார்த்திடவே வுழைத்துத்தேரே. 130

தேரவே கைபாக மாகச்செய்தால்
ஜெயமாகும் வேதையெல்லா.மெளிதிலாகும்
ஆரவே பாகமது தப்பிப் போனால்
அடைவாக முடியுமட்டு முழைத்துப்பாரு
காரவே வரிசையாய்ச் செய்துகொள்ளு
கடினவே வாதமெல்லாங் கைக்குள்ளாகுந்
தாரவே வாதம்வந்தால் சொல்லவேண்டாந்
தடையறவே பொன்னாகுந் தன்மைபாரே. 131

பாருநீ சகலசாஸ் திரங்களெல்லாம்
பதிவாகப் பார்த்துமே தேர்ந்துகொள்ளு
காருமே பாகமெல்லாந் தெளியும்பாரு
கருத்தான பாகமது எளிதிலாகுஞ்
சாருமே பாகம்வந்தால் வல்லாமாகுஞ்

சரிதையாய்த் திரியாதே சாரும்பாரு
காருமே ஞானம்வரும் யோகமாகுங்
கடிதென்று விட்டாக்கா லெல்லாம்போமே 132

போகாமல் சாரத்தைக் கட்டிக்கொள்ளு
போக்கோடே ஜெயநீரும் வைத்துக்கொள்ளு
தாக்காமல் சொன்னதெல்லாஞ் சித்தியாகும்
தடையறவே சித்திக்கும் வேதையாகும்
வாகாம லுப்புமுதல் தாதுவெல்லாம்
வடிவாகச் சித்திக்கு முத்தியாகுந்
தேகாமல் சிந்தூர பாகமெல்லாந்
தேசத்தில் வாதமெல்லாம் ஜெயமுமாமே. 133

சாரக்கட்டு

ஆமோனின் னமொரு சேதிகேளு
அடைவான சாரத்தின் குருவுதன்னை
நாமேதான் சொல்லுகிறேன் வாதாங்கத்தில்
நலமான பொருளாகும் நாட்டில்தானுஞ்
சீமேதான் சீனமது பலந்தான்பத்து
சிறப்பாகச் சவுக்காரக் குழம்பைவிட்டுக்
காமேதா னரைத்துவில்லை காயவைத்து
கருத்துறவே பெரியபுடம் போட்டுக் கொள்ளே. 134

போட்டுமே கருஞ்சுண்ணம் சீனச்சுண்ணம்
போக்காகச் சவுக்காரக் குழம்பைவிட்டுத்
தீட்டுமே யரைத்துவில்லை காயவைத்துத்
திரமாக ஐந்துமுறை யிவ்வீதந்தான்
வாட்டுமே கடுஞ்சுண்ண மாகும்பாரு
வடிவாக விச்சுண்ணம் வீரங்கூட்டி
நாட்டுமே சாரத்தின் மேலேபூசி
நலமாகப் புடம்போட்டு எடுத்திடாயே. 135

எடுத்திடவே சாரமது முத்துப்போல
இதமாகத் தந்தம்போ லிருக்கும்பாரு
அடுத்திடவே சாரத்தின் மகிமைசொல்ல
அரனாலு முடியாது மற்றோர்காணார்
கடுத்துமே சாரமது சுண்ணமானால்
கனமாகச் சரக்கெல்லாஞ் சுண்ணமாமே
விடுத்துமே யம்பரத்தை யகற்றியோடும்
விருதாவாய்ச் சொன்னாக்கா லிசைவாகாதே. 136

நாகக்கட்டு

இசைவாக நாகத்தை யிலுப்பையெண்ணெ

யிதமாக விருபத்து ஒன்று சாய்த்துப்
பசையாக வுருக்கையிலே சாரமீயப்
பதை பதைத்துக் கட்டுமே நாகந்தானும்
விசையாகக் கட்டினதோர் நாகந்தன்னை
விருப்பமாய்த் தங்கத்தி லிடையேதாக்கு
துசையாகப் புட்டாகு மெடுத்துக் கொண்டு
துப்புரவாய் ரவிதனிலே நூறொன்றீயே 37

ஈயவே மாற்றுதான் பத்துமாகும்
இனிதாக சிவசொத்தை விற்றுநீயும்
மாயவே செலவுசெய்து யோகம்பாரு
மதிமயங்கித் திரியவே வேண்டாமையா
நாயமார் போலவே நடத்தைசெய்து
நலமாகக குருசெய்து குளிகைசெய்து
வாயமா யுலகத்தி லிருந்துதேரு
வடிவாகச் சித்தியெல்லாம் வருகும்பாரே. 138

வருகுமே வாதத்தைக் கண்டபோதே
மதிமயங்கிக் கெர்ஜித்துத் திரியவேண்டாம்
நருகுமே குரும்பாகச் செல்ல வேண்டாம்
நாட்டியவான் போலவே யுடைய வேண்டாம்
கருகுமே சிவஞான போதமாகக்
கருத்துவைத்தால் மேனமா யிருந்துகொள்ளு
உருகுமே உன்னைத்தான் தேவராக
உத்தமனே சொல்லுவா ருறுதிதானே. 139

எமது நூலி லின்னதைச் செய்துகொள்ளெனல்

உறுதியா னென்னுடைய சாஸ்திரத்தில்
உண்மையாய் வாதாங்கந் தன்னில்தானும்
நருதியாய் வெள்ளிவித்தை யுப்புச்சுண்ணம்
நலமான சாரத்தின் சுண்ணமோடு
வருதியா யாராய்ந்து பார்த்துப் பார்த்து
வடிவாக வுறுதியாய்ச் செய்து கொள்ளு
நருந்தியாய் நாட்டிலே யெல்லாமாகும்
நாடாக்கா லொன்றுமில்லை நடத்தைபாரே. 140

வெள்ளிவேதையில் வெள்ளிசேர்க்க வேண்டுமெனல்

பாரேநீ வெள்ளிமுறை தன்னைத்தானும்
பக்குவமாய்ப் பார்த்துமே தெரிந்துதேரு
கூரேநீ சகலமெல்லாஞ் சித்தியாகுங்
குணங்கெட்டுத் திரியாதே வேதைபாரு
நாரேநீ வெறுமரத்தில் புதையாவாறு

நலமாகப் பொருளறிந்தால் சித்தனாவாய்
காரேநீ யெல்லாமுஞ் சித்திக்குந்தான்
கருணைபெறப் பார்த்தவனே யோகியாமே. 141

யோகியா யுலகத்தில் வாதும்பார்த்து
உத்தமனே ஜீவனத்தைச் செய்துகொண்டு
பாகியா யிருந்தாலே சித்திசித்தி
பதிவான குருவாலே கோடிகாலம்
யூகிநான் கண்டுமே பிடித்தேனப்பா
உற்றுணர்ந்தால் சித்தியா மொளிவுகாணும்
மோகியாய்த் திரிந்தாலே லாபமில்லை
முடியுமட்டுந் தேடியே யிருந்திடாயே.

நூற்பரம்பரை

இருந்திடவே சிவன்சொல்ல தேவிகேட்க
இதமான தேவிநந் திக்குச்சொல்ல
நருந்திடவே நந்திதான் தன்வந்திரிக்கு
நாட்டவே தன்வந்திரி யகஸ்தியர்க்கு
வருந்திடவே யகஸ்தியரும் புலத்தியர்க்கு
வளமான புலத்தியருந் தேரருக்குக்
கருந்திடவே தேரர்தான் யூகிக்குச்சொல்ல
கருணைபெற யூகிதான் சொன்னவாறே. 143

துருசுச் சுண்ணம்

வாரேது யென்றாக்கால் சொல்லக்கேளு
வரிசையாய்ச் சீனத்தின் சுண்ணத்தோடே
பாரேது சூடனைத்தான் சேர்த்தரைத்துப்
பதிவான சவுக்காரக் குழம்பினாலே
காரேது அரைத்துருட்டி வில்லையாக்கிக்
கருணைபெற ரவிதனிலே காயப்போடு
தாரேது ஐந்துசுண்ணம் நடுவில்வைத்துத்
தப்பாமல் புடம்போடச் சுண்ணமாமே. 144

சுண்ணமாந் துருசதுவுஞ் சுண்ணமாகும்
சூதத்தைக் கால்வாரி யடிக்கலாகும்
அன்னமாந் துருசினது சுண்ணந்தன்னை
அடைவான விராலியிலை பிழிந்து விட்டு
வன்னமாஞ் சூதத்தை விட்டுக்காய்ச்சி
வடிவான சூதமது அட்டைபோலாம்
பின்னைவே றில்லையப்பா வாதந்தானும்
புரட்டில்லை யெல்லாமுஞ் சித்தியாமே. 145

சித்தியா மத்தங்கா யுள்ளேயிட்டுச்
சிறப்பாக நூறுபுடம் போட்டுத்தேடு
முத்தியாங் கரியிலிட் டுருக்கிப்பாரு
முனைவாக வயிரம்போ லுருகியாடும்
புத்தியாய்க் குகையிலிட்டு நன்குருக்கி
முனிவாகத் தங்கமது ஒன்றுபோடு
சத்தியாய் நாகமெடை தங்கத்துள்ளே
சதிராகப் போட்டிடவே களங்கமாமே. 146

களங்கமாம் நவலோகம் நூற்றுக்கொன்று
காட்டிடவே திசைமாற்று கருதிப்பாரு
பளங்கமா முப்புக்குங் காவிக்கப்பா
பதிவாக நிற்குமப்பா சொல்லக்கேளு
நளங்கமாம் பொன்னை விற்றுச் செலவுசெய்து
நாதாந்தச் சற்குருவின் நாட்டம்பாரு
பளங்கமாம் வாசியோ கத்தைப்பாரு
பத்தியா யிருந்தாக்கால் சித்தியாமே. 147

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகக் களங்கத்தை நொருக்கிக்கொண்டு
புத்தியாய்க் கெந்திதான் கூடச்சேர்த்து
பொதுவான புகைநீரா லரைத்துக்கொண்டு
நத்தியாங் காசியாங் குப்பிதன்னில்
நலமாக வைத்தெரிக்கச் சிந்துரந்தான்
முத்தியாய்ப் பணவெடைதான் தேனிலுண்ணு
முடியுமட்டுங் காயமது இரும்பாம்பாரே. 148

இரும்பாகுந் தேகந்தான் கல்லைப்போலாம்
இருந்திடவே சமாதிக்கு ளிருக்கலாகும்
அரும்பாகும் நோயெல்லாந் தவிடேயாகும்
அடைவாகச் சீனமது கற்றூணாகும்
நரும்பாகும் வஜ்ஜிரமாந் தேகந்தானும்
நலமாக விருக்குமடா சிந்துரந்தான்
இரும்பாகும் வேதமிது சொன்னபுத்தி
இதமான நலலோகம் பொன்னதாமே. 149

பொன்னாக வேண்டுமென்றால் சொல்லக்கேளு
போக்கோடே நவலோகம் நூறிலொன்று
நன்றாக ஈய்ந்திடவே மாற்றுப்பத்து
நானிலத்தில் கூறுகிறேன் தீக்ஷைதன்னில்
பின்னைவே றில்லையப்பா வாதமார்க்கம்
பிரபலமாய் நூலின் விதி யடுத்துப்பாரு
கன்னல்போ லிருக்குமே யுலகநீதி
கருதியே யெல்லாமுஞ் சித்தியாமே. 150

சித்தியே யாகவென்றால் சொல்லக்கேளு
சிறப்பாகச் சூதத்தைக் கட்டிக்கொள்ளு
முத்தியா யுருக்கியே கரியிலிட்டு
முனிவான தங்கமென்ற குருவைச்சேரு
நத்தியே சேர்த்தாலே யெல்லாமாகும்
நாடினால் சகலநூல் பார்த்துத்தேரு
கத்தியே திரியாதே யெல்லாமாகுங்
கருத்துவைத்து வாதாங்கம் பார்த்துக்கொள்ளே 151

கொள்ளவே வேதாந்தச் சித்தாந்தத்தைக்
கொடிதாகப் பார்த்துமே நிலைநிறுத்து
விள்ளவே சகலமுஞ் சித்தியாகும்
வேதாந்தத் தின்பொருளை விளம்பலாகும்
துள்ளவே திரியாதே அனந்தம்பாடு
திடமாகப் பட்டாக்கால் தீரந்தோன்றுங்
கொள்ளவே விதியாளி காண்பானப்பா
கொடுமைசொன்னா லொன்றுமில்லை குறியுமாமே 152

தங்கஞ்செய்ய இவை வேண்டுமெனல்

குறியாக வேண்டுமென்றால் சொல்லக்கேளு
குறியான துருசைத்தான் நீற்ற வேண்டும்
பொறியாகச் சூதத்தைக் கட்டவேண்டும்
போக்கோடே செபபெல்லாந் தங்கமாகும்
பறிசேர்ந்து தங்கமது ஆகவேண்டும்
பதியவே இரசவாத மெல்லாங்கேட்கும்
நரிபோலத் திரியாமல் நூலைப்பாரு
நாடினால் வாதமது ஏவலாமே. 153

துருசுக்களங்கு

ஏவலாஞ் சத்துவகை சொல்லக்கேளு
இதமான அரப்பொடிதான் பலமும்பத்து
காவலா யெலுமிச்சஞ் சாறுதன்னைக்
கனிவாக மிதக்கவே கூடவிட்டு
நாவலாய் மூன்றுநாள் வைத்துப்பாரு
நலமாகத் தெளிவைத்தா னாடிப்பாரு
தாவலாந் தெளிவிறுத்து வைத்துக்கொண்டு
தடையறவே யின்னமொன்று சாத்துவேனே. 154

சாத்துவேன் துருசுதான் பலமும்பத்து
சரியான கெந்தியது பலமுமுக்கால்
காத்துவே னீதிரெண்டுங் கல்வத்தாட்டு
கணக்காக அயத்தெளிவா லிருஜாமந்தான்

பாத்துவேன் வில்லைதட்டி ரவியில்போடு
    பதிவாகச் சுண்ணாம்பு உப்புநேரே
காத்துவேன் கலசமிட்டுப் புடமாய்ப்போடக்
    கனிவாகக் கருப்பாக விருக்கும்பாரே. 155

இருக்குமே புடமிட்டுக் குகையிலிட்டு
    இதமாக வுருக்கிடவே சத்துமாகும்
நருக்குமே சத்துஐந்து தரமேயூது
    நலமான சத்துத்தான் சொல்லக்கேளு
கருக்குமே வெண்கலம்போல் நகரும்பாரு
    கனமான சத்தையே யுருக்கினாலும்
மருக்கிடவே தங்கமொன்று நாகமொன்று
    மனதாகச் சேர்ந்திடவே சொல்லக்கேளே. 156

கேளுமே களங்காக விருக்கும்பாரு
    கெடியாக நவலோக நூற்றொன்றீய
ஆளுமே மாற்றெட்டு ஆகும்பாரு
    அடைவாக வுப்புக்கும் நிலைக்கும்பாரு
வாளுமே புத்தியினால் செய்துகொள்ளு
    வடிவான பொருளறிந்தோன் ஞானியாவான்
காளுமே பொருளறியார்க் கொன்றுமில்லை
    கடைகெட்ட வாதிமார் அலைவார்பாரே. 157

அலையாம லிருக்கவென்றா லுப்பைப்பாரு
    அலைந்துமே வுலையாகத் துருசைப்பாரு
கலையாமல் சூதத்தைக் கட்டிப்பாரு
    கருத்தான வாதமெல்லாம் எளிதிலாகும்
வலையாமல் வாதம்வந்தால் ஞானமாகும்
    வருகாதே போனாக்கா லுலுத்தமாடு
மலையாமல் சாஸ்திரத்தை மருவிநின்று
    மனதுவைத்து நூலெல்லாம் பார்த்திடாயே. 158

பார்த்திட்டால் ரசவாத மேவலாகும்
    பாராட்ட லொன்றுமில்லை பரமநூல்தான்
சேர்த்திட்டால் மட்டமாஞ் சேராவிட்டால்
    செழிப்பில்லா ஒருவருடன் பேசவேண்டாம்
மூத்திட்டாள் மூத்தாள்தான் முகத்தில்நின்று
    மூதேவியாய்த்திரிய வேண்டாமையோ
போர்த்திட்டா லேமமா மில்லாவிட்டால்
    பூதலத்தி லில்லாமல் பிச்சைவாங்கே 159

வாங்கியே திரியாமல் சொல்லக்கேளு
    வடிவான துருசைநீ வைத்துக்கொள்ளு
தாங்கியே முக்காலுந் திறமாய்ப்பாரு

தடையில்லா வேதைதான் சரிதையாகும்
ஓங்கியே யொருவருடன் பேசவேண்டாம்
உலுத்தனவன் யோகியா யிருக்கவேண்டுந்
தூங்கியே திரியாமல் ஞானந்தன்னைத்
துப்புரவாய்ப் பார்த்துமே சொல்லி டாயே. 160

சொல்லிடவே ஞானந்தான் மிகவுமாகுஞ்
சொற்பெரிய பெரியோரை யடுத்துக்கேளு
நல்லிடவே வழிசொல்லார் பெருமையாக
நாதாந்த சாரமெல்லாம் நலமாகும்பார்
பொல்லிடவே பொறுமையாய் வாதம்பாரு
போக்கோடே சகலசித்து முடனேயாகும்
முல்லிடவே வெகுதூர மோடிப்போகும்
முடியாத பொருளெல்லாம் முடியுந்தனே. 161

தானென்ற வுலகத்திலில்லா மார்க்கந்
தப்பாம லுண்டாகுந் தபசிக்குத்தான்
ஊனென்ற பொருளறிந்தால் வாதமாகும்
உண்டாட்டா லொன்றுமில்லை யுலுத்தமாகு
கானென்ற சரக்கறிந்தோன் வாதியாகுங்
காணாட்டால் உப்பறிந்தால் சிலதுமாச்சு
நானென்ற ஆணவத்தால் கெடவும்வேண்டாம்
நானிலத்தில் தொகையறிந்தால் நாடும்பாரே. 162

உப்பாலே சகலமுமாகுமெனல்

நாடுமே உப்பாலே யெல்லாமாச்சு
நலமான பொருளாச்சு நன்மையாச்சு
கூடுமே தவமாச்சு தேகமாச்சு
குணமாச்சு மணமாச்சு குறிப்புமாச்சு
வாடுமே வாதந்தான் மிகவேயாச்சு
வழியோடே ஆறுதலம் வடிவுமாச்சு
நாடுமே யெல்லாமுஞ் சித்தியாச்சு
நாடினா லெல்லாமும் நாடிப்பாரே. 163

நாடிப்பார் இரசவாதஞ் செய்யவேதான்
நலமாக அரிதல்ல சொல்லக்கேளு
கூடிப்பார் தொகையறிந்தால் வாதமாச்சு
குணமாக அறியாட்டால் வாதம்போச்சு
தேடிப்பார் சேதியறி ஞானமாச்சு
தேடாட்டா லொன்றுமில்லை திருட்டுவாதி
மோடியே அறியவென்றால் வாதந்தன்னை
முடியுமட்டுந் துருசைநீ முயன்றுபாரே. 164

வெடியுப்புத் திராவகம்

முயன்றுபார் வெடியுப்பு புகைநீர்கேளு
முதலான வரதமனைச் சொல்வேன்பாரு
நயன்றுபார் வெடியுப்பு பலமும்பத்து
நலமான சீனமது யிருபத்தைந்து
கயன்றுபா ரிரண்டுமொன்றாய்ப் பொடித்துக்கொண்டு
காரியமாய் வாலையென்ற சட்டியிட்டுக்
கயன்றுபார் அடுப்பேற்றித் தீயைமூட்டு
காரணமாய் வெள்ளைநீர் வருகும்பாரே. 165

பாருமே வெள்ளையைத்தான் வீசிப்போடு
பதிவான சிவந்தநிறம் வருகும்பாரு
சேருமே யிதைப்பிடித்து வைத்துக்கொண்டு
சிறப்பாக விரண்டுசேர் கல்வத்திட்டு
நாருமே பூநீர்தான் பலமும்போடு
நலமாகப் பொங்கியே கரைந்து நிற்கும்
வாருமே பீங்கானி லிட்டுக்கேளு
வழியோடே சொல்லுகிறேன் வண்மைகேளே. 166

துருசுச் சுண்ணம்

வண்மையாந் துருசுதான் பலமிரண்டு
வாகாகக் கரிதனிலே வாட்டிப்போடு
திண்மையாய் வெள்ளையா யிருக்கும்பாரு
திறமான முந்நீரில் தோய்த்துப்போடு
வண்மையாய்ப் பக்ஷமொன்று தோய்த்துப்போடு
வகையான வீரமது சுண்ணம்நேரே
உண்மையாய்க் கூட்டியே யுடைத்துப்போடு
உறுதியாய்த் துருசற்று நீறுமாமே. 167

நீறான நீரிலே விராலியிட்டு
நிலைக்கவே பிழிந்திடவே தண்ணீராகும்
வாரான தண்ணீரில் பாஷாணஞ்சேர்
வடிவான கௌரிமுதல் லிங்கங்கட்டுங்
காறான சூதமுதல் வீரஞ்சாகுங்
கடுசான யிரும்பையெல்லாம் உறிஞ்சியாடும்
ஆறான வெகுதூர மெட்டிப்போகும்
ஆச்சரியஞ் சரக்கெல்லா மணியுமாமே. 168

அயத்தங்கம்

மணியான இரும்பைத்தா னுருக்கிக்கொண்டு
மாசற்ற தங்கத்தை யிடையேசேரு
கணியான சவுடுதிரை போகும்பாரு

கலங்காம லிருந்துமே வேதைபாரு
திணியான பொருளறிந்தால் வேதையாகும்
க்ஷணத்திலே அறியாட்டால் கழுதைமேய்க்கி
செணியான ரவிதனிலே நூற்றுக்கொன்று
சேர்த்திடவே பதினான்கு மாற்றுமாமே. 169

ஆமேதா னிரும்பென்றா லெளிதோவல்ல
ஆச்சரியம் ஆஸ்தானங் கரும்பொன்னாகுந்
தாமேதான் குருவறிந்தோன் வாதியாகுந்
தாட்டிகமா யறியாட்டால் கழுதைமேய்க்கி
பூமேதா னிலந்தனிலே யிரும்புசெம்பு
பூட்டியே வாதமெல்லாம் பொருந்திப்பாரு
நாமேதா னறைக்குள்ளே யிருந்தாற்போல
நாடினால் சகலசித்தி யாடலாமே. 170

ஆடலாம் இரும்பைவிட்டால் வாதமில்லை
அலட்டென்று விட்டாக்கால் காணாதோடும்
பூமேதா னிரும்பென்றால் எளிதோவல்ல
புகழ்பெறவே யிரும்புமுதல் வேதையாகும்
நாடினா லிரும்பினா லுழைப்பாரப்பா
நாட்டிலே வாதியென்ற மக்கள்தாமுங்
கூடலா மிரும்பைத் தானுழைத்தாற்கேளு
கூடுமே இரசவாத மெளிதுதானே. 171

கட்டு வகை

தானென்ற சாஸ்திரத்தில் சித்தர்தாமுந்
தடையறவே கட்டுவகை மறைத்துச்சொன்னார்
வானென்ற வாதாங்கந் தன்னில்தானும்
வகையாகக் கட்டுவகை சொல்லக்கேளு
நானென்ற ஆணவத்தால் கெடவும்வேண்டாம்
நாய்போலத் திரியாமல் வேதைபாரு
ஊனென்ற கட்டுவகை சூளுகுபாரு
ஓகோகோ விதனாலே யெல்லா மாமே. 172

பச்சைத்துருசால் கட்டுவகை

ஆமேதான் கட்டுவகை சொல்லக்கேளு
அண்டபகி ரண்டமெல்லாம் நுழைந்துஆட
நாமேதாஞ் சொல்லுகிறோம் நுழைந்துகேளு
நாதாந்த சாரமெல்லா மிதற்குள்ளாகும்
வாமேதான் கட்டுவகை யேதோவென்று
மயங்கியே திரியவுந்தான் வேண்டாம்வாதி
ஓமென்ற அறிவாலே யுற்றுப்பாரு
ஓகோகோ கட்டுவகை யுறுதிதானே. 173

இலிங்கக்கட்டு

உறுதிதான் சீனமது பலமும்பத்து
உற்றுமே முன்போலச் சிண்ணஞ்செய்து
நருதிதான் வெடியுப்பைச் சேர்த்தரைத்து
நலமாக வூதிடவே கடுமைசுண்ணங்
கருதிதான் வெடிச்சுண்ணம் பலமோபத்து
கடிதான சட்டியிலே நடுவேவைத்து
நருதிதான் துருசதுதான் பலமோபத்து
நலமாகக் கரிநெருப்பில் வைத்துஊதே. 174

ஊதிடவே பக்குவமா யூதுநீயும்
உத்தமனே வெண்மையா யூதிப்போடு
நாதிடவே யெடுத்துமே பொடித்துக்கேளு
நலமாக வெடியுப்புச் சுண்ணமேலே
காதிடவே பொடிபரப்பி யதன்மேற்கேளு
கனமான லிங்கமது பலமும்நான்கு
வாதிடவே கட்டியா யதின்மேல்வைத்து
வண்மையாய்த் துருசுவெள்ளை மேலேபோடே. 175

போட்டுமே அழுத்தியே யதின்மேற்கேளு
பொருந்தவே வெடியுப்புச் சுண்ணம்போடு
நாட்டுமே அழுத்தியே அடுப்பிலேற்றி
நலமாக இருஜாம மெரித்துவாகுங்
காட்டுமே யுருகியது கட்டிப்போங்கு
கனமான லிங்கமது முழுக்கட்டப்பா
தீட்டுமே அம்பரத்தே செருக்கியோடுந்
திறமான கட்டெல்லாந் துருசுக்கட்டே. 176

லிங்கந் தங்கஞ்சேர்ந்த வேதை

கட்டியே லிங்கமதை யெடுத்துக் கொண்டு
கனமான லிங்கமெடை தங்கஞ்சேர்த்து
நட்டியே யுருக்கிடவே யிரண்டுஞ்சேர்த்து
நலமாக வுருக்கியே மணிபோல்நிற்கும்
ஒட்டியே நவலோக மிருபாற்கொன்று
உண்மையாய்க் கொடுத்திடவே பத்துமாற்று
பட்டியே போகாமல் புடமிறங்கும்
பதிவான தொழிலெல்லாந் துருசினாட்டே. 177

பாஷாணங்கள் முதலியகட்டு

துருசியால் பச்சையிலே வேதையாகுந்
துடியான சரக்கெல்லாம் பச்சைகட்டும்
வரிசையாய் லிங்கம்போல் வெள்ளைகட்டும்

வகையான வீரமுதல் கௌரிகட்டும்
நரிசையாய் வெள்ளையென்ற பாஷாணந்தான்
நலமாகக் குதிரையென்ற பாஷாணந்தான்
கரிசையா யிப்படியே யெல்லாங்கட்டும்
கனிவாக விப்படியே கட்டிக்கொள்ளே 178

மேற்படி வேதை

கட்டியே நலலோகந் தன்னிலேதான்
கனிவாகப் பாய்ச்சிடவே வேதையாகும்
முட்டியே பச்சையிலே வேதையாகும்
முடிவான ஆட்டெல்லாந் துருசினாட்டு
நட்டியே வாதந்தா னெளிதிலாகும்
நலமாக வெல்லாமுஞ் சித்தியாகும்
முட்டியே யோகமுதல் ஞானமாகும்
முடியுமட்டும் யோகமா முனிந்துபாரே 179

முனிந்துமே நாதாக்கள் சொன்னசொல்லை
முனிவாகப் பார்த்துமே யுழைத்துத்தேறு
கனிந்துமே பாராம லுழைக்கவேண்டாங்
கதிபெறவே சரக்கிலே யுழைத்துஆடு
நனிந்துமே உழைத்தாலே யெல்லாமாகும்
நாதாக்க ளாடினார் பச்சையாக
வனிந்துமே பாகமா யுழைத்துத்தேறு
வடிவான பொருளறிந்தால் வாதிதானே. 180

வாதிகள் மடமை

தானென்ற வாதிதான் கட்டுமார்க்கந்
தடையறவே துருசைத்தான் புடத்தில்வைத்து
வானென்ற கரியாகப் போனதாலே
வகையாகக் கெட்டுமே அலைவான்பாரு
நானென்ற ஆணவத்தால் கெட்டேனென்று
நலமாக அலைவார்கள் புத்தியில்லார்
பானென்ற ஆறுதலாய்க் காணமற்றான்
பதிகெட்டு அலைந்துமே திரி.வார்பாரே. 181

பச்சைத்துருசால் சரக்கெல்லாங் கட்டவெனல்

திரியவே வேண்டுமென்றால் துருசைத்தானுந்
துடியாகப் பச்சையாய்க் கரியில்வைத்து
நரியவே சட்டியிட்டுச் சரக்குவைத்து
நலமாக வெரித்திடவே கட்டிப்போகும்
பரியவே கட்டினதோர் சரக்கினாலே
பதிவாக வேதையாங் கோடாகோடி

துரியவே யெல்லாமுஞ் சித்தியாகுந்
துடியெல்லாந் துருசினது ஆட்டந்தானே. 182

ஆட்டான கேள்வியினால் வாதஞ்சுட்டால்
அறியாமற் போய்விடுமே கரிபோலாகும்
நீட்டான பாகமாய்ச் சுடவும்வேண்டும்
நேரான கைமுறையுங் குருவும்வேண்டும்
பாட்டான வாதாங்கந் தன்னில்தானும்
பரிவாகத் துருசுபச்சை கட்டும்மார்க்கம்
ஊட்டான பொருளாகச் சொல்லிவிட்டேன்
உத்தமனே பொருளறிய வேண்டுந்தானே 183

தானென்ற வுலகுதன்னில் வாதிமார்கள்
தடையறவே கட்டுவகை தெரியாதாலே
ஊனென்ற சரக்குத்தான் கரியாய்ப்போகும்
உற்றுமே பார்த்துத்தான் சொன்னதாலே
நானென்ற ஆணவத்தால் கெட்டோமென்று
நலமாக வேங்கியே அழுவார்பாரு
கானென்ற கடைமருந்தி லில்லையென்று
காரியமாய்ச் சொல்லுவா ருலுத்தமாடே. 184

மாட்டைப்போ லலைந்துமே மதிமயங்கி
மடையரப்பா கெட்டுமே கேடுகெட்டு
காட்டவே மூலிகையைப் பிடுங்கிப் பார்த்துக்
கடைகெட்டுத் திரிவார்க ளுலகமன்னர்
கூட்டிலே அடைந்ததொரு கிளியைப்போல
குடிகெடுத்துத் திரிந்துமே யுலகவாதி
நீட்டுமே சொன்னதெல்லாம் நிஜமதாகும்
நிச்சயமாய்ப் பார்த்துநீ யறிந்திடாயே. 185

அறியவே துருசைநீ வைத்துத்தேறு
அடைவாகப் பொன்னாகும் வேதையாகும்
நெரியவே துருசானால் பொன்னுமாகும்
நிலவரமாய்ப் பொன்னாரு மெளிதில்வேதை
பிரியவே சொல்லியே திரிந்தாலென்ன
புரட்டாகச் சொன்னதினா லென்னலாபங்
கரியவே சொன்னதெல்லாம் நிசமதாகுங்
கனிவாகப் பார்த்துணரச் சித்தனாமே. 186

சித்தனால் சித்தனென்றால் சாஸ்திரத்தைச்
சிறப்பாகப் பார்த்துமே சோதித்தேறிப்
பத்தனா யிருந்திடுவான் கைபாகத்தைப்
பார்த்துமே சோதித்துப் பரிவாய்ச்செய்து

முத்திபெறப் பாகத்தைக் காண்பானப்பா
    மூதண்ட மாட்டுவித்த துருசுதானுஞ்
சித்தியாய்ச் செய்திடுவான் சித்திக்குந்தான்
    திறமாக யோகசித்தி பார்ப்பான்பாரே. 187

பார்க்கவே துருசுகுரு இதுதானப்பா
    பதிவான பச்சையிலே வேதையாகுங்
கார்க்கவே பச்சையென்றா லெளிதோவல்ல
    கனமான பச்சையிலே முடியும்வாதம்
ஏர்க்கவே பச்சையென்று மயங்கவேண்டாம்
    இன்பமாய்ப் பச்சையல்லோ பொன்னதாச்சு
வார்க்கவே யெல்லாந்தான் பாகத்தாலே
    வண்மையாய் விதியறிந்த வண்மைதானே. 188

கல்லுப்புக் கட்ட-சமுத்திர நீரெரிக்க
இது சுத்த ஜலமென்றும் புகை நீரென்றும் பெயர்

வண்மையாங் கல்லுப்புக் கட்டுமார்க்கம்
    வகையாக வென்னுடைய நூலில்தானும்
உண்மையாய்ச் சொல்லிவிட்டே னூலில்தானும்
    உற்றுமே வாதாங்க மொத்துப்பாரு
திண்மையாங் கடல்நீரைக் கொண்டுவந்து
    திறமாக வாலையென்ற சட்டிமூடிக்
கண்மையாய்த் தீயெரிக்கப் புகைநீராகுங்
    கருத்தாகச் சுத்தஜலம் போலாங்காரே. 189

கல்லுப்புக்கட்டு

காருமே கல்லுப்பு படிதானெட்டு
    கருத்தாகக் கடல்நீர்த்திரா வகமும்பத்து
வாருமே கடல்நுரைசுண் ணம்மிரண்டு
    வகையாக விரண்டுமொன்றாய்க் கலக்கிக் கொள்ளு
சேருமே ஒட்டிலே காச்சிப்போடு
    சிறப்பாக வுப்பெடுத்து அகப்பையாலே
சாருமே துணிதனிலே போட்டுக்கட்டு
    சரியாகப் பந்துபோல் கட்டிடாயே. 190

கட்டியே அனல்தனிலே யொட்டக்காய்ச்சிக்
    கனகமாகக் காய்ச்சியே கெட்டியாக்கு
துட்டியே அதன்பேரில் கவசங்கேளு
    துடியாக துருசியது சேருமொன்று
முட்டியே கடல்நுரைதான் சேருமொன்று
    மூதண்ட குப்பைமேனி சேருமொன்று
நட்டியே யிவைமூன்று மரைத்துக்கொண்டு
    நலமாகக் கல்லுப்பு மேலேகட்டே.. 191

கட்டியே பத்தெருவில் புடத்தைப்போடு
கனிவாக வெடுத்துமே சொல்லக்கேளு
முட்டியே முன்போலக் கல்லுப்புக்கு
முடிவாகப் பழயபடி கவசம்போடு
செட்டியே பத்தெருவில் புடத்தைப்போடு
சிறப்பாக இப்படியே மூன்றுபோடு
வெட்டியே மேல்கவசந் தள்ளிப்போடு
வகையாகக் கல்லுப்பைக் கல்வத்திட்டே. 192

கல்வத்திலிட்டுமே சொல்லக்கேளு
கனமாகக் கட்டினதோர் உப்புநேரே
நல்வமாம் வெள்ளையென்ற பாஷாணஞ்சேர்
நலமாக முன்னீரா லரைத்துக்கட்டு
துல்வமா யுண்டைபண்ணிக் காயவைத்துத்
துடியினதன் மீதுகடல் நுரையுஞ்சீனம்
வில்வமாய் மேனியிலை மூன்றரைத்து
விருப்பமாய்க் கல்லுப்பின் மேலேகட்டே. 193

கட்டியே யிப்படிக்குப் புடமிரண்டு
கனிவாகப் போட்டெடுக்கத் தந்தம் போலாந்
தெட்டியே வயிரம்போ லிறுகிக்காணுந்
தேசத்தி லலையாதே யிந்தவுப்பு
பட்டியே குகையிலிட் டுருக்கித்தீரு
பதிவாக வைரம்போ லாகும்பாரு
முட்டியே யிதுபோகும் போக்குத்தானும்
முனிவற்கும் நாவினால் சொல்லப்போமே 194

சொல்லவே யிவ்வுப்புக் கரியில்நின்று
சுகமாக வுருகுமது குடிக்காதப்பா
மெல்லவே யிவ்வுப்புக் கடுமைமெத்த
மேதினியில் சித்தர்தாம் மறைத்தார்பாரு
நல்லவே வாதாங்கந் தன்னில்தானும்
நலமாக யிவ்வுப்பி னாட்டஞ்சொன்னேன்
பொல்லாமை யில்லாம லிந்தவுப்பைப்
பொறுமையாய்ச் செய்திடவே சித்தியாமே. 195

சித்தியே யாகவென்றால் கல்லுப்போடே
சிறப்பாக வெள்ளைப்பா ஷாணஞ்சேரு
முத்தியாய்க் கல்லுப்பு உருகியாடும்
மூர்க்கமாம் வேதையிது முடிவுகாணும்
நத்தியாய்ப் பாஷாணஞ் சேராவிட்டால்
நலமாகச் சித்தியில்லை நாட்டுளோர்க்குச்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகினுள்ளே
தாட்டிகவான் கண்டுகொள்வர்ன் தரணிதானே 196

தரணியாங் கல்லுப்புச் சத்துதன்னைத்
தகைபெறவே யுருக்கியே கரியிலிட்டுப்
பரணியா மாடாதே போனாற்கேளு
பதிவாகத் திரும்பவுந்தா னுருக்கியாட்டு
கரணியாம் வைரம்போல் கம்மாதாகில்
காரணமாம் விதங்களினி சொல்வேன்பாரு
தரணியாம் வைரம்போ லுருகிற்றானால்
சரியான விதமினித்தான் சொல்லக்கேளு 197

கேளுமே வைரமுமா முப்புச்சத்துக்
கெடியாகப் பலம்நான்கு உருக்கிக்கொண்டு
பாளுமே போகாமல் தங்கத்தாயைப்
பதிவாக நான்கிலொன்று சேர்த்துருக்கி
வாளுமே தங்கமெடை நாகஞ்சேரு
வடிவாகச் சேர்ந்தொன்றாய்க் களங்கமாகும்
நாளுமே நவலோகம் நூற்றுக்குத்தான்
நன்மையா யுருக்கியொன்று ஈந்திடாயே. 198

ஈய்ந்திடவே உட்கொண்டு சுழித்துவாங்கி
இதமாக வுள்ளேதான் சென்றுதேறிப்
பாய்ந்திடவே பத்தரைதான் மாற்றுக்காணும்
பதிவான வுப்புக்குங் காவிக்கப்பா
வாய்ந்திடவே வோடாது கடையில்விற்று
வழிபோடே சென்றறிந்து யோகம்பாரு
காய்ந்திடவே கனகமது கண்டபோதே
கருத்தாக வெண்ணியே வாழ்ந்திடாயே 199

வாழ்ந்திடவே வாதாந்தா னெளிதோவல்ல
வகையான மவுனமா யிருந்துகொண்டு
தாழ்ந்திடவே புத்திதான் தணியவேண்டுந்
தணியாமல் மனமதுதான் துணிந்துபேசக்
காழ்ந்திடவே துணிந்தக்கா லுன்னையோகோ
கருத்தாகக் கொன்றுமே போடுவார்பார்
மாழ்ந்திடவே கெட்டபுத்தி யாய்நடந்து
வடிவுகெட்டுத் திரியாதே வதைதான் பாரே. 200

கல்லுப்பும் பாஷாணமுஞ் சேர்ந்த கட்டு

பாருமே கல்லுப்பைக்கட்டிக்கொண்டு
பதிவாக வெள்ளைப்பா ஷாணமோடே
சேருமே சேர்த்துநீ புடத்தைப்போட்டால்
சிறப்பாகக் கல்லுப்பு ஈயம்போல
வேருமே யுருகியது சத்துமாகும்
வெண்மையாய்ப் பளிங்குபோ லுடையும்பாரு

சாருமே யிப்படிக்குச் செய்யவேண்டுஞ்
சரியான கல்லுப்பு மணியுமாமே. 201

மணியான கல்லுப்பு மணியைக்கோத்து
மதிபெருகத் தாவடமாய்க் கோத்துப்போடு
பிணியான நோயெல்லாந் தவிடேயாகும்
புரட்டில்லா ஐந்துமெட்டெழுத்துமோது
கணியாகத் தேரியவன் முன்னிற்பான்பார்
கருத்தாக வாசியது இறுகும்பாரு
நணியாக வாதமொடு யோகஞ்சித்தி
நாடுமே சகலமுந்தான் சித்தியாமே. 202

சித்தியா யாகவென்றால் கல்லுப்பைத்தான்
திரமாக வுருக்கியே சத்தெடுத்து
முத்தியாய்ச் சத்தோடே தங்கஞ்சேரு
முனிவான நாகத்தைக் கூடச்சேரு
பத்தியாய் வாதமது எல்லாமாகும்
பதிவுபெறச் சத்தியாய்ச் சொல்லிப்போட்டேன்
முத்திபெற எல்லாமுஞ் சித்தியாகும்
மூவுலகு சித்தியெல்லா முடனேபாரே 203

சகலரோகத்திற்குங் காட்டாமணக்கெண்ணெய்

பாருமே யெண்ணெ யொன்று சொல்லக்கேளு
பதிவான காட்டா மணக்குக் கொட்டை
சாருமே யூற்றியே படிநால்தானுஞ்
சரியான இளநீரு கூடநேரே
வாருமே விட்டுமே காய்ச்சிக்கொள்ளு
வடிவான மண்டியது தெளிந்துபோகுங்
காருமே யெண்ணெய்தா னெடுத்துவைத்துக்
கனிவாகச் செய்திடுநற் பாகங்கேளே 204

கேளுமே வல்லாரை புளியோரைத்தான்
கெடியான கையானும் நிலையாவாரை
பாளுமே யிவைநான்கும் புட்டவித்துப்
பதிவாகப் பிழிந்துமே சொல்லக்கேளு
நாளுமே யெண்ணெயெடை ஊற்றிநீயும்
பலமாக மூன்றுநாள் வைத்துக்கொண்டு
வாளுமே கடுக்காயுஞ் சிவதைவேரும்
வழியாக கடுகுரோ கணியுங்கூட்டே 205

கூட்டியேதான் றிக்காய்வா லுழுவையோடு
குணமான கொத்தமல்லி தானுஞ்சேர்த்து
தாட்டியே நெல்லிமுள்ளி தன்னோடுந்தான்
தயவாக வகைக்கொன்று நிறுத்துக்கொண்டு

பாட்டியே மூன்றுடனே கிராம்புசிங்கி
பதிவாக வகைக்கொன்று இடித்துப்போடு
நாட்டியே முன்னெண்ணெய் தன்னிலிட்டு
நலமாக வெரிபதத்தைப் பார்த்துக்கொள்ளே 206

பார்த்துமே தானெடுத்துக் கரண்டிவீதம்
பதிவாக வுண்டுவரத் தினந்தான்மூன்று
சேர்த்துமே நோயெல்லாந் தவிடேயாகுந்
தேசத்தில் போனாலு மிந்தஎண்ணெய்
கார்த்துமே வருகாது நோவுபோகுங்
கனிவாகக் குஷ்டமுதல் காணாதோடும்
நார்த்துமே மேகமெல்லாம் மாண்டுபோகும்
நலமான எண்ணெயிது நாடிப்பாரே. 207

நாடியே யெண்ணெயது கொள்ளும்போது
நலமான சர்க்கரைதான் போட்டேயுண்ணு
வீடியே வாதமெண் பத்துநான்கும்
விருப்பமாய்ப் பித்தமெல்லா மோடிப்போகும்
நாடியே அண்டவா தங்கள்தீரும்
நலமான சிலேத்துமமு நாடாதோடுங்
கோடியே க்ஷயகாசம் ஈளைபோகுங்
குணமான விப்புருதி யோடுந்தானே 208

ஓடுமே ரத்தபித்த காசத்தோடு
உத்தமனே பவுத்ரமு மகோ தரமும்போகும்
ஆடுமே பித்தமகோ தரமும்போகும்
அடைவான வியாதியெல்லாங் காணாதோடும்
பாடுமே பத்தியமா யுண்டுதேறு
பக்குவமா யுண்டாக்கால் பலனுமாகும்
ஏடுமே யிதைவிற்றுச் செலவுசெய்து
எத்தேச காலமெல்லா மிருந்துதேறே 209

தேறவே ஜீவனத்துக் கெண்ணெய் பண்ணிச்
சிறப்பாகக னகபாக மாகச்செய்து
வாறவே யெண்ணெய்பண்ணி விற்றுக்கொண்டு
வடிவாக வாதந்தான் மிகவும் பண்ணு
நாறவே யிவ்வெண்ணெய் சகலத்திற்கும்
நாடினால் வியாதியெல்லாம் பொடியாய்போகும்
பாறவே யிதைவிட்டு வைத்தியோர்கள்
பதிவான கொட்டையா மணக்குஎண்ணெய்
வாறவே யெண்ணெய்தான் செய்துவிற்று
வியாதியெல்லாந் தீராதே போனதாலே

காறவே சாஸ்திரந்தான் பொய்யே யென்பார்
கதியில்லாற் கொன்றுமில்லை கணக்குமாமே. 21

கணக்காக வென்னுடைய தீக்ஷதன்னில்
கனிவாகச் செப்பிவிட்டே னுலகத்தோற்குப்
பிணக்காகச் சாஸ்திரத்தில் பொய்யோ சொன்னேன்
பெரிதாக வுலகத்தில் வாதிமார்கள்
தணக்காக வாதாங்கந் தன்னில்சொன்னேன்
தண்மையா யிவ்விரண்டு மொத்துப்பார்த்து
வணக்காகச் செய்திட்டு வுலகந்தன்னில்
வண்மையாய் வாழலாம் வேதைதானே. 211

தானென்ற எண்ணெய்தான் சொன்னமார்க்கந்
தாயான ஈஸ்வரிக்கும் அகஸ்த்தியற்கும்
பானென்ற குருவிற்கும் பொய்யோ சொன்னேன்
மகத்தான வுபதேசங் கேட்டுத்தேறி
வானென்ற வுலகத்தில் பிழைக்கவேண்டி
வடிவான வுலகத்தில் சொன்னேன்யானுந்
தேனேன்ற தேரரிணைப் பாதம்போற்றித்
தேறியே வுலகத்தில் சொன்னேன்யானே. 212

சொன்னதொரு வாதாங்க முந்நூற்றுள்ளே
சூட்டினேன் வெள்ளிமுறை பொன்னின்மார்க்கம்
நன்னயமாய்ச் சொல்லிவிட்டேன் பாகமாக
நலமாக யோகமுதல் கிரியைமார்க்கம்
இந்நிலத்தில் வாதிக்குச் சொன்னேன்புத்தி
இதமாகச் சொல்லிவிட்டே னுலகத்துள்ளே
கன்னல்போ லிருந்தாலே வாதமாகுங்
கனகமது பிறக்குமது கருத்தால்தானே 213

வெள்ளி வித்தை

கருத்தாக வெள்ளையென்ற பதங்கங்கேளு
கனிவெள்ளைப் பாஷாணங் குதிரைப்பல்லும்
வகுத்தாகத் தாளகமும் பூநீர்வீரம்
வடிவான சாரமொடு துருசுசீனம்
நருத்தாகக் கல்லுப்பு வெடியுங்கௌரி
நலமான வெள்ளையப் ரேகத்தோடு
நருத்தாக நாகமொடு வெள்ளீயந்தான்
நலமாக விவையெல்லா மொக்கச்சேரே. 214

சேர்த்துமே யெருக்கம்பால் தன்னிலாட்டிச்
சிதமாக அரைஆறு ஜாமமாட்டு
பார்த்துமே வெள்ளியால் கிண்ணம்பண்ணி
பக்குவமா யதற்குள்ளே யிட்டுக்கேளு

நார்த்துமே மேல்மூடி வெள்ளியாலே
    நலமாகச் சீலைசெய்து சொல்லக்கேளு
வார்த்துமே முக்கவரில் கிண்ணிவைத்து
    வடிவாக விளக்கேற்றி எரித்திடாயே. 215

எரித்திடவே யகல்வைத்துத் திரியேபோடு
    இதமாக முன்னகலில் வார்த்தஎண்ணெய்
நரித்திடவே மூன்நா ளவியாதேற்று
    நமைாகப் பதங்கமது ஏறப்பாரு
கருத்திடவே பதங்கமெல்லா மெடுத்துவாங்கிக்
    கனிவாக வெள்ளெருக்கம் பாலிலாட்டி
வார்த்திடவே வுண்டைபண்ணிக் காயப்போடு
    வடிவாக மேல்கவசஞ் சொல்லக்கேளே. 216

சொல்லவே அப்ரேகம் பலமுமைந்து
    சொற்பெரிய வீரமதுபலமுங் கால்தான்
மெல்லவே அரைத்துமே பாணியாலே
    மேன்மையா யரைக்கவே நீதமாகும்
நல்லவே முன்பதங்கம் மேலேகட்டி
    நலமாக ரவியிலிடு தினந்தானேழு
வல்லவே புடமிட்டு எடுத்துப்பாரு
    வைரம்போல் தானிருக்கும் பஸ்பந்தானே. 217

தானென்ற பஸ்பத்தைக் கரியில்வைத்துத்
    தாட்டிகமா யுருக்கிடவே யுருகும்போது
வானென்ற வெள்ளியென்ற ஈயஞ்சேரு
    வகையான சாரமிட் டுருக்கிச்சாய்க்க
நானென்ற வெண்மையா யுருகும்பாரு
    நலமாகச் சூதத்தை எடையே சேரு
கானென்ற இந்தஎடை வெள்ளைபோடு
    கனிவாக முலைப்பாலில் ஜாமமாட்டே 218

ஆட்டியே ரவிதனிலே காயவைத்து
    அடைவாக முன்கவசம் மேலேகட்டித்
தாட்டிகமாய்ப் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
    தடையறவே வெள்ளிசெம்பு நூற்றுக்கொன்று
வாட்டியே யுருக்கியே கொடுத்தாயானால்
    வகையாக இருபத்து ஐந்துமாற்று
நாட்டியே சூதவெள்ளி யாகும்பாரு
    நலமாக லோகமெல்லாம் வெள்ளியாமே 219

ஆமேதான் வாதனையை நீக்கித்தள்ளி
    அம்பாளைத் தெரிசித்து அப்பால்மேவி
நாமேதான் சிலம்பொலியின் நாதங்கண்டு

நலமான சிலம்போசை நடனங்கண்டு
வாமேதான் சிவசொத்தைப் பதுமைபோல
வடிவாகச் செய்துமே வடிவம்பார்த்துக்
காமேதான் சித்தரவர் மறைத்தவெள்ளி
கனிவான வாதாங்கங் கணக்கிலாச்சே 220

ஆச்சென்ற வெள்ளிமுறை யடுத்துப்பாரு
ஆகாகா யிதுலகுவு முன்னேபாரு
காச்சென்ற கனலதுதா னேரமாட்டா
கைக்கடங்காத் தொழிலிதுதான் கனகமாகும்
நீச்சென்ற போதத்தை நம்பிப்பாரு
நிலையான குருபதத்தை நேர்ந்துபாரு
வாச்சென்ற ஞானத்தின் வெள்ளியாதி
வடிவாக யெல்லாமுஞ் சித்தியாமே. 221

சித்தியா யாகவென்றால் வெள்ளிபாரு
சிறப்பான வெள்ளிவித்தை க்ஷணத்திலாகும்
முத்தியா யாகவென்றால் பொன்னைப்பாரு
முடிவாகச் சித்தானால் முடிந்துபோகும்
பத்தியா யாகவென்றால் செம்புபாரு
பதிவாக யெல்லாமுஞ் சித்தியாகும்
நத்தியா யாகவென்றால் நலமதாகும்
நலமான யோகசித்தி நலமதாமே. 222

வெள்ளிசெய்து விற்றா லிலாபமில்லை யதைத் தங்கஞ் செய்யெனல்

நலமாக வெள்ளிதனைச் சரியாய்ப்பண்ணி
நாடியே விற்றுமே செலவுசெய்து
பலமாகச் செலவுசெய்து யோகம்பாரு
பெருமையாய் ஞானத்தின் வழியிற்சேரு
கலமாக யிருந்தாக்கா லொன்றுமில்லை
சனகமது ஆனால்சொல் சித்தியாகும்
வலமான பொருளறிந்தோன் வாதியாகும்
வடிவாக அறியாட்டால் பேதையாமே 223

பேதையென்று நினைவெடுத்துத் திரியவேண்டாம்
பேய்போல வலையாமல் நூலைப்பாரு
காதையா லலைந்தாக்கா லெல்லாங்காண்பீர்
கருத்தாக வலையாம லிருந்தாற்கேளு
வாதையே படவேண்டாம் உலகுதன்னில்
வடிவான வெள்ளிதான் வடிவுபார்த்து
நீதையாம் பொருளறியார் வாதிமார்கள்
நிச்சயமா யறிவார்கள் நிஜங்கண்டோரே 224

நிஜமாகச் சுடும்வாதி றியமாட்டார்
நீணிலத்தில் பொய்சொல்வார் நிஜமதாக
வசமாக வாதம்வரும் என்று சொல்வார்
வகையறியாத் திருடரப்பா திருட்டுவாதி
பிசகாதே சொல்வார்கள் பேச்சைக்காணார்
புரட்டாகச் சொன்னதினால் பலனுமில்லை
பசையான நூலறிந்தோர் படிக்கவேண்டும்
பதிவான முத்திசித்தி பலனுமாமே. 225

ஆமேதான் பொருளறியார் ரவியைக்காணார்
அழும்பாகச் சொல்லிடுவ ரசடர்தாமும்
நாமேதான் திருடர்தா நிஜத்தைக்காணார்
நடுவிலே சுட்டுமே நலிப்பான்மட்டி
பூமேதா னுலகத்தில் பொய்கள்சொல்வார்
போக்கோடே ஆறுதலங் காணமாட்டார்
பாமேவும் பொதிகைமுனி நானேயென்பார்
பதிவான விதியறியார் பதிவுள்ளோரே. 226

வெள்ளி வித்தை

உள்ளாக வேண்டுமென்றா லின்னமொன்று
உண்மையாய் வெள்ளிவித்தை யுறுதிகேளு
கள்ளமாய்ச் சொல்லவில்லை வெளியாய்ச் சொன்னேன்
கணக்கறிந்தால் பலனாகும் வெள்ளிதானுந்
துள்ளவே கைம்முறையைப் பார்த்துத்தேறு
துடியான யோகமுதல் சித்தியாகும்
வள்ளலார் சொல்லிவிட்ட வெள்ளியைத்தான்
வகையாகச் சொல்லுகிறேன் வகையைக்கேளே. 227

வகையாகச் சொல்லுகிறே னுற்றுக்கேளு
வண்மைபெற வெள்ளையென்ற பாஷாணந்தான்
தொகையாக நவச்சார மரைச்சேர்கூட்டித்
துடியாக அதைப்பொடித்துப் பானையிட்டு
நகையாக மேல்மூடிச் சீலைசெய்து
நலமாக வெரித்திடவே வுயரவேறும்
அகையாக யெடுத்துமே வைத்துக்கொண்டு
அடைவாகச் சொல்லுகிறே னாண்மைகேளே 228

ஆண்மையா யிரதமது சேரோவொன்று
அடைவாகக் கல்லுப்பி லெரிக்கவேறுந்
தாண்மையாய்ச் சூதபற்பம் வெள்ளைபாஷாணந்
தடையாக வீதிரண்டுஞ் சேர்த்தரைத்து
வாண்மையாய் வெள்ளெருக்கம் பாலிலாட்டி
வகையாக வுண்டைபண்ணிச் சொல்லக்கேளு

காண்மையா யப்ரேகங் கவசம்போட்டுக்
கணக்காகப் புடமிட்டு எடுத்துக்கொள்ளே. 229

எடுத்துமே பின்புதான் சொல்லக்கேளு
இதமான வெள்ளீயஞ் சேரோவொன்று
நடுத்துமே அரப்பொடியுஞ் சேரோவொன்று
நலமான வெள்ளைப்பா ஷாணங்காலாய்
விடுத்துமே சேர்த்துருக்க உருகும்பாரு
விதமாக வெண்காரம் பாதிசேரு
கடுத்துமே விரண்டுதரம் உருக்கிடப்பா
கனமான இரும்புதான் வெளியிற்போமே. 230

போமேதான் சாரமது இடையேசேரு
போக்கோடே அரைத்திட்டு வில்லையாக்கி
ஆமேதான் புடம்போட்டு உருக்கிப்பாரு
அடைவாகக் கல்மிஷங்க ளற்றுப்போகும்
நாமேதான் கட்டிவெள்ளிப் போலேயாகும்
நலமாக இவ்வெள்ளி நான்கிலொன்று
தாமேதான் முன்குருவைக் கொடுத்துப்பாரு
தப்பாது ரசிதமது பத்துமாமே. 231

இன்னது விட்டால் வெள்ளியாகா தெனல்

பத்தான சாரத்தை விட்டால்கேளு
பதிவான வெள்ளிதா னாகமாட்டா
சித்தான யிரும்புதா னீயத்தோடே
சேராட்டா லீயமது நீர்தான்வாங்கா
முத்தான இரதமது சேராப்போனால்
முடிவான வெள்ளீயம் நீர்தான்வாங்கா
நத்தான வெல்லாந்தான் சேர்ந்தால்சித்தி
நாட்டிலே வெள்ளிவித்தை நலமதாமே. 232

நலமான சித்தியெல்லா மேதாலாச்சு
நன்னயமாம் வாதவித்தை தன்னாலாச்சு
பலமான வெள்ளிதா னேதாலாச்சு
பிரபலமாய் வெள்ளைப்பா ஷணத்தாலாச்சு
உலமான கிரியையொடு ஞானத்தாலே
உற்றுணர்ந்து சிந்திக்க வெல்லாமாச்சு
கலமான கலனறிந்தால் சூக்ஷமாச்சு
காரியத்தை யறியாட்டா லெல்லாம்போச்சே 233

போச்சென்று எண்ணாதே வெள்ளிதன்னைப்
போக்கோடே செய்துமே பூண்டுபாரு
நீச்சென்று எண்ணாதே வெள்ளிவேலை

நிமிஷத்தி லாகுமே நிலைக்கும்பாரு
ஆச்சென்று மஹிபதிகள் முன்னேசொன்னார்
அதனாலே வெள்ளிதான் மறைந்துபோச்சு
மூச்சென்ற ததுவடங்கி ஜடநில்லாது
முனையான அரியறிந்தால் மூர்க்கமாமே. 234

மூர்க்கமாம் ரஜிதத்தை முன்னேபாரு
மூவுலக மெச்சுமே ஞானமாகும்
ஆர்க்கமா முன்னுடைய வெள்ளிதன்னை
அடைவாகச் செய்தாக்கல் சித்திசித்தி
மார்க்கமாஞ் சித்திதா னிரம்பவுண்டு
மதயானை வெள்ளீய நீரைவாங்கில்
ஊக்கமா மெல்லாமுஞ் சித்தியாச்சு
ஓகோகோ சித்திதரும் ஞானவானே 235

ஞானவா னென்றுமொழி சொல்லேதுக்கு
நலமான வெள்ளிவித்தை தெரிந்ததாலே
கானகத்தில் திரிந்தலைந்து திரிதல்வேண்டாங்
கருணைவைத்தால் சித்தியாங் கண்டுபாரு
ஊனமாய்த் திரிந்தலைந்தால் லாபமேது
உற்றுணர்ந்து பாராட்டால் சித்தியில்லை
வானகமும் விண்ணகமு முன்னதாச்சு
வகையான வெள்ளிவித்தை பார்த்திடாயே 236

வெள்ளிவித்தை அகஸ்தியர் முறை

பார்த்திடவே யின்னமொன்று பகரக்கேளு
பதிவான வெள்ளியது யெளிதிலாகக்
காத்திடவே யேழையாம் வாதிதானுங்
கருத்தாகச் செய்திடுவா ருலுகுதன்னில்
நாத்திட்டு நட்டாற்போல் வேதையாகும்
நலமான சித்தியாம் நாட்டுள்ளோர்க்கு
வார்த்திட்ட விக்கிரகம் போலேயாகும்
வடிவான சித்தியெல்லா மெளிதிலாமே. 237

எளிதாக வின்னமொரு வெள்ளிவித்தை
இன்பமா யகத்தியரு மெனக்குச்சொன்னார்
அளிவான மனத்தினால் பார்க்க வேண்டாம்
அடைவான சிந்தையினால் அடர்ந்துபாரு
துளிவான துரோகிக்குக் கிட்டாதப்பா
துப்புரவாய்ச் சித்திக்கும் நல்லோருக்கு
வளியோடே செய்தாக்கால் சித்திசித்தி
வகையறிந்த தொகையறிந்த வளம்பெற்றோரே 238

வளமாகப் பொருளறியார் நூலைக்காணார்
வழிதப்பி வாதத்தைச் சுட்டுச்சுட்டுக்
கனமாகக் கரியதனைப் பண்ணிப்பண்ணிக்
கருத்தில்லா வாதிகள்தாங் கெட்டேமென்பார்
துளமான வெள்ளிவித்தை யெளிதிலாகுந்
துடியான வெளியோருஞ் செய்வார்பாரு
பளமான ததுவறிந்து வுண்ணவுண்ணப்
பதிவான ருசியாகும் பாருள்ளோர்க்கே 239

பாரியாய் வெள்ளிமுறை யொன்றுகேளு
பதிவான விதியாளி அறிவானப்பா
தேரியே வெள்ளையென்ற பாஷாணந்தான்
திரமாகச் சேரதொன்று கல்வத்திட்டு
நாரியே சூதமது சேரதொன்று
நாட்டவே சாரமது சேரதொன்று
பாரியா யிவைமூன்றுங் கல்வத்திட்டுப்
பாரித்துப் பொடித்துமே சொல்லக்கேளே. 240

சொல்லவே பானையது விரண்டெடுத்துச்
சிறப்பாக உராய்ந்துமே ஒக்கப்பண்ணி
நல்லவே அடிப்பானைக் குள்ளேயிட்டு
நலமாக மேற்பானை கவிழ்த்துமூடி
வல்லவே சீலைமண் நான்குசெய்து
வடிவாகத் தீயெரிப்பாய் எட்டுஜாமந்
துல்லவே உயரவே பதங்கமாகுந்
துடியான பதங்கமெல்லாம் வழித்துக்கொள்ளே 241

வழித்துமே யெருக்கம்பால் தன்னாலாட்டி
வளமாக வுண்டைபண்ணிக் காயவைத்து
ஒழித்துமே அப்ரேக நவநீதத்தை
நலமாக வுண்டைமேற் கவசங்கட்டிக்
கழித்துமே காயவைத்துப் புடத்தைப்போடு
கனிவாக வுருகியே கட்டிப்போகும்
பழித்துமே கட்டியே குருவுமாச்சு
பதிவாக வெடுத்துமே பருவங்கேளே 242

கேளுமே வெள்ளீயஞ் சேரோவொன்று
கெடியாக விரதமது கால்சேர்கூட்டி
நாளுமே உருக்கியே புட்டேயாக்கி
நலமாகக் கல்வத்தி லிட்டுக்கேளு
பாளுமே அண்டோடு சேரதொன்று
பக்குவமாய்ச் சுண்ணாம்பு உவர்மண்ணேரே

தாளுமே போட்டுமே சுத்திபண்ணித்
தடையறவே யெடுத்துமே சொல்லக்கேளே 243

சொல்லவே வெள்ளீயம் புட்டுநேரே
செம்மையாய்ப் பாணியா லரைத்துவில்லை
நல்லவே காயவைத்துப் புடமேபோடு
நலமாக வெடுத்துமே நவிலக்கேளு
கல்லவே வெள்ளீயம் நீர்க்கப்போடு
கனமாக வெடுத்துமே சாரஞ்சேரு
வல்லமையா யுருக்கிடவே வெள்ளிபோலாம்
மயங்காம லெடுத்துமே மார்க்கங்கேளே 244

கேளுமே வெள்ளிபோ லுருகும்பாரு
கெடியாகத் தட்டினா லோசையாகும்
வாளுமே சரிகைவெள்ளி போலாம்பாரு
வடிவாக விதையுருக்கி நூறிலொன்று
காளுமே முன் குருவைக் கொடுத்தாயானால்
கனிவாக வெள்ளியது பத்துமாற்று
தாளுமே வங்கத்துக் கோடாதப்பா
தன்மையாய் விதியறிந்து செய்திடாயே 245

செய்திடவே வெள்ளிவித்தை யெளிதிலாகுஞ்
சிறப்பான மார்க்கமாய்ச் செய்துகொள்ளு
எய்திடுமே காயசித்தி கவனமாகும்
ஏழைமதி போகாதே வெள்ளிபாரு
உய்திடவே சித்தியெல்லாம் வெள்ளியாலே
உண்மையாய் வெள்ளிதா னதிகவேதை
பய்திடவே பாகமாய்ச் செய்துகொள்ளு
பதிவான விதியறிந்தால் எல்லாமாமே. 246

மேற்படி பரம்பரை

ஆமேதான் சிவன்சொல்லத் தேவிகேட்க
அடைவாக நந்திதான் கேட்டுக்கொண்டு
பூமேவும் நந்தி அசுவனிக்குச்சொல்ல
போக்கோடே அஸ்வினி விஸ்வனிக்குரைக்க
நாமேதான் விஸ்வனியுங் கேட்டுத்தேறி
நலமாகத் தன்வந்திரிக் குபதேசிக்க
வாமேதான் தன்வந்திரி அகஸ்தியர்க்கு
வகுக்க அகஸ்த்தியர் புலத்தியர்க்குச் சொன்னார் 247

சொன்னதொரு புலத்தியருந் தேரருக்குச்
சொல்லவருந் தோர்யூ கிக்குச்சொல்ல

நன்னயமா யூகிமுனி சந்தோஷித்து
    நலமாக ஆயுள்வே தத்தைப்பார்த்துக்
கன்னல்போ லுலகத்தில் பிழைக்கவேண்டிக்
    கருத்தாக வாதாங்க முந்நூற்றுள்ளே
இந்நிலத்தில் பெரியோர் பாதம்போற்றி
    எழுதினே னஞ்சாமல் வேதைதானே 248

தானென்ற வெள்ளிவித்தை சொன்னமார்க்கந்
    தாயான ஈஸ்வரியுங் குருவுஞ்சொல்ல
வானென்ற இப்பொருளை யீய்ந்துதானும்
    வடிவாகச் சுருக்கியே முந்நூற்றுள்ளே
கோனென்று கொட்டியே வைத்தேனப்பா
    கூர்ந்துமே வெள்ளிவித்தை குணமதாகும்
நானென்ற ஆணவத்தால் வித்தையெல்லாம்
    நாடியே யுலகத்தில் சொன்னேன்தானே 249

சொன்னதொரு தீக்ஷவிதி யைந்நூறுதன்னில்
    சொற்பெரிய களங்கோடு வெள்ளிதானும்
நன்னயமாய்ச் சொல்லிவிட்டேன் பார்த்துத்தேறி
    நலமாகப் பாகமாய்ச் செய்துதேறு
கன்னல்போல் வாதாங்கம் முந்நூற்றுள்ளே
    கைக்கனிபோல் சொல்லிவிட்டேன் கனிந்துபாரு
இந்நிலத்தில் வெள்ளீயம் நீரைவாங்கு
    இரந்துண்டு திரியாமல் வெள்ளிபாரே. 250

பாரப்பா வென்னுடைய சாத்திரத்தைப்
    பதிவாக முழுதுமே பகர்ந்துபாரு
சாரப்பா பார்த்தாக்கா லெல்லந்தோன்றுஞ்
    சவங்கலாய்த் திரிந்தாக்கா லொன்றுமில்லை
வேரப்பா ஒவ்வொன்று மிந்தநூலில்
    வேதையொன்றுந் தப்பாது விரைந்துபாரு
ஆரப்பா அறிவார்கள் புத்திமான்கள்
    அறிவார்க ளிந்நூலை அறிவாய்ப்பாரே. 251

அறிவாக வெள்ளிவித்தை யுலகத்தோர்க்கு
    அன்பாகச் சொல்லுகிறே னுலகவாதி
பிறிவாக வுலகத்தில் கேட்டுள்ளோர்கள்
    பிழைக்கவே தெரியாம லலைகுவார்கள்
பிறிவாக வுலகத்தில் வாதிமார்கள்
    பிரிந்துமே பாரிலே யலைவாரப்பா
நெறியான நெறியறிந்தா லுலகவாதி
    நேராகச் செய்தாக்கால் சித்தியாமே. 252

சித்தியா யாகவென்றால் வெள்ளைதன்னைச்
  சிறப்பாக வைத்திடவே சித்தியாகும்
முத்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
  மூவுலகு மெச்சவே வெள்ளிதன்னைப்
பத்தியா யாகவென்றால் சொல்லக்கேளு
  பதிவாக விதியறிந்து பரமயோகி
சத்தியமாய்ச் சொல்லிவிட்டே னுலகத்துள்ளே
  சாதுபோல் கண்டுமே பார்த்திடாயே. 253

கண்டுபார் வெள்ளிவித்தை யெளிதிலாகுங்
  கணக்க்ாகப் பார்த்துமே சரணம்பண்ணித்
தொண்டுபா ரெடைபாக மாகச்செய்து
  தொண்மைபெறச் செய்தாலோ வெல்லாமாகுந்
துண்டுபார் நூலெல்லாம் வாசித்துப்பார்
  ஜெகஜ்ஜால வித்தையெல்லா மெளிதிலாகுங்
கண்டுபார் வாதாங்கந் தன்னில்தானுங்
  கருத்தாக வுறுதிபெற்று இருந்திடாயே 254

இருந்திடவே சகலமெல்லாஞ் சித்தியாகும்
  ஏழைமதி போகாதே செம்பைப்பாரு
வருந்திப் பா ரெல்லாமுஞ் சித்தியாகும்
  வடிவாக வெல்லாமுஞ் சித்தியாகும்
கருந்துபார் வாதாங்கந் தன்னில்தானுங்
  கருத்தாகச் சோதித்தா லெல்லாமாகும்
பருந்தைப்போல் திரியாதே பார்த்துத்தேறு
  பதிவாக யெல்லாந்தா னாகும்பாரே 255

ஆகுமே வெள்ளிதனை விற்றுக்கொண்டு
  அடைவாக ஞானயோ கத்தைப்பாரு
பாகுமே சுழிமுனையில் நாட்டம்பாரு
  பக்குவமாய் வாதியென்று பேர்படைத்துத்
தாகுமே யிரும்பைத்தான் முந்திப்பாரு
  தாக்கிடவே யெல்லாமுஞ் சித்தியாகும்
வாகுமே பொருளெல்லாந் தெரிந்துபோகும்
  வளமான பொருளறிந்தால் சாரமாமே. 256

சாரத்தை வெள்ளைப்பா ஷாணத்தோடே
  சாற்றியே யரைத்திடவே கட்டிப்போகும்
பாரத்தை அண்டோட்டில் வெள்ளீயத்தைப்
  பதிவாக நீரிருக்கும் பதியில்நில்லு
காரமென்ற காரத்தால் வெள்ளீயத்தைக்
  கணக்காக வுருக்கியே நீரைவாங்கு

பாரமென்ற பாரத்தால் சித்தியாகும்
பதினாறு மாற்றாகும் பதிவாய்ப்பாரே 257

வாதவெள்ளியில் அயச்செம்பு கொடுக்க இவ்வாறாகுமெனல்

பதிவாக அயச்செம்பை முந்திப்பார்த்துப்
பதியவே செம்பெடுத்து மதியில்தாக்கு
விதியாக வெள்ளிதான் பழுத்துப்போகும்
விதமான சரக்கெல்லா மிதிலேசாகுங்
கெதியாகச் சொன்னாக்கா லொன்றுமில்லை
கெடிபெறவே வொன்றொன்டொன்று சேர்ந்துவாடும்
பதிவாக விதியறிந்தால் பதியுள்ளோர்க்குப்
பதிவான வுண்மையிது பரிந்துபாரே 258

பாரேநீ யிக்காண்டந் தன்னில்தானும்
பதியவே பொருளெல்லா மெடுத்துக்காட்டு
காரென்ற விதியாளி கண்டுகொள்வான்
கனிவாக வில்லாதான் கணக்குமாமே
வாரேநீ கருவாளி காண்பானப்பா
வடிவாகப் பொருளறிந்து மாளவொட்டார்
சீரான சீரறிந்தால் பாகமாகுஞ்
சிறப்பான பொரளறிந்தால் வாதிதானே 259

வாதிகள் செய்ய வேண்டியவை யிவையெனல்

வாதியென்று பேர்படைத்தால் சீனச்சுண்ணம்
வடிவாக வெடியுப்புச் சுண்ணம்பண்ணு
சாதியென்று பேர்படைத்தால் தபசுபோச்சு
சாத்திரத்தை நம்பாதே சரிதைபோச்சு
வேதியென்று பேர்படைத்தால் ஞானம்போச்சு
வேதாந்தப் பொருளறிந்தால் விதிநூல்பொய்யாம்
பாதிமதி யணிந்தவர்தான் சொன்னநீதி
பதிவான விதியாளி யறிவான்பாரே 260

ஆனந்தக்களிப்பு

சவுக்காரச் சுண்ணம்

சவுக்காரச் சுண்ணத்தைச் சொல்வேன்-பூநீர்
சத்தியாம் நாதந்தான் பூநீர்தானாச்சு
நவுக்கார வழலை யதுதான்-நல்ல
நாயகி சுக்கான்கல் வழலைக்கல்லாச்சு 261

ஆச்சுதே யிவைரண்டுஞ் சேர்ந்து-இது
ஆதி சவுக்காரப் பேராச்சுதோழி

பாச்சுமே கல்லுப்புச் சேர்ந்து-நல்ல
பாதையாய்ச் சுண்ணங் கடுமையா யாச்சு 262

காரத்தில் கா,ரமு மேற்ற-நல்ல
காரமு மாச்சு சவுக்காரமப்பா
நீற்ற தோர்கல்லை யெடுத்து-இதில்
நேரா யுவருப்புச் சுண்ணங்கரைத்துக் 263

கல்லையும் போட்டே யெரிக்க-நன்றாய்
காணிது சுத்தியு மாச்சுதேபாரு
செல்லக் கரிதனி லூதி-இதைத்
திட்டமாய்ச் சுண்ணாம்பாய்ப் பண்ணிடுதோழி 264

பண்ணிய பூநீரோ பத்து-படி
தானே யளந்துமே பாண்டத்திலிட்டுக்
கண்ணிய மாகவே கேளு-கல்
சுண்ணம் படியொன்று விட்டிடுதோழி 265

சவுக்காரக் குழம்பு

கல்லுப்புச் சுண்ணமு மொன்று-நல்ல
காரமாய்ப் போட்டுக் கலக்கிடுதோழி
வல்லமை யாகக் கலக்கிப்பாரு
காரியமாகக் குழம்பாகக் காய்ச்சி 266

குழம்பை யிறுத்திடு தோழி-நல்ல
கூசாம லேதினி சொல்லமுடியா
அழம்பைக் குழம்பினால் வேதை-மிக்க
ஆதிசவுக்காரக் குழம்பிது பாரு 267

எல்லாச் சரக்குமே கட்டும்-நல்ல
இன்ப ரசவாத மாகுமேதோழி
நல்லா யிருக்குமே கேளு-நல்ல
நாயகி யாகுமே நலமிதுபாரு 268

சீனம் ஒருசே ரெடுத்து-நல்ல
சீனத்தைச் சட்டியிலிட்டுப் பொரித்துக்
காணமாய் வெண்கரு விட்டு-நல்ல
காரமாய்த் தானேயரைத்திடு தோழி 269

ஜாமமொரு ஜாம மாட்டி-நல்ல
சாதக மாகவே வில்லையாய்த் தட்டி
வாமமாய்த் தான்ரவி வைத்து-வடி
வாகக் கற்சுண்ணம் கீழ்மேலுமேயிட்டு 270

இட்டுப் பெரும்புடம் போட்டு-இதை
இன்பமாய்த் தானே யெடுத்திடு தோழி

கட்டுமே தான்கடுஞ் சுண்ணம்-நல்ல
காரிய மாகவே சொல்லுவேன்கேளு 271

ஆதி சவுக்காரந் தன்னை-இதை
அன்பாய்க் குழம்பையும் விட்டே அரைத்துப்
பாதியாய்ச் சீனத்தி னோடே-இதில்
பத்திச் சவுக்காரந் தானேகுழம்பை 272

வீட்டு அரைத்துமே வில்லை-தட்டி
வேகமாய்த் தானே ரவிதனிலிட்டுக்
கட்டு மெட்டாகவே போடு-புடங்
காட்டமாய்ப் போட்டு யெடுத்துமேகேளு 273

எடுத்துமே சாரத்தின் மேலே-கட்டி
இன்பமாய்க் காட்டி ரவிதனில்காய
அடுத்துமே வைத்திடு தோழி-நல்ல
ஆதியாய்த் தானே புடமதுஇட்டு 274

எடுத்துமே பார்க்கவே கட்டம்-இதை
இன்பமாய்ப் பார்க்கவே தந்தம்போலாகுந்
தடுத்துமே நாகமுருக்கி-இதைத்
தப்பாமல் தானெடை தானே கொடுக்க 275

கட்டுமே தானே உருகும்-நல்ல
கட்டாகும் வேதை கனிந்திடுந்தோழி
பட்டு எடுத்துமே பாரு-புகை
பக்குவ மாகவே கட்டிடுந்தோழி 276

புகையது கட்டிக் கனியும்-நல்ல
போக்கோடே வாதம் நிலைத்திடுந்தோழி
வகையது ஆடுமே வாதி-நல்ல
மாறலில் நூற்றுக்கு வொன்றிடுதோழி 277

மாற்றது பத்துமே யாகும்-மய
மாகும் புடத்துக் கிறங்குமேவாதி
சேர்த்து எடுத்துநீ தோழி-ஜெய
மாகுமே தான்புடந் தானேநிலைக்கும் 278

விற்றுச் செலவுகள் செய்து-நல்ல
வேதாந்த ஞானம் பலித்திடுந்தோழி
சித்துக் கரியதோர் ஞானம்-திர
மாகவே பார்த்து இருந்திடும்வாதி 279

எட்டு எழுத்துமே சொல்லி-இதில்
இன்பமே யாகச் செபித்திடுதோழி
கட்டும் சுழிதனி லேறி-ஜய
கானலமாகவே கட்டிப் பிடித்து 280

செய்திடு சித்திக்கும் ஞானம்-நல்ல
சிக்கவே யோகம் பலித்திடும்வாதி
பய்யவே ஞான மிகவும்-நல்ல
பத்திதரும் ஜீவன்முத்தியைப் பாரு 281

பார்க்கத் தரிசனை யாகும்-நல்ல
பாகமிதுவாகுங் கேளடி தோழி
ஏற்கவே சித்திக ளாகும்-நல்ல
எட்டுமே சித்தி யிருந்திடும்வாதி 282

ஆடித் திரியாதே வாதி-நல்ல
அம்பல வாணரைத் தானேதுதித்துக்
கூடிப்பிரியாதே வாதி-நல்ல
கொடுமைகள் செய்திட வேண்டாங்காண்வாதி 283

திட்டமாய்க் கைப்பாகஞ் செய்து-நல்ல
சித்திக்கு முத்திக் கிருப்பிடமாகும்
வட்ட முலைமனை மார்பன்-சொன்ன
வடமொழி தன்னி லிருந்தது தானும் 284

பட்டமாய்ச் செய்யாதே தோழி-நல்ல
பாடுகள் பட்டுமே செய்திடுதோழி
சிட்டர்கள் புகழ்தில்லை வாசர்-செய்ய
தீரன் அரன்போலக் கூத்தாடுந் தோழி 285

ஆடிச் சிவபூசை பண்ணி-நல்ல
அன்பாசப் பார்த்தேயி ருந்திடுந்தோழி
காட்டித் திரியாதே வாதி-கண்
கண்டுபிடித்தே யிருந்திடு வாதி 286

வாதம் நிலைத்ததன் பின்னே-வடி
வாகவே ஞான மிகப்பாரு தோழி
சேதம் வாராமல் சரக்கு-ஜயம்
சித்திக்கப்பண்ணிடு வந்திடும் வாதம் 287

சித்தா மறைப்பையுஞ் சொன்னேன்-நல்ல
சித்திக்கு மனைவாசி தன்னயுஞ் சொன்னேன்
புத்தியாய்க் கண்டு பிடித்துப்-பல
னாகவே செய்து புகழ்ந்து நீ பாரு 288

வெற்றிதரும் ரசவாதம்-நல்ல
வேதாந்த சற்குரு வெற்றி பெறலாம்
பத்திதரும் சிவ போதம்-நல்ல
புத்தியில் சித்திபொருந்துமே தோழி 289

நடனமுஞ் செய்திடு தோழி-நல்ல
நால்வேத முண்டான போது மேவாதி

கடனாளியாகத் திரிந்து-நல்ல
காத லயந்தன்னைப் பார்த்திடுதோழி 290

கெந்தியால் வர்ணமுமாகும்-நல்ல
கீர்த்தியுமாகுங் கிருபையுமாகும்
நந்தி எண்ணாயிரந் தன்னில்-இதை
நாடியிருந்து நலம்பெறச் சொன்னார் 291

செப்பமதாக இரசத்தை-ஜெயம்
செய்திடு வாதம் நிலைத்திடும் போது
கற்பமா யூகி முனியும்-நல்ல
காரணமாகவே வாதாங்கந் தன்னில் 292

பாகமாய்ச் செய்யவே சொன்னேன்-நல்ல
பாகத்தைக் கண்டுபிடித்துமேவாதி
தாகமாய்த் தான்வரச் சொன்னேன்-நல்ல
தாட்டிகமாக விருந்துமே வாதி 293

வேறு

வாதியாய் வடமொழியிற் சொன்னமார்க்கம்
வகையாகச் சிவன் தானு மம்மைக்கோத
நீதியாய் நந்திதான் கேட்டுக் கொண்டு
நிலவரமாய் விஸ்வனியு மஸ்வனிக்குரைக்க

சோதிபெறத் தன்வந்திரி கேட்டுத்தேறிச்
சுயமாக அகஸ்தியருக் குபதேசிக்க
பாதிசேர் அகஸ்தியரும் புலஸ்தியர்க்குப்
பண்பாகச் சொல்லிவிட்டார் பாரில்தானே 294

தானென்ற புலத்தியரும் பார்த்துத்தேறித்
தப்பாமல் புலத்தியருந் தேரர்க்கோத
வானென்ற தேரருமே பார்த்துத்தேறி
வகையாக யூகிமுனிக் குபதேசிக்க
நானென்ற யூகிமுனி உலகத்தோர்க்கு
நாடியே ஆயுள்வே தத்தைத்தானும்
கோனென்ற குருவருளால் சொன்னமார்க்கங்
கொடியதொரு வாதிதான் நேர்மைதானே 295

நேர்மைதான் கைபாக விபரமெல்லாம்
நிலைத்துமே தீக்ஷைவிதி தன்னில்சொன்னேன்
தார்மைதான் வாதாங்கந் தன்னில்தானுந்
தடையறவே சொல்லிவிட்டேன் சார்புதன்னை
வார்மைதா னிக்காண்டம் தன்னிற்றானும்
வகையாகச் சொல்லினே னுலகத்துள்ளே

கார்மைதா னில்லாமல் நல்லோர்க்குந்தாங்
கருத்தாகச் சொல்லினேன் காணலாமே 296

காணப்பா வாதத்தி னுற்பனத்தைக்
கருத்தாக வாதாங்கந் தன்னிற் சொன்னேன்
பூணப்பா யிவ்விரண்டு மொத்துப்பார்த்துப்
பூருவத்தில் சொன்னதெல்லாம் புதிதாய்ப்பாரு
தோணப்பா அறுதலிபோல் நின்றாலாமோ
தொன்மைதரும் பெரியோர்கள் சொன்னநீதி
வாணப்பா சாஸ்திரத்தையா ராய்ந்துபாரு
வகையாகச் சொன்னதெல்லாம் வண்மைதானே 297

வண்மையாய்ப் பெரியோர்கள் சொன்னநீதி
வகையாய்ப் பார்த்துமே மனதுதேர்ந்து
தண்மைதான் பெரியோர்கள் சொன்னநீதி
தடையாகச் சாஸ்திரமும் பொய்யென்பார்கள்
கண்மைதான் சாஸ்திரத்தை யொத்துப்பார்த்துக்
கணக்கறிந்து உண்மையாய்க் கவனம்வைத்து
நண்மையாய்ச் செய்தாக்கா லெல்லாமாகும்
நாடினா லெல்லாமுஞ் சித்தியாகும் 298

சித்தியா யாகவென்றால் நூலைத்தானும்
சிறப்பாகப் பார்த்துமே மனதிலெண்ணி
முத்தியாய்ப் பாகமாய்ச் செய்துகொண்டு
முனிவாக மனத்தையே சிந்தித்தேறு
பத்தியாய் மனமாற்றிப் பொருளைத் தேடிப்
பதிவாக மெய்யென்று பாழில்மீளா
நித்தியமா மென்றுதா னினைவில்புக்கி
நீடூழி காலமெல்லாம் நினைவில்பாரே. 299

நினைவிலே பார்த்தவுடன் வாதந்தன்னை
நிச்சயமாய் நினைவுதனில் நினைத்துஎண்ணி
கனவிலே கண்டபொருள் போலேசெய்து
காட்டியே திரிந்துநீ பொருளைப்பாரு
அனலிலே திரிந்தாக்கால் வேதைமார்க்கம்
அடைவாகச் செய்துமே சொல்லக்கேளு
தனவிலே செய்தாக்கா லாபமாமோ
தாக்காட்டால் தண்மையாய்த் தாக்கிப்பாரே 300

தாக்கிப்பார் சிவன் தனக்குச் சரணமய்யா
தடையறவே அம்மைக்குச் சரணஞ்சொல்லு
நீக்கிப்பார் நந்திக்குச் சரணஞ்சொல்லு
நிலவரமா யகத்தியர்க்குச் சரணஞ்சொல்லு

வாக்கிப்பார் தன்வந்திரிக்குச் சரணஞ்சொல்லு
வகையாகப் புலத்தியர்க்குச் சரணஞ்சொல்லு
வீக்கிப்பார் தேரருக்குச் சரணஞ்சொல்லு
விதமான யூகிமுனி சொன்னவாறே. 301

சொன்னதொரு ஆயுள்வே தத்தைத்தானுஞ்
சுகமாக வுலகத்தில் சொன்னேன்யானுங்
கன்னதொரு கருத்தறிந்த பேர்கள்தாமுங்
கனிவாக வுலகத்தில் மனதுதானும்
பின்னமில் லாமலே சொல்லிப்போட்டேன்
பேர்பெரிய வாதமென்ன வெளிதிலாகும்
துன்னதொரு படிப்பாளி கிடைக்கும்பாரு
சித்திமுத்தி செய்திடுபேர் சின்னந்தானே 302

யூகிமுனிவர் வாதாங்க தீகைஷவிதி 300 முற்றிற்று.

தேவி பாதம்

யூகிமாமுநி

வாத வைத்திய விளக்கம்

அத்தியுரித் திடைதரித்த ஐயரிணைப் பாதமல
ரணிந்துபோற்றி
நித்தியமா யானைமுகன் நிலையான பாதமலர்
நினைந்து போற்றிச்
சித்திபெறக் குருவினது சீர்பெற்ற பாதமலர்
தெளிந்து போற்றி
நத்தியே வாதவைத் தியவிளக்க மெல்லார்க்கும்
நல்கு வேனே. 1

நூலுபதேசித்த பரம்பரை

சிவன்தானு மம்மைக்குச் சொல்லிடவே அம்மையவள்
தெளிந்து நந்திக்
கவள் தானுஞ் சொல்லிடவே கனிவான நந்திதன் வந்
திரிக்குச் சொல்ல
பயன்பெறவே அகஸ்த்தியரும் பதிவாகக் கேட்டவுடன்
பரிவு கூர்ந்து
நயம்படவே புலத்தியர்க்கு நல்கிடவேயவர்கேட்டு
நலமாம் பாரில். 2

பாரிலே புலத்தியரும் பதிவான தேரருக்குப்
பகர்ந்து காட்டக்
கோரியே தேரருமெ குணமான யூகிக்குக்
குறித்துச் சொல்ல
வாரியே யுலகத்தி லெல்லாரும் பிழைக்கவே
வண்மை சொன்னேன்
தேரியே சாஸ்திரத்தை ஜெயமாகப் படித்தாக்கால்
தீர்க்கமாமே. 3

வழலையுப்பு

முத்திபெறு பூநீறு முனையானபடி நான்கு
முனிந்த சுக்கான்
சத்தியமாய்ப் படிநான்கு சரியான அமுரிபடி
யெட்டு விட்டு
நித்தியமாய் வாலையிட்டு நேர்மைபட இறக்க உப்பாம்
வழலை யாச்சு
சித்திரத்திற் குக்கலைத்தான் ஜெயமானநாய்குலைத்த
திறமை தானே. 4

மெய்பாகம் உப்பெடுத்து மேன்மைபெறு கல்வமிட்டு
மிகுந் தரைத்து
மைபாகம் ஐந்துசுண்ணக் குகையிலிட்டுப் புடமிட்டு
மடக்கிப் போட்டு
வைபாகம் சவுக்காரம் வடிவாக வாகிவிடும்
வாதி கேளு
கைபாகந் தப்பினால் கசடரே ஆகாது
கண்டு பாரே 5

சகல ரோகத்திற்கும் சீனவன்னி பஸ்பம்

குட்டமுதற் போகவே குணமான வன்னிபஸ்பம்
குணமே செய்து
தட்டாமற் சீனமது சரியாகச் சேர்த்துநீ
சரியா யாட்டி
முட்டாகக் கடத்திலெரி முனிவாகவெள்ளையதாம்
மீறு நோய்போர்
திட்டாக வாதம்வரச் சீராகச் சுட்டுப்பார்
திடமு மாமே 6

கருவங்க பஸ்பம்

சூதமது பலமொன்று சூட்டுகரு வங்கமெடை
சூட்டப் புட்டாங்
காதலுடன் கற்றாழை கனிவான நீர்விட்டுக்
கலந்தரைத்து
நீதமுட னைந்துதர மெரித்திடவே நிலைத்துநிற்கும்
நேராம் நோய்ப்போம்
வாதமதைப் பழிப்பவர்க்கு வடிவான நரகெய்தும்
வண்மை தானே. 7

பூரதாளக பஸ்பம்

மெய்க்குமே பூரமொடு மேன்மையா மரிதார
மிடையே சேரு
கைக்குமே அரைத்துளரி கனிவாக அடியில்நிற்குங்
கனிந்த பூரம்
வைக்குமே பணமீய வடிவான க்ஷயாச
மிருமல் போகும்
நாய்க்குமுன்னே தேங்காயை நாடிமிகப் போட்டுமென்ன
நடத்தை யோரே 8

வெடியுப்பு செயநீர்

பொட்டிலுப்புப் பலமெட்டு பின்பெடுநீ சீனமது
பிசகா மற்றான்

கட்டளையாய்ப் புளிநாலு கனிவாக சேர்த்து இடி
கருணையாக
இட்டமுடன் சுண்ணாம்பா மிதைஜயநீர் பண்ணவே
சரக்குக் கட்டுங்
கொட்டினால் தேளாகுங் கொட்டாட்டால்பிள்ளையென்ற
பூச்சி தானே. 9

தாளக பஸ்பம்

நீதியாய்ச் சீனம்வெடி நிலவரமாய்ச் சேர்த்துசுண்ணம்
நேராய்ப் பண்ணி
சோதியரி தாரமேல் துணையாகக் கட்டிபுடந்
தோய விட்டால்
பாதியது நீறிவிடும் பதிவான க்ஷயகாசம்
பாரிற் போகும்
வாதிபுரி வைத்தியற்கு வகைதெரியும் வைத்தியத்தை
வகைசொன் னேனே 10

சீனசூத பஸ்பம்

சீனமது பலமொன்று ஜெயமான சூதமெடை
சேர்த்து நீயுங்
கானலாய்க் கடமிட்டுக் கருத்தாக வெரித்தெடுக்க
காண வெள்ளை
தானகமாய்க் கடுகிலிடு தறுகாது கூட்டமெல்லாந்
தானே யோடுங்
கானகத்தில லைந்துமென்ன காட்டிலே திரிந்துமென்ன
காணுவாயே 11

ஐயசூத பஸ்பம் அல்லது சண்டரச பஸ்பம்

நாட்டுப்பு படிநான்கு நலமான செங்கல்மா
நாலத் தொன்று
காட்டுவறு சட்டிநிறை கனிவான சூதம்நடு
கருதி யிட்டு
மூட்டுவது மேல்மூடி முனையான சீலைசெய்முந்
நூறு நாழி
காட்டமிடு ஜெயசூதங் கனிந்துவழி சகலநோய்
காணா தோடும்
ஏட்டதனில் சுரக்காய்தா னிதமாகுங் கறிக்குதவா
தின்ப மாமே. 12

துருசுச் செம்பு

காணநறும் பூமூன்று கரியதுரு சதுதானுங்
காண நான்கு

வீணான சிகரமது ஒன்றிடுநீ தைலமதில்
    விட்டுக் காய்ச்சு
நாணாக உருக்கிடவே ரவியாகு மாற்றேழு
    நவின்று நிற்க
தோணாத வாதிக்குத் துவரையது மாற்றதுபோல்
    தோன்றுந் தானே 13

சீனரச பஸ்பம்

சேதமறச் சீனரசஞ் சேர்ந்தெரிக்க நீறியது
    செருகி நிற்குங்
காதலுடன் திரிகடுகில் திரிமூன்று நாளிடவே
    கருங்குட்டம்போம்
வாதபித்த சிலேட்டுமத்தால் வரும்நோய்கள் மருந்தினால்
    வலுவாய் நீங்கும்
பூதபத்ர காளிகறி பொங்கலிட்டாற் போமோசொல்
    புனித வானே 14

தாளக் பஸ்பம்

வைப்பான அரிமேலே வளைய லுப்பை அரைகட்டி
    வாட்டிப் பார்க்க
செப்பாகச் சிவக்குமது ஜெயசீன சுண்ணமதை
    ஜெயமாய்க் கட்டிக்
கைப்பாகப் புடமிடவே கனிவாக வெளிறுமது
    க்ஷயங்கள் தீர
வைப்பாகச் சொன்னதினால் வர்தியறி வதுநீறு
    வண்மைதானே. 15

நல்ல சிவப்புச் செம்பெடுத்து வெள்ளியிற் கொடுக்க

சேயான செம்பெடுத்து சுக்கிரனி லெட்டிலொன்று
    சேர்த்து ருக்கத்
தாயான தங்கமது தாட்டிகமா யாகிவிடுந்
    தன்னை விற்று
ஓயாம லுண்டுடுத்தி யுண்மைதருஞ் சுழிமுனையை
    யுறுதி யாக்கும்
வாயாலே சொல்லியென்ன வருமோதான் பெருவாழ்வு
    வாதி யோரே. 16

அயச்செம்பு வேதை

சோதி அயச் செம்பெடுத்தால் சுக்கிரனில் நான்கிலொன்று
    சூட்டி நீயும்
நீதியால் நீகடைவைத் தூதியபின் னெடுத்து எடை
    நேராந் தங்கங்

கோதிளடை சேர்த் துருக்கிக் காவியினிற் புடமிடவே
கூடுந் தங்கம்
ஓதியறி வதுவேத மூதியறி வதுவாத
முண்மை தானே. 17

நாகச் செம்பு

சோரமது பலமொன்று சூட்டுரச மெடையுருக்கச்
சேரப் புட்டாம்
வீரமிட நீராகும் விதமான தேவியெடை
விட்டு ஆட்டிக்
காரமுடன் திலதமிடு கண்டமிடு செம்பாகுங்
கருணை கூர
கோரமாய்ச் சொல்லியென்ன கூறியறி யாவாதி
கொள்கை தானே 18

மேற்படி செம்பு வேதை

தவநிலைத்த சுக்கிரனில் தாட்டிகமா யெட்டி லொன்று
தாக்கு நீயுங்
கவனமறுந் திசைமாற்றாங் காரணமா யுண்டுடுத்திக்
கருணை கூர்ந்து
பவன மறும் பூரணத்தைப் பார்த்திடவே ஞானங்கள்
பதிவ தாகுஞ்
சிவபூஜை பண்ணினதால் செல்வம்வரு மென்றுசொல்வார்
திருடர் தாமே 19

நாகச் சுத்தி

வையகத்தில் சோரமொடு வடிவாகப் பலமொன்று
வண்மையாகப்
பையவே யெடுத்துருக்கிப் பதிவான இலுப்பை நெய்யில்
பரிந்து சாய்க்க
மெய்யாகச் சுத்தியதாம் மேன்மைபெறுஞ் சுத்தியிது
மெய்யே யாகுங்
கையிலே புண்ணிருக்கக் கண்ணாடி பார்த்தலைவார்
காணுந் தானே. 20

நாகரசச் சிந்தூரம்

ஏனையாஞ் சுத்திபண்ணி நாகமெடை சூதமிடு
இட் டுருக்க
பானையாம் புகைநீரை வடிவாக விட்டரைத்து
வளமாய் வில்லை
சேனையாய்க் கடமிட்டு ஜெயமாக எரிசிவக்குஞ்
சேர நோய்ப்போம்

ஆனைகண்ட குருடரைப்போ லலைவார்கள் வாதியர்க
ளடைவு தாமே 21

சுரப்புக்கு அயக்காந்த சூரணம்

நரும்புரசந் தந்திவிரை நற்சுக்கு மரீசமெடை
சமனாய் ரெண்டு
இரும்புஅங் குசமெட்டு ஈரெட்டுக் கடுக்காயா
மிதமாய்நெல்லி
வரும்பருப்பு ஈரெட்டு சேர்த்தரைத்து உண்டிடவே
வரும்நோய் போகும்
கரும்புதின்னக் கைக்கூலி கொடுப்பவன்போல்
வைத்தியர்க்குக் கணக்கு மாமே. 22

அமுரி முறிக்காதவன் வாதியல்ல வெனல்

சாத்திரத்தை யறியாதார் சாதகமாய்ச் சொன்னதினால்
சாட்சி பொய்யோ
நேர்த்தியாய் வாதவகை நிலையாகச்செயல்பொய்யோ
நேர்மை யான
காத்திரமா மமுரியது கனிவாக முறித்திடவே
கார மாகும்
மூத்திரத்தை யறியாதார் மூடமாம் வாதியென்றே
மொழிய லாமே. 23

மூத்திர முறிக்கும் விபரம்

மூத்திரமும் படியாறு முனிவான குமரியிடு
முனிந்து வாங்கு
காத்திரமா யெண்ணெயுப்பு கனிவாக அடியில் நிற்குங்
கண்டு பாரு
சூத்திரமாய்ச் சவுக்காரஞ் சுண்ணமதாய்க் கடுக்காரஞ்
சூதஞ் சாகுங்
கோத்திரமெல்லாம் பிழைக்குங்கொடு வேலைகாய சித்தாங்
கொள்கை தானே 24

துருசுச் சுண்ணம்

சூதமது பலமொன்று சூட்டுளடை வெள்ளியஞ்
சேரப் புட்டாங்
காதலுறு பொட்டலையாங் கனிவாக எடைசேர்த்துக்
கட்டச் சுண்ணம்
நீதமுற நீலன்மேல் நினைவாக அங்கியிட்டு
நிலையாஞ் சுண்ணம்
வாதமது ஏவலாம் வடிவான ஞானம்வரும்
வண்மை தானே 25

வாதசுரத்திற்குப் பாஷாணக் குளிகை

வெள்ளைப் பாஷாணமெடை வெண்மிளகு சேர்த்தரை நீ
மேன்மை யாக
சள்ளையிலா விஞ்சிநீர் தான்விட்டு அரைகடலை
தன்னைப் போலே
உள்ளபடி ஈய்ந்திடவே யூறுகின்ற வாதசுர
மோடு மெல்லாங்
கள்ளனைப்போல் முழித்தென்ன காரணத்தையறியாதார்
கருத்தில் லாரே. 26

சங்க திராவகம்

வெடிபத்து சீனமது விதமாக மூவெட்டு
விரும்பி ரண்டுந்
துடியாக வாலையடை துப்புரவாய் நீர்வாங்கத்
துடியா மஞ்சள்
துடியான சங்குநீர் துப்புரவால் பலமிடுக
துடியாம் நீராம்
விடியுமட்டு மழைபெயினும் விதமான பயிர்தனக்கு
விருப்ப மாமே. 27

செம்புக்கரி

அக்கினியும் பலமொன்று ஆதிநறும் பூவதுவு
மதில்முக் காலாஞ்
சக்கியமா யரைத்துபுடம் சரியாக இட்டுஎடு
சாத்தி வீரம்
முக்கியமா யிட்டரைத்து முனியான வெள்ளியிட
மூன்று மாற்றாந்
திக்கினிலே யலைந்தாலுந் தெருவெல்லாம் போனாலுந்
திடமாம் பாரே 28

அயச் செம்பு

விட்டாடுங் கரும்பொன்னும் விதமான செம்பொன்னும்
வீர மிட்டுக்
கிட்டாடுங் கெந்தியிட்டு சேர்த்துவகைக் கொன்றிடுநீ
காட்ட மிட்டு
மட்டாக வதையுருக்க மயமான செம்பாகும்
மாற்று ஏழாந்
தட்டானைச் சேராதே கெட்டானென் பதுசொல்லாந்
தரணி தானே 29

ரசச் சிந்தூரம்

முறையாக செந்தியெடு முனிந்துமே ரசமெடையே
மிக வுருக்கிக்
கறையான சீனமெடை சேர்த்தரைத்துக் கடமிட்டுக்
கனிவாய்த் தானே
வறையாக வெரித்துண்ண வாதமெல்லாமோடுவது
வழங்கச் சொன்னேன்
அறையிலே யாடுவா ரம்பலத்தி லாடார்கள்
அறிவு தானே 30

தாம்பிரக் கரி

தாம்பூரந் தகடடித்துத் தாகமதாய் நாறும்பூ
தான்மேற் கூட்டி
வாம்பூராய்ப் புடமிட்டு வண்மைபெற நாற்கொன்று
வடிவாம் வீரங்
காம்பாடாய்ச் சேர்த்தரைத்துக் கருணையாய் மதியிலிட்டுக்
காண வெட்டாஞ்
சோம்பேரி வாதியவர் தோலோடே பழந்தின்பர்
தொன்மை தானே 31

அயச்செம்பைக் கரிபண்ணி வெள்ளியிற் கொடுக்க

நம்பி அயச்செம்பெடுத்து நலமான தங்கமெடை
நாடிச் சேர்த்து
வெம்பியடி கெந்தியிடு வீரமிடு புடமூன்றில்
விரும்பச் செம்பு
தம்பிமதி பத்திலொன்று தாக்கிடவே தங்கமாந்
தாக்கா வாதி
செம்பெடுக்கத் தெரியாமல் செம்பைசிலை பண்ணிவைத்துச்
சேவிப் பாரே 32

பேதி மருந்து

வெத்திபெறு நறும்புஎடை விதமான சூதமிடு
விட்டு ஆட்டி
முத்திபெறு கரியாகுங் கரிஎடைக்குத் தந்திவிரை
விட்டரைத்து
சித்திபெறப் பாணியிட்டுத் தைலமதிற் பாக்கியுண்ண
வெகுநோய் போகுஞ்
சத்துருவை யறியாமற் சாதியார் மூலிகையில் 33
தயங்குவாரே

கல்லுப்புச் சுண்ணம்

நழுகாமற் கடல்நுரையும் நாட்டுப்பும் எடைசேர்த்து
நலம் தாட்டி
வழுவாமற் புடமிடவே வடிவான சுண்ணாம்பாம்
வகைநான் கொன்று
பழுவான வன்னியிட்டுப் பாகமா யுண்ணவலி
குன்மம் போகுங்
கழுவடியில் காத்திருந்து காதலுறும் நாய்போலே
காணு வாரே. 34

துருசுக்களங்கிற்கு எண்ணெய்ச் சுருக்கு

துரங்கநறும் பூபலமாந் தொல்லுலகில் வீரங்கால்
திலத மிட்டு
வரங்கஅயக் கரண்டியிட்டு வகையாகக் காய்ச்சிவலு
துருசி யிட்டு
முரங்கஓட்டக் காய்ச்சுருக்கு முனையான செம்புமதி
பழுக்கும் நன்றாய்
குரங்கைநினைக்கூர்மருந்தைக் கொள்பவர்போல்வாதியர்கள்
குணமுமாமே. 35

சுரத்திற்குப் பாஷாண மாத்திரை

வெள்ளையென்ற பாஷாணம் விதமாக இட்டெரிக்க
விதமா யேறுஞ்
சள்ளையில்லா ததைவழித்துச் சரியான மாரீசந்
தனையிஞ்சிச் சார்
மெள்ளவே சேர்த்தரைத்து வீசமெடை கொடுத்துவிடு
சுரமெல் லாம்போம்
உள்ளநோய் பிணிதீர உலகினில்பண் டிதர்தேடார்
உலுத்தர் தாமே 36

காமாலைக்கு மருந்து

பசும்பாலோர் படியதனில் பரிவாங்கீ ழாநெல்லி
பதிவாஞ் சாறு
விசுவாச மாயெடையாம் இட்டுண்ணு உப்புதள்ளு
வேகம் போகுங்
கசிவான காமாலை கண்டிந்த முறைகண்டால்
காணா தோடும்
பசியாத வரந்தருவேன் பழையதுதா வெனுங்கதையின்
பரிசு தானே 37

துருசு காரீயச் செம்பு

சூதமது பலமொன்று சுத்தித்த கெந்திஎடை
துருசி ரட்டி

ரூகிமுனி வாதாங்க தீக்ஷவிதி

காதலுறு காரீய முபயமது இட்டுஅரை
கனியப் பாணி
நீதமாய்த் தைலமிட்டுக் காய்ச்சியே தெளிவிறுக்க
நேராந் தங்கம்
வாதமுன திடத்திருக்க வடிசோறு கேட்டகதை
வாதி தானே 38

குருவான செம்பெடுத்துக் கூட்டுரசங் கெந்தியெடை
கூறுவீரம்
பெருவாக விட்டரைத்துப் புடமிடவே சிவப்பாகும்
பெருமை கேளு
வருவான சுக்கிரனில் மாறிடவே மதிபழுக்கும்
வண்மை சொன்னேன்
அறுதலிபோ லழுதாலோ ரசவாத மவர்களுக்கு
அருமை தானே 39

துருசுச் சத்து

காழாமல் நறும்புளடு கண்டரெடை சேர்த்தரைத்துக்
கனிவி னாலே
தாழாமற் புடமிட்டுத் தானாக நாலிலொன்று
தாக்க வீரம்
நாளாக அரைத்திட்டு நன்மைபண்ணை சூதமிடு
நாடுந் தங்கம்
பாழாண்டி யாய்த்திரிந்தால் பலிக்குமோ ரசவாதம்
பண்பு மாமே. 40

மூடர்களின் செய்கை

சத்துதனிற் செம்பெடுக்க அறியாத வாதியர்கள்
சரச மிட்டுப்
புத்தியிலா தலைந்துலைந்து புகலரிய வாதமில்லை
யென்பார் மூடர்
நித்தியாய்ச் சோதித்து நிலையான வாதத்தை
நிறுத்த வேண்டுங்
கொத்திதா னுழுதாலுங் குணமாகு மென்பார்கள்
கொடுமை யாமோ. 41

தங்கம் வாதத்திற்கு வித்து

வித்தென்ன ஜடத்திற்கு விந்துதான் வித்தான
வித்தைப் போலக்
கொத்தென்ற போகத்தில் மனதைவிட்டு அலைவார்கள்
கொடுமை போலப்
பத்தென்ற வாதத்தில் தங்கம்விட்டால் வித்தில்லை
பருவம் போல

நத்தியே யலைந்தாலும் நாய்கடித்த வெள்ளெலும்பாய்
நல்கும் பாரே. 42

வெடியுப்புச் சுண்ணம்

வெடிபத்துச் சீனம்ரெண்டு விதமான சாரம்ரெண்டு
விரும்பி ஆட்டி
அடியான புளிசேர்த்து அடைவாக எரித்துஎடு
அன்பாய்ச் சுண்ணங்
குடியான திரிகடுகில் குணமாகச் சேர்த்து கொடு
குன்மம் போகும்
அடிபட்ட நாய்குலைக்கும் அடிமையது போல்வாதி
அலைச்சல் தானே.

வாள சுத்தி

தாவியெடு தந்திவிரை தோல்போக்கி அவித் திறுத்துத்
தன்மை யாகப்
பாவியாய் விளக்கெண்ணெய் விடுவறுத்து எடுஅதனைப்
பதிவு மாகுங்
சுவியாய்ச் சுத்தியது குணமாகு மந்தவிஷம்
கூறு மாகுங்
கோவிலுக்குப் போனாலுங் குணமாகுமோ பிணிகள்
கொள்கை தானே 44

அயக்காந்த சிந்துரம்

திலகான காந்தவயந் திட்டமதாம் பலமெடையாந்
திறமாய்க் கல்வம்
விலகாம லேழரைநாள் விட்டாட்டு பழச்சாறு
விரும்பி வன்னி
நலமாக நாலிலொன்று சேர்த்தரைத்து உண்ணவந்த
வெட்டை தீரும்
இலவுதான் காத்தகிளி யினிதான பிள்ளையைப்போல்
இருக்கா தாமே 45

நீர்க்கட்டுக்கு வெண்காரபஸ்பம்

விடுவாதம் செய்வமென்பார் வேதாந்த மார்க்கம்போல்
விரித்துப் பேசும்
கொடுவாதி வெண்காரங் குணமாகப் பொரித்துவெந்நீர்
கொடுக்க நீர்கள்
நடுவாதி நீரடைப்பு நலமான மலமடைப்பு
மிரண்டும் ஓடும்
சுடுவாதி தனக்குவே றெத்திரநூல் சொன்னாலும்
தோயான் பாரே. 46

கண்ணுக்கு மை

காசிகட்டி பலமொன்று களிப்பாக்கு அதிற்பாதி
கண்ணுப் பூவை
வாசனையாய்ச் சாறிட்டு வட்டில்தனில்செம்பு சொம்பால்
வழித் திழைத்து
யோசனையாய்க் கண்ணிலிட வடிவான குந்தம்வெள்
ளெழுத்துப் போகும்
தாசியற்கு உபசாரங் தடையறவே செய்துமென்ன
தன்மை தானே 47

மகோதரத்திற்குக் குடிநீர்

கொத்தமல்லிக் கியாழமதிற் குணமாகச் சேரிறுத்துக்
குணவெண் காரம்
பத்துகழஞ் சுப்பொரித்துப் பதிவாகப் போட்டுண்ணப்
பகர்ந்த வாய்வு
பித்தமகோ தரநீர்கள் பிசகறவே வடித்துவிடும்
பெருமை சொன்னேன்
சித்தம்வைத்தாற் பண்டிதமுந் திறமாகத் தீர்ந்துவிடுஞ்
செல்வ மாமே. 48

துருசு அரிதாரச் செம்பு

அரிதாரம் பலமொன்று அன்பான நீலனது
ஆதி சேர்த்து
பொரிகார மிட்டுண்டை போக்கோடே செய்துப்புச்
சுண்ணங் கட்டி
நெரியாகப் புடமிடவே நேர்ந்தநவ லோகமது
நேராந் தங்கம்
உரியிலே நெய்யிருக்க உலகத்தி லலைவார்கள்
உண்மை தானே 49

களங்குகட்குப் புடமீறக் கூடாதெனல்

கருவான அயச்செம்பைக் கனிவாக விட்டாலுங்
கருத்துள் ஞானம்
வருகாது வாட்டதுவும் வலுமையாய் மிகுந்ததென்றால்
மண்ணாய்ப் போகும்
உருகாது களங்கதுவு முண்மையாய்ப் புடமீறி
லுதிர்ந்து போகுந்
திருநாட்குப் போனாலுந் தெய்வத்தைப் பாரார்தாந்
திருடர் தாமே. 50
கிட்டம்போ லாச்சுதென்று கிராசத்தைக் கைவிடா
தெடுத்து நீயும்

மட்டம்போல் மதிதனிலே கொடுத்துருக்கு தாய்சேர்த்து
மயமா யூகித்
துட்டம்போ லுப்பிட்டுத் துடியாகப் புடமிறக்கு
துடியாந் தங்கம்
பட்டத்தில் சீர்தப்பிற் பதிவாகப் பறக்காது
பாருள் ளோரே 51

தாதுவிர்த்திக்கு மருந்து

நொந்தவுடல் விந்தில்லார் நோயுள்ளார் தமக்குவெகு
நுண்மை யாக
மந்தமது தன்னிலிடு மதிவான ஜாதிக்காய்
பலமுள் ளாகச்
சிந்தனையா யுண்டவர்க்குச் சிவவிந்து அதிகரிக்குந்
திண்ணந் தானே
பந்துஜன மிருந்தாலும் பெருநோய்க்கு வைத்தியரைப்
பேணு வாரே 52

வெள்ளி வித்தை

சுடுவாதி சூதமெடு சுக்கிரனில் விட்டெடைசேர்
தொன்மை யாக
நடுவாதி அரைத்துவில்லை தட்டியதைப் புடமிட்டு
நன்மை யாகக்
கொடுவாதி வெள்ளீயம் நூற்றுக்கு ஒன்றிடவே
குணமாம் வெள்ளி
படுகளத்தி லொப்பாரி பாவிக்குமோ சொல்லும்
பரிசுள் ளோர்க்கே 53

விக்கலுக்கு மருந்து

வாழியாய் விக்கலுக்கு வடிவான வெல்லமெடை
வண்மை கேளு
தோழியாய்ச் சாம்பிராணி துடியாக அரைத்துண்ணத்
துடியாங் கேளு
பாழிநல் வாதவிக்கல் பதிவான பித்தவிக்கல்
பரிசு போமே
ஊழியத்தின் வேலையைப்போ லுதவாது கைபாகம்
உறுதி தானே 54

கள்ளுக்குடித்து மயக்கமுண்டாக

கள்ளான ததுகுடிக்கில் காரமில்லை வெறியில்லை
கனிந்தபுத்தி
உள்ளாக வொன்றுமில்லை உறுதியாய் ஜாதிக்கா
யுகந்து உண்டால்

வில்ளாகும் வெறியாகும் விதமான காமமது
மிகுந்து பொங்கும்
தள்ளாடித் திரிவதற்குச் சாதிக்காய் வலுவாக்கும்
தர்க்க வானே 55

தங்கச் சிந்தூரம்

இட்டமுட னேமமொன்று இயல்பான சூதமெடை
சேர்க்கத் தின்னும்
முட்டெனவே புகைநீரை விட்டுவைக்க நாளாக
முனிந்து பூர்க்கும்
நட்டமில்லாக் குப்பியடை நலமாக எரிகோலம்
நாட்டத் தங்கங்
கட்டினாற் பொன்னுண்டு கட்டாட்டால் பொன்னில்லைக்
காணுவாயே 56

நாகச் சிந்தூரம்

நட்டியில்லா லிங்கரசம் நாலாகும் சோரமெடை
நாட்டப் புட்டாம்
புட்டியில்லாப் புகைநீரைப் புனிதமாய் விட்டரைத்துப்
புகலாய்ப் பானை
சட்டிதனி லெரித்திட்டுச் சரியாக நவலோகந்
தங்க மாகும்
கொட்டினாற் றேளாங்கொட் டாவிடில்பிள் ளைப்பூச்சிக்
கொள்கை தானே 57

துருசுக் களங்கு

விட்டிலயம் பலமொன்று விதமான நீலனெடை
வீரங் காலாம்
மட்டில்லாக் கெந்தியெடை மயமாகச் சேர்த்தரைத்து
மதித்துக் காட்டம்
இட்டுஅரை வெண்காரம் மிதமாகச் சேர்த்துருக்க
மாற்றுப் பத்தாம்
எட்டினா லிரும்பையு மெட்டாட்டா லுன்வேலை
யிதமாய்ப் பாரே 58

அயச்செம்பு (வேறு)

கரும்பொன்னு ஒன்றிரவி காணநான்காங்
கனிந்துருக்கு நாத்தமது இடையேசேர்த்து
வரும்பான புடமிட்டு வடிவெண்காரம்
வகையிட்டு உருக்கியபின் வடிவாம்வீரம்
உரும்பாக இட்டுவெள்ளி மாற்றுஏழாம்
உறுதியாய் நிற்குமது உண்மையாகும்

இரும்பிட்டுச் செம்பெடுக்க இதமாந்தங்கம்
இதமான வாதமது எய்தும்பாரே 59
வருடான நாறும்பூ பலமுமுக்கால்
வடிவான வீரமது நாலிலொன்று
திருடர்தான் அறியார்கள் தைலமாட்டு
திடமாகக் காய்ச்சியதன் சிறப்பைக்கேளு
கெருடர்போற் சுக்கிரனில் நாலிலொன்று
கெடியாகக் கொடுக்கமதி பழுத்தவாறு
குருடர்தா னயச்செம்பைக் காணமாட்டார்
குணமில்லா வாதியரே கூர்ந்துபாரீர் 60

அயவுருக்கு (வேறு)

பண்டுதான் கெளரி எடை பகரரிய அயமதுசேர்
பதிவாம் செம்பு
முண்டுமெடு சேர்த்தரைத்து முனிவாகப் புடமிட்டு
முனிந்து சுக்ரன்
கண்டுநா லொன்றுசேர் கனிவான தங்கமிது
கருணை கூறு
உண்டறிந்த பூனையுரிதாவ உறியறுந்து விழும்
உண்மை தானே. 61

அயவுருக்கும் துருசும் சேர்க்க

வண்டரே நிறைநேரே வடிவான அயம்சேர்த்து
வகையாம் நீல
கண்டரிடை சேர்த்தரைத்துக் கனிவாகி உருக்கிமதி
கனிய நாலில்
தொண்டரே யொன்றுசேர் துடியான மாற்றாகும்
தோய்ந்து பாரு
உண்டமன முழுகினது போலாகும் செம்புவகை
உறுதி தானே 62

துருசுக்களங்கில் அயம் சேர்க்க

சத்தியமாம் கரும்பொன்பலம் சரியான நீலன்ரெட்டி
சடுதி யாகப்
பத்தியினாற் பழச்சாறு பாதிவாக இருசாமம்
பதிவா யாட்டி
முத்திபெறக் காயவைத்து முனிவாகச் சுண்ணமேற்
கட்டிப் பாரு
புத்தியினாற் கண்டெடுத்தாற் புனிதமாய் வாதமது
புகல லாமே 63

பூகிமுனி வாதாங்க தீகைஷவிதி

புடம்போட்டுக் காரம்நால் புனிதமாய் இட்டரைத்துப்
புடமு மிட்டு
நடம்போடு உருக்கியெடு நலமான அயம்சிறந்து
நல்ல சத்தாம்
இடம்போடு இப்படிக்கு இதமாகக் கழித்துமெள்ள
இதமாய் வாங்கு
அடமாய்ச் சொன்னதினால் அறிவாக வாதம்வரும்
அடைவு தானே. 64

அயச்சத்துப் பிரிக்க

சத்துஎடு நாலிலொன்று சரியான வீரமிடு
சாத்தித் தேற்றி
முத்தியாய் அரைத்துப்பின் முனிவாகச் சூதமிடு
மிகவாம் பண்ணை
நத்தியே அரைத்துகடம் நலமாக விட்டரைத்து
நாடிப் பின்பு
முத்திபெறும் வாதியர்கள் முனையாகப் பார்த்தாலோ
முறையுமாமே 65
நாடியே அடியில்நிற்கும் நலமான மருந்ததனை
நல்ல சட்டி
கூடியிடு திலகமிடு குணமாகக் கருக்கியெடு
குணமாம் செம்பு
தேடிநிறஞ் செவ்வலரிப் பூவாகு மிச்செம்பைச்
சேரும் வெள்ளி
கோடியாம் வாதமிதில் குணமாகும் பெரியோர்கள்
கூறினாரே. 66
கூறினோ மயச்செம்பைக் குணமாக வெள்ளிநால்
கூட்டி நிற்க
நீறியே நின்றுருக்கு நிலவரமாய் மாற்றேழு
நேர்மை மெத்த
பாரிலிதை விற்றிடுநீ பதிவாக உண்டுடுத்தி
ஞானம் பாரு
ஆறியுண்ட அன்னமது அடைவான ருசிபோல
ஆகுந் தானே 67

தாளகச் சத்து

பட்டு அயம் அரிதாரம் பதிவான நீலனெடை
பதிவாய்ச் சேர்த்து
முட்டு அரை வில்லைகட்டி முனிவாகப் புடமிட்டு
முனிவெண் காரம்

இட்டு அரை காரமிட்டு இனிதாக உருக்குவெள்ளி
மாற்றுப் பத்தாங்
கெட்டுநான் கிழிந்தனென்று களரியிலே சொல்லாதே
கேலி யாமே. 68
சத்தெடுத்துக் காரமிட்டுச் சாரித்து அரைத்தரைத்துத்
தாக்கு ருக்கப்
புத்தியினாற் கல்மசங்க ளற்றுவிடும் புகழாகும்
பெருமை மெத்த
நத்தியே வீரமிடு நாடியரை யுருக்கரவி
மதிப முக்கும்
வித்துவான் போலலைந்து வீண்பேச்சா லொன்றுமில்லை
விரும்பிப் பாரே 69

சயத்துக்குக் குடிநீர்

நெல்லிக்காய் தானியொடு நேர்சமனா யிஞ்சியிடி
நேராம் சட்டி
வல்லபமா யிட்டுடனே வடிவான பாணிவிட்டு
எட்டொான் றாக்கித்
துல்லிபொடி திரிகடுகு சரியாக இட்டுண்ணு
சயகா சம்போம்
கொல்லிமலை யலைந்தாலுங் குணமில்லை யிம்மருந்தைக்
கொண்டு பாரே. 70

அயச்செம்பு

நாட்டிலே ரவிநாலாம் நல்லஒழு கரைஒன்று
நாடி நாற்றம்
மூட்டியே அரைத்துபுடம் முக்கியமாய் வீரமது
முனிந்து ஒன்றாம்
ஊட்டியே மதிநாலு ஒன்றிடவே மாற்றாறு
உறுதி காணும்
வீட்டிலிருந்த தாரிழையை விளையாட வோவுரைத்தேன்
விளக்கம் பாரே. 71

அயச்சிந்துரம்

சேர்ந்த அயச்சிந்தூரம் சிறப்பான வன்னிநான்
கொன்று சேர்த்துப்
பாந்தமாய்க் கையான்சார் பதிவாக விட்டரைத்துப்
பாரி லுண்ணு
மூந்தவீளை விக்கலுடன் முனிவான பித்தவெட்டை
வேகம் போகும்
காந்தரைத்தான் வணங்கியென்ன கனிவானமருந்துண்ணக்
கருதுவாயே 72

அயச்சிந்துரம்

நாட்டிலயம் பலநாலு நாலாறு கெந்தியது
நாடிச் சேர்த்து
மூட்டிவுலை தானுருக்கி மூவாறு புடமிடவே
முடிவாம் சேர்ப்பு
வாட்டிதிரி கடுகிலிடு வாதாடும் பித்தவெட்டை
வருநோய் போகும்
ஏட்டதனிற் சுரைக்காய்தா னிதமாகக் கறிக்குதவா
தினியவானே

நாகபஸ்பம்

திருடர்தாம் பலமொன்று திடமான சூதமெடை
சேர்த்து ருக்கு
வருடியே புட்டாகும் வளையலுப்பு அரைத்துமேற்
கவசங் கட்டி
நெருடியே புடமிட்டு நேராக்கு கிராணியெல்லாம்
நேர்ந்து போகும்
குருடருக்குக் கொக்குநிறங் குணங்காணாப் பாவனையாங்
கொள்கை யாமே 74

வேதை முடிவு

நாகமும் செம்பும் சேர்ந்த கள்ங்கு, அல்லது லிங்கமும் செம்பும் சேர்த்துக் கரிப்பண்ணி, செம் பெடுத்து வேதைசெய்யெனல்

பொருட்டான வன்னிஎடை புகலாய அக்கினிசேர்
போத வாட்டி
முருட்டாக வில்லைகட்டி முக்கியமாய்க் காட்டமிடு
முனிவாம் வீரந்
திருட்டாக வொன்றிடுநீ ஜெயமாக வெள்ளியிடு
திடமாந் தங்கங்
குருட்டுநா யீசலுக்குக் குணமாகக் கவ்வினதாங்
கொள்கை யாமே. 75

மலஜல அடைப்புக்குக் சூர்ணம்

நெறியான நெற்பொரியும் நேர்ந்தசுக்கு மிளகோடு
நெறியாய்க் கொண்டு
குறியான வெண்காரங் குணமான பொரிநேராய்க்
கூட்டி வெந்நீர்
பிறியாம லுண்டிடவே பெருநோய்கள் மலஜலங்கள்
பிரித்து வைக்கும்
எறிவர்க்கைக் கல்லதுபோ லிருந்து ழைப்பான்
வாதியர்க ளினியவானே. 76

பேதி எண்ணெய்

வழுக்கான எண்ணெய்படி வச்ராங்கிப் பால்விட்டு
வகையாய்க் காச்சி
நழுக்கான சிறுகரண்டி நலமாகக் கொண்டிடவே
நாடிக் கேளு
கொழுக்கான இருமலப்பேர் கொண்டுநின்ற மலமடைப்புச்
சகலமும் போகும்
மழைக்கால விருட்டிலுந்தான் மந்தியுமே கொம்பிழக்கா
வாறு தானே 77

கர்ப்ப சூர்ணம்

துப்பாவும் பலம்நாலில் துடியான பூமேனி
தும்பிக் கையான்
அப்பாவும் பாதமுத லடைவாக இதையுலர்த்தி
ஆண்மை கொள்ள
மெய்ப்பாக வாக்குவரும் மேன்மைதரும் வாயுவெல்லா
மெலிந்து போகும்
உப்பான ததுவிருந்தா லுறுதியாம் வைத்தியமும்
உண்மை யாமே. 78

மேற்படி சூர்ணத்திற்கு உப்பு

பதறியெடு ஊமத்துப் பதிவான சாறுசொட்டு
பகர்ந்து விட்டுச்
சிதறாமற் கல்லுப்பு சித்திமுப் பணவெடைநீ
சேர்த்து உன்னை
விதியான விரைவாயு வெற்றியதாம் வெகுண்டோடும்
வேதை மெத்தக்
கதறியே யழுதாலுங் கைகாட்டாத் தொழிலுக்குக்
கலக்க மாமே 79

பித்தளைச் செம்பு-வேறு

தவளநிற மாகுதற்கு வழியைக்கேளு
தாட்டிகமாய்ப் பித்தளைதான் பலமுமொன்று
கவலாகத் தகட்டின்மேற் கல்லுப்பைத்தான
கனிவாகப் பூசிபுடம் நாலிற்செம்பாம்
உவலாக மதிதனிலே நான்குமாற்று
உத்தமனே யிதைவிற்று உண்டுதேறு
அவலைநினைந் துரலிடிப்பார் மிகவுங்கெட்டு
அழிவான வாதியர்கள் அடைவுதானே 80

ஊராசைப் பட்டிடுவார் உண்மைதெரி யாவாதி
உலுத்த மாண்பர்

வாராசை அயச்செம்பை வைப்பமென்று எண்ணியெண்ணி
வடிவு கூறி
கோராசை யாயுலகர் கொடுமைபட வேபுலம்பிக்
கொள்கை சொல்லிப்
பேராசை கொண்டவர்க்குப் பெரும்பொய்யைச்
சொல்லிமறை போக்குத்தானே. 81

குட்டத்திற்குச் சூரணம்

காஞ்சுராம் பட்டைஎடைக் கனிவாகக் காயவைத்துக்
கருணை யாகத்
தாஞ்சுராய் வெருகடிதூள் தாட்டிகமாய் வெந்நீரிற்
குடிக்கக் குட்டம்
நாஞ்சுமே மண்டலத்தில் நன்றாக வோடிடும்நல்
லெண்ணெ யாகா
மூஞ்சூறு பணியாரம் கவ்வினது போலொக்கும்
முடிவு தானே 82

துருசுக் களங்கு

கண்டரது பலமொன்று கனிவாக கெந்திநறும்
பூவு முக்கால்
பண்டமென அரைத்துருக்கப் பதிவான சத்தாகும்
பாரில் தங்கம்
வண்டரே வழியோடே வடிவான பூரணத்தின்
மார்க்கங் காணப்
பெண்டாட்டிக் கோவாதம் பேசினேன் பொல்லாத
வாதி மாரே. 83

துருசுக்களங்கு சத்து பிரிக்க

விலையான சத்தெடுத்தால் வீரமிடு சூதமிடு
மேலாம் பண்ணை
அலையாம லிட்டெரிக்க ஆண்மையாய்ச் செம்பாகும்
ஆதி வெள்ளி
கலையாமற் கொடுத்திடவே கனிவான தங்கமாம்
கணக்கு மாகும்
உலையில்மெழு கதுபோலே உருகுவான் வாதியவன் 84
உலுத்தன் றானே.

க்ஷயத்துக்கு பொன்னாவரைக் குடிநீர்

சொல்லுபொன்னி னாவாரைச் சுகமான வேர்ப்பட்டைத்
தூளாய்ப் பண்ணி
நல்லவெந்நீர் தனிலிட்டு நேர்திரிநா ளுண்டிடவே
நண்ணும் பித்தங்

கல்லுமே சயகாசங் கனிவாகப் போகுமது
சத்தி பண்ணும்
வில்லுமே வளைந்தாலோ விதமாக அம்புதைக்கும்
விதந்தானாமே 85

தாளக பஸ்பம்

பாகரசம் போனதற்குப் பதிவான தாரமொடு
பற்றி மேலே
வாகரச சீனமது வடிவாகக் கட்டிபுடம்
வைத்துப் பாரு
நாகரசம் நீறிவிடும் நலமான காசசயம்
நாடி யோடும்
ஆகாச மேலெறிந்த அடைவான கற்போன்ற
அடைவு தானே 86

குட்டத்திற்குப் பூரபஸ்பம்

பதையாமற் பூரமெடு பலமெடைசேர் சீனமதைப்
பாய்ச்சிக் கல்வம்
விதையாக அரைத்துவிடு விதமான பாணிவிட்டு
வீதமாகச்
சுதையாக அரைத்துண்ணச் சூதான குட்டமெல்லாஞ்
சூதா யோடும்
குதையறுந்த வில்லதுபோல் கூடுவான் வாதியர்கள்
குடும்ப மாமே. 87

ரோமச் செம்பு

கழலான ரோமமது தான்பத்துப் பலமாகும்
காரி யொன்று
கழலான துரிசொன்று கனிவாக நறும்புவொன்று
கனிந்த ரைத்து
உழலான வுருக்கரவி யுயர்ந்தவெகு மாற்றாகு
முண்மை சொன்னேன்
விழலுக்கே யிறைத்ததண்ணீர் வீண்வாதிக் களித்தபலன்
வீண தாமே 88

வாயுக்குப் பிரண்டைமாவு

வாயுதான் போவதற்கு வடிவான திரிகடுகு
வடிவாம் ரட்டி
பாயுமே முப்பிரண்டை பதிவாகச் சேர்த்தரைத்துப்
பகல்மாக் குள்ளே
ஓயுமே யுள்வைத்துக் கனிவாக அவித்துண்ணக்
கனிவாய் நோய்போம்

தாய்தனக்குக் கொடாதவனாம் தறிதுறும்பு வாதியவன்
சார்வு பாரே. 89

அதிதாகத்திற்குக் குடிநீர்

தவனமாய்த் தண்ணீரைத் தான்வேண்டு நோயாளித்
தண்மை தீரச்
சவனமாய் மோருடனே சலிப்பான முன்னையிலைத்
தாக்கி யுண்டால்
பவனமறு நோயாளிப் பதிவான தாகமறும்
பற்றிப் பாரு
கவனமுடை யார்க்குமே கண்ணுறக்கம் வாராத
கருத்து தானே 90

கஞ்சா நெய்

கோப்பான கோபாலைக் கொண்டுபடி தண்ணியிலே
கூடக் கஞ்சா
தாப்பாக எடையிட்டு தாட்டிகமாய் வெண்ணெயெடு
தாக்கி யுண்ண
வாய்ப்பான மண்டலத்தில் வடிவாக விந்ததுவு
மிகவும் பொங்கும்
பார்ப்பானைச் சேராதே பலியாது வைத்தியமும்
பழகிப் பாரே. 91

வெடியுப்புச் சுண்ணம்

கோட்டினெழுத் தாணிபலம் குணமாகப் பொடித்து வெடி
குணமாய்க் கம்பி
நாட்டுள்ளே வைத்துபுதை நலமாகப் புடமிட்டு
நல்கச் சுண்ணம்
வாட்டுகின்ற குன்மவலி எட்டும்விட்டு ஓடிவிடும்
வண்மை பாரு
காட்டுக்கே எரித்தநிலா கானலுக்கே பெய்தமழை
காணு வாயே. 92

சூதகவாய்வுக்கு குழித்தயிலம்

பேய்க்குமட்டி தந்திவிரை பிசகாமல் கொடிவேலி
பிரண்டை சேர்த்து
வாய்க்குமுன்னே தைலமாடு வடிவான காசெடையில்
வாயுபோகும்
காய்க்குமது ஆண்பனையில் காண்பிள்ளை யேபிறக்குங்
கண்டுபாரு
நாய்க்குணத்தை விட்டாலோ நல்மருந்து வாய்க்குமது
நன்மைதானே. 93

பக்கசூலைக்கு எண்ணெய்

வெங்காரம் சுழற்சிவிரை விளக்கெண்ணெ யொருபடியில்
விட்டுத் தந்தி
சிங்கார விரைபலமாம் சிவவிந்து கெந்திஎடை
சேர்த்துக் காய்ச்சிப்
பங்காகக் கொண்டிடவே பக்கமுள்ள சூலைபதி
னெட்டும் போகும்
வங்காள மேறுகினும் வாறுகோ லரைக்காக
வழக்கமாமே 94

சீனரச பஸ்பம்

வாலைரசம் தங்கமெடு வடிவான சீனமெடை
வகையாய்ச் சேர்த்துச்
சாலைபட அரைத்நுளரி சட்டியடி நின்றிடுங்காண்
சரியா யுண்டால்
காலைபடுங் குட்டரணங் காரிழையார் மேகவகை
காணா தோடுங்
காலையிலே யுண்டவர்க்குக் கனிந்துமே விந்திறுகுங்
கணக்க தாமே 95

பஞ்சதீபாக்கினி லேகியம்

திரிகடுகு கொத்தமல்லி திடமான ஏலமுடன்
திறமா கத்தான்
குறியாக வறுத்துபொடி குணமான எடைசமனாய்க்
கூடுஞ் சீனம்
பிரிபாமற் றேன்விட்டுப் பிசகாம லவித்துணப்போம்
பித்த வாய்வு
நரிமுன்னே நண்டுகர ணம்போட்ட கொள்கையிது
நாடுங் காலே 96

கிராணிக்குக் கொழுக்கட்டை

அழுக்கற்றும் பச்சரிசி யதையிடித்துப் பாணிவிட்டு
அதைப்பி சைந்து
பழுக்காகத் திரிகடுகு பதிவான கஞ்சாவும்
பகர்ந்துள் வைத்து
நழுக்காக அவித்துண்ண நாடுதளிற் கிராணியெல்லா
நலமா யோடுங்
கொழுக்கட்டை தலைபார்த்துக் கடித்தாலுங் குணமாகுங்
கூறி னோமே. 97

வெட்டைக்குப் பால்

ஆவினது பால்படியில் அடைவான தேத்தின்விரை
அரைத்து மூன்று

தாவியே நாளுண்ணத் தடையறவே வெட்டையெல்லாம்
தாமே போகும்
பாவியாய் வந்ததென்ன படுவாய்வு கிராணியெல்லாம்
பாரி லேகும்
மாவிருந்தாற் பணியாரம் வகையாய்ப் பண்ணுமொரு
மார்க்க மாமே. 98

மூலக்கிராணிக்கு மருந்து

முக்கண்ணை யுடைத்திளநீர் முனிவான பூண்டில்விட்டு
முயன்ற வித்துத்
தக்கதெடு அதைப் பிசைந்து தாட்டிகமா யிளநீரில்
தரவே மூலம்
விக்கலுடன் கழிச்சலொடு விதமான கிராணியெல்லாம்
வெருண்டு போகுந்
திக்கினிலே அலைந்தாலுந் தேசத்தில் திரிந்தாலுந்
தெரியா வாறே 99

பித்தவாய்வுக்குக் குடிநீர்

விருப்பாக நாற்றமது விதமாகச் சேரொன்று
விரும்பிச் சட்டி
பருப்புபடி அவித்திறுத்துப் பதிவான திரிகடுகு
பகர்ந்த வேலம்
விருப்பாகச் சீரகமும் வகைபலமாம் விட்டொன்றாய்க்
காய்ச்சி யுண்ணக்
குருப்பாகப் பித்தத்தின் வாயுவது குணமாகுங்
குறித்துப் பாரே 100

கிராணிக்குக் குடிநீர்

பூண்டுபடி அவித்திறுத்துப் பூகலரிய திரிகடுகு
கஞ்சா விட்டுக்
கூண்டுவகைக் கொன்றிடுநீ குணமாக வெட்டொன்றாய்க்
குறுக்கிக் காய்ச்சிப்
பாண்டுவினால் கிராணிக்குப் பதிவாகக் கொடுத்துண்ணப்
பாரி லேகும்
ஆண்டவனே தெய்வமாம் ஆளாத வன்தெய்வம்
அல்ல தானே 101

ரசவாதம் தெரிந்த பெரியோர் செய்கை

சூதத்தை நீர்போலுஞ் சுயமான தாளகத்தைச்
சுண்ணம் பண்ணக்
காதலாய்க் கெந்தகத்தைக் கனிவாக நீர்செய்த
காவ லோரும்

பாதகமாய் வீரத்தைப் பதிவாகச் சுண்ணமுதல்
பாலிப் போரும்
வாதத்தைக் கண்டோர்கள் வடிவாகச் சொல்லுமொரு
வண்மை தானே 102

நாக பஸ்பம்

சோரமது பலமொன்று சூட்டுரச மெடை சேர்த்துத்
துடியா யாட்டி
வீரமது காலிட்டு அரைபாணி புடமிடவே
வெளுத்து நிற்குஞ்
சீரதாய்ப் பணவெடைதான் தேனிலுண்ணக் கிராணிவகை
யெல்லாம் போகும்
ஓரணைதா னெருதுக்கு ஒத்தையெரு துழுநாலு
முதவா தாமே 103

துருசுபூர பஸ்பம்

காயமதில் நோய்போகக் கனிவான பூரமெடை
கண்டர் சேரு
ஞாயமா யரைத்துளரி நாடியுண்ணு திரிகடுகில்
நலித்த நோய்கள்
ஞாயமாய்க் குஷ்டரணம் நாலாறு சூலைமுதல்
நாட்டி லேகும்
மாயமாய் வாதியர்கள் தலைதெரியாதே பிதற்றி
மாளு வாரே. 104

அயச் சிந்துரம்

மெய்யான வீரமயம் மேன்மைபெற எடைசேரு
மிகுதி நீரைக்
கையார விட்டாட்டிக் காதலுடன் கடமிட்டுக்
கனிந்தெரிக்க
அய்யாரத் தீயெரித்து அடைவாக வுண்ணவலி
குன்மம் போகும்
பொய்யாடும் வாதியர்க்குப் போசனமுங் கிடையாது
புலையர் தாமே 105

அயச்செம்பு

வண்டிலது பழமிரண்டு வடிவான கரும்பொன்பலம்
நான்க தாகும்
பண்டிதரே பழச்சாற்றிற் பதிவாக அரைத்துபுட
மிட்டெ டுத்துக்
கண்டிதமாய் வைத்துப்பின் காரணமாய்ச் செம்புவகை
காணக் கேளு

சண்டியா யலையாதே சாஸ்திரத்தில் மனதுவைத்துக்
கருதிப் பாரே 103

வாதாடி நீலனெடை வடிவான கெந்தகத்தை
வடிவாய்ச் சேர்த்துக்
காதாடி யரைத்துவில்லை கட்டிபுட மிட்டுருக்கு
கனிவாம் சத்து
வீதாடி வெள்ளிவெண் கலம்போல நின்றாடும்
வேதியாகேள்
ஊதாரி வாதியவ ரொருபேச்சும் கேளார்க
ளுண்மை தானே 107

சத்தெடுத்து நான்கொன்று சரியாக விட்டுஅரை
பாணி யாலே
வித்தெடுத்துச் சூதமிடு விரகான பண்ணையது
வீத மாக
நத்திகட மிட்டெரித்து நாடியெடு பின்புகேள்
நவில வாதி
பத்திலே பதினொன்று பதிவாக நினைந்திடுவான்
பாவி யாமே 108

கடமான அடியில்நின்ற கெடியான தூளெடுத்துக்
கரண்டி யிட்டு
விடமான திலதைலம் விட்டுடனே கறுக்கியெடு
விதமாம் செம்பாம்
நடமாகக் கல்வமிட்டு நாடியுண்டை பண்ணிரவி
காய வைப்பாய்
அடமாகச் சொன்னதினா லறிவாரோ வாதியர்க
ளறிவுள்ளரோ. 109

காய்ந்த வுண்டை மேற்கவசம் கறுப்பியரை மேலதனைக்
கட்டித் தானே
வாய்ந்தவுப்புச் சுண்ணமது வடிவாக எடைசேர்த்து
அரைத்துக் கூட்டிச்
சாய்ந்தவுடன் மண்கவசஞ் சரியாகக் கட்டிடம்
வைத்தெ டுத்தால்
மாய்ந்திடுவான் வாதியர்கள் மாயமாய் நூலறியா
வாதிக் காமே. 110

பத்திரமாய்ப் புடம்போட்ட பதிவான சரக்குளடை
பாரிற் காரம்
நித்தியமாய் வைத்துருக்க நேரான செம்பாகும்
நேர்மை யுள்ள

பத்திரமாய் மதிநாலில் பதிவாக வொன்றுகொடு
பாரி லேழாஞ்
சித்திரத்திற் சோழியனை வைத்தெழுதக் கூடாத
திறமை தாூனே 111
மைத்தேழா மட்டத்தில் மயமான தங்கமெடை
மருவிச் சேரு
நைத்துஅடி தகடாக நல்லஉப்பு நான்குபலம்
நலமாஞ் செங்கல்
வைத்துமே புடமிடவே மயமாக அருகுகட்டி
மயமாந் தங்கங்
கைத்தலத்தில் நெல்லியங் கனிபோல வாதமது
கணக்கு மாமே 112
காரியத்தை விட்டுதக் கனிவான மட்டமதைக்
கல்லுப்பிட்டு
வாரியாய்ப் புடமிடவே வகையாகுந் தங்கமது
இறங்கும் பாரு
நாரியாய்ப் பாகமுமாம் நாடிமிகக் கைபாகம்
நாட்டு ளோர்க்கு
ஆரியக்கூத் தாடுகினுங் காரியத்தின் மேலிருப்பார்
அளவு தானே 113

மூடஞானிகட்கு புத்தி கூறல்

பட்டினியா யிருந்துபின்பு பதிவான ஞானத்தைப்
பார்த் திடாதே
கெட்டிமனம் நிலையாது கிருபைதருஞ் சுழிமுனையுங்
கிட்டி டாது
வட்டிக்குக் கொடுத்துவைத்து வடிவான பொன்னைவிற்று
மார்க்க மாக
செட்டி தனை அடுக்காதே செம்பொன்னைத் திருடுவான்
செய்கை யாமே 114

அயச்செம்பு

யத்திலே அயமொன்று நல்லரவி நாலாகும்
நாடிச் சேர்த்துப்
யத்திலே உருக்கிமெள்ளப் பதிவாகத் தகடடித்துப்
பாரிற் கெந்தி
யத்திலே அரைத்துத்தட்டி மயமாகப் புடமிட்டு
அதை யுருக்கு
யத்திலே சொன்னாலும் பலியாது ரசவாதம்
பாரு ளோர்க்கே 115

உருக்கிடவே சத்தாகும் உருவான நான்கிலொன்று
உயர்ந்த வீரம்
பெருக்கவே சேர்த்தரைத்துப் பிசகாம லிட்டுகட
மிட்டெ ரிக்க
நெருங்கியே யேறுமது நிலையாக அடியில்நின்ற
நிலையாம் சத்தை
வெருக்கியே நீரிருந்தால் விதமாகப் பூக்குமந்த
விதமு மாமே 116

சத்தெடுத்துச் சட்டிசரி யாகவிட்டு
நல்லெண்ணெய் தன்னைக் குத்தி
நத்தியே சுருக்கிமெள்ள நலமாகக் காரமிட்டு
நாடிச் சேர்த்து
வித்தையா யுருக்கிடவே விதமாகச் செம்பாகும்
வெள்ளி நாலில்
அத்தைக்கு மீசையது முளைக்கச்சித் தப்பன்முறை
யறிய லாமே 117

நாலுக்கு ஒன்றிடவே நலமான மாற்றைந்து
நாட்டி லாகும்
பாலிக்குந் தங்கமெடைப் பதிவாகச் சேர்த்துகடை
பாரில் விட்டு
சேலுக்காம் வித்திடுநீ செயமான பூரணத்தைத்
தொழுது போற்று
காலுக்கே செருப்பிட்டால் கடித்திடிலோ தூரவெறி
கணக்கு மாமே. 118

கலைபலமா மெடைசேரு கல்வத்தி லிட்டரைத்துக்
கருணை யாக
விலைகடத்தி விட்டெரிக்க வீம்பாக ஏறியது
உயர நிற்குஞ்
சிலையதனை வழித்தெடுக்கச் சிறப்பான வாலைரசம்
சீருமாகும்
தலைசிரைத்த வன்கொள்ளி தான்வைப்பா னதுபோலச்
சாற்றி னோமே. 119

தாளகத்துக்குச் சுருக்கு

முகப்பான குரங்குஇலை முக்கியமாய்ப் பிழிந்துவைத்து
முதன்மை கேளு
வகுப்பான தாளகத்தில் வடிவாக இருசாமம்
வகையாய்த் தானே
உகுப்பாக சுருக்கதுவாம் உடன்போடே நவலோகம்
தங்க மாகும்

புசிப்பாகுந் தபோதனர்க்குப் புனிதரச வாதம்வந்து
புகலுங்காலே 120

நாகச்செம்பு

தங்காமற் சோரமெடு தாட்டிகமாய்த் தேரெடுத்துத்
தாக்கி யாட்டு
பங்காகக் கரியில்நின்று பதிவாக ஆடுமது
பதிவாம் செம்பு
தங்காதே கொடுத்திடுநீ தாட்டிகமாய் நவலோகந்
தங்க மாகும்
வங்காள மருவுமஞ்சள் வடிவாகக் குளிப்பதுபோல்
மருவுந் தானே 121

திட்டமுடன் வாதியவர் திறமான மூலிகையில்
தேடிப் பார்த்துப்
பட்டமது போற்பறந்து பதிவான வாதமது
பகர்ந்து தேடி
விட்டகுறை யாலலைந்து விதமாகக் கைபாகந்
தோணா தாலே
கட்டழகி போல்தவித்துக் காணாத அவிசாரி
கணக்குமாமே 122

அயக்காந்த சிந்துரம்

அலர்ந்த அயம் பலஞ்சேரு அடைவான அங்குசமும்
ஆதிசேர்த்துப்
பலந்தவே கல்வமிட்டுப் பதிவாக அரைத்திரண்டு
பத்தக் காட்டம்
நலந்தபுட மிட்டிடுநீ நாலரைநா ளுண்டிடவே
நலமாம் வாய்வு
குலந்தனக்குக் கோடாலி கொள்கியதவ் வாறொக்குங்
குணமுமாமே. 123

தாளகச் சுத்தி

சிலைமாது பலமதுவாம் சிறந்தசுண்ண மீதுள்வைத்துத்
திட்ட மாக
அலையாமலடுப்பில்வைத்து அடைவாகப் பனிரெண்டு
சாமந் தீதான்
சூலையாம லெரித்தெடுத்துக் குணமாக க்ஷயகாசங்
கொடுக்க நன்றாம்
விலைமாதர் தனைக்கண்டு வேடிக்கைச் சொன்னபுத்தி
விதமு மாமே. 124

பூரத்திராவகம்

தேளான பூரமது திடமாகப் பத்தாகுஞ்
சிறப்பாஞ் சீனம்
வாளான இரண்டுபத்து வடிவாக நிறுத்துஅடை
வாலை சட்டி
தாளாகப் புகைநீரைத் தாட்டிகமாய் வாங்கிடவே
எல்லாநீறும்
பாஷாண்டி யாய்திரிந்தாற் பலிக்குமோ ரசவாதம்
பாருளோரே. 125

கண்ணான புகைநீரைக் கருணைபெற வடித்திருக்கச்
காரமாகும்
நண்ணான லிங்கமுதல் நலமான வீரமுதல்
தாரம் நீறும்
வண்ணான்போல் வெளுத்ததுவும் வடிவாக நீறடுங்காண்
வழக்கஞ் சொன்னேன்
பெண்ணாசை தனில்நின்று பேதைபோ லலைவார்கள்
புரட்டர் தாமே. 126

அயச்செம்பு

சோதி அயச்செம்புரைப்பேன் சுகமான கரும்பொன்னு
சேரு ஒன்று
பாதியெடு நீலனெடை பாய்ச்சியரை பழச்சாறு
பகலாம் போது
வாதியவன் சொன்னபடி வழக்குரைப்பான் முட்டாளாம்
வாதி மாரே
நீதியெடு உண்டைபண்ணு நேராக் காயவைத்து
நிலமை கேளே 127

புடம்பெரிதாய்ப் போட்டெடுத்துப் புகலரிய வெண்காரம்
பாதி சேர்த்துத்
திடமாகச் செவ்வல்லி செப்பரிய சாறுவிட்டுச்
சாம மாட்டி
நடமாகப் புடமிடுநீ நல்லகுகை தன்னிலிட்டு
உருக்கச் சத்தாம்
அடமாகச் சொல்லிடுவான் அவிசாரி வாதியென்றே
அறிய லாமே.
தெம்பாகச் சத்தெடுத்துத் திடமாகப் பாதியிடு
காரந் தன்னை
வம்பாகக் கல்வமிடு வடிவான செவ்வல்லிப்
பூச்சா றாலே

உம்பாக அரைத்துபுட மிட்டுருக்கு உருகியது
ஒடுஞ் சத்தாம்
கொம்பிலே தேனிருக்கக் குணமுடவ னிச்சித்த
கொள்கை தானே 129
நாடுதனிற் சத்தெடுத்து நலமாக வண்டிலிட்டு
நாடிக் கல்வம்
ஓடுதனில் வைத்துபுட முடனாகப் போட்டுகுகை
யிட்டு ருக்கப்
பாடுதனில் கல்மசங்கள் பதிவாக அற்றுவிடும்
பாரு ளோர்க்கு
ஏடுதனி லெழுதிவைத்த இதமான கைபாக
வியல்பு தானே 130
பத்திடவே சத்துக்குப் பதிவான காரமிடு
பரிந்து நல்லாய்
முத்திடவே அரைத்திட்டு முனிவாகப் புடமிட்டு
முகந்து ருக்க
சத்துவெள்ளி வெங்கலம்போற் சரியாகப் பதம்பா
சார்ந்கு நீயும்
வித்திடவே சடத்துக்கு விந்துவித் ததுபோல
விளம்பி னோமே. 131
சத்துதனைப் பிரிக்கவகை சரியாகத் தான்கேளு
சமர்த்தாய் நல்லாய்
புத்தியினாற் சத்துவகை பிரியாதால் லோகத்தில்
புகுத மாட்டார்
நித்தமுடன் கரிசுட்டு நீயலைந்து போகாமல்
நீக்கிச் செம்பு
பத்துதலை யறியாத பாவியர்போல் அலைவார்கள்
வாதி தாமே 132

சத்து பிரிக்கும் வகை

விரிவான சத்து வகை விபரமாய்ப் பிரிக்கும்வகை
விளம்பக் கேளு
சரியான வீரமிடு சாரித்துச் சூதமிடு
தாக்கச் சூடன்
நெறியாக விட்டரைத்து நேரான கடத்திலிட்டு
எரிக்க வேறும்
நரியிரைச்சல் கடல் முட்ட நாம்கண்டோம் வசனமிதை
நாடிப்பாரே. 133

வேறு

அடியில்நின்ற மருந்தெடுத்துக் காரமிட்டு
அடைவாகச் சட்டிதனில் தைலத்தாலே

வடிவாகச் சுருக்கிட்டுக் கரிக்கிப்போடு
வண்மையாய்க் கரிபோலத் தூளுமாகும்
நடியான குகையிலிட்டு உருக்கச்செம்பு
நானறிந்த படிசொன்னேன் நாட்டுளோர்க்குப்
பிடிவாதந் தான் போலப் பேச வேண்டாம்
பேசரிய அயமதனைப் பேணிப்பாரே 134

தங்காமற் குகையிலிட்டுத் தாக்குருக்கு
தாட்டிகமாய்ச் செம்பாகும் தீயில்தாக்கு
பங்காக நாலி லொன்று பாகமாகப்
பதிவாகக் கொடுத்துருக்கு எட்டுமாற்று
சிங்கார மாய்விற்றுச் செலவுசெய்து
சிறப்பாகப் பூரணத்தைத் தொழுதுபோற்று
உண்ணாமல் தின்னாம லிருப்போர்க்குத் தான்
ஊரம்பலமதாக வுரைசெய்தேனே 135

வேறு

இட்டமுட னயச்செம்பை யிதமாகப் பாகமதா
யின்ப மாகப்
பட்டசளப் பட்டுநீ பதிவாக வைத்துநீ
பதிவு கூர்ந்து
இட்டமுடன் செய்தாக்கால் நலமாகு மிதன்பெருமை
நன்மை மெத்த
கட்டழகி தனைப்பார்த்துக் களித்தேகின்
கனியாமோ வாதிமாரே 136

க்ஷயத்திற்கு வாந்தி கொடுக்க

கனிவாக க்ஷயம்போகக் கனிந்துநல்ல காட்டெருக்கம்
பாலைக் காயத்
தனியாக வைத்துபணம் தாட்டிகமாய் போட்டுநல்ல
தண்ணீ ரிட்டுப்
பனியாகக் கரைத்துபடி பாதியுண்ண வாந்தியது
பகருங் காலை
இனியதுதா னிருக்கவே பேராசைப் பட்டகதை
யெய்துந் தானே 137

காத்தறிந்து அரஞ்சேரு கறியெடுத்து அவித்திறுத்து
கனிந்த சாரம்
பார்த்தறிந்து உண்டிடவே பதிவான வாந்தியது
பருகி நிற்கும்
சாத்தறிந்து சயகாசம் ஈளைமுதல் பித்தமெல்லாம்
தானே யோடும்

பார்த்தறிந்த பெரியோர்க்குப் பண்டிதமும் வாதசித்தி
பதிவு மாமே 138
மெள்ளவே பூரமெடை மிதமாகச் சேர்த்தரைத்து
மிகுந்த உண்டை
கள்ளமறக் காயவைத்துக் கனிந்துமே வளையலுப்புக்
கனிவாய்க் கட்டித்
துள்ளவே சுண்ணாம்பில் துடியாக வுள்வைத்துத்
தோய்த்துப் பாரு
கள்ளநரி சந்தைக்குக் கனிவாக போனகதை
கருணை யாமே 139
வழுவிலா வாலையென்ற வடிவான அடுப்பிலிட்டு
வண்மையாக
நழுகாம லிருசாமம் நலமாக மேல்மூடி
நாடித் தானே
கொழுகாம லெரித்துமெள்ள குணமாக வாங்கிடுநீ
குருசெப் பாகும்
கழுதையைத்தான் கட்டிவைத்துக் கனிவாக ஓதுவித்த
கதைபோ லாமே 140
கழுப்போல க்ஷயம்போகும் கனிவான காசமுதல்
காணா தோடும்
பழுப்போல சிலேற்பனங்கள் பண்பான தொண்ணூறும்
பதறி யோடும்
இழுப் போல புளிதள்ளு இதமாக உண்டுபா
ரினிபா லோடு
தொழுப்புகுந்த ஆடதுபோல் துடிப்புழுக்கை
போட்டகதை துயருமாமே. 141
விடுவாத சிலேற்பனமும் விதமான நோய்களெல்லாம்
வெகுண்டு ஓடும்
படுகுழியி லானையது அடிதவறி விழுந்தகதை
போலே யாகுங்
கொடுக்காத பண்டிதமுங் குணமாகுமோ விதனைக்
கூறுவாரோ
கடுகுசிறு த்தாற் காரம் காதலாய்ப் போமோதான்
கருதுவாயே 142

அயம் துருசுசேர்த்துச் செம்பெடுக்கும் வழி

கரிவான பொன்னொன்று காணவே நீலனொன்று
காதற் பூரம்
பரிவான மூன்று எடைப் பழச்சாறு விட்டரைத்துப்
பகலாம் நேரம்

உரிவாகவுண்டை பண்ணி உறுதியாய்ப் புடமிட்டு
உருக்கிப் பாரு
நரிவாலைக் கொண்டாழம் நலமாகப் பாராதீர்
நாட்டு ளோரே. 143

கனத்துவெகு கரியாகு முறுதியா முருக்குகரி
யுடன்போ லாகும்
இனத்துடனே உருக்கினது இதமாக ஆதியிட்டு
இன்ப மாக
கனத்துநீ யரைத்துபுடம் கனிவாக இட்டுருக்கு
கனிந்து சத்தாம்
கிணற்றில் நின்ற தவளைக்குக் கிட்டுமோ செம்பதுவும்
கேள்வி யோரே. 144

பக்ஷமுடன் சத்துக்குப் பதிவாக நான்கிலொன்று
பரிந்த வீரம்
நச்சரவா யிட்டுரசம் நான்கிலொன்று பண்ணையிடு
நாடிச் சேர்த்து
வைச்சபடி யரைத்துகட மிட்டெரித்து வடிவாக
எடுத்துப் பாரு
துர்ச்சனர்க்கு வாதமது துடியாகக் கிட்டாது
தொடர்ந்து பாரே 145

எடுத்து அயக்கரண்டியிடு இதமாகத் தைலமிடு
இதமாய்த் தோய்த்து
அடுத்துநீ கருக்கியிடு ஆதியிடு உருக்கிடவே
ஆடுஞ் செம்பு
விடுத்துமதி நான்குக்கு விதமாக வொன்றிடுநீ
எட்டு மாற்றாம்
அடுத்தவரைக் கெடுக்காதே அன்னமிட்டோர்க் கன்னமிடல்
அருமை யாமே. 146

வங்க ரசபஸ்பம்

வங்கமது சேரொன்று வடிவான எடைசூதம்
வைத்து ருக்கிப்
பங்கமது அரைத்துகடம் பதிவாக இட்டுளரி
பதிவாய் மேலே
திங்களைப் போ லெறிவிடும் திடமான பற்பம்வெள்ளை
தீர்க்க மாகும்
உங்கள் கையில் குருமுடித்து உறுதியாய்க் கொடுத்திருக்க
ஊமையாமே. 147

அரங்காக மேலேறும் அடைவான பற்பமதை
வழித்து நீயும்

பரங்காக அடியில்நின்ற பதிவான மருந்தினுடன்
பாதி சேர்த்து
உரங்காக அரைத்துவில்லை யுறுதியாய்க் கட்டி கடம்
உண்மை யாக
குரங்குகொஞ்சம் போல்வாதிக் கூத்ததுவு மாடுமந்தக்
கொள்கை யாமே 148

-தாளக பஸ்பம்

கனிவாகக் கடமிட்டுக் காதலா யெரித்திடவே
கனிந்து நிற்கும்
முனிவாக அதையரைத்துத் தாளகத்தின் மேலப்பி
முனிய நல்லாய்
தணிவாகப் புடமிட்டுத் தாட்டிகமா யெடுக்கவது
குருவுமாகும்
அனுமார்கள் பூமாலை யதையெடுத்துப் போட்டகதை
அறிய லாமே 149

குருகொடுக்கும் எடை விபரம்

ஆடகமா மொன்றுக்கு அடைவாக ரவியொன்று
அறிவாம் வெள்ளி
தாடகமாய்க் கொடுத்துருக்கித் தாட்டிகமா யொன்றுகொடு
தாவப் பத்தாம்
நாடகமாய் விற்றுண்டு நலமாக ஞானவழி
அடுத்துக் கூடு
சேடனுக்குக் குரங்கதனைச் செயமாகத் தான்வளர்த்த
செய்கை யாமே 150
சத்திசிவம் வாயுவினாற் சத்தாகும் சத்தையெடு
தனைப்பிரித்து
முத்திபெற மதியிலிடு முனிவான மதியமுக்கு
முன்னே சொன்னேன்
வெற்றிதரும் புடமிறங்கும் வேதையா மிதுலகுவு
விளையும் பாரு
பற்றியே புற்றிலடி பாம்புதான் சாகாது
பரிந்து பாரே 151
அரன்சோரம் பலம்நான்காம் ஆதிசத்தி அரைப்பலமாம்
அரைக்கால் கண்டர்
வரம்படவே சாமமரை வகையாகக் குகையில்வைத்து
அதையு ருக்க
முரஞ்சேரச் சத்தாகும் முனிவாகக் கருவாகும்
முனிந்து பாரு

பிறர்சோரம் பெண்வேலை செய்தாலும் பிறர்கணவர்
    பிரிய மாமே. 152
நிதியிரண்டு நேராகும் நேரான செம்பதனை
    நேர்ந்து ருக்கிப்
புதிதாகத் தகடடித்துப் பூசிடுநீ சத்தியதைப்
    புடமு மைந்து
நதியாகக் குருவாகும் நாடுசுக் கிரனான்கில்
    நல்ல தங்கம்
மதிகாதற் பூசாரி மதிகரகம் போல்நினைப்பா
    வண்மை தானே 153

மூலத்திற்கு மருந்து

வேயீன்ற அரிசிபடி விதமான திரிகடுகு
    விட்டி டித்து
தாயீன்ற பால்விட்டுத் தாட்டிகமாய்க் காய்ச்சியுண்ணத்
    தறுகா மூலம்
மாயீன்று ஓடிவிடும் மயமான முளைமூலம்
    மாய்ந்து வீழும்
சீயென்ற காடுதனிற் செந்நாயுந் தங்காது
    தீர்க்க மாமே 154

நொறுக்கு வெள்ளி

தகடுமதி நறும்புஅரை தாட்டிகமா யைந்துபுடந்
    தானே போட
விகடமதா யுருகுமது வீரமது நான்கிலொன்று
    விரும்பி யிட்டு
நகடாக வண்டிலிடு நலமாக வுருக்குவெள்ளி
    நான்கு மாற்றாம்
பகடுழுகும் வாறதுபோல் பலிக்குமது ரசவாதம்
    பாரு ளோர்க்கே 155
வாதியர்க ளிந்தவெள்ளி வடிவாக அறியாமல்
    வகைகா ணாமல்
ஊதிவங்கந் தனையிட்டு உருகசெம்பு சேர்த்தெடுத்து
    உருக்கிப் பார்ப்பார்
சோதிபுடம் போட்டெடுக்கத் துப்பரவா யோடிவிடத்
    துயரம் போலாஞ்
சேதிமிகச் சொல்லிடுவர் சுட்டெனென்பர் பட்டெனென்பர்
    திண்ண மாமே 156

நொறுக்கு வெள்ளிக்கு அயமும் துருசும் சேர்த்தல்

இரும்புளடை கெந்தகஞ்சே ரிதமான நீலனெடை
    இட்டு ஆட்டி

வரும்புகளா யாடிகுகை வடிவாக இட்டுருக்க
வடிவு சத்தாந்
திரும்பமதி தனிலிடுக திடமாக மாற்றேழு
சிறந்து நிற்குங்
கரும்புகட்டு கிடக்கையிலே கனிந்தெறும்பு நகருமது
கணக்கு மாமே 157

வேதத்தை யறியாதார் வீண்வாதி சுட்டலைந்து
விரும்பி நொந்து
சூதத்தைக் கட்டும்வகை சுருதிநூல் தனிலிருக்கத்
தோய்ந்து பார்த்து
நாதத்தை விட்டுமே நலமாகக் கட்டாசம்
புகைந்து ஓடக்
காதற்ற லூசியது காணாமற் கடைவழியே
காணுவாரே. 158

துருசுச்செம்பு

நாறியெடு ஏவலாள் நலமாக எடைநீலன்
நாட்டு ருக்கு
கூறியெடு சத்தாகுங் குணமாக இதைப்பார்நீ
கொடுக்க வெள்ளி
மாறியெடு தங்கமாம் மயமான பூரணத்தில்
மதித்து நில்லு
ஏறியெடுத் தேணியைப்போ லிதமாக வாதிசொல்வா
ரின்ப மாமே. 159

வேறு

திமிர் குட்டத்திற்கு எண்ணெய்

திலகமுடன் சித்தரெண்ணெய் ஆவின் பாலாம்
திடமான நெய்வகைக்குச் சேரு ஒன்று
கலகமிலாக் கற்பூரம் வேலி வோரம்
களஞ்சிநா லரைத்திட்டுக் காய்ச்சி யுண்டால்
பலகலையாந் திமிர்குட்டஞ் சொரிமே கங்கள்
பறக்குமே புளிதள்ளி யுண்டு பாரு
இலவுதான் காத்தகிளி போலாம்வாதி
இனிதான பண்டிதத்தி னியற்கை பாரே. 160

வேறு

செத்த செம்பு ஓடாவிதம்

நீதியாய்ச் செத்தசெம்பு நிலையாகஓடாமல்
நிலைக்கக் கேளு

வாதியாந் திலதமிடு வடிவான காரமிடு
வறுத்து ருக்கச்
சாதிபெற ஓடாது சரியாகச் செம்பாகுந்
தண்மை பாரு
வாதிமகன் வைத்தியத்தின் வளமறிவான் பிணியாளி
மருந்து உண்ணே. 161

காதடைப்புக்கு தைலம்

காதடைப்புச் சீப்பாய்ச்சல் கனிவாகக் குத்தலொடு
கனிந்து போக
நீதமுறு புகைநீரில் நிம்ப எண்ணெய் விட்டுசெவி
நீய யடைத்தால்
பாதமுறு திரிநாளில் பதிவான செவிநோய்தான்
பாரி லேகும்
வாதம்வர ஞானம்வரும் வடிவாக வில்லாத
வழக்க மாமே 162

வயிற்றுவலிக்குப் பஞ்சலவண பஸ்பம்

அஞ்சுப்பு எடைசேர்த்து அடைவாகத் திரிகடுகு
அதில்முக் காலாந்
தஞ்சமறக் கல்வமிட்டுத் தாட்டிகமா யெருக்கம்பால்
தன்னா லாட்டி
வஞ்சமறப் புடமிடுநீ வயிற்றுவலி தான்கொடுக்க
வலிநோய் போகும்
இஞ்சிதின்னுங் குரங்கதுபோ லெளியரச வாதிமன
மியங்கு வானே 163

வலிகுன்மத்திற்கு மருந்து

பூத்துதிர்ந்த பூபலம்நால் புகலறிய பண்ணைஎடை
போட்ட ரைத்து
காத்துபுட மிட்டுஎடு காரமாங் கசிவறுமே
காண வுண்ண
நேற்றுவந்த வலிகுன்மம் நிலையான எட்டும்போம்
நிலைத்துப்பாரு
காய்த்தமரந் தனிலெவரும் கல்லெறிந்த பாவனைபோல்
காணு வாயே 164

வேறு

மூலத்திற்கு நாக பஸ்பம்

வானாகம் பலமொன்று சூத மொன்று
வடிவாகக் கல்வத்தி லிட்டுத் தானும்

நானாக விருசாமம் புகைநீர் விட்டு
நன்றாக அரைத்துளரி சிந்தூரிக்குங்
கோனாக மூலமது குடிவிட்டோடுங்
குணமாகும் நல்மனதாய்க் குருவைக் காரு
தானாகக் கனியாத பழத்தைத் தானுந்
தடிகொண்டு அடித்தகதை தண்மை பாரே. 165

துருசு அயக்களங்கு

காயான துரிசினெடை கெந்திசேரு
கனிவான பூவெடைக்குக் கருப்பிசேரு
வாயான புடமிடுநீ காரங் கூட்டி
வடிவாகப் புடமிட்டு உருக்கச் சத்தாஞ்
சாயான வீரமிட்டு மதியி லிட்டுச்
சரியான மாற்றாறு காணும் நேர்மை
வாயாலே சொன்னதினால் தாயா ரிட்டால்
வடிவாகும் புடமிறங்கும் வண்மை தானே. 166

வாதகுன்மத்திற்கு மருந்து

சொல்வளைந்த திடலதுவும் பலமும்பத்து
சுருதிபெறு வெண்காரி வெடியுப் புத்தான்
நல்விளைந்த அஞ்சலது காய்ச்சமூன்றும்
நலமாக இடித்துசட்டி தனிலெ ரிக்க
மெல்வளைந்த அதுபோலச் சுண்ணாம் பாகும்
மேன்மைபெறு வாயுன்ம மோடிப் போக
வில்வளைந்தா லம்புதான் தைக்கும் பாரு
மேன்மைபோல் முனிவோர்களுரைத்த தாமே 167

தாம்பூலந் தின்னக்கூடாதெனல்

பாக்கதிகம் போடபித்தம் பாகமுட னுள்ளுறைந்து
பரிந்து மேலே
வாக்கினிலே சோபையுண்டாம் வடிவழியும் விந்துநஷ்ட
மாகும் பாரு
நோக்கியே தம்பலத்தில் நுட்பமாய் வெறியாகும்
நுண்மை சொன்னேன்
தூக்கம்வரும் என்போர்க்குத் துணையாகுந் தரித்திரியத்
தொண்மை தானே 168
பிரியாத சத்தெடுத்துப் பிரித்திடுநீ செம்பாகும்
பெருமை யுண்டாங்
குரியான வெள்ளிதனில் குணமாக இட்டிடவே
குணமாந் தங்கம்

அறிவாலே வாதியர்கள் அடைவாகப் பார்த்துதிடம்
அறிந்து கொள்ளு
நரிவாலைக் கொண்டாழம் பார்ப்பதுபோல் வாதமதை
நவிலொ ணாதே.

சீனரசபஸ்பம்

மல்லிகைப்பூச் சாறுவிடு மயமான சீனரசம்
ஆட்டி யாட்டி
மெல்லவதை யரைத்தெடுநீ மேன்மைபெற அடியில்நிற்கும்
மேக மெல்லாம்
வல்லமையா யோடிவிடும் வடிவான குட்டாணம்
வகையாய்த் தீரும்
அல்லலற்ற மெய்ஞ்ஞானி அடைவான வாதமதை
அறிவார் தாமே. 170

செத்த செம்பில் ஐயநீர் விட்டரைக்கப் பச்சைநிறம் ஓடாது

உருக்கினத்துக்காதியெடுஉ டன்பொரித்து எடைதேரை
இட்டு ஆட்டப்
பெருக்கியே ஜலமாகும் பெருமைபெறச் சுத்தசெம்பில்
பேசா தாட்டி
நெருக்கியே யுருக்கிப்பார் நேர்மைதரும் பச்சையது
நிலைத்து ஓடா
இறுக்கியே யிருந்துவிடும் இதமான மதிபழுக்கு
மின்ப மாமே. 171

அயச்செம்பு

காந்தஅரப் பொடிநீலன் கனிநறும்பூ பழச்சாறு
கனிய ஆட்டிச்
சாந்தகுண மாயுருக்கச் சத்தாகும் ஆதிகொடு
தனியு ருக்கு
பாந்தமுடன் பிரித்துவெள்ளி பதியஇடு மாற்றேழு
பகர்ந்து பாரு
மான்றோலி னாசனத்தின் மயமாக இருந்திடுவார்
வாதி யோரே. 172

நாகபஸ்பம்

புண்ணாக்குச் சேரொன்று புசங்கமது உள்ளிட்டுப்
புடமும் போடு
நண்ணாகவெடுத்திடுநீ நலமாக நீறிசுண்ணம்
நவின்று நிற்கும்

குண்ணாகத் திரிகடுகில் குணமாக வுண்டுபார்
குட்டந் தீரும்
உண்ணாக்கை யறுத்துமெள்ள அண்ணாக்கில் செலுத்துவார்கள்
உலுத்த ராமே. 173

வேடவாதிகள் புரட்டு

காலிலே குறடிடுவர் காவிதனை நனைத்துமே
கனிந்து வேடங்
கோலியே போட்டிடுவர் குணமான வாதமது
தெரியு மென்பர்
தாலியே பறித்திடுவர் தர்க்கமாய்ப் படிகமணித்
தரித்துக் கொள்வர்
வேலிதனிற் கரட்டோணான் விருப்பமாய்த் தலையசைத்தல்
மெய்யிதாமே 174

(வேறு) *சீனரசபஸ்பம்*

நீரண்டி பாதரசம் பலமு நான்கு
நேரான உப்பிலிடு எரித்துப் பார்க்க
காரண்டிப் பதங்கமெடு சீனஞ்சேர்க்கக்
கனிவான தும்பைமலர் காணு நன்றாம்
வாரண்டி ரோகமெல்லாம் மடிந்து போகும்
வகையாகப் பித்தமது வடிந்து போகும்
ஊரண்டித் திரிந்தாலே வாதமாமோ
உழைத்தாக்கால் வாதம்வரு முண்மைதானே 175

திக்கினிலே யலையாமல் தெருவெல்லாந் தேடாமல்
திட்ட மாகத்
துக்கியே அயச்செம்பு சுருதியினி லுள்ளபடி
சொன்னேன் பாரு
மக்கசிக்கப் படுகாமல் மயமான கைபாகத்
துடனே பாரு
பொக்கைவாய்ப் பொரிமாவைப் புலம்பியே யிச்சித்த
புதுமை தானே 176

காக்கைவலிக் கெண்ணெய்

ஏரண்ட மெண்ணெய்படி யிதினெடையா மாவின்னெய்
யிதற்கு நான்காம்
பாரண்டம் பத்தாகும் பதிவான நிலப்பனையின்
கிழங்கு தானும்
வாரண்டம் வஜ்ராங்கி வடிவாக இட்டுளரி
வகைநீர் போகும்
காரண்டம் கத்தினதால் காதறுந்து புலம்புமவர்
கருணைதானே. 177

லிங்கம் கட்ட ஐயநீர்

நண்ணாகச் சீனமெடு நலமாக வூதிடவே
    நன்றாம் சுண்ணம்
பண்ணாக வடமெடைசேர் பதிவாக அரைத்ததூதி
    பனியில் வைக்க
நண்ணாக ஐயநீராம் நாடியே வன்னிகட்டும்
    நல்ல வேதை
வண்ணானைச் சேர்ந்தாக்கால் வடிவாக வெளுப்பாகும்
    வண்மைதானே 178

தந்தவாய்விற்குக் குடிநீர்

காளானா மொருசேரு கனிவாக இடித்துபிழி
    கரண்டி யிட்டுத்
தாளாகச் சூதமிடு தாட்டிகமாய்க் காய்ச்சியுண்ணு
    தந்த வாய்வு
வாளான ததுபோகும் வடிவான குட்டமுதல்
    வடிந்து போகும்
பாஷாண்டி யாய்த்திரிந்தாற் பலிக்குமோ ரசவாதம்
    பண்புள்ளோரே 179

கண்ணிற்குக் களிம்பு

கண்பூனைச் சாறதனில் காசுகட்டி பலமொன்று
    களிப்பாக் குத்தான்
திண்பாக அதிற்பாதி சேர்த்துடைத்துத் தூரவைத்துத்
    திரிநாள் தானும்
வெண்கலத்தி லுரைத்துக்கண்ணில் விதமாகப்போட வெள்
    ளெழுத்துப் போகும்
மண்பூனை யெலிபிடித்த மரியாதை ரசவாதி
    வழக்க மாமே 180

(வேறு) நாகக்களங்கு

ஞானமிக வருவதற்கு நாகம்சூதம்
    நல்லஎடை தாரமதை அரைத்துஉண்டை
வானகத்தி லுப்பதனை யரைத்துக்கட்டி
    வடிவாக உமிப்புடத்தில் வைக்கச்செம்பு
நானகத்திற் செம்புருக்கி அதிலேதாக்கு
    நல்லதங்க மாகுமது நன்றாய்ச் சொன்னேன்
தேனெடுத்த வேடனவன் புறங்கைநக்குந்
    திறமான விந்தையிதைச் செய்துபாரே. 181

செம்புக்கரி செய்து வெள்ளியிற் சேர்க்க

நீதியா மயச்செம்பு நான்கிலொன்று
    நேரான தங்கமொன்று நேர்ந்துருக்கு

வாத வைத்ய விளக்கம், மதிவெண்பா

வாதிசேர் கெந்தகமு மெடையரைத்து
வாகாகப் பூசிப்பின் புடத்தைப் போடக்
கோதியே கரியாகு மதியில்நான்கு
குணமாக உருக்கிடவே மாற்றுப்பத்தாம்
வாதியவர் பொய்யதனை நம்பவேண்டாம்
வடிவாக நூலறிந்து வடிவுபாரே 182

நாகச்சுண்ணம்

பாதரசம் பலமொன்று சோரமொன்று
பதிவாக இட்டுருக்கித் தாரம்சேர்த்து
வாரமரை யிஞ்சிநீர் தன்னாலாட்டி
வடிவாக வில்லைகட்டிப் புடத்தைப்போட
நேரமதாய்ச் சுண்ணமதாங் குன்மம்போகும்
நேரான வுடல்பெருக்கும் விந்துவுண்டாங்
காதலித்து வாதமதைக் கருதிக்கொள்ளக்
கனிவாகச் செம்புசுத்தி யாகும்பாரே 183

காரீயத்தால் துருசுசுத்தி

காரீயம் பலம்நான்கு கரண்டியிட்டுக்
கனிவாக வுருக்கிடுநீ பின்புகேளு
வாரியாய் நீலன்மேற் சுண்ணச்சீலை
வடிவாகக் கட்டிமெள்ளக் காரீயத்தில்
நாரியாய்த் தோய்த்தெடுக்க நலமாம்வெள்ளை
நலமான பசுமையில்லை கறுப்புநீங்குஞ்
சூரியனைக் கண்டபனி போலேயாகுஞ்
சூக்ஷமாம் வாதமிதைச் செய்துபாரே 184

துருசுச்சுண்ணம்

கைதவறாச் சுண்ணமெடு கவசங்கேளு
கனிவான புசங்கத்தி லெடையேசூதம்
மைதவறாச் சேர்த்தளடை வெடியைச்சேர்த்து
மயமாகப் புகைநீரா லரைத்துக்கட்டி
வையகத்திற் புடம்போடு நீலநீறும்
வடிவாகச் சகலசரக் கனைத்துங்கட்டிச்
செய்தவர்க்கு வாதம்வரும் நன்மைமெத்த
செயமாக வந்துவிடும் திண்ணமாமே. 185

தாளக்கட்டு

தும்பியிலைச் சாறாலே வளையலுப்பு
துடியாக வரைந்துமெள்ளச் சுத்திசெய்து
நம்பியரி தாரமேற் கட்டிவாட்ட
நல்லசிவப் பாகுமது தேனிலிட்டால்

கெம்பிநின்ற கபரோகஞ் சிலேற்பனங்கள்
குணமாகும் வசியமுமாங் குருவைக்காரு
தம்பிரான் செயலாலே நம்பினோர்க்குத்
தாட்டிகமாய் வாதம்வருந் தன்மைபாரே. 186

லிங்கக்கட்டு

வானொன்று சூதமெடை வடிவாகச் சேர்த்துருக்கி
வடிவாம் வீரம்
நானொன்று யெடைசரியாய் நாடியரை நீராகும்
நலமாம் லிங்கங்
கானொன்று புரட்டிவிடு கட்டாகும் நவலோகங்
காண வேதை
தானொன்று நினைக்கிலெழில் தெய்வமொன்று நினைப்பதுவுஞ்
சகசந் தானே. 187

தாதுபுஷ்டிக்கு அவிழ்தம்-வேறு

சொல்விளம்பி படியிரண்டு காயம்ரெண்டு
சூட்டி டுநீ யரைகுழலைத் சுகமாயுண்ண
மல்கல்வரும் விந்திறுகும் மணிபோற்கட்டும்
வடிவழகு மிகவுண்டா மண்டலத்தில்
நல்கிவரும் போதையுமாம் நாடுந்தேகம்
நலமான குணம்ஞான மிகவுமுண்டாம்
வெல்கவந்த ஏமன்தா னெதிரேநின்று
வெருவியே யோடிடுவான் விரும்பிப்பாரே 188

நாபிமாத்திரை

விதிபிறந்த பதியதனைச் சுத்திசெய்து
மிளகுசமன் கூட்டி இஞ்சி நீர்விட்டாட்டி
உதியளவு ஆகவே யுண்டை செய்து
உரைத்திடவு மனுபான முரைக்கக்கேளு
சதியுரையா மின்னமிதிற் சாற்றக்கேளு
சடத்திலுள்ள வாதகதி பச்சைவாதம்
பதிதிறமாய் நரம்பிறுகு முறுக்குமேறும்
பஞ்சுபோல் நடைகொடுக்கும் பரிட்சைதானே. 189

வாய்விற்குத் தைலம்

முக்கண்ணைக் கண்களைந்து அதில்வஜ்ராங்கி
முறுக்கியபால் விட்டெருவில் மூடிவைத்து
மக்கியபின் னெடுத்துமே லோட்டைத்தள்ளி
மண்சுமந்த வாசுகியை மத்தித்தேத்திச்
செக்கினெண்ணெ யிருநாழி கொண்டபின்பு
செலுத்தியபின் னதையெடுத்துச் சிக்கைநீக்கித்

தக்கவரன் பதியெடுத்தோன் நகர்தீ யிட்டோன்
தந்தையென்ற சினந்தீருந் தரிக்குத்தானே. 190

துருசுச்(6)சம்பு

பாதிமதி தனையணிந்தோன் பலமும்பத்து
பண்ணையது பலமிரண்டு எருக்கம்பாலால்
நீதியா யரைத்துருட்டிப் புடமும்போட
நோரகச் சிவக்குமது நெறியைப்பாரு
சோதிபெற செம்பாகுங் கைப்பு அற்றுச்
சுயஞ்சோதி யாம்நகைகள் மிகவும்பண்ணு
வாதிகையிற் பொன்கொடுத்தால் செம்பேயாகும்
வடிவான கதைதெரியும் வண்மைதானே 191

லிங்கக்கட்டு

வாட்டுபினும் லிங்கமது பலமும்நான்கு
வடிவான புளிகெந்தி யெடையேசேர்த்து
எட்டிலுரை செய்ததுபோல் லிங்கம்வாட்ட
இதமாகக் கட்டாகு மெழுகுமாகுந்
தாட்டிகமாய் மூலமுதற் கிராணிபோகுந்
தடையறுமே பேதியது தறுகாதோடுங்
காட்டினிலே எரித்தநிலா கனவுபோலாங்
கடலிலே பேய்ந்தமழை காணுந்தானே 192

வாதிகள் புரட்டு

கூடையிலே வாதியர்கள் கொடுமைமிகச் சொல்லிடுவார்
கூர்ந்து பார்த்து
வாடையிலே சரக்கென்பார் வடிவாக அயச்செம்பு
செய்வோ மென்று
நாடையிலே பொய்சொல்வார் நானிலத்திற் பொய்பேசி
நவின்றுகெட்டு
ஒடையிலே பாடிடுவா குறங்கையிலே நினையாத
வுண்மை தானே. 193

வாதாடி வாதியர்கள் வழக்குதனை மிகச்பேசி
வடிவாந் தங்கம்
நீதான மாய்ச்செய்வேன் நிலையான தங்கமது
இறங்கச் செய்வேன்
சேதார மாய்ப்பணத்தைச் செலவழித்து ஓடிடுவார்
திண்மை பேசி
சூதான பேச்சையவர் சுருக்காக விரும்புவார்
தோஷி தாமே 194

வெள்ளிசெய்யக் கள்ளிப்பாலால் பாஷாணக்கட்டு

கள்ளியது பால்படியாங் கனிவான பாஷாணங்
கரியலிட்டுத்
தள்ளியே சுருக்குவைத்துத் தாட்டிகமாய்ப் போட்டிடவே
தோய்ந்து கட்டும்
வெள்ளீய நூற்றுக்கு விதமாக ஒன்றிடவே
வெள்ளி யாகுந்
துள்ளியே திரியாதே சூக்ஷுத்தைப் பார்வாதி
தொன்மை தானே. 195

வாதவெள்ளி செய்து ஊதிப் பின்னர் அதனை நொறுக்கி அயச்செம்பைச் சேர்க்கவெனல்

கள்மறு மதிதனிலே கனிந்துகொடு கடைவைத்துக்
கருத்தா யூதி
வள்ளமறு மீனதுபோல் வடிவாக நொறுக்கியது
வடிவம் பாரு
துள்ளமறுங் கார்விட்டுத் துடியாக உருகியது
செம்புத் தாக்கு
மெள்ளவே முன்னேதான் மேதினியி லயச்செம்பை
மேவிப் பாரே 196

அயக்களங்கு

இட்டமுறுங் கரும்பொன்னு இதமான நீலனெடை
யிதமாய் நாறும்
பட்டகுறை தாளகமும் பதிவாகச் சேர்த்தரைத்து
உருக்கி யிட்டு
நட்டமிலாச் சத்தாகும் நாடிபிரி நவலோகம்
ஏழு மாற்றாம்
விட்டகுறை வந்ததென்றால் விதமாக வாதம்வரும்
விருப்பமாமே. 197

மிதுவான தாளகத்தின் விதமாகச் செம்பெடுக்க
வீரம் கூட்டு
அதுவாகப் பிரித்துவிடும் அடைவான சுடமெரித்து
ஆண்மை தானே
மதுவான ததையுண்டு மயக்கமுற்றத் தேன்பூச்சி
வடிவு பாரு
புதுப்பானை யீப்புகுந்த வாறுபோல் புலம்புவாள்
பெருமை தானே. 198

சித்தருடை நூலெல்லாஞ் சிறப்பாகத் திரட்டியே
செல்வ மாகப்

பத்தருடை கைபாகம் பதிவாக இருநூறாய்ப்
பகர்ந்தேன் யானும்
முத்தருடை யருளாலே முனிவான யூகியென்று
பேரும் பெற்றேன்
நத்தியே நல்வாத வைத்தியத்தின் பொருளாக
நண்ணினேனே. 199

யூகிமுனி வாத வைத்திய விளக்கம்

முற்றிற்று.

தேவி பாதம்

முனியழகர்

என்னும்

யூகிமுனி மதிவெண்பா-100

கதிருஞ் சசியுங் கலந்துபிரி நீர்மை
விதியுரு வங்குருநூல் விள்ளும்-மதிவெண்பா
முற்று முறையறியா மூடரெனி னும்வழலை
மற்றறி வாரென்ற வாறு 1

வண்ணான் பிறப்பறிய மாட்டாத வாதிகட்குச்
சுண்ணாம் பிருக்குமிடந் தோன்றாதே-தண்ணீரி
லூருங் கருங்காக மூசரத்தைக் கொன்றதென்றால்
பேருமதி வெண்பாவிற் பேசு 2

உப்புந் திரைக்கடல்மே லூசரமு மண்மேலே
அப்புங் கனலிரண்டு மாகாசம்-இப்புவியில்
வாதிகளே சூத மடக்கறியீர் வீண்கரிசுட்
டுதினா லுண்டோ வுயிர் 3

காந்தண் மலருங் கடலுப் புறவானா
லேந்து தனமிரண்டிங் கெய்தாலோ-காந்தண்மலர்
காட்டிலே பூப்பூர்க்குங் கானலிலே காய்காய்க்கும்
நாட்டிலே கேட்டிருப்போ நாம் 4

காரஞ் சுருக்கறியீர் கம்பியுப்பைக் கட்டறியீர்
பூரப் புகையடங்கப் பூசறியீர்-வீரமதை
ஊனிட் டுருக்கறியீர் ஊசரத்தைக் கொல்லறியீர்
ஏனிப் படித்தவிக்கி றீர் 5

வாதி அறிய! வேண்டியவை

ஆழி கடைந்தமுத மாக்கறியா ரச்சலத்தில்
ஊழிபரனுப்பெடுத்து ஊட்டறியார்-ஏழுசட்டை
வாங்கிரசங் கட்டறியார் வாதிகடாம் வையகத்தில்
தூங்கிவிழு வாரெனவே சொல் 6

இடை-பிங்கலை-சுழிமுனை

பார்த்தால் விசுத்திப் பரத்தினடி யாசனத்தை
யேத்தாமல் விட்டா லிதமில்லை-காற்றாகும்
பின்கலையா லூதிப் பிடரிவழி புக்கியே
முன்கலையி லோடு முனை. 7

ககன குளிகை

சாயை மறையாதோ தன்னுடம்பு தன்னுக்கு

ளோயாமல் கத்திநடு ஓடாதோ-காயம்
உயரப் பறவாதோ உன்மனைதாண் டாதோ
சுயகுளிகை யாமெனவே சொல் 8
சாற்றுங் குளிகைத் தமர்வாச லைத்திறந்து
யேற்றினா லேழுசபை யேறாதோ-தோற்றும்
மனங்கடந்த பூரணத்தில் வாழாதோ காய
மினந்தெளிந்து கொள்ளாதே நீ 9

பூநீறு (கலிவிருத்தம்)

மார்க்க மாம்பர வானத்தின் விந்துவால்
தீர்க்க மாயுவ ருப்புச் செனித்திடும்
பார்க்கும் யோக பரம்பரை வாதிக்கு
யேற்க வாகுமுப் பூதென் றுரைத்திடே 10
உண்ணு மங்கையர் கர்ப்பக் குழிக்குளே
பெண்ணு மாணும் பிறந்தது போலவே
விண்ணி லாடி விளங்கு மழைத்துளி
கண்ணி லேதருங் காரமுஞ் சாரமே 11
கார மேசில சாரம தாய்விடும்
சார மேசில காரம தாய்விடும்
பூர மேயுற வாகவும் புக்கினால்
வீர மேவி விளங்கிடும் வேதையே 12
அஞ்சு பூதம தாகிய வுப்பது
மிஞ்சு தீக்கி வெறுங்குகை யாய்விடுந்
தஞ்ச மாஞ்சிவ சத்தியின் தீக்ஷையால்
துஞ்சி டாதது தோஷமு மில்லையே 13

கல்லுப்புக்கட்டு

ஓது பூரணச் சந்திர னுப்பினால்
வாது சூரிய னுப்பு வசப்படும்
போது வானத் தெழுந்திடும் பூவினால்
சூத மாமணி யாடித் துலங்குமே 13

ரசமணிச் சிந்துரம்

சூத மாமணி யோடுறு கெந்தியும்
தாது தாளகம் வங்கமு நாகமும்
நாத வேமமு மேருவில் நண்ணினால்
தீதி லாதசிந் தூரமுஞ் சித்தியே 15
தாக்கும் பூமியைத் தானறிந் தாலல்லோ
வாய்க்கு மீசன் மகிமையுப் பாமது
காய்க்குங் காலத்தில் கண்டிடா வாதியே
யேய்க்கு மேய்க்கு மிறக்கு முடலிதே 16

கல்லுப்பும் அதனைக்கட்டும் விதமும்

அலையி லேவழிந் தாடி யசைந்தது

சிலைய தாய்மதி யாகத் திரண்டது
மலையி லேவரு மங்கை மகத்துவம்
தலையி லேசிவ சத்தியின் தீக்ஷயே 17

ரசபதங்கமும் அதனைக் கல்பமாக்கும் விதமும்

அண்ட வன்னியி னால்ரசஞ் சிக்கிடும்
கண்ட போதினில் கற்பம தாயிடும்
உண்ட போதினிற் காய முறுதியாம்
பண்டை யீசன் பகர்ந்த முறையிதே 18

இன்னாருக்கு யோகமும் சித்தியாமெனல்

வன்னி யுண்டு ரசஞ்சயமாகினால்
மன்னி யோர்பொருள் பேசவும் வேண்டுமோ
தன்னை யேயுணர்ந் தார்தமக் கல்லவோ
சொன்ன யோகமுஞ் சூதமுஞ் சித்தியே 19

துருசைக்கொல்லவும் தாரபஸ்பஞ் செய்யவும்

உப்பி லேகளிம் பேறுந் துருசுதான்
அப்பி லேதுவைத் தாலல்ல வோவறுஞ்
செப்பி னாற்கடுஞ் சீனச்சுண் ணாம்பினால்
தப்பி லாதரி தாரஞ் சலவையே 20

அகார மென்றறி யார்முடி அக்கினி
உகார மென்றறி யார்புவி யூசரம்
சிகார மென்றது கைக்குளே சிக்கினால்
வகார மென்றிட வாயு விளங்குமே. 21

அண்ட மாவது கோழியின் முட்டையோ
பிண்ட மாவது தன்தலைப் பிள்ளையோ
வண்ட ரேயிவை ரண்டையு மார்க்கமாய்க்
கண்ட போதலோ காண்பது சொர்ணமே 22

காக்கை யால்கூவும் கம்பித் திறப்படுங்
காக்கை யாலுவர்ச் சாரமுங் கைக்குளாங்
காக்கை யால்சவுக் காரமுங் கட்டலாங்
காக்கை காக்கை நடுக்கடல் காக்கையே 23

ஆடி யாவணி யாழித்திப் பிண்டத்தைத்
தேடி னால்வரு மோவந்தத் தேதியில்
பாடி னாற்பல நூல்களிற் பாஷையா
யோடி யோடி யுழன்று தவிப்பரே 24

ஜயநீர்காலம்

தையு மாசியென் றேசிலர் சாற்றினார்
அய்ய னேபனிக் காலமீ தல்லவோ
செய்ய கங்கையின் தீக்ஷ யறிந்தபேர்
கையு மெய்யுமா யுற்றிடக் காண்பரே 25

சுண்ணகாலம்

மீனமேஷ மிரண்டையு மேயிதற்
கான காலமென் றேயறை வார்சிலர்
போன காலமும் புக்கின வேளையும்
ஞான தேசிக னார்சொல நண்ணுமே. 26

தாரணையோகம் (வேறு)

வாசிவாசி மூலவாசி வாய்வுமூல தாரையில்
மாறிமாறி யூதபான வாதையேது போய்விடும்
வீசிவீசி யோடினாலும் வீடகார வீதியால்
மேவி யூது பிராணவாயு மேலைவாச லேறிடும்
நாசிநாசி கூர்மையான நாதவிந்து கேசரம்
நாடியூது ஞானசாடி ராசயோக மாகுமாங்
காசிகாசி யேயுனோக வீணிலோடி மாய்கிறீர்
காலன்மூல வாசியாக கண்டுகொள்ள லாகுமே. 27
நூறிலேறு போதிலாறு கேணியாகும் விந்தடா
நூறுநூறு சேருமாகில் மாரிபெய்யு மாறடா
வேறுமீச னேதுஞான வீதியேறும் போதிலே
வேதனாளு மாயனாளு மீசனாளு மாயமாங்
கூறுநாவ தேதடாசொல் மூலநாடி யூதவே
கோணமாமு வாசலேற பாழுமீதி லேறடா
சாரடா கணேசர்பாதங் கேசனாதி மத்தியில்
சாருசேரு தாரகம் ஸதாசிவாய பிரஹ்மமே 28

முப்புவின் சிறப்பு (வேறு)

காரம்ஜல சாரம்சய நீராவது கட்டும்
வீரஞ்சில பூரங்களு மெழுகும்பல விதமாய்ச்
சேருஞ்சில குருவும்பல சிந்தூரமு முறவாம்
ஊருஞ்சில தைலங்களும் உப்பாமென வுரையே 29
ஆகும்பெரு வெளிமேலுட லாகும்படி கமனம்
போகும்படி திடமாகிய பொருள்சேர்ரச மணியாந்
தேகஞ்சில நாள்நின்றிட வேசெய்திடு திறமாம்
யோகம்படு மென்றேசொலு முப்பாமென வுரையே 30

வேறு

தாதுகொண்ட அண்டமீது தானெழுந்த அங்கியால்
சூதமுண்ட பேரிலேம தூதரண்டு வார்களோ
ஓதுகின்ற பூதமைந்து முள்ளடக்கி நிற்கவே
நாதமுண்ட யோகிதானும் ஞானகண்ட ராகுமே 31
ஆழிதூள்க ளாகிமேரு அண்டம்வேறு கூறதாய்
ஊழிகால மானபோதுயோகிசாவ தில்லையே
பாழிலே யெழுந்தவன்னி பாரில்வந்த தடர்ந்ததால்
வாழிவாழி சூதமுண்ட மானுபாவர் வாழியே 32

உப்பினால் செம்பிறக்கும் அதனைக் காரியமெழுப்புமெனல் (வேறு)

உப்பி னால்செம்பு தானே யிறந்திடும்
அப்பி னாலது வேரவி யாயிடும்
செப்பி னேன்மதி தன்னில யிப்படி
தப்பித மில்லைத் தான்தங்க மாகுமே 33

சீனச்சுண்ணத்தில் வெடிப்புக்கட்டும், அதனால் அரிதாரம் சுண்ணமாம் நாகமுங் கட்டுமெனல்

வான மீனச்சி வெள்ளிச்சி யுப்பினால்
கான லான விணங்கள் வசப்படுந்
தான மாகவே தாரமுஞ் சுண்ணமாம்
ஆன நாகமுங் கட்டிடும் வேதையே 34

செம்புக்கு முடிவி லியம் சேர்த்தால்தான் உயிர்வரும் வெள்ளி பொன்னாகுமெனல்

உறுதியற்ற உலுத்த ரசவாதி
அறுதி தான் பொருள் தோற்றிடு வார்களாம்
வறுதி தான் ரவி தானியங் கண்டவர்
பெறுவர் மோஷம் பிணக்கில்லை காணுமே 35
செங்கல் தன்னைப் பொன் னாக்கிய சுந்தரர்
உங்கள் புத்தி யுறுதியாய்ச் செய்திட
வங்கஞ் சேரிடில் தானுயி ராயிடும்
தங்க மாமதி தன்னிலே கூட்டிடே. 36

கடல் நீரினால் உப்பைக்கட்டி, அந்தவுப்பினால் ரசபஸ்பஞ் செய்து அதில் கெந்திசேர்த்து செம்புக்குக் கவசமிட்டு அதனைக் கொன்று வங்கஞ்சேர்த்து ஊதித் தங்கத்தில் சேர்த்து வெள்ளியில் கொடுக்கவெனல் (வேறு)

உப்புஉப்பு என்று சொல்லு மொன்றறியா மூடர்காள்
உப்புதிரை நீரிலே உருத்தெரிக்கக் கட்டடா
முப்புமுப்பு மானதா முயன்று ரசபற்பமாம்
மூலமான கெந்திசேர்த்து மூலரவி மேவிட 37
செப்பிசெப்பி னாற்கரிய தாகியே யிருந்திடும்
சேதமில்லை யேயெடுத்து சித்திபெறக் கல்வத்தில்
அப்புதா னரையுஞ்சேர்த்து ஆடக்கொஞ்சம் ஊதியே
ஆனவேமம் ஒன்றுசேர ஆனலோக மேமமே. 38

இன்னதை யின்னது கட்டுமெனல்

ஆதிஆதி சாரம்வெடி யுப்பிலே வசப்படும்
அநாதிவெடி யுப்பது படிகையில் செயமதாம்
நீதிநீதி யெல்லாங்கட்டு நீடுகாடு பொன்னதாம்
நேகநேக லோகமே நினைந்தவாறு யேமமாம்

சோதிசோதி கல்லுப்பதனை துருசுகட்டும் நீதியாய்ச்
சொற்பெரிய காரம்வெள்ளை தாதுவெல்லாங்கட்டுமே
வாதிவாதி கட்டி வேலை வாதுகூற வல்லராய்
வானலோக மீதெலாமும் வானரம மாகுமே. 39

வேறு

ஊணிப் பாரு அகார எழுத்திடை
உவ்வைச் சேர்க்க வுருப்படுஞ் சக்கரம்
பேணிப் பாரு மகார மவுனத்தைப்
பேசப் போகுமோ பேரிட் டழைக்கவும்
தோணிப்பாரு அங்க நியாசத்தை
தொட்டுப்பார் சர்வ காரிய மிப்படி
காணிக் கானது கோடிக்கு மாகுமாம்
காட்டுங் காட்டுங் கிரியையுங் காட்டுமே. 40

செம்புக்கரி சேர்த்த சிங்கி

செம்பு தன்னைப் புளியிலைப் போலடி
சித்துருபி நேர் சூதமுஞ் சேர்த்திடு
நம்பு வேலைக் கவசமு நாடிடு
நாடித்தானே கனபுடம் போட்டெடு
தெம்பு லாவிய தான்கரி யாயிடுந்
திட்டமாய்ச் சிங்கி தானெடை சேர்த்தரை
நம்புவார்கள் புடமொன்று போட்டெடு
நாடி யூதிட நல்லசித் தாகுமே. 41

வெள்ளியில் சேர்ந்த வேதை

சித்தி செய்திட மாடொன்று சேர்த்திடு
சிக்கென மதி யெட்டுக் கிரண்டிடு
பத்தி யாகவே யூதி யெடுத்திடு
பாக மாடு பதியுடன் பத்துமாம்
நித்தியம் வாசி தாரையிலூதிடு
நீதமாம் ராஜ யோகமும் மாகிடு
முத்தி நாசி நுனியிலே கூர்மைபார்
மூலவாசியைக் கண்டு பிடித்திடே 42

பித்தளைச் செம்பு

காகமானது பித்தளை யோர்பலங்
காரமிட்டு உருக்கி யெடுத்திடு
பாகமாகவே ஐந்துதரத்தினில்
பஞ்ச மித்திரங் தன்னிலே சாய்த்திடு
கோகமாக புகைநீர் கடைநீரில்
கொட்டி யேரவி தன்னிலே வைத்திடு
தாகமாகவே தானே கரைந்துபோம்
தாக்க நீரிடை டங்கணஞ் சேர்த்திடே. 43

சேர்த்துமே அரை சாமமும் பாண்டத்தில்
சிக்குபில்லை ரவிதனில் காயவை
பார்த்துமே கஜந் தான்புட மிட்டிடு
பாகமாகவே தான்குரு வாகிடும்
காத்துமே மதியெட்டுக் கிரண்டிடு
கார மிட்டுமே யேம மிரண்டிடு
சாற்றுவீ ரிதை ஊதி யெடுத்திடச்
சத்தியம்ஆகத் தானெழு மாகுமே 44

ரசபதங்கம்

ஆகவே நாக மேயொரு சேரெடு
ஆதியான விலுப்பெண்ணெய் சுத்தியாம்
யேகமே யொருகின்ண மடித்திடு
இன்பமா யடித் தான் அயக்கிண்ணமாம்
யோக மாகவே கிண்ண மடிதனில்
யோகக் கல்லுப்பு செங்கன்மா சேர்த்திடு
பாக மாகவே தானயக் கிண்ணத்தில்
பாதி போட்டு நீ சூதம் நடுவிடே. 45
விட்டு மேநாக கிண்ணியை மேல்மூடி
வீரமாக உளுந்துமண் செய்திடு
கட்டு மேகம லாக்கினி தானெரி
கார மாகவே யேறிப் பதங்கமாம்
பொட்டு மேயெட்டு செம்பி லிரண்டிடு
போக மாகவே பொன் னாணி யாகுமாம்
தொட்டு மேநீ பணவெடை யுள்ளிடு
துட்ட மாபிணி தானும் விலகுமே 46

வெடியுப்புச் சுண்ணம் (வேறு)

காரம்வெடி யிடைநேரிடை புளியம்படி யிடிநீ
பாரம்ரவி யுலரவ்விடு புதுசட்டியி லிட்டே
நேரம்படி வெரியேயிட சுண்ணம் மதுவாகுங்
கோரம்பட வீரங்களுள் கூறும்மது சேரே 47

சாரக்கட்டு

சேர்த்தேஅரை முத்திக்கருத் தெளியச்சலந் தன்னால்
பார்த்தேவிட சாரம்பட பதிவாலென வங்கி
நாத்துப்பட விட்டேயெடு நலமாகவே யுருகும்
காத்தேயெடு கரியில்லிடு கனகம்மது வாமே 48

அயக்களங்கு (வேறு)

ஆதியான தானயத்தில் வீரம்பாதி சேரடா
அநாதியான வெடிஜலத்தை விட்டரைக்க சாமமாம்
சோதிசோதி யேமுருக்கம் பூவதுபோ லாகுமாம்
சுத்தியே கடத்திலிட்டுத் தானெரிக்க வேறுமாம்

வாதிவாதி கீழுமேலு மேயிருந்து தான்விடும்
வாதையாக வொன்றுசேர்த்து வாதவில்லை யாகவே
கோதிகோதி தானரைத்து இப்படிக் கடத்திலே
கொள்கவே அரைத்தெடுத்து கூறுநீலன் நேரெடே.49
நீலநீலன் நேரெடுத்த நேரத க முன்னயம்
நீடுதானே தான்வெடியின் னீரைவிட்டுத் தானரை
காலகாலன் தான்கடத்தில் கட்டிநேரா யெரியடா
காரமாக வேயெடுத்து கல்வந்தன்னி லிட்டுமே
சாலசால மாகவில்லை தாக்கி நன்று கசபுடம்
சரதமாக வேயுநேறுங் காரமொக்க வேகுகை
தாலமாக விட்டுருக்கத் தாகமாக ரவியதாந்
தந்தேமதி தன்னிலிட தாரமணி யாகுமே. 50

திராவகம்
வெண்பா

பொட்டலையி னுப்புப் போராம் பலம்பத்து
இட்டமுடன் சீன மிருபதுதான்-கட்டளையா
அஞ்சுடனே சேர்த்து அடைவாக் கடமரைதான்
விஞ்சைகடை நீரைவிரும்பு 51
வேறா மிதனாலே வேண்டினதோர் வாதமாம்
கூறா மிதன்பெருமை கூர்மையாஞ்-சீராக
உப்புவிட்டுப் பார்த்துகெட்டு வோடிமன மேயுழன்று
தப்பிதநூல் பொய்யென்பார் தாம் 52

உப்புக்கட்டு (வேறு)

அஞ்சு பூதம தாகிய உப்பஞ்சு
தஞ்சமாகப் புளியஞ்சு தான்சேர
விஞ்சையாகவே தீக்ஷைசெய் திட்டக்கால்
தஞ்சமாகக் கரிதனி லாடுமே 53
ஓதும் பூரண உப்புப் புளியினால்
வாத வுப்பெல்லாஞ் சுண்ணம தாகிடும்
நீதி யாக சரக்கெல்லாங் கட்டிடும்
வாது செம்பெல்லாம் யேமம தாகுமே 54
சூத மாமணி யாகக் கரிதனில்
வேத மாகவே நின்று விளையாட
நாத னீ லனை நீற்றினால் கட்டிடும்
வேதஞ் சொன்னது கல்லுப்புக் கட்டிடே 55
கட்டினால் சூதம் பொன்னுண்டு வாதிகேள்
துட்ட வாதிகட் டாவிடில் பொன்னிலை
கொட்டினா லது தேளென்பர் பாருங்காண்
மட்டி புத்தியி னால்வருந் துன்பமே 56

கல்லுப்பு ரசமணி சிந்துரம்

சூதங் கட்டிக் கரிதனி லாடினால்
தாது நேரதாய்க் கெந்தியைச் சேர்த்திடு
வாது குப்பியில் போட்டு உருக்கியே
நாத மாகவே தாளகஞ் சேர்த்திடே 57

சேர்த்துமே அயந் தானே சிலாகையால்
பார்த்துமே கிண்டிப் பதியப் பலப்பக்கல்
காத்துமே மூடித் தானே யெடுத்திடு
நீத்துமே சிவப் பாகுமே லோகமே 58

லோகந் தன்னிலே நூற்றுக்கு வொன்றிடு
பாக மாகப் பதினாறு மாற்றுமாம்
யோக ஞான முறுதியு மாகிடும்
பாக மானதைப் பார்த்து எடுத்திடே 59

வேறு

மூத்தியான புத்தியுள்ள வாதியே யறியடா
அத்தியாகச் சுட்டுகெட்ட உப்பிலே வசப்படும்
முத்தியாக நூலறிந்த நீதியாள னேசொலாய்
வெற்றியால் கடற்குருவி உப்பிலே வசப்படும் 60

சோதியான லோகமெல்லாம் சொல்லுமுன்னே தங்கமாம்
சோதிநீதி யேமந்தீயில் சொர்ணமாகும் யேமமாம்
வாதிவாதி யென்று சொல்லி வீணிலே கரிசுட்டு
வண்மைசொன்னால் நூல்கள்பொய்யோ வாதுசொல்லு
மூடரே 61

வெண்பா

மூடரென்று சொன்னாலே மோசமாய்க் கோபம்வரும்
ஆடவர்போல் நீயலைந்தா லாகுமோ-தேடி
ரசவாதம் செய்தாலே நாடுநமக் குண்டு
பிசகானா லொன்றுமில்லை போ. 62

அமுரி முரிக்க

வேறு

அமுரி யெண்ணெய் முரித்திட வாதிகேள்
குமரி சக்கரம் தன்னிலே யிட்டிடு
நமரி யாகவே தான் சுத்தி நீரதாம்
வமரி யாகமு எண்ணெயும் வாங்குமே. 63

வாங்கு மெண்ணெயை வாகாப் பூநீரில்
தாங்கி யேசவுக் காரமு மாகிடும்
வாங்கிட எண்ணெய் வங்கமும் நீறிடும்
பாங்கி யாகவே நீலனும் நீறுமே. 64

ரசமணி – வேறு

நீறி நின்ற துரிசு பணவெடை
நித்த ராக வெடுத்து விராலியில்
ஆறுகின்ற தெடுத்துப் பிழிந்திட
ஆன் சாறது மிகுதியும் வந்திடும்
கோறுகின்ற அயக்கரண் டிதனில்
கொட்டிச் சாறுடன் கூட்டிடு சூதமும்
வாருகின்ற ரசமணி யாகிடும்
வாதம் வந்து நிலைத்திடும் வாதிகேள். 65

வங்க சிந்துரம்

வங்கம் பாரு குமரிப்பால் விட்டரை
வாகா வைத்து புடம்போட மஞ்சளாஞ்
சிங்க மாக வுருக்கிட வெட்டையாஞ்
சீராய்ப் பூத்த ரசந்தன்னைச் சேர்த்தெடை
துங்கமாகப் புகைநீரை விட்டரை
தூர்த்துக் காசியின் மேரிடைத் தானெரி
தங்க மாகுமே நூற்றுக்கு ஒன்றிடு
தாக்கிப் பார்த்திடு வங்கசிந் தூரமே. 66
சிந்து ரந்தனைத் தேனிலே யுண்டிடு
தேகத் தில்வரும் துன்பமு மேகிடும்
விந்து கட்டி யிறுகுமே வாதிகேள்
வீதமான ரசம்வந் திடத்திலே
சுந்தரம்மா யெரித்திட மேலேறும்
சுரண்டி யேயடி தன்னிலே சேர்த்தரை
முந்த வேஅரை தான்புகை நீரினால்
முக்கி யம்மா யெரித்திடச் சித்தியே 67

வங்க சுத்தி
வேறு

சித்தியாக வங்கமொன்று சேரெடுத்து சுத்திகேள்
சித்தமாகத் தானுவ ருப்பெடுத்துப் பாணியால்
பத்திநான்கு கல்லுச்சுண்ண மேல்படி அளந்திடு
பாகமாக மூடியோடு பதத்துட னெரித்திடு
நித்தியாகத் தானெரிக்க எண்ணெய்கக்கும் பாரடா
நித்தமாக அண்டவோட்டை நேரதா யெடுத்திடு
முத்தியாக நான்கிலொன்று சீனமது சேர்த்தரை
மூடியூதச் சுண்ணமாகும் மூர்த்திகடுஞ் சுண்ணமே
சுண்ணமே யெடுத்துகுகை தன்னிலிடும் போதிலே
சூட்சவங்க மிட்டுமேலை சுண்ணமிட்டு ஊதிடு
சுன்னமாக விப்படிநீ யேமுதர மூதிட
நாடியேழு வங்கசுத்தி நாட்டிலே மதியதாம். 68

வங்கச் சுண்ணம்

பின்னவங்க மேயெடைக்குப் பீசம்விட் டுருக்கியே
பிட்டுப்போல வேயிருக்கும் பேதமான வாதிகேள்
கன்னல்வேலி கொல்லிசுண்ணம் நீரிலே யெரித்திடு
காதலான புட்டுநே ரரையரை யெருக்குமே 69
எருக்கம்பாலில் விட்டரைத்து வில்லைதட்டித் தான்ரவி
யின்பமாகக் கடத்திவிட்டுதுத் தானெரித்துப் பாரடா
விருப்பமாக மேலேயேறும் வீதமா வழித்தடி
யிருந்தவில்லை தன்னிலோட்டேயோரினமாய்த் தானிடு
உருக்கமாகத் தானெருக்கம் பாலைவிட்டரைத்துமே
உண்மையாக வைந்துமுறை மாட்டியே யெரித்திடு
கருக்குமே யெடுத்துநீ கானரவி பத்துமே
காணவொன்று இட்டிட கனகவெள்ளி யாகுமே 70

வேறு

ஆகு மேவெள்ளி தானெடை சேர்த்திடு
அன்ப தாக மதிபத்து மாகுமாம்
யோக மாகவே ஞானங்கள் பார்த்திடு
உற்ற வெள்ளியை விற்றுச் செலவுசெய்
யூக மாகவே நாசி நுனிதனில்
ஊதி யூதிடு தாரையி லப்படி
ஆன மாமர பதனில்நீ நின்றிடு
ஆட கேசரம் அம்பர வீதியே 71

லிங்கக் கட்டு–வேறு

கடல்நுரையின் நீறுங்கரி யுப்பும்மது சேரடா
காணமூர்த்தி வெண்கருவில் தானேயரைவில்லைசெய்
நடலையாகத் தானேகரி தன்னிலேநீ யூதிடு
நாடுமே கடுமையான சுண்ணம்நேர் நிலைத்திடும்
விடலையாக யோகமே கடுமையான சுண்ணத்தில்
வீதமாக வீரமிட்டு வீடுமூலி தானிடு
வடலையே பிழிந்திடவே வாதுநேர் ஜலமதாம்
வன்மையாய் அயக்கரண்டி தன்னிலிங்கம் வைத்திடே 72

லிங்கமெழுகு

வைத்திடு சுருக்கிடு வாகுளொரு சாமமும்
வண்மையான லிங்கமே வடிவதான கட்டடா
உத்திடு யேமத்திடு வுண்மையான வீரம்நே
ருற்றுநே ரரைத்திடு சாமம்ரண்டும் வெண்மையாங்
கைத்திடுமேல் வன்னிமேலே கான அங்கி தானிடு
கடியதொரு சூடன்தீபந் தன்னிலேநீ வாட்டிடு
பத்திடுமே வுள்ளேவாங்கும் பாரினில் மெழுகுமாம்
பதியான லோகமீது பாச்சிடவே சொர்ணமாமே. 73

சமுத்திர நீர்முறிக்க–வெண்பா

வேலை யமுரிதனை விட்டு முரிக்கக்கேள்
ஆலைபோல் வாலை அடுப்பிலிட்டுக்-காலையா
யோரிசுத்த நீராமே யின்ப ரசவாதி
மூரிவேதை யாகி முடி 74

வேறு–தாம்பரத்திற்கு கெந்திசேர்க்கு மளவு

கெந்தி ரொம்பவும் சேரிடில் செம்புதான்
கீர்த்தியாகவே தான்கரி யாகிடும்
முந்தி யேகெந்தி தான்ரவி முக்காலாம்
மூர்க்கமாகவே சேரிடில் தங்கமாம்

நந்தி கண்டது விம்முறை தானது
நாடி னாரெனை தானே புலத்தியர்
சிந்திப் பாகவே சொன்னேனிவ் வேதையே
சித்தி யாகவே முத்திய தாகுமே 75

கார மிஞ்சினால் தானே கறுத்திடுங்
கார மில்லாத யேமமுந் தானில்லை
பார முண்டானால் கப்பல் கவிழாது
பார மில்லையேல் தானே கவிழ்ந்திடும்
கோர மாக சரக்கில் உப்புப் புளி
கூட்டினாலெடை கொஞ்சமாய்க் கட்டிடு
வீர மிட்டாலே சுண்ணமு மாகுமாம்
வேதையாகவே தான்வீரங் கூட்டிடே 76

முத்தி யாகவே தான்ரவி தன்னொடே
மூல மாகவே நாற்ற மிகச் சேரில்
சத்ய மாகவே தானாக கரியதாஞ்
சத்து மேரவி தானாக மாட்டாது
புத்தி யாலே நீ கண்டு பிடித்திடி
போத மான கழுமுனை பாரடா
சித்தி யாகச் செலுத்தினாற் போலவே
சிக்கெனப் பிடிவாதத்தைக் கண்டுமே 77

துருசுசெம்புச் சிந்துரம்–வேறு

ஆதியான தானநீலன் ஐம்பது பலமெடு
அநாதியான காரநேர ஆடிநீ யுருக்கிடு
சோதியாகத் தானேரவி பத்துபலந் தானெடு
சூட்சமாக கெந்தியைகைத் தாழம்பாலை விட்டரை
நீதியாய ரவியுருக்கித் தான்கிராசந் தானிடு
நித்தமாய் தகடடித்து நீதமாய்ப் புகைநீரில்
வாதிபுகை தான்கடை நீரைவிட்டு மூன்றுநாள்
வைத்திடக் கரைந்துரவி நீலனொப்ப தாகுமே 78

வேறு

நீலன்புடை காரம்புகை நீர்கண்டிட எரிநீ
ஆலம்மரை யெடுவில்லையும் ரவிதன்னிலே யிடுநீ
கோலம்பெரி புடமிட்டெடு குலிசக்குகை தன்னில்
சாலம்பட வுருகும்படி யெனவேயெடு செம்பே. 79

அயமும்மல மெடுநீயரை வீரம்புகை விடுநீ
நயமும்மரை நாளிப்படி அரைநீகட மடைநீ
நயமும்மெரி கடமேல்தனி லேறும்வழி யடியில்
கயமும்கரை புகைநீர்தனி லடையிப்படி யெரியே 80

படிநீயெரி திரமஞ்சினில் புகைநீர்விடு அரைநேர்
துடிவாணிடு பவழநிறம் ரவிமுன்னிலே அங்கி
வடிமேலிடு ரவியிற்படுங் கஜமாபுட மிடுநீ
கொடியாம்ரவி போலாகுமாமெனவேயென வுரையே 81

வேறு

ஊணி யேமதி தன்னிலே யெட்டுக்கு
மொன்று இட்டிடி லேம மிரண்டிடு
பேணியே ஆணி ரண்டேகா லாகுமாம்
பேசப் போகுமோ யேமத்தை யென்சொல்வேன்
தோணி யப்பரை தானே நினைந்திடு
தோய்ந்த முத்தியை வாசி யிறுக்கிடு
சேணி லத்தினில் ஞானங்கள் பார்த்திடு
சித்தத் தில்மாயை தானே யொழித்திடே 82

வேறு

ஆழமே புணரிகட லுப்புநீரி லுப்படா
அநாதியான சூதந்தானே தானது வசப்படும்
வேழமே பெரியோர்தானும் வேதியருஞ் சாவரோ
வித்தக ரறிந்துரச பற்பம்வைக்க சித்தியாம்
தாழவே திரிந்தலைந்து சாஸ்திரங்கள் பொய்யென்பார்
சத்தசா கரமிருக்கத் தானலைய லாகுமோ
வாழிவாழி சூதமுண்ட பேர்களு மதிவெண்பா
வாசிபார்த்த பேர்களு மதியினிடம் வாழியே. 83

லிங்கரச பதங்கம்

வேறு

உப்பு நான்கிற்கு செங்கல்மா ஒன்றிடு
உன்னியே யடி சட்டியி லிட்டிடு
நப்ப மாகவே வன்னி ரசமிடு
நாடி யேமூடு சீலைமண் ணேழுசெய்
செப்பு வார்களே தானே யடுப்பினில்
சேர வைத்துமே பத்தெட்டுச் சாமமாம்

அப்புநேர் கமலாக்கினி தானெரி
ஆதியான பதங்கமு மாகுமே. 84

நாகக்கிண்ணியில் லிங்க ரசபதங்கம்

ஆகுமே லிங்கந் தான்பதங் கத்தையும்
அன்ப தாகப் பிரித்து எடுத்திடு
தாகுமே ஒரு நாற்பலந் தூக்கிடு
தக்கவே யின்னஞ் சேதியைக் கேளடா
பாகுசேர் அயக் கிண்ணத்தில் வைத்திடு
பார்த்திடில் நாகக் கிண்ணியை மூடியே
வாகு சுற்றிலும் சீலையைச் செய்திடு
வண்மையாகவே தானடுப் பேற்றிடே. 85

ஏற்றியே யிலுப் பெண்ணெய் திரிப்போடு
இன்பமாக வெரித்திடு முச்சாமம்
பார்த்துமே யெடு மேல்நாகக் கிண்ணியில்
பத்தி யேறியே தான்குரு வாயிடும்
சேர்த்துமே யெடு செம்புநூ றொன்றுக்கு
சேர்த்துமே வொன்றிடு ஆணிக்கு ஒக்குமாம்
காற்றுமே புடந் தன்னி லிறங்குமாம்
கார மாகுமாம் கண்டு பிடித்திடே. 86

துருசுச்செம்பு

துருசு காலெடை வீரமும் சேர்த்திடு
தூக்கி மெள்ளக் குகைதனி லிட்டுமேல்
வரிசை யாக வுருக்க ரவியதாம்
வாட்டித் தானடித் தான்நா டாகவே
உருசியாக ரவியெடை நாற்றமும்
உண்மையாக ரசபதங் கஞ்சேரு
நரிசை யாகவே கற்றாழம் பாலரை
நாடி மேலிடு தான்பட மூன்றுமே. 87

வேறு

மூன்றுபுட மிட்டேயெடு மேலேநிறங் கறுப்பாம்
ஊன்றுகடை நீர்விட்டிடு ஊரும்மது ஏகம்
கான்றுதிரு நாளாம்நீலம் காண அதைப் பீங்கான்
தோன்றும்உமி நெருப்பில்லினி சுகமாயதைக் காய்ச்சே88
காய்ச்சிக்குழம் பாகயெரி காம்மெடைசேரப்
பாய்ச்சுக்குகை தன்னில்லிடு பாகம்பட வுருக்க
மூச்சுப்பட ரவியாமது மூலம்பர மதியில்
வாச்சிப்படி யெட்டொன்றிடு மலைப்பாம் வயதேழே. 89

வெள்ளிவித்தை

காரம்மெடை பால்நேரிடை கள்ளியென அரைநேர்
பாரம்பட சாமம்மெடு பரிவானது வங்கம்

தூரம்படக் கிராசம்மிடு துடியாகவே யுடையும்
பாரம்பட எடைநேரிடு சாரம்மெடை சேரே 90

எடைசேரெடை அரைநேர்பது தருகுமரிச் சாற்றில்
படனால்திறம் சாரமதை சாய்த்து எடுகட்டு
எடைசேர்மதி எடைநேரிடு குணமாமதில் ரசமாம்
எடையீய்ந்திட வெள்ளையிடு வெகுமாமதி யாமே 91

ஆமின்னெடை யெருக்கின்படி பாலாலரை சாமந்
தாமின்னெடை வில்லைரவி காயவெரித் திடவே
வாமின்னெடை மூடியெரி வலுவாகவே யேறும்
ஓமின்னெடை யைந்தேதிற மெரிநேர்பட வெரியே 92

வேறு

எரிக்க விப்படி அஞ்சு தரமது
யேறி யேறி அடிதனில் நின்றிடும்
பருக்க வேயெடு வங்கம்தூர் தன்னிலே
பற்றியேயெடு என்றுமே யிட்டிடு
நரிக்க வங்கமும் தான்மதி வெள்ளியாம்
நாடியேயெடு விற்றுச் செலவுசெய்
பிரிக்க வாசிப் பிரியமாய்ப் பார்த்திடு
பேத மில்லை பிணக்கில்லை வெள்ளியே 93

எண்ணிறந்த விதமான நூல்தனி
லின்பமாய்க் கண்ணி னுண்மணி போலவே
நண்ணி னேன்மதி வெண்பா கழிநெடில்
நாடியே யிட்டு நூற்றுக்குள் தன்னிலே
புண்ணி யப்பெருஞ் சுண்ணங்கள் சிந்துரம்
புத்தி யுள்ளவர் கண்டு பிடிப்பவர்
பண்ணிய பாக மாகவே செய்பவர்
பாரிலே சுத்த சை தன்ய மாவரே. 94

ஆணி யேமுப்பு வெண்பாநூற் பாடினேன்
ஆதி யான புலத்தியர்க் காகவே
பேணி யேயொரு லட்சங் கிரந்தத்தில்
பேசி னேனது செப்பிலே யென்றுமே
தூணி லேமதி வெண்பாவில் தன்னிலே
தோற்ற வேமுப்புச் சுண்ணங்கள் சொல்லினேன்
ஊணிப் பார்த்தக்கால் பாகமுந் தோன்றுமே
வுற்றுப் பாரு மதிவெண்பா நூற்றிலே 95

சீனச்சுண்ணம் அதனால் தாரச்சுண்ணம்

வேறு

சீனம்ரண்டு தானெடுத்து சித்திபெற வூதிடு
மோனமாக நீறியடு மோரகோர நீறவே

கானமுதை வெண்கருவைக் காதலாக விட்டுமே
ஞானமாகத் தானரைத்து ஊதிடுநீ நீறதே. 96

வேறு

சீனஞ்சய நீறாயெடு வீரம்மிடு அரைநேர்
காரம்மரி நேராயிடு காரந்தனை அங்கி
வாரம்மெரி தாரம்மிடு வாகாபெருந் தாரம்
ஈனம்பெறு லோகந்தனி லிடுமாமென வேமம் 97

வேறு

குருவைப்பாரு குருவிலாப் போனாலோ
குருநூ லத்தனே மதிவெண்பா நூறிலே
திருவைப் பாரு ஒருவேதை செய்திடு
திட்ட மாகவே பாகமாய் வைத்திடு

கருவைப் பாரு கருகுரு மாகுமாம்
காட்டவே மதி புத்தியு மாகுமாம்
உருவைப் பாரு உருத்தெரி கண்ணது
உற்றுப் பாரு உறுதியாய்ச் செய்திடே 98

தங்கம் செய்வது தானே அருமையாம்
தாக்கிப் பார்த்திட மிகுதியும் வருவது
உங்கள் புத்தியினாலே மதிவெண்பா
வுற்றுப் பார்த்து அயச்செம்பு தானெடு
சங்க மாமதி தன்னிலே யிட்டிடு
சாற்று வீரேமம் தானாணி ஆகுமாம்
துங்க மாமத ஞானமுண் டாகுமே
தூக்கி யேவாசி யோகமும் பார்த்திடே 99

நொறுக்கு வெள்ளி

வேறு

மதியீரிடை காரியிடு மதியாகவே யூது
பதியேயெடு தகடாயடி யதில்மேலிடு கவசம்
நதியாவரிப் பாலைவிடு நாற்றமெடை அரைநேர்
விதியோ யெடு தகடிட்டிடு புடமஞ்சிடு போடே 100

போடுஎடு கரியாயெடு புகைநீர்விடு அரைநேர்
வாடுவில்லை ரவியிலிடு வளமானது புடமாம்
காடுகரி தனிலிட்டிடு சரியானதோர் காரம்
மாடுவிடு நேராகவே மயமாமென வுருக்கே 101

உருக்கியெடு மதிபோலவே யுண்மைத்தக டடிநீ
பெருக்கிநிற மாகக்கரும் பொன்னின்நிற மேழாம்
நருக்கிப்படி பழுக்கச்சுடு நயமாகவே நிறமாம்
பருக்கிப்படி வெள்ளிதனை பரிவாகவே செய்யே 102

வேறு

செய்ய வெள்ளியைச் சிராக விப்படி
சித்தியாகவே போட்டெடு வாதிகேள்
பையலுக்குச் சாயபோ நூலாகுமாம்
பத்தி யிப்படிப் போட்டால் புடத்துக்கு
மெய்ய வுப்புக்குக் காவிக்கும் நிற்குமாம்
மேன்மையாகவே வேதை முடியுமாம்
வைய கத்தினில் வாழ்வு மிகவரும்
வாகையீர் மதிசெம்பொடு தானிடே 103

வெண்பா

இப்படிக் கேயிட்ட வின்பவெள்ளி தானுருக்கி
முப்படிஅ யச்செம்பை முன்னிடுவாய்-அப்படியே
சேர்த்திடவே யேமம் சேருமெடை தான்ஹுத
மாத்தி திரமடர்க்கும் பார் 104

பாரீர் ரசவாதி பாகமதி வெள்ளியைத்தான்
சேரீ ரதன்பெருமை செப்பக்கேள்-வாரீர்நீ
ரெப்படியுந் தானொறுக்கி யீடுபடத் தானுருக்கி
மைப்படியு மேம வகை 105

வகையாகும் வாதமா மண்ணில்செட்டி கையில்
தொகையாகும் ஆணிக்குத் தோலா-பகையில்லை
ஒக்கவெடுப் பான்பொன்னை ஊதியே பார்த்திடுநீ
கைக்குள் வசப்படுவான் காண் 106

காணீ மடநெஞ்சே கைக்குள் ரசவாதம்
பேணியே சிக்கினால் பேறுண்டு-ஊணி
மனநிலைத்தால் வாதமாம் வாழ்ந்துண் டிருப்பா
மினமாக வேமமதைச் சேர் 107

சேருமதி வெண்பாவில் சேர்த்தாலோ தங்கமாம்
ஊரினீ யென்று முலையாதே-சாதகமாய்ச்
சூதமது கட்டிற் சுகமாகப் பொன்னுண்டு
பூத மதை அறிந்து பேசு 108

பேசுவார் வாதம்புரட்டா மதுவென்பார்
தொஷிகள்தாம் சொல்வார் துடியாக-வாசனை
யில்லாத பூப்போல வேங்கியே தானலைவார்
செல்லா தவரிடத்தில் சொல் 109

வழலைமுடிப் போமென்று வாய்வீணர் சொல்வார்
பழகவே முற்களங்கைப் பார்த்துத்-தழல்போ
லெடுத்து ரவிமதியி லின்பமாய்த் தாக்கி
அடுத்துமே யோக மறி 110

அறிந்துமே சத்துருவை அன்பாகத் தானறிந்து
பிறிந்துமே கொன்று பிழையார்க்கு-நரிந்து
எடுத்தால் ரவிதன்னை பின்ப மதியில்
கொடுத்தால் குருவாகும் கொள் 111

வாழிவாழி தானேமதி வெண்பா நூறும் வாழியே
யூழிகால மாயிருந்த யூகியோகி வழிகாண்
பாழிவாத சூதபஸ்பம் தன்னையுண்ட யோகியும்
ஆழியான நல்லவுப்பு ஆதிவெண்பா வாழியே 112

வேறு

சீனச் சுண்ணத்தி னால்வெடி யுப்புதான்
கான லாகக் கடுஞ்சுண்ண மாகுமாகும்
ஈன மாகவே தான்சரஞ் சுண்ணமாம்
ஆன நாகமுந் தான்கட்டும் பாருமே 113

முடிவாய் ரசத்துக்கு முக்கியமாய்ச் சட்டை
வடிவாக யேழங்கி தானுண்டு-துடியாய்ப்
புகைநீரை விட்டரைக்கப் போதரவாய்த் தானே
தொகையாகச் சட்டைகக்குஞ் சொல் 114

பித்தளைச் செம்பு

காக்கைப் பொன்னினைச் சேரு நிறுத்திடு
கட்டி யேதுணி தானே யுருட்டியே
தாக்கவே முழந் தானே புடமதாம்
தாக்கி யேடுயெடு தானே கறுப்புமாம்
பார்க்க வேபீங்கான் தன்னிலே யிட்டிடு
பாக மாகக் கடைநீரை விட்டுமே
தூக்க மாகவே பார்த்திட நீலனாம்
தொக்க வ.ாகக் கரையவே வைத்திடே. 115

வைத்து மேயுமி தானே நெருப்பினில்
வண்மையாகவே சுண்ட வெரித்திடு
நைத்துக் கல்வத்தில் நாறும்பூ விரண்டிடு
நாடி வில்லை ரவிதனில் காயவை
சித்து ஆகவே ஒடதி லிட்டுமே
சித்தி யேபெறத் தானே புடமிடக்
கைத்து மேலிடு காரமுங் காலிடு
கார மாக உருக்கிட்டுப் பாருமே 116

பஞ்சமித்திரமிவை யெனல்

பாரு மேரவி யாயிடு தானெடு
பத்தி யாகக் குகையதி லிட்டுமே
காரு மேபஞ்ச மித்திரஞ் சொல்லுவேன்
கார நல்லெண்ணெய் தேங்காயும் பாலுமாம்

வாரு மேயிலுப் பைப்பூவின் சார்விடு
வாகா ஆவினெய் தேனுமே கூட்டிடு
சாரு மேவகை தேனது ஒன்றிடு
சத்தியாக வெழுதிறஞ் சாய்த்திடே. 117

உருக்கிச் சாய்த்திட உற்றுச் சிகப்பதாம்
உண்மை யாமரவி யெல்லாமு மிப்படி
பெருக்கிச் சாய்க்கவே யெல்லாம் பலப்படும்
பேசப் போகுமோ தான் ரவிக்கூட்டத்தை
பருக்கித் தானே மதியெட்டுக் கொன்றிடு
பாகமாகப் பரியது நேரிடு
வருக்க வேஆணிக் கெட்டரை யாகுமாம்
வாகா வுப்புக்குக் காவிக் கிறங்குமே 118

இறங்கு கின்ற பரியதை வித்துமே
யின்பமாகச் செலவுமே செய்திடு
பாங்கு மேல்நாசி நான்கையுங் கட்டிடு
பார்த்து மேசுழி வாசலை நோக்கிடு
தூங்கு மேஊமை தன்னை யெழுத்துடன்
தூக்கியே உவ்வை தனனையு மிட்டிடு
சாங்கு மேயெட்டை நான்குடன் சேர்த்திடு
சாத்தி ரத்தை நீ சோதித் தெடுத்திடே 119

வாழி நூல்மதி வெண்பாவும் வாழிகாண்
வாழி மாமுனி மாதவர் வாழிகாண்
காழி காணும் புலத்தியர் வாழிகாண்
காத லான விரதமும் வாழிகாண்
தாழி யானதோ ரேமமும் வாழிகாண்
தந்த மாம்வெடி கல்லுப்பு வாழிகாண்
தோழி யானதோர் சூதமு முண்டவர்
தொன்மை யாகவே வாழியே 120

மதிவெண்பா
முற்றிற்று

ஓம் சிவாய நம

இணைப்பு-1

வாதாங்க தீக்ஷைவிதி 300

உரைக்குறிப்புகள் எழுதியவர்
பி.துளசிகுமார்

காப்பு

1. பராசக்தியாகிய தாயின் பாதமலர்க் கமலங்களை வணங்கியும் சிவன் மகனாகிய வினாயகப் பெருமான் பாதங்களில் சிரம் தாழ்த்தி வணங்கியும் இந்த வாதாங்க தீட்சைவிதி என்ற நூலைச் சுருக்கமாக சொல்வேன்.

2. சிவபெருமான் உமையன்னைக்குக் கூற, உமையவள் அஸ்வினி தேவர்க்கும், அவர் சித்தர்களில் முதல்வராகிய நந்திக்கும், நந்தி தன்வந்திரிக்கும், தன்வந்திரி அகத்தியர்க்கும், அகத்தியர் புலத்தியர்க்கும், புலத்தியர் தேரையர்க்கும் சொல்ல, தேரையர் மகிழ்வுடன் யூகிக்கு சொன்னார்.

3.யூகிமுனியாகிய யான், உலகத்தோர் பிழைக்க வேண்டி இந்த ஆயுள் வேதத்தை, வெளிப்படையாக சொன்னேன்.

4. களங்கு முதல் செந்தூரம், மெழுகு, புகைநீர், பொன்வித்தை, தைலம், எண்ணெய் போன்றவற்றையும் அவை செய்யும் முறைகளையும் இந்த நூலில் கூறியுள்ளேன்.

குறிப்பு:-

களங்கு-பாஷாணம் மற்றும் பல சரக்குகளை கொண்டு தயாரிக்கப்படும் கட்டாகும்.

வேதை-பாஷாணம், சரக்கு போன்றவற்றால் ஒரு உலோகத்தை மற்றொரு உலோகமாக மாற்றுவது.

தாமம்-புகைநீர், (திராவகம்) செயநீர்.

5-6-7 நந்நீசர் சொன்னதொரு சவுக்காரக் குழம்புடன் புனுகு-(புனுகு பூனையிலிருந்து எடுக்கப்படும் ஒருவித வாசனை பொருள்) சவ்வீரம், காரம் இவைகளைச் சேர்த்து தெளிவிறுத்துக் கொண்டு இதனுடன் கல்லுப்புச் சேர்த்துக் கல்வத்தில் அரைத்துப் புடம்போட்டு எடுக்க நீறி சுண்ணமாகும். இது மிகவும் காரம் மிகுந்ததாகும். இச்சுண்ணத்துடன் நவசாரம் சேர்க்க

நீர்த்து திரவமாகும். இந்த திரவத்தில் எல்லா சரக்குகளும் கட்டும். களங்கு, சிங்கி, சிந்தூரம், குளிகை எல்லாம் இதைக் கொண்டு தயாரிக்கலாம். உலோகங்களையும் வேதையாக்கலாம். (வேதை: ஒரு உலோகத்தை வேறு உலோகமாக்குதல்)

8. மற்றொரு களங்கு சொல்லுகிறேன் இது எளிதாகும். இரும்புத்தூள் பலம் பத்து (350 கிராம்) எடுத்துக் கொண்டு எலுமிச்சம் பழச்சாற்றில் மூன்று தினங்கள் நன்கு ஊற வைத்து வடித்துக் கொள்ள வேண்டும்.

9-10. துருசு 350 கிராம், நாறும்பூ (கந்தகம்) 350 கிராம் இவைகளை கல்வத்தில் போட்டு முதலில் இரும்பில் ஊறிய எலுமிச்சம்பழ சாற்றில் அரைத்து வில்லை செய்து காயவைத்து உலர்த்தி மேலும் கிளிஞ்சிற் சுண்ணம், கல்லுப்பு இவைகள் இரண்டையும் அரைத்து வில்லைக்கு கவசம் செய்து ஜெகபுடமாய் போட்டு எடுக்க- (ஆயிரம் எரு கொண்டு போடும் புடம்) கருப்பாக இருக்கும் அதனை வெண்காரம் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து மீண்டும் வில்லை செய்து காயவைத்துப் புடம் போட்டு எடுக்க கருத்திருக்கும் வில்லையை எடுத்துப் பத்திரப்படுத்தவும்.

11. அடுத்து வெடியுப்பு திராவகத்தைச் சொல்லுகிறேன். வெடியுப்பு 350 கிராம், சீனம் (படிகாரம்)875 கிராம் இவைகளைப் பொடி செய்து திராகவும் வடிக்கும் சட்டியில் போட்டு மேல்சட்டி மூடி அடுப்பேற்றி எரிக்கவும்.

12. அப்படி எரிக்கும்போது முதலில் வருகின்ற புகைநீர் வெள்ளையாக இருக்கும். அதை விட்டுவிட்டுப் பிறகு மஞ்சளாக வரும் புகைநீரையும் விட்டுவிட்டுக் கடைசியில் வரும் நல்ல மஞ்சள் நிறமுடைய புகைநீரை குப்பியில் அடைத்து வைத்துக் கொள்வாய்.

13. முன்பு எடுத்து வைத்துள்ள வில்லைகளை மேற்கண்ட புகை நீரால் அரைத்து வில்லை செய்து சூரிய வெய்யிலில் உலர விடவும். கிளிஞ்சில் சுண்ணத்தையும், கல்லுப்பையும் அரைத்து வில்லைக்குள் கவசம் செய்து ஆயிரம் எருகொண்டு புடமிட வேண்டும். புடமிட்டபின் குகையில் வைத்து உருக்கிப் பார்க்க நல்ல செம்பாகும்.

14. இந்தச் செம்பு பொன்னின் பளபளப்பையும், நிறத்தையும் போன்று இருக்கும். இச்செம்பினால் பொன் செய்யலாகும், பற்பம் செய்து காயசித்தி செய்து கொள்ளலாம், உலக வசியமாம்.

15. இந்த செம்பின் பெருமையை இறைவனாலும் கூற இயலாது. சித்தர்களும் இந்த வகை செம்பு செய்யும் முறையை மறைத்து வைத்தனர். இதற்கு அயச்செம்பு என்று பெயராகும்.

16. இவ்வகை செம்பினால் வெள்ளி மாற்று காணும். (தங்கமாகும்) இம்முறை விதம் கிடைக்கின் குபேர சம்பத்தும் யோகமும் உண்டாகும். அரசனுக்கு நிகராக வாழ்வு உண்டாகும்.

17. இரும்பைத் தூளாகப் பொடித்துச் சுத்தி செய்து துருசு, கெந்தி (கந்தகம்) இவைகள் சேர்த்தரைத்துப் புடமிட கருப்பு நிறமாக காணும். அதில் செம்பு சேர்த்து உருக்க அயச் செம்பாகும்.

18. சிவயோக வழியில் ஞானத்தைச் செலுத்தி இம்முறையைச் செய்தல் வேண்டும். சரியாக இவ்வித முறையைச் செய்யாமல் பொய்யாய் போய் விட்டது என்பார்கள் உலகத்தோர்கள். சரியாக இம்முறை கண்டோர்க்கு துயரம் இல்லை. அயச் செம்பைக் கொண்டு சிந்தூரஞ் செய்வாய்.

19. அயச்செம்பினால் சித்திபல அடையலாகும், சிவயோகம் கூடும். காயசித்தி ஆகும். யூகிமுனியின் கருணையாலே ருக், யஜுர், சாம, அதர்வண வேதத்தைபோல், அதில் சொன்ன நீதியை போல் இந்நூலின் முறைமையைப் பார்த்திட சித்தியாம்.

20. அயச்செம்பு பலமும் பத்து (350 கிராம்) சுத்தித்த தங்கம் 350 கிராம் இவை இரண்டையும் உருக்கிக் கொண்டு தகடாகத் தட்டி கந்தகத்துடன் செயநீரால் அரைத்து தகடின்மேல் பூசி புடமிட வேண்டும். இவ்வாறாக ஐந்து முறை புடமிட வேண்டும்.

21. புடமிட நொறுங்கி தூளாய்போய் இஃதுகருநிறமாய் இருக்கும். கருப்பாக இருக்கின்றாதானாலும் இது முதன்மையும், முக்கிய மானதுமாகும். வெள்ளி 350 கிராம் தகடாகச் செய்து முன்புசெய்த செயநீரால் மூன்று நாட்கள் ஊறப் போட்டு உருக்கவும்.

22. உருக்கி பார்க்க வெள்ளி கசடு அற்று தூய்மையானதாகும். இருபதுக்-கொன்று மேற்கண்ட கருநிற குருஈய (கொடுத்துருக்க) ஏழு மாற்று தங்கமாகும். அதை உன் உயிர் வாழ்க்கைக்கு ஜீவனத்திற்கு பயன்படுத்திக் கொள். சிவவாழ்க்கையில் இருந்து பல தேசங்களைச் சுற்றிப் பார்த்து ஞானத்தை அடைவாய்.

23. குளிகை-சித்தர்கள் பறப்பதற்கு கவுனமணி பயன்படுத்துவர். உப்புக்கும், காவிக்கும்-(காவிக்கல் உலோக சுத்தி செய்வது) உப்பும் காவிக்கல்லும் சேர்த்து சுத்திசெய்து புடமிட தங்கமாகும். இவ்விஷய மறிந்தோர் ஞானியாவான். மேற்கண்ட செம்புவித்தை அறிந்தோன் யோகிவானாம். வாதவித்தை தெரிந்தோனும் இம்முறையை அறிய மாட்டான்.

24. இரும்புப் பொடியை எலுமிச்சம் சாற்றில் ஊற வைத்துச் சாற்றை வடித்து கழுவி புடமிட செம்புமாகும். செம்பை வெள்ளியில் இட்டு உருக்கி ஜீவனம் செய்துக் கொள்.

25. அதற்கு பின்பு ஞானத்தைத் தேடு. உடல் சித்தியாகும். அதற்கு இந்த நூலினைப் பார். சகலமும் சித்தியாக இந்நூலில் ரசவாதம் (பாதரசத்தால் செய்யப்படும் வாதம்) நிறைய உண்டு. இதன் பெருமை உயர்ந்ததாகும்.

26. தங்கமென்ற வித்தை செய்ய அயம் என்ற இரும்பை பார். பொன் வித்தைக்கு கெந்தகம் தாய்போல் முக்கியமானது. துருசினால் வெள்ளி சுத்தியாகும். பொன்னாகும். செயநீரால் வாதவகை அனைத்தும் செய்யலாகும். வாதவகை செய்து பார்.

27. தாளக செம்பு செய்முறை சொல்வேன் (தாளகம்-இதை அரிதாரம் என்றும் கூறுவர். இது ஒரு பாடாணமாகும். இயற்கையில் கிடைக்கும்) செம்பு 350 கிராம். இதை சுத்தி செய்யும் முறையாவது, வெடியுப்பு, சீனம்கூட்டி கழுதையின் நீரினாலே அரைத்துக் குழம்புபோல் செய்து செம்புதனைத் தகடு செய்து தகடை மேற்கண்ட குழம்பில் ஏழு தரம் காய்ச்சித் தோய்த்தெடுக்க வேண்டும்.

28. செம்பு தூளாகிப் போகும். செம்பைச் சுத்தி செய்தல் நன்மையாகும். இந்தச் செம்பை பத்து பலம் (350 கிராம்) எடுத்து உருக்கு குகையில் வைத்து உருக்கி, தாளகம் 350 கிராம் எடுத்து சுக்கான் நீரில் வைத்து எரித்தால் சிவந்து காணும்.

29. அதை உடைத்துத் தூளாக்கிக் கொண்டு முன்பு உருக்கிய உருக்கு குகையில் அனைத்தையும் சேர்த்துருக்க செம்பு பளபளப்பாக வெண்கலம் போன்று காணும். உடைத்தால் உடைந்து விடும். உடைந்த செம்பைக் கல்வத்தில் வைத்து செயநீரால் அரைத்திடுவாய்.

30. அரைத்து வில்லைகள் செய்து காயவைத்து கஜபுடத்தில் (1000 எரு) போட்டு எடுத்துப் பார்க்க களங்காகும். இதை வெண்காரம்-(இது வெண்மையான, காரமான உப்பாகும். இது திபெத், நேபாளம் போன்ற ஏரிகளில் நீர் வற்றினால் உப்பு உறைந்து கிடைக்கிறது) இட்டு உருக்கிப் பார்க்க முருக்கம் பூபோல் காணும். இதன் பெருமை உயர்வானது.

31. இந்த முறை செய்த செம்பை சித்தர்கள் பலரும் பார்த்து பிரமித்தனர். ரிஷிகளும், தேவர்களும் பிரமித்தனர். இதனால் பலவிதமான வேதைகள் செய்யலாகும். தாளகத்தின் செயல்முறையை இந்த வாதாங்க தீட்சை முன்னூறில் உரைத்தேனே. மேற்கண்ட முறைக்கு தாளக செம்பு என்று பேராகும்.

32. தாளக செம்பின் உடன் நல்ல தங்கத்தைச் சேர்த்து உருக்கி தகடாகத் தட்டிக் கொண்டு கெந்தகத்தை அரைத்துத் தகட்டிற்குத் தடவி நான்கு முறை புடம் போட நொருங்கித் தூளாகும், இதன் நிறம் கருப்பாயிருக்கும்.

33. கருப்பான இவைகளை எடுத்து மயங்காமல், கருப்பா இருக்குதென்று நினைக்காமல் இதில் வெள்ளியிட்டு உருக்கிப் பார்க்க தங்கமாகும். இந்த தீட்சைவிதி முன்னூறில் வாதாங்க வழியினை பிறர் அறியா வண்ணம் மறைத்து கண்டு தேறே.

34. தாளகத்தால் வாதம் கோடி செய்யலாம். கெந்தகத்தாலும் வாதம் கோடி செய்யலாகும். செயநீரால் வாத வகை கோடி செய்யலாம்.

சவுக்காரத்தாலே பற்பங்கள், செந்தூரம், திராவகம் கோடி வகை செய்யலாகும். துருசினால் அதைவிட பன்மடங்கு செய்யலாம். முறையாக செய்திட கைகூடும்.

35. முறையாக கைபாகம் செய்திட சித்தியாகும் என்று யூகிமுனி சொன்னார். உலகில் வாத வகை செய்கின்றவர்கள் அறிய மாட்டார்கள். கந்தகத்தை வைத்து வாதம் பார்த்து சரி வரவில்லையென எடுத்துப் போடுவார்கள். முறையோடு செம்பைக் கொண்டு செய்யாதவர்க்கு கைகூடாது.

36. முறையுடன் செய்திட தங்கமாகும். இல்லையேல் கூடாது, கூடாவிடில் வாத முறையும் இல்லை. மனம் நொந்து அலைந்திடுவார் வகை அறியா வாதியர்கள். முழுமையான வார்த்தை வகை கேட்டு செய்தவர்கள் கோடியாம், இதையறியாமல் வழிகெட்டு அலைவார்கள். [illegible] கொண்டு சொல்லவில்லை கருத்தூன்றிப் பார்க்க வேண்டும், உல[illegible]ம கருத்[illegible] இறை அருளுடையோன் பார்ப்பான்.

37. இம்முறை வாத வகை பாராமல், வெள்ளிதனில் ஈயத்தைச் சேர்த்து ஊதி ஊதி சரிவராமல் இந்த வகை பாதைதான் சரியில்லை என்றுமே வர்தம் பொய் என்று நிலையில்லாதவர்கள் கூறுவார்கள்.

செம்பு கெந்தியை கிராசம் (இது நிறுத்தளவையாகும், 2 கோலம் 1 கிராம்) எடை செம்பிலிட்டால் செம்பு நொறுங்கிப் பற்பம் போலாகும்.

38. நொறுங்கிய செம்பை புகைநீரால் அரைத்து வில்லை செய்து சூரிய வெய்யிலில் காய வைத்து உலர்ந்த பின் புடம்போட்டு உருக்க சிவந்த செம்பாக இருக்கும். இந்தச் செம்பை வெள்ளியில் கொடுத்து உருக்கப் பொன்னாகும்.

39. விவரமுடன் இந்த வாதாங்க முன்னூரை பார்த்தால் இதனுள்ளே தங்கம் செய்முறை அதிகமாக இருக்கும். நம்பிக்கையுடன் பார்த்தால் இந்நூலின் கரு விளங்கும். வீணாக ஏதேனும் சொல்வதினால் லாபம் ஒன்றும் இல்லை. உருக்கு முறை அறிந்தால் வாதியாவான். கருத்து வைத்து பார்க்காதவன் வாத வகையை காண மாட்டான்.

40. வாதம் கைகூடி வருவது கடினமான ஒன்று. இறைவன் மீதும் கலைகள் மீதும் பக்தி உள்ள மனிதர்க்கு வழி தோன்றும். தீயவர்களுக்கு அறிவு மயங்கி ஒன்றும் புரியாது. அவர்கள் வாதம் என்பதெல்லாம் பொய் என்று சொல்வார்கள். கருத்தும் பக்தியும் உள்ளவர்களுக்கு அறிவுரையும் இந்த தாளக செம்பு செய்வகையும் சொல்லு.

41. செம்பு இல்லாத வாதம் பொய்யாகி விடும், சவுக்காத்தை விட்டு விட்டு வாதம் பார்த்தால் பற்பம், சுண்ணம் போன்ற நீற்றினங்கள் செய்ய முடியாது. துருசை விட்டால் வாதம் வராது என்பதை அறிந்து கொள்.

42-43. கல்லுப்பு இல்லாமல் எந்த சரக்கினையும் காட்ட முடியாது, கந்தகத்தை விட்டாலும் வாதம் செய்ய முடியாமல் போகும். வாதம் செய்ய மனஉறுதி வேண்டும். துருசு, செம்பு இவைகள் இல்லாமல் தங்கம் செய்ப இயலாது. துருசு இல்லா உருக்கினத்தை ஊர் எல்லையில் கொண்டு போய் போட்டுவிடு. களங்கு செய்யும்போது தங்கம் சேர்க்க வேண்டும்.

சிந்தூரம் செய்யாவிடில் காயசித்தி-(காயமென்ற உடல் அழியாத சித்தி) ஆகாது. இவை அனைத்தும் முறையோடு செய்ய இந்த யூகிமுனி வாதாங்க முன்னூறை பார்ப்பாய்.

44. திராவகம், செயநீர் இவைகள் இல்லாமல் களங்கு செய்தால் சரியாக வராது. துருசு இல்லாமலும் களங்கு வகைகள் செய்யாதே. அதற்கு வலிமை இல்லை.

சரக்குகளைக் கட்ட-(சரக்குகளைப் பதமாக்குதல், இறுக வைத்தல்) உப்பினம் இல்லை என்றால் கட்ட முடியாது. இது போன்ற சரக்குகளை வாசலுக்கு வெளியே எடுத்து சென்று போட்டுவிடு. வாதம் செய்யும்போது பக்தி வேண்டும். இல்லை என்றால் கைகூடாது.

45. வெள்ளியுடன் வங்கத்தை (ஈயம்) உருக்கி எடுத்தால் கருப்பான வெள்ளியாக தோன்றும். அதை திராவகத்தில் போட்டால் கசடற்ற செம்பாகும். துருசுபோல் இருக்கும்.

46. மேற்கண்ட வெள்ளியை வெண்காரம் கொடுத்து உருக்க உருகித் தூய்மையாக இருக்கும். இதுவே வாத வகைகள் செய்கின்ற முறையாகும்.

47. களங்கு சரியாகச் செய்துவிட்டால் களங்குடன் செம்பைச் சேர்த்து வெள்ளியில் உருக்கிப் பார். இரண்டும் ஒன்றாகி கலந்து உருகி பொன்னாகும், எல்லாம் பலிதமாம்.

48. ஈயம்,செம்பை, வெள்ளியில் சேர்த்து உருக்கினால் கலக்காமல் விலகி சிதறி ஓடும். அப்போது வாதம் செய்ய முடியாது. தங்கம் செய்யவும் இயலாது, வாதம் என்பது பொய்யாகிவிடும்.

49. வகையாக, முறையோடு வாதம் செய்ய வழி சொல்கிறேன், கவனித்துப் பார்த்திடு. நம் இஷ்டப்படி வாதம் செய்ய வழிமுறை உண்டு. நல்ல துருசை உருக்கினத்துடன் சேர்த்து வாதம் பார்த்திட கூடிவரும். உன் கவலைகள் விலகும். லாபமும் வெற்றியுமாகும்.

50. வகையாகச் செய்வதற்குச் சொல்கிறேன் கவனித்துப் பார். முறையான களங்குதனைச் செய்து கொண்டு செம்பினை செய்து, பின்பு பொன் செய்வாய். செம்புதான் முதலாகும். களங்கு முடிவுமாகும். அனைத்து விஷயமறிந்து வழியைப் பார்த்து முடித்தால் எல்லாம் சரியாகும்.

51. இரும்புப் பொடி 350 கிராம் கல்வத்தில் போட்டு கௌரி-(பாடாணம்)

உடன் சேர்த்து உருக்கிப் பார்க்க, உருகி வெள்ளி மணியைப் போல தோன்றும். அதற்கிடை துருசு செம்பு சேர்த்து உடைத்து உருக்கிடுவாய்.

52. ஐந்து முறை இப்படி உருக்கிப் பின்பு அதை உடைத்து திராவகத்தால் அரைத்து வில்லைகள் செய்து இரண்டு சாம நேரம் அரைத்து மீண்டும் வில்லை செய்து காய வைத்து பெரியபுடம் (கஜபுடம் 1000 எரு) கொண்டு போட்டெடுத்து வெண்காரமிட்டு உருக்கிட தூய்மையான செம்புமாகும்.

53. மேற்கண்ட முறைப்படிச் செய்த செம்பானது தங்கம் போன்று பளபளப்போடு மின்னும். வெள்ளியிலே எட்டு பாகத்திற்கு ஒரு பாகம் போட்டு உருக்க ஏழு மாற்று தங்கமாகும்.

புடம் போட்டால் நன்கு புடமாகும். இதே போன்று சகலவிதமான செய்முறைகள் செய்யலாம்.

54. இரும்பினாலும், புகைநீராலும் செம்புதனை செய்யலாகும் முறையாக. இரும்பு இல்லாத வாதம் இல்லை. பாக்கினால் எப்படி பல் சிவக்குமோ அப்படியே இவ் வேதை மார்கம் சரியாக செய்திடில் சித்தியாம்.

55. கைகூட வேண்டும் என்றால் இரும்பைக் கொண்டு செய். வெற்றியாகும், உறுதியாகும். செயல் முடிக்க வேண்டுமென்றால் முக்கியமானதை பார், முடிந்த வரையில், வாத வகையில் களங்காக செய்யப் பார். ஞானத்தைத் தேடிப் பார். தியானம், உடல் சித்தி செய்துமே அறிவுடையோனாக உலகில் வாதத்தைப் புகழ்ந்து வாழ்வாய்.

56. புகழ்ந்து வாதவகை செய்து பார். அறிவுடன் பொன்னை விற்று செலவு செய்திடு. பொன் இல்லாமல் போனால் வெள்ளி செய்யும் வித்தை ஆழமாகப் பார்த்திடு. ஞானம் உடனே உண்டாகும். அலசி ஆராய்ந்து பார்க்க எல்லாம் சித்தியாகும்.

57. இந்த தீட்சை விதி நூலில் சவுக்காரமும் களங்குஞ் சொன்னேன். சவுக்கார (வைப்புசரக்கு) குழம்பு வைத்து உப்பை திராவகமாக்க சொன்னேன். கலக்கமடையாமல் இவைகளைப் பார்த்து முயற்சித்து தேறு.

58. சவுக்கார குழம்பினால் பலவகையான வாதவித்தை செய்யலாகும். இவ்வித்தை முறை தெரிந்து கொண்டால் உலகத்தில் சித்தர்கள் போல் வாழ்வீர்கள். யூகிமுனியாகிய நான் சொல்லிவிட்டேன் இந்நூலில் வாத முறை வெற்றிக் காண.

59. கந்தக பற்பம் செய்வதைக் கூறுகிறேன் வாதாங்க நூலில். கந்தகம் 350 கிராம் எடுத்துக் கொண்டு எருக்கம் இலையில் வரும் பாலில் அதை மூழ்கும்படி எட்டுநாள் போட்டு வைக்க வேண்டும். எருக்கம் பாலைக் கெந்தசம் உறிஞ்சி விடும். அப்போது அது வெண்மையாக காணும்.

60. வெள்ளை நிறமான இந்தத் கெந்தகம் மடிந்து போகும்- (வாதம்

செய்ய தகுதியாக) கந்தகத்துக்கு எடை சீனம்- (வைப்பு சரக்கு படிகாரம்) சேர்த்து கவசம்செய்து-(சரக்கை உள்வைத்து மூடுவது) பெரிய புடம்போட கந்தகம் பற்பமாகும். பற்பத்தில் சௌக்காரத்தை இரண்டு ஜாமம் கல்வத்தில் போட்டு அரைக்கவும்.

61. அரைத்து வில்லை செய்து சூரிய வெய்யிலில் காய வைக்கவும். பின்பு சுந்து அண்ண குகையில்-(பஞ்ச சுண்ண குகை என்பது நண்டு,நத்தை, சங்கு, சிப்பி, முட்டைஓடு இவை ஐந்தும் கல்வத்திலிட்டு எருக்கம்பால் தன்னால் அரைத்து வில்லைகள் செய்து காயவைத்து அதை புடத்தில் போட்டு, சுண்ணாம்பைக் கல்வத்தில் போட்டு முட்டையின் வெண்கருவும், எருக்கம் பாலும், கல் சுண்ணாம்பு நீரும் விட்டு அரைத்து குகையின் மேல் சில்லு செய்து-(சிறுசிறு துவாரவிட்டு) இதில் வைத்து புடத்தைப் போடவும்.) புடம் போட கந்தகம் கடும் சுண்ணமாகும். பற்பத்தை மீண்டும் கல்வத்தில் போட்டு சவுக்கார குழம்பை விட்டு அரைத்து வில்லை செய்து கொள்.

62. ஐந்து முறை இம்மாதிரி செய்ய தூய்மையான கந்தகம் கடுஞ் சுண்ணமாகும். கந்தகம் பற்பமானால் இரசம் பக்குவப்படும்-(பாதரசம்). இரசத்திற்கு அதே எடை கந்தக பற்பத்தைச் சேர்த்துத் திராவகத்தால் அரைத்து வில்லை செய்து புடம் போட ரச பற்பமாகும்.

63. ரசம் பற்பமானால் செம்பு தங்கமாகும். பறக்கும் சித்தி உண்டாகும். வாதவகைகளை நாம் நினைத்தபடி செய்யலாகும். இந்த இரச பற்பத்தால் பொன்னாகும், தங்கமாகும் அறிந்துகொள்.

64. கந்தக சுண்ணத்தை எடுத்து இதனுடன் செம்புச் சேர்த்து உருக்க தங்கமாகும். இதில் செம்பு நூறு பங்கும் பற்பம் ஒரு பங்கும் இருக்க வேண்டும். எல்லா வகைகளையும் இந்த கெந்தக பற்பததால் செய்யலாகும். சித்தர்கள் நடராஜர் சிலை செய்ததும் இந்த முறையே ஆகும். இதன் பெருமையை வாயால் சொல்ல முடியாது.

65. இந்த கந்தகத்தின் பெருமையை முனிவர்கள், சித்தர்கள் இவர்களாலும் சொல்ல முடியாததாகும். உலகம் முழுவதும் சித்தாய் போகும் என்ற உண்மையை மறைத்து வைத்தனர். வானுலகும் சொல்ல இயலாத இந்த கந்தகத்தின் பெருமையைப் பண்புள்ள யூகிமுனி சொல்லி விட்டார்.

66. யூகிமுனி இந்த வகையை ஆராய்ந்து அறிந்தார். துருசுடன் கந்தகத்தைச் சேர்த்தால் வெண்கலம் போன்று காணும். வெண்கலத்தைச் செம்பாகச் செய்ய தெரியவில்லை என்றால் வாதம் பொய்யாகி போகும். வழி அறிந்தால் வாதம் கூடும்.

67. வாதமுறை சரியாகச் செய்தவற்கு செம்பாகும். செம்புடன் கந்தகம்

சேரும்போது வெண்கலம் போல் தோன்றும் இந்தச் செம்பை வெள்ளியில் கொடுத்து உருக்க பொன்னாகும். ரச கந்தக சுண்ணம் சேர்க்க தங்கமாம்.

68. கந்தக செம்பை வகை வழியோடு பார்த்தால் தங்கம் தோன்றும். இது ஆயிரத்து எட்டு மாற்று தங்கமாகும் புடம்போட எளிதாகக் கைகூடும். இந்த வேதைமுறை உண்மையானதாகும். இந்த தீட்சை விதியில் பதமாக வாதம் பார்க்க வழிமுறைகள் சொல்லிவிட்டேன். உண்மை பொருள் அறிந்தவர்க்கு வாதமாம்.

69. மேற்கொண்டு விளக்கம் காண வாத நூல்களாகிய மதிசிந்தாமணி, வாதகாண்டம் இரண்டு, ஞான உலா, ஞானகும்மி, பள்ளு போன்ற நூல்களில் வாதவகைகள் அனேகம் உள்ளது.

70. தாளக செம்பு சொல்கிறேன், தாளகம்-(பாஷாணம்) 350 கிராம் எடுத்து கற்சுண்ணாம்பு நீரில் மூன்று நாட்கள் ஊற வைத்து எடுத்துப் பார்க்க வெண்மையாய் சுத்தியாகி காணும்.

குறிப்பு-தாளகம் சுண்ணாம்புநீர், கோமயம், காடி இவைகளில் சுத்தியாகும்.

71. வெள்ளைநிறத் தாளகத்தைச் சீனச் சுண்ணம் எடுத்துக் கொண்டு கவசம் செய்ய வேண்டும். பிறகு காய வைத்துப் புடம்போட்டு எடுக்க பற்பமாகும். மீண்டும் பற்பத்தைக் கல்வத்தில் போட்டு சவுக்கார குழம்பினால் அரைக்கவும். பின்பு அதை வில்லை செய்து உலர வைக்கவும்.

72. வில்லைக்கு மேலும் சீனச் சுண்ணத்தாலே கவசம் செய்து புடம் போட்டு எடுக்க தாளக சுண்ணமாகும். இந்த தாளக சுண்ணத்திற்கு இணை எதுவுமில்லை. இந்த சுண்ணத்தையும், ரசபற்பத்தையும் சேர்த்து சவுக்கார குழம்பில் அரைக்கவும்.

73. சவுக்கார குழம்பினால் ஐந்துமுறை அரைத்துப் பார்த்தால் கட்டிவிடும். அதை செம்பு உருக்கி நூறு பாகத்தில் ஒன்று போட ஏமமாகும். (தங்கம்) இத்தங்கம் உப்புக்கும் காவிக்கும்-(காவிக்கல்) புடம் போட பற்பமாகும்.

74. இந்தப் பொன்னின் உயர்வை சிவனாலும் கூற இயலாது. தாளகத்தினால் செய்யும் வாதவகையை வாயால் கூறவும் இயலாது. கிடைக்காத இந்தப் பொன்னுக்கு மாற்றம் இல்லை, அழிவு இல்லை என்று அகத்தியர் சொன்ன வார்த்தை. இதை நான் கண்டு கூறினேன்.

75. நூல்கள் யாவும் உண்மையாக இல்லை என்று இந்த வாதாங்க தீட்சை விதியில் நல்ல முறையில் சொல்லி விட்டேன். இதை நல்லபடியாக பார்த்து வாதாங்கம் செய்வாய். கவனத்தோடு வாதம் பார்த்தால் உடனே பொன்னாகும். அறிந்து செய்தால் கிடைக்காத சித்திகளும் கூடி வரும்.

76. கந்தகம் இல்லாவிடில் பொன் வாதம் சித்தி ஆகாது. தாளகம்

இல்லாவிடில் தங்கம் என்ற வாதம் இல்லாமையாகி விடும். தங்கம் இல்லாவிடில் பொன் இல்லை வீணாய் போகும். காட்டில்தான் போட வேண்டும். பாஷாணத்தை விட்டு வாதம் பார்த்தால் வெள்ளி வித்தை பலன்தராது ஆராய்ந்து பார்.

77. வாதாங்க வகைகளில் செம்பை முறையாகச் செய்து பார்க்க பலன் கிடைக்கும். தாரத்தை-(தாளகம்-அரிதாரம்) இப்படியே செய்து பார்க்க வேண்டும். தெரியாத வாதவகை செய்வோர்க்கு தெரிந்துவிடும். செயநீர் இல்லாத வேதை வகை பயனற்று போய்விடும்.

78. பயனற்று போகாமல், மனம் கெட்டு அலையாமல் சவுக்காரத்தை வைத்து வாதம் பார். கந்தகத்தைப் பற்பமாக்கி வாதம் பார். தாளகத்தால் முறையாக செய்து பார்க்க வாதம் கை கூடும்.

79. சவுக்காரம் இல்லாத பற்ப வகைகளை உலோகங்களில் சேர்த்து உருக்கினால் உயர்ந்த உலோகமாக மாறாது. அதே போன்று தங்கம் சேர்க்காத களங்கு வகைகளை மட்டம் என்று கூற முடியாது.

உபரசங்கள் இல்லாத செம்பு வாதத்திற்கு பயனில்லை வழிவகை தெரியாத வாதமும் என்றைக்கும் பலிக்காது.

குறிப்பு-உபரசங்கள் என்ன என்ன என்பதை, உப ரசம் என்ற பகுதியில் இந்நூலில் காண்க.

80. இன்னும் ஒரு வேதை வகை சொல்கிறேன், இரும்பு பலம் ஒன்று (35 கிராம்), துருசு 350 கிராம், கந்தகம் 105 கிராம் இவைகள் மூன்றையும் கல்வத்தில் போட்டு அரைத்து மீண்டும் திராவகத்தில் அரைக்க வேண்டும். பின்பு உருண்டைச் செய்து சூரிய வெய்யிலில் காய போடவும்.

31. உலர்ந்த உருண்டையைப் புடம் போட்டு எடுத்து குகையில் வைத்து உருக்க சூரியனைப் போன்று பளபளப்புடன் செம்பு காணும். இந்த செம்பு மடிந்து வெட்டையாக இருக்கும். இதை பஞ்சலோகத்தில் கொடுத்து உருக்க தங்கம் போன்று இருக்கும். இந்தச் செம்பை வெள்ளியில் பத்துக்கு ஒரு பாகம் கொடுத்து உருக்க ஐந்து மாற்றுள்ள தங்கமாக மாறும்.

82. மேற்கண்ட செம்பு தங்கத்துடன் சமஎடை தங்கம் சேர்க்க எட்டு மாற்று தங்கமாக மாறும். புடம் போட்டால் நன்றாக இறங்கும். (புடமாகும்). இந்தச் செம்புக்கு முதன்மை கொடுத்து வழி முறையோடு செய்ய கைகூடும்.

83. வாதம் செய்ய முதலில் அயச்செம்பை பார்க்க வேண்டும். பின்பு கெந்தகத்தைக் கொண்டு வாதம் செய்ய வேண்டும், பிறகு சவுக்காரத்தைக் கொண்டு வாதம் செய்ய வேண்டும். அதன்பின் சீனத்தைக் கொண்டு வாதம் பார்த்திட வேண்டும். மேலும் தாளகத்தால் செய்திட வேண்டும் கருத்துடன் செம்பைக் கொண்டு வாதம் பார்க்க அனைத்தும் பலிதமாம்.

84. நவசாரத்தை சுத்திசெய்ய கற்சுண்ணாம்பு நடுவில் நவசாரத்தை வைத்து இரண்டு சாமம் எரித்து எடுக்க கசடு அற்று சுத்தியாகும்.

85. சீனம் ஒரு சேர் அளவு எடுத்து பொரித்துக் கொண்டு முட்டையின் வெண்கரு விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம் போட வேண்டும். புடம் போட்டு எடுக்க காரம் மிகுந்த சுண்ணாமாக இருக்கும். இதற்கு "சீனச் சுண்ணம்" என்று பெயரானும். சுண்ணத்தை முட்டை வெண்கருவால் அரைத்து நவசாரத்திற்கு மேல்கவசம் செய்து காய வைத்து எடுக்கவும்.

86. கிளிஞ்சில் சுண்ணாம்புக்குள்ளே மேற்கண்ட கவசம் செய்த நவசாரத்தை உள்ளே வைத்து நான்கு சாமம் எரிக்கவும். பின்பு அதை எடுத்து பார்க்க தந்தத்தை போன்று இருக்கும். இதை சுண்ணம் செய்ய இதனுடன் சீன சுண்ணத்தை நன்றாக அரைத்து புடம் போட்டு எடுக்க சாரச் சுண்ணம் கவசத்திற்கு உள்ளே இருக்கும். இந்த சுண்ணத்தால் தங்கம் செய்யலாகும்.

87. சவுக்காரத்துடன் நவசாரமிட செயநீராகும். இந்த செயநீர் துத்தநாகத்தை கட்டும், செம்பு பொன்னாகும், வெண்ணை போன்று திரண்டு வரும். வேர் இல்லாத மரம் துளிர் விடுவது போல் இந்த சாரத்தின் செயல்முறை வீரியம் உள்ளதாகும்.

88. சார செயநீரில் நாகத்தை உருக்கி தேய்க்க கசடு அற்று தூய்மையாகி கட்டும். செம்பு அதே போன்று உருக்கி தோய்க்க பக்குவப்பட்டு பொன்னாகும். மிககுறுகிய நேரத்தில் வாதம் கைகூடும். நவசாரத்தை விட்டால் வாதம் எதுவும் பலிதமாகாது.

89. ராமதேவர் எனும் யாகோபு நவசாரத்தை கொன்டு சகலசித்தும் செய்து நான்கு கோடி வரை இருந்தார். சாரத்தை கட்டி பற்பமாக்கி வாதம் செய்து சிவயோக ஞானத்தில் இருந்தார்.

90. சிவயோக வாழ்க்கையில் இருந்து ராமதேவர் எனும் யாகோபு அட்டமா சித்தி தரும் குளிகைகள் செய்து பார்த்து பலவகையான சித்துகள் ஆடினார்.

நவாச்சாரத்தினால் குளிகைகள் செய்து மலைகளில் வாசம் செய்து வாழ்ந்தார் ராமதேவர். இது போல் சீனத்தாலும் எல்லாமும் செய்யலாகும்.

91. அறிவில்லாமல் வாதவகை செய்கின்றவன் துரிசை பற்பமாக்கி பார்ப்பான். அது பக்குவமாய் ஆகாததாலே இந்த வாதம் என்பது வெறும் பொய்யானது என்று சொல்லுவான். மூலாதார சுழிமுனையில் அறிவை செலுத்தி யோகம் பார்த்து ஞானத்தால் அறிந்து கொண்டால் வழிவகை கண்டு பலிதமாகும்.

92. சித்தர்கள், முனிவர்கள், ரிஷிகள், தேவர்கள் போன்றவர்கள் துரிசை

சண்ணமாக்கி, சூதமென்ற ரசத்தை கட்டி சுண்ணமாக்கி ரசவாதம் பார்த்து- (பாத ரசத்தை மணியாக்கி) குளிகைகள் செய்து (பசி,தாகம் அற்று இறைவனின் நினைவால் இருப்பதை சமாதி என்பார்கள்) அப்படி சமாதியில் இருந்து உயர்வடைவாய். கேள்விகள் கேட்டு, கேட்டு ஒன்றும் செய்யாது பலனடையாமல் போனவர்கள் கோடியாகும்.

93. கோடி மனிதர்கள் வீண் வாதம் பார்த்து ஒன்றுமே காணாமல், மனம் கெட்டு அலைந்து அது செய்வேன், இது செய்வேன் என்று வீணாக பலர் வாழ்க்கையை கெடுப்பர்.

சாஸ்திரம் எனும் நூல்களை ஆராய்ந்து அறிந்து பார்க்காமல், தெருவில் அலைந்து கெட்டு பலனடையாமல் போவார்கள். இந்த வாதாங்க முன்னூரில் உலத்திலுள்ள அதிசயங்களை சொன்னேன்.

94. தீட்சைவிதி தன்னில் உள்ள பொருளையும், கருத்தையும் அலசி ஆராய்ந்து கணக்காக வாதம் பார்த்து உயர வேண்டும். ஆனால் இந்நூலின் கருத்தை அறியமாட்டான் பயன்படாத வாதம் செய்பவன். நவச்சாரத்தை கொண்டு வாதமுறை செய்து பார்க்க வாதம் பலிதமாகும். இவ்விஷய மறிந்தோன் வாதியாம்.

95. வாதிகள் (வாதமுறை செய்பவர்கள்) சாஸ்திரத்தை (சித்தர் நூல்களை) பார்த்து அறியாமல் பயன்படாத பொருட்களை கொண்டு வாதம் செய்துப் பார்த்து சரிவராமல் உட்பொருளையும், சூட்சுமத்தையும் அறியாமல் பலனற்று போவார்கள். அலசி பார்க்காவிடில் பலிதமில்லை என்பதாகும். பலன் தராமல் இவைகள் எல்லாம் கெட்டுப் போகும். எனவே அறிவினால் கண்டு பார்.

96. துத்தநாகத்தை இலுப்பை எண்ணெயில் உருக்கி, நவசாரத்தை மேலே போட்டு பார்க்கப் புகைந்து போகாமல் கட்டி போகும். இதை செம்புதனில் இருபது பாகத்திற்கு ஒரு பாகம் கொடுத்து உருக்கிப் பார்க்க பொன்னாகும்.

97. இதைக் கொண்டு ஞானத்தையே தேட வேண்டும். வித்தைகளை செய்து பார்த்து இறைவனை தியானம் செய்தல் வேண்டும். இதனால் முக்தி எனும் உயர்வை அடையலாகும். அப்போது பலிதமாகும், பொன்னாகும். முடிந்த வரையில் ஞானவழியில் செல்லுதல் வேண்டும். அப்படி சென்றால் அனைத்தும் பலிதமாகும்.

98. உவர் நிலத்தின் மண்ணையும் சுண்ணாம்பையும் கலந்து காய்ச்சி, சீனம் நான்கு சேர் பொரித்து கல்வத்தில் வைத்து சவுக்கார குழம்பினால் அரைத்து வில்லைகள் செய்து கொள்ள வேண்டும்.

99. வில்லைகள் செய்து காயவைத்து பெரிய புடம் போட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். எடுத்துப் பார்த்திடில் பற்பமாக இருக்கும். பின்பு அதை மீண்டும் சவுக்கார குழம்பினால் அரைத்து வில்லை செய்து காய

வைத்து புடம் போட்டெடுக்க சுண்ணமாயிருக்கும். இதற்கு சீனச் சுண்ணம் என்று பெயராகும்.

100. வெடியுப்பு-(இவ்வுப்பை வைப்பினுள் அடக்கியுள்ளார்கள். வைப்புசரக்காகும்) ஐந்து முறை காய்ச்சிய வெடியுப்பும் மேற்கண்ட சீனச் சுண்ணத்தையும் சேர்த்து அரைத்து வில்லை செய்து, எலுமிச்சம் பழச்சார்விட்டு அரைத்துச் சட்டியில் போட்டு நேர் சாமம் எரிக்க வேண்டும். பின்பு எடுத்துப் பார்க்க சுண்ணமாக இருக்கும்.

101. இதே போன்று ஐந்து முறை புடம் போட கடும் சுண்ணமாகும். இப்போது இதற்கு வெடியுப்பு சுண்ணம் என்று பெயராம். மற்றைய சாஸ்திரங்களிலும் சொல்லாத இம்முறையை வாதாங்க தீட்சையில் கூறியுள்ளேன். இந்த வெடியுப்பு செய்கின்ற போக்கினையும், உயர்வினையும் சிவனாலும் கூற இயலாதாகும்.

102. வெடியுப்பு சுண்ணத்தில் நவச்சாரத்தைச் சேர்த்துப் பார்க்க பற்பமாகும். நீறுதனில் வீரம், பூரம்-(வீரம்-சவ்வீரம், பூரம்-ரசகர்ப்பூரம்) இவைகளில் துருசு நீர் சுருக்கு போட (உலர வைக்க) பத்து நாட்கள்.

103. துருசு இருகி சுக்கான் கல் போல் காணும் இதை வங்கசுண்ணத்தால் கவசமிட்டுக் குக்குடமாய்-(கோழிபுடம் சேவற்புடம், எருபத்து) போட்டு எடுக்க துருசு சுண்ணமாகும். இதை செம்பிலிட்டால் தங்கமாகும்.

104. தில்லைமர பால் ஒரு பிடி பிடித்து அதில் துருசு சுண்ணம் பணவெடை போட்டால் பால் முறிந்து போகும். அனைத்து சரக்குகளும் இதனால் கட்டும். உப்பு முதல் இருபத்தைந்து சரக்குகளும் கட்டிவிடும் இதை கொண்டு செய்யும் விதம் வெற்றியாகும், பலிதமாகும்.

105. வெள்ளை பாஷாணத்தில் மேற்கண்ட பாலை சுருக்கிட கட்டிப்போகும். இந்த தீட்சை விதியின் வழியே இதை சேர்த்து வெள்ளி செய்வாய். உண்பதும் உறங்குவதுமாய் இருக்கின்ற மனிதர்களைப் போல் இருக்க வேண்டாம். பகுதி பகுதியாய் செய்து தவவேடம் பூண்டு ஞானியாய் வாழ்ந்திடு.

106. வெள்ளை பாடாணத்தைச் செய்ததைப்போலவே கெவுரி பாடாணத்தையும் பாலில் சுருக்கு கொடுத்தெடுப்பாய். தாளகத்தையும் இப்படியே செய்ய வேண்டும். லிங்கத்தையும்-(சாதிலிங்கம். இது ஒரு பாடாணவர்க்கத்திலும் பஞ்ச சூதத்தில் ஒன்றாகவும் வரும்) இவ்வாறாகவே செய்ய வேண்டும் கார்முகில்-(இது இயற்கை பாடாணம்) இதையும் இப்படியே செய்ய வேண்டும். அனைத்து வாதவகை சரக்குகளையும் கட்டலாம். மெழுகாகும், வகையாக கை கூடும்.

107. விதி இருந்தால் வாதத்தினைக் கண்டுகொள்வான், இல்லாதோன் காண மாட்டான். அப்படி செய்வேன் அதை செய்வேன் என்று பேசி

அலைவார். அவனை நம்ப வேண்டாம். யாருடைய பேச்சையாவது கேட்டுக் கொண்டு சுயபுத்தி இல்லாமல் கெட்டு அலைந்து தானிருப்பார் உலகத்தில் இவர்களுக்கு நரகமாகும்.

108. வாதாங்கத்தை வழிவகையோடு செய்து கொள்ளு விஷயத்தை உள்ளது உள்ளபடி சொன்னேன். கவனித்துப் பார்த்தால் எல்லாம் தோன்றும். வழிவகை காணாத வாதிமார்கள், தன்னை அலங்கரித்து வாய்ஜாலம் பேசுவர்கள். இவர்களுடைய பேச்சை நம்ப வேண்டாம். தேடிப்பார்க்க நலமாகும்.

109. வெடியுப்பு செயநீர் தன்னால் சகல சரக்குகளையும் கட்டிக்கொள். உலகமே உனக்குப் பலிதமாகும். ஒழுங்காக அனைத்தும் பலிதமாகும். வெடியுப்பே முதன்மையானதாகும். சரியாகச் செய்தால் வாதம் தோன்றும் தகாதபடி வாதம் செய்ய வேண்டாம்.

110. உலகத்தில் வாதவகை செய்பவர்கள், மூலிகையில் வெடியுப்பை அரைத்துப் புடத்தைப் போட்டுப் பார்க்க கரியாகப் போய் விடும். செயநீர் செய்து பார்க்க சரக்குகளைத் துவைத்துச் சுருக்கிட்டு செயநீரை செய்து விட்டேன் என்று கூறுவார்கள். இவர்கள் அறிவு இல்லாவாதம் செய்வோர் ஆவர்.

111. பலவிதமாக பேசுவார்கள் அதில் விஷயமில்லை சாத்திரங்களை பொய்யானது என்பார்கள். அனைத்தும் தெரிந்தாற்போல் பேசுவார்கள் ஏமாற்றுபவர். உண்மையான விஷயத்தைக் கூட பொய் என்பார், நன்றாக நல்லது செய்வது போல் பேசியே கழுத்தறுப்பார். பலிதமாவது எல்லாம் வெடியுப்பாலேயாம். பிறர்மேல் வஞ்சனை இல்லாமல் வீணான கோபத்தை விட்டு விடு.

112. சாஸ்திர நூல்களைப் பார்த்து ஆராய்ந்து பொறுமையோடு வழிவகை செய்துக் கொண்டு சமாதி (சித்தர் யோகத்தில் இருக்கும் ஓர் உயர்நிலை)யில் இருந்து உயர்வாய். அப்போது ரசவாதம் மிக குறுகிய நேரத்தில் பலிதமாகும். எல்லாமும் பலிதமாக வழியுடையோன் வெடியுப்பை கொண்டு வாதம் பார். வாத நுணுக்கம் அனைத்தும் வெடியுப்பாலே ஆகும்.

113. சீனச் சுண்ணம் செய்து பார். அதன்பிறகு வெடியுப்பை பார். அதன் பிறகு சரத்தை பார்த்து தேரு. விஷயம் எல்லாம் உண்மையாகும். வாதவகை பலிதமாகும், சகலமும் பலிதமாகும். துருசு சுண்ணத்தினால் வாதம் எளிதாக கைகூடும்.

114. வாதம் பார்ப்பேன் என்று சொல்லுவான். வாத நூல்களை பார்க்க மாட்டான். வாய் பேசி அலைந்து இறந்து போவார்கள். பொன்னை செய்தேன் என்று உண்மை பொன்னை காண்பித்து இதை நான் செய்தது என்று கூறுவான். உண்மை நிலை அறியாத வீணான வாதி முதன்மை யானதை அறியாமலே வெள்ளிவித்தை எளிமைதான் பார்.

115. வெள்ளி வித்தை விரைவாக சொல்லுகிறேன் இது எளிதானது, உறுதியாக பார்த்தால் பலிதமாகும் இதை செய்துப் பார்.

கல்லுப்பு எட்டுபடி, நல்ல தண்ணீர் பதினாறு படி, உப்பில் ஊற்றிக் கொண்டு சுண்ணாம்பு ஒரு படி ஒன்றாக போட்டு காய்ச்ச வேண்டும்.

116. காய்ச்சி வடிகட்டி தெளிவு இறுத்தி மீண்டும் காய்ச்சி நீர் வற்றியபின்பு மற்றொரு புது சட்டியில் அகப்பையை கொண்டு (அகப்பை-தேங்காய் ஓட்டில் செய்யும் கரண்டி) எடுத்து ஊற்ற வேண்டும். சுத்தமாக நீர் வற்ற காய்ச்சி வைக்க வேண்டும்.

117. சட்டி நடுவில் பள்ளமாக செய்துகொண்டு அதில் ஒருசேர் பாதரசத்த விட வேண்டும். பின்பு மேல் ஒரு சட்டிமூடி ஏழு முறை மண்ணால் கவசம் செய்து பனிரெண்டு ஜாமம் எரித்து பார்க்க உயர்ந்து நல்ல பதங்கமாய்-(மேற் கூறியபடி செய்தலே பதங்கம் என்பதாகும்) இருக்கும்.

118. சட்டியை பிரித்து மயிர் குச்சியால் பதங்கத்தை வழித்தெடுத்து கல்வத்தில் இரண்டுசேர் போட்டு உடன் வெள்ளை பாஷாணத்தை அதே எடை சேர்த்து வெடியுப்பு நீரால் நான்கு சாமம் அரைக்க வேண்டும்.

119. அரைத்து வில்லை செய்து காயவைத்து மேல்மூடி கவசம்செய்து அடுப்பில் வைத்து இரண்டு சாமம் எரித்திட மேல்சட்டியில் படிந்து விடும். அதை மயிர் குச்சியில் எடுத்து அரைத்து வில்லையாக்கி முன்பு செய்ததுபோல் எரித்திடுவாய்.

120. இப்படியே ஐந்துமுறை எரித்து எடுத்து வைத்து கொண்டு வெள்ளீயம் ஒருபலம் 35 கிராம், தாளகம் 35 கிராம் எடுத்து தாளகத்தை பொடியாக தூள் செய்து வங்கத்தில் சரி எடைக்கு கொடுத்து உருக்க பொடியாகும். இன்னும் ஒன்று சொல்கிறேன்.

121. சாரத்தை இதனுடன் சேர்த்து அரைத்து உருக்கிப் பார்க்க வெள்ளீயம் கசடு போய் தூய்மையானது. இவ்வுலோகத்தின் சப்தம் வெள்ளிபோலே கேட்கும். குகையில் உருக்கி நூறு பாகத்திற்கு ஒரு பாகம் கொடுத்து உருக்க வெள்ளி பத்துமாற்று இது வங்கத்தின் செயலாகும்.

122. காரீயத்தை உருக்கி ஊத ஓடாமல் உருகி நிற்கும். இவ்வெள்ளியில் ஜீவனம் செய்து கொள். சிவயோக தியானம் செய்து வாழ். கவனம் வைத்தால் வெள்ளி வித்தை வரும் யோகத்தில் சுழிமுனையென்ற மூலாதாரத்தில் கருத்துவை எல்லாம் பலிதமாகும்.

123. பலிதமென்றால் சொல்கிறேன் கேள், வெள்ளை பாஷாணத்தினால் வெள்ளிவித்தை ஆனது யோகத்திற்கு இதுதான் முதன்மை. இதை விட்டால் வெள்ளி இல்லை. சரியான முறையில் செய்து கொள். அனைத்தும் பலிதமாகும், விஷயத்தை அறிந்தவன் வாதியாம்.

124. விஷயத்தை அறிந்தவன். உட்கருத்தை அறிந்தவன் வெள்ளி வித்தை அறிய வேண்டும். சகலசித்தும் செய்ய வேண்டும். எனவே உண்மை பொருள் அறிய வேண்டும் தவறில்லாமல் முழுமையாய் அறிந்தவனே சித்தன் என்றாகும். கெட்டலைய, கஷ்டப்பட சொன்னால் வீண்தான். பாதிமதி அணிந்த சிவன் செய்யும் லீலைகளை விதியுள்ளோன் அறிவான்பார்.

(விதியாளி-ஞானவவழியில் இருப்போன் சிவயோகி)-அதற்கான தகுதியுடையோன்.

125. வெள்ளிவித்தை சொன்ன வழியில் கருத்துடன் செய்யும்போது ஒருமுறை தவறிவிட்டால் மூன்று முறை செய்து கொள். வழிவகை தவறிவிட்டால் ஏழைபோல் என்ன செய்வதென்று அறியாமல் இருக்காதே. மறுபடியும் செய்து பார் பலிதமாகும் உட்கரு அறியார் மாடு போன்றவர்களே.

126. மாடு அது தானே என்னென்று தெரியாமல் ஒரே சிந்தனையில் போய் கொண்டிருக்கும். அதாவது ஒரே சிந்தனையில் போகும் மனிதர்க்கு ஒரு சிந்தனையும் கிடையாதப்பா, காட்டுக்குள் கண்டபடி அலைவார்கள். பொருளை அறியாதவன் இதேபோன்ற காட்டு மனிதன் நாட்டில் வாதவகை செய்பவர்கள் கண்டபடி செய்து பார்த்து சரியில்லை என்பார்கள்.

127. இது போன்ற வாதிகள் பாடுபட்டு செய்தாலும் கடைசியில் பயன் இல்லாமல் போய்விடும். எனவே இவர்கள் வேதம் பொய்யானது என்ற கூறுவார்கள். நேர்மை அறியாதவர்கள்தான் இப்படிக் கூறுவார்கள். உண்மையானவர்கள் செய்து முடிப்பார்கள். சிவனின் செயல்களை உலகத்தில் யாரால்தான் அறிந்து கொள்ள முடியும்.

128. சீனத்தை சுண்ணம் செய்து வெடியுப்புடன் சேர்த்துக் கல்வத்தில் போட்டு அரைத்துக் காயவைத்துச் செயநீர் செய்துக்கொள். இதைக் கொண்டு அனைத்தையும் சுண்ணம்,பற்பம், கட்டுவகைகள் செய்யலாம்.

129. இந்த தீட்சை விதி முன்னூறில் வெள்ளி செய்யும் வித்தையைச் சொல்லிவிட்டேன். எனவே நூலின் பொருளறிந்து கவனம் வைத்து வாதம் செய்திடு. கருத்து வைக்காதவர்கள் வாதத்தைச் செய்ய மாட்டார்கள். வாழ்நாள் வரையில் பெருமையை கடைபிடித்து வாதத்தைப் பார்த்திடு.

130. வெள்ளி வித்தை சாதாரணம் கிடையாது. எனவே கவனம் வைத்து வித்தையை செய்து பார், திருடனைப் போன்று அலையாமல் நூல்களை ஆராய்ந்து பார்த்துத் தெளிவாக வாதத்தைச் செய்திடு. சந்தேகத்துடன் செய்திடாதே, முடிந்தவரை முயற்சி செய்து வாதாங்கம் செய்திடு.

131. முறையோடு செய்தாலே வெற்றி என்பது ஆகும். பொன் வித்தை விரைவில் கூடும். வழி தவறிவிட்டால் மீண்டும் முயற்சி செய்து ஒன்றன்

பின் ஒன்றாக தெளிவுடன் செய்தால் வெற்றியாகும்.

132. சாத்திரததைக் கூர்ந்து கருத்து வைத்து பார்த்தால் விளங்கும். பகுத்து வகுத்து செய்வது எளிதாக தோன்றும் வழி கிடைத்து விட்டால் எல்லாம் சரியாகும். கதைபோன்று வீணாக அலையாதே! கவனம் வைத்தால் ஞானம் யோகம் இவைகள் உண்டாகும். கடினம் என்று தயங்கினால் எதுவும் கைகூடாது.

133. சாரத்தைக் கட்டிக் கொண்டு, செயநீரையும் கொண்டு வாதம் பார்க்க மேலே சொன்ன அனைத்தும் பலிதமாகும்; பொன்னாகும்.

உப்பு முதல் பாடாணம், உலோகம், ரசம் போன்றவைள் பலிதமாகும். சிந்தூரங்கள் சித்தியாகும் வாதவகை வெற்றியாகும்.

134. இன்னும் ஒரு வகையை கூறுகிறேன். சாரக்குருவினை இந்த வாதாங்கத்தில் சீனம் 350 கிராம் எடுத்து சவுக்காரக் குழம்பினால் அரைத்து வில்லை செய்து காய வைத்து பெரியபுடம் போட்டுக் கொள்.

135. புடம் போட்டு எடுத்துப் பார்க்க சீனச்சுண்ணமாகும். இதை சவுக்கார குழம்பை விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து ஐந்துமுறை இதே போன்று புடம் எடுக்க வீரியம் மிகுந்த சுண்ணமாகும். இதன்மேல் சவ்வீரத்தைப் பூசி போட்டு எடுத்திடுவாய்.

136. புடம் போட்டெடுக்க சாரம் முத்துபோல் பளபளப்புடனும் தந்தத்தைப் போன்று நிறத்துடனும் காணும். இந்த சாரத்தினுடைய உயர்வைச் சொல்ல சிவனாலும் இயலாது. மற்றவர்களால் எப்படிக் கூற இயலும். சாரத்தை சுண்ணம் செய்தால் மற்ற எல்லாவகை சரக்கையும் சுண்ணமாக்கலாம். வீணர்கள் சொன்னால் சரியாகாது.

137. இலுப்பை எண்ணெயில் சாரம் ஒருபாகமும் துத்த நாகம் இருபத்தொரு பாகமும் கொடுத்து உருக்க நாகம் கட்டும். கட்டியநாகத்தை தங்கத்துடன் சேர்த்துருக்க உதிர்ந்து போகும். அதை எடுத்து செம்பில் நூற்றுக்கு ஒரு பாகம் கொடுத்து உருக்கிப் பார்.

138. கொடுத்துருக்க பத்து மாற்று தங்கமாகும். இது சிவனுடைய சொத்தாகும். இதைக் கொண்டு யோகம் பார்க்க வேண்டும். அறிவு கெட்டு அலைய வேண்டாம். மாறாக 63 நாயன்மார்களைப் போலே பக்தியோடும் ஞானத்தோடும் இருந்து குளிகை மணி செய்து உலகத்தில் சித்து செய்து வாழ்வாய்.

139. வாதம் கை கூடி விட்டால் அறிவு மயங்கி கர்வம் கொண்டு அலைய வேண்டாம். மற்றவரை இழிவு செய்யவேண்டாம். நடனம் செய்பவன் போல வளைந்து நெளிந்து நடக்கவும் வேண்டாம், சிவஃஞானத்தில் இன்பம் கண்டு இருந்துவிடு உன்னைத் தேவனென்று கூறுவார்கள் உறுதியாக.

140. உறுதியாக என்னுடைய சாத்திரமாகிய இந்த வாதாங்க தீட்சையில் வெள்ளிவித்தை, உப்பு சுண்ணம், சாரச்சுண்ணம் இவைகளை ஆராய்ந்து பார்த்துக் கவனமாய் செய்துப்பார். நாடி சென்றால் எல்லாம் கூடும். இல்லையேல் ஒன்றுமே செய்ய முடியாது.

வெள்ளி வித்தையில் அனைத்தும் பலிதமாகும். பக்குவத்துடன் பார்த்து தெளிவாக செய்வாய். அறிவு மயங்கி சித்தன் ஆவாய்; சலகமும் பலிதமாகும்; கவனித்து அறிந்தவனே யோகியாம்.

142. யோகியாய் இருந்து வாதவகை செய்து வாழ்க்கையை தள்ளிசெல். பாக்கியவானாய் இருந்தால் பலிதகாம். என்னுடைய குருவின் அருளால் யூகிமுனியாகிய நான் கண்டு உணர்ந்தேன். கவனமாகக் கோடி காலம் கவனமாய் பார்த்துணர்ந்தால் பலிதமாய் வெளிச்சமாய காணும் ஆசை கொண்டு அலைந்தால் லாபமில்லை; முடிந்தவரையில் ஞானத்தைத் தேடியே இருந்திடுவாய்.

143. சிவன் தன் தேவிக்குச் சொல்ல உமாதேவி நந்திக்குச் சொல்ல, நந்தி தன் சீடரான தன்வந்திரிக்கு சொல்ல தன்வந்திரி அகத்தியர்க்குச் சொல்ல அகத்தியர் புலத்தியமாரிஷிக்குச் சொல்ல புலத்தியர் தேரையர்க்குச் சொல்ல தேரையர் யூகிமுனிக்குச் சொல்ல யூகிமுனி சொன்னதாகும்.

144. சொன்னது என்னவென்றால் சீனச்சுண்ணத்துடன் கற்பூரத்தைச் சேர்த்து அரைத்து உருட்டி வில்லை செய்து சூரியனில் காய வைத்து ஐந்து சுண்ண குகையில் வைத்துப் புடம் போட சுண்ணமாகும்.

145. துருசு சுண்ணமானால் பாதரசத்தைக் கட்டலாகும். துருசு சுண்ணத்தை விராலி மரத்தினுடைய இலையின் சாறு பிழிந்து விட்டு அதனுடன் பாதரசத்தையும் சேர்த்து காய்ச்சி பார்க்க ரசம் திரண்டு மணியாகும். இந்த வாதவகை பொய்யில்லை உண்மையாகும்.

146. மேற்கண்ட ரசத்தை ஊமத்தங்காயின் உள்ளே விட்டு நூறு புடம் போட்டு அதை கரியில் வைத்து உருக்கிட வைரம் போன்று பளபளப்பாக உருகி நிற்கும். இதனுடன் தங்கம் ஒரு பாகம் போட்டு பின்பு நாகத்தையும் அதே எடை போட்டு உருக்க களங்காகும்.

147. நவலோகத்தில் மேற்கண்ட களங்கை நூற்றுக்கு ஒன்று கொடுத்து உருக்க மாற்று பொன்னாகும். உப்புக்கும், காவிக்கல்லக்கும் கட்டுபடும். இப்பொன்னால் இறைவழிநாடு சற்குருவாகிய சிவாபிரானிடம் மனதை வைத்திடு. பிராணாயாம யோகம் பார்த்திடு, பக்தியுடன் இருந்தால் அனைத்தும் பலிதமும் நல்லதுமாகும்.

148. சித்திபெற வேண்டும் என்றால் மேலே செய்த களங்கத்தை உடைத்துக் கொண்டு பொடியாக்கிக் கந்தகம் இதனுடன் சேர்த்துத் திராவகத்தால் அரைத்துக் குப்பியில் வைத்து எரிக்க செந்தூரமாகும்.

பணவெடை தேனில் உட்கொள். வெகுகாலம் நோயின்றி உடல் நிலைத்திருக்கும்.(எடை பற்றிய தனி குறிப்பு அட்டவணையில் காண்க)

149. உடல் கல் போன்று வலிமையாகவும், உறுதியாகவும் இருக்கும். யோக நிலையாகிய சமாதியில் இருக்கலாம். நோய்கள் என்பது தவிடு பொடியாகும். சீனம் கல்தூண் போன்றதாகும். உடல் நலமுடன் இருக்கவைக்கும் இந்த செந்தூரம், இந்த நூலாகிய வேதத்தில் சொன்னபடி நவலோகம் உருக்கி செந்தூரம் போட பொன்னாம்.

---

150. பொன் ஆக வேண்டும் என்றால் நவலோகத்தில் நூறுபாகத்துக்கு ஒருபாகம் செந்தூரம் போட்டு உருக்க பத்து மாற்றாகும்.

இந்த தீட்சை விதி நூலின் வாதமுறை போன்று வேறு நூல் இல்லை, இந்நூலின் விவரம் பார்க்க நெருப்பினைப் போன்று சக்தி மிகுந்ததாய் விஷயங்கள் இருக்கும்.

151. நன்கு பலிதமாக பாதரசத்தை கட்ட வேண்டும். கரியில் வைத்து உருக்கி தங்கத்தைச் சேர்க்க வேண்டும். இதனால் சகலமும் பலிதமாகும். அனைத்து நூல்களையும் பார்த்து அறிந்து கொள். பிறகு கருத்து வைத்து வாதவகை பார்த்திடுவாய்.

152. வேத நூல்களை பார்த்து மனதை கட்டுப்படுத்த அனைத்தும் சித்தியாகும். வேதத்தின் கருத்துகளையும் சொல்லக் கூடும். அலைந்து திரியாமல் கஷ்டப்பட்டால் செயல் முறை தோன்றும். இறைவனின் அருளுடையோன் அறிந்து கொள்வான்.

153. எண்ணம் நிறைவேற வேண்டும் என்றால் துருசை பற்பமாக்க வேண்டும். பாதரசத்தை கட்ட வேண்டும், பிறகு தானாக செம்பு தங்கமாகும். ரசவாதம் அனைத்தும் நம் இஷ்டப்படி செய்யலாகும். எனவே நரியை போன்று சுற்றாமல் நூலினை கவனமாகப் பார்த்து தெளிந்திடு.

154. இரும்பு தூள் 35 கிராம் எலுமிச்சம்பழச் சாற்றில் மூழ்கும்படி விட்டு மூன்றுநாள் சென்ற பின்பு தெளிவாகச் சாற்றைத் தனியே எடுத்து வைத்துக் கொண்டு விட வேண்டும்.

155. துருசு 350 கிராம் கெந்தகம் முக்கால் பலம் இருபத்தைந்தேகால் கிராம் இவைகள் இரண்டையும் கல்வத்தில் வைத்து அரைக்க வேண்டும், பின்பு இரும்பில் ஊறிய எலுமிச்சச் சாற்றில் இரண்டு சாமம் அரைத்து வில்லை செய்து சூரிய வெய்யிலில் போட்டெடுத்து, சுண்ணாம்பு, உப்பு இவைகளைக் கொண்டு மேல் கவசம் செய்து புடம் போட கருப்பான நிறமாக தோன்றும்.

156. புடம் போட்டு குகையில் வைத்து உருக்க சத்தாகும். இவ்வாற ஐந்து முறை செய்ய பதமான சத்தாகும். வெண்கலம் போன்று காணும்.

இதை உருக்கி தங்கம் ஒரு பாகம், நாகம் ஒரு பாகம் சேர்த்திட களங்காகும்.

157. நவலோகத்தில் நூற்றுக்கு ஒரு பாகம் போட்டு உருக்க எட்டு மாற்று ஆகும். அறிவினால் அறிந்து பதமாக செய்து கொள். முறையான பொருள் அறிந்தோன் ஞானியாவான். கருத்தறியாதவர்க்கு ஒன்றும் இல்லை, கடைசியில் கெட்டு அலைவார்கள் வாதம் செய்வோர்கள்.

158. கெட்டு அலையாமல் இருப்பதற்கு உப்பை கொண்டு வாதம் பார். அடுத்து துருசை பார். பாதரசத்தை கட்டிப் பார். வாதம் எளிதில் செய்யலாகும் சரியாக வாதம் கூடினால் ஞானம் வரும், வராமல் போனால் வீணே மாடு போன்றதாகும். அயராமல் சாஸ்திரங்களைக் கற்று தேர்ச்சியடை, மனம் கொண்டு நூல்களை பார்த்திட வேண்டும்.

159-160. கருத்துடன் பார்த்திட ரசவாத கலை சொன்னபடி கேட்கும். நல்ல மனமுடைய உயர்ந்தோரை தவிர மற்றவர்களுடன் பேச வேண்டாம். எல்லா அன்னைக்கும் மூத்த தாய் மனோன்மணியாள் எனை முத்தமிட்டாள் சிறந்த பிள்ளை என்று. எனவே மூதேவியாய் திரியாமல் வாதம் பார்த்திட தங்கமாகும். துருசை கொண்டு மூன்று காலமும் வாதம் பார்த்திட வாதம் கூடும்.

161. ஞானத்தால் மிகுந்த பெரியோர்களிடம் பணிவுடன் வணங்கி கேட்க நாம் நலமாக இருக்க வழி சொல்வார்கள். பொருமையுடன் வாதம் பார்த்துக் கொண்டால் அனைத்து சித்தும் நன்றாக உடனே ஆகும். முடியாது என்று நினைப்பதும் முடியும்.

162. தவம் புரிந்து ஞானம் பெற்றவர்க்கு உலகத்தில் இல்லாத வழிகள் கூட தவறாமல் கூடும். சரியாக செய் வீணாய் போகும். சரக்குகளை அறிந்து வாதம் செய்யும் வகை கருவினை கண்டறிந்தால் வாதம் கூடும். இல்லாவிடில் பலனுண்டாகும். உப்பினாலும் சிலவகை செய்யலாகும். எனவே ஆணவம் கொண்டு கெட்டலைபாமல் வாதம் பார்த்திடு.

163. உப்பினால் அனைத்தும் செய்யலாகும். உப்பு என்பது உண்மை கரு பொருளாச்சு, நல்லதாகும். ஞானமாகும் உடல் போன்றதாகும். வாதம் செய் குணமாகும், வாசமுமாகும், அளவுகோல் போன்றதும் இதுவே ஆகும், இந்த உப்பினால் உடலில் உள்ள ஆறு ஆதாரங்களும் திறக்கலாகும் இதை முறையோடு பயன்படுத்தின் அனைத்தும் சித்தியாகும்.

164. இரசவாதம் என்பது சாதாரணமானது அல்ல. முறையோடும் வழியோடும் செய்தால் பலிதமாம் இல்லாவிடில் வாதம் கூடாது கேள்வி ஞானம் போன்று செயலற்று போகும், வாதம் செய்து பார்த்தறிய முடிந்தவரையில் துருசை கொண்டு வாதம் பார்த்திடு.

165. வெடியுப்பு திராவகத்தை செய்யும் விதம் கேள், வெடியுப்பு 350 கிராம் சீனாகாரம் இருபத்தைந்து பலம் (875 கிராம்) எடுத்து கொண்டு

இரண்டையும் ஒன்றாக பொடி செய்து வாலை சட்டியில் போட்டு அடுப்பில் வைத்து எரிக்க வேண்டும். அப்போது வெண்மையான நீர் வரும்.

166. மேற்கண்ட வெண்மை நீரினை தேவையற்றதாக்கி விட்டு அடுத்து வரும் சிவந்த நிறமுடைய நீரினை பிடித்து இதில் இரண்டு சேர் எடுத்து கல்வத்திலிட்டு பூநீறு (பூமியில் விளையும் உப்பு) ஒரு பலம் (35 கிராம்) போட்டு பார்க்க பொங்கும் பிறகு பூநீறு கரைந்து விடும். இதை பீங்கான் பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொள்ளவும்.

167. துருசு 70 கிராம். கரி நெருப்பில் வாட்டி எடுத்து கொள். நன்றாக வெண்மையாக இருக்கும் இதை முன்பு பீங்கானில் எடுத்து வைத்த நீரில் போட்டு வை. இப்படி 15 தினங்கள் இருக்க வேண்டும். பிறகு இதன் எடைக்கு வீரத்தை கூட்டி கொள்ள வேண்டும். இது துருசு சுண்ணமாகும்.

168. மேற்கண்ட சுண்ணத்தில் விராலி இலைச்சாறு விட்டு பிழிய தண்ணீராகும். இத்துடன் பாஷாணம் சேர்த்திட லிங்கம், கௌரி, இவைகள் கட்டும். பாதரசம், வீரம் இவைகள் மடியும் இரும்பை வெட்டையாக்கும் அனைத்து சரக்குகளும் பணியும் இதற்காம்.

169. இரும்பை உருக்கி கொண்டு இதனுடன் தங்கத்தை சேர்க்க கசடு போகும் பார், இதை செம்புதனில் நூறுபாகத்துக்கு ஒரு பாகம் கொடுத்து உருக்க செம்பு அயத் தங்கத்தால் பதினான்கு மாற்று காணும்.

170. இரும்பு என்றால் கீழான சாதாரணமானது என்று நினைக்க வேண்டாம். வாதம் அறிந்தோனுக்கு இது "கரும்பொன்" ஆகும். எதையுமே தெளிவாக அறிய வேண்டும். இல்லாவிடில் அவன் கழுதை மேய்ப் பவனுக்கு சமமானவன் ஆகும். மேல் சொன்ன இரும்பு செம்பை கொண்டு வாதம் செய்து பார். நான் சமாதியில் இருந்ததைப் போல் இருந்தால் அனைத்து சித்துக்களும் செய்யலாகும்.

171. இரும்பு இல்லாமல் வாதம் பார்க்க முடியாது. அலட்சியம் செய்தால் வீணாய் போகும். இரும்பு என்றால் சாதாரணமானதல்ல. இதுவே முதல் தங்கம் ஆகும். இரும்பை கொண்டு வாதம் பார்க்கும் வாதிகளுக்கு இரசவாதம் எளிதில் கூடும்.

172. சித்தர்கள் பலர் கட்டுவகைகளை தமது நூல்களில் மறைத்து வைத்தனர். இந்த வாதாங்க தீட்சையில் கட்டு வகைகளை சொல்கிறேன். ஆணவம் கொண்டு நாய் போல அலையாமல் வேதை பார் கட்டு வகைகள் எளிமையாகும். இது எல்லாமாகும்.

173. கட்டுவகை சொல்லுகிறேன் கேளு. உலகத்தில் புகுந்து விளையாடும் நாதாந்த சாரம் இதற்குள் அடக்கம். கட்டுவகை என்றால் என்னவோ என்று மயங்க வேண்டாம். அறிவு கொண்டு பார் கட்டுவகைஉறுதி ஆகும்.

174. சீனம் 350 கிராம் முதலில் சுண்ணம்செய்தது போல் செய்து வெடியுப்பை சேர்த்து அரைத்து உலையில் வைத்து ஊத வெடியுப்பு சுண்ணம் ஆகும். இதை 350 கிராம் சட்டியின் நடுவில் வைத்து துருசு 350 கிராம் இவைகளை கரி நெருப்பில் வைத்து ஊதவும்.

175. வெண்மையாய் ஆகும் வரை ஊதி எடுத்து பொடிசெய்து கொண்டு வெடியுப்பு சுண்ணத்தின்மேல் இந்த பொடியை பரப்பி அதன்மேல் லிங்கம் நான்கு பலம் கட்டியாக வைத்து அதன்மேல் துருசு வெள்ளை மேலே போடு.

176. அழுத்தி அதன்மேல் வெடியுப்பு சுண்ணம் போடு. பின்பு அடுப்பேற்றி இரண்டு சாமம் எரித்து எடுக்க உருகி கட்டிப்போகும். லிங்கம் முழுமையாக கட்டி இழுக்கும்.

177. லிங்கத்தை எடுத்து அதற்கு சமஎடை தங்கம் சேர்த்து உருக்கிட மணிபோல் திரண்டு நிற்கும். நவலோகத்தில் இதை இருபதுக்கு ஒருபாகம் கொடுத்து உருக்க பத்து மாற்று தங்கமாகும். உறுதியான தொழில் இதெல்லாம் துரிசினால்தான்.

178. துருசுடன் பச்சை துருசு கொண்டு வாதம்பார்க்க வேதை காணும் சரக்குகளை இந்த பச்சை கட்டும். லிங்கத்தை முன் எப்படி கட்டினோமோ அப்படியே வெள்ளையும் கட்டும். வீரம், கௌரி இவைகளும் கட்டும். வெள்ளைப் பாடாணம், குதிரைப் பாடாணம், இப்படி இவைகள் எல்லாம் கட்டும். இஃத போன்று சரக்குகளை கட்டிக் கொள்ளு.

179. இவைகளை கட்டி நவலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாகும். பச்சையில் வேதையாகும். இவை எல்லாமே துருசின் செயலாகும். துருசை கட்டினால் வாதவகை எளிதாகும். யோகம் முதல் ஞானம் வரை கூடிவரும் ஞானத்தை நாடி நில்லே.

180. துணிந்து முன்னோர்கள் இந்த வாதாங்கத்தைப் போல் சொல்லவில்லை. சரக்குகளை கொண்டு உழைத்து செய்து வாதம் பார்த்திடு. ஒவ்வொன்றாக செய்துப் பார்த்து வெற்றி கொள்ளு. கருப்பொருள் அறிந்தால் சித்தியாம்.

181. வாதம் பார்ப்பவர்கள் துருசை புடத்தில் வைத்து பின்பு கரியாக போனது என்று கெட்டு அலைவார்கள். தன்னையே தான் கெட்டேன் என்று ஆணவத்தால் அலைவார்கள் புத்தி இல்லாதவர்கள்.

182. துருசை கட்ட பச்சையாய் துருசை கரியில் வைத்து, சட்டியில் போட்டு சரக்குகள் வைத்து எரித்து எடுக்க கட்டி போகும். கட்டி இந்த சரக்கினால் வேதை கோடி செய்யலாகும். துரிசின் செயலால் அனைத்தும் செய்யலாகும்.

183. வீணாக வாதம் செய்தால் கரியாய் போகும். சரியான முறையோடு சுட வேண்டும். இதற்கு குருவும் அவரது வழிமுறையும் வேண்டும். இந்த வாதாங்கத்தில் துருசு பச்சை கட்டும் வழியை கருத்தாக சொல்லி விட்டேன்.

184. உலகத்தில் வாதியர்களுக்கு கட்டுவகை செய்ய தெரியாததாலே சரக்குகள் கரியாய் போகும். கவனித்து இந்நூலில் நான் சொன்னதால் ஆணவத்தால் நாம் கெட்டு போனோம் என்று அழுவார்கள். கடை சரக்குகளில் இல்லை என்று சொல்லுவார்கள்.

185. மாடு அலைவதைப் போன்று அறிவு கெட்டு மூலிகைகளை பிடுங்கிப் பார்த்து வாதம் செய்ய முயல்வார்கள். கடைசியில் கெட்டு அலைவார்கள். கூண்டு கிளி போல கிடப்பார்கள். மேலே சொன்னது உண்மையாகும். எனவே பார்த்து தெளிந்து அறிவீர்.

186. துருசை வைத்துக் கொண்டு வாதம் பார்த்திரு தங்கமாகும். பொன்னாகும் துருசினால் பொன்னாகும். வீணாக சொல்வதினால் ஒரு லாபமும் இல்லை. நான் இந்நூலில் சொல்வதெல்லாம் உண்மையே. கருத்தூன்றி பார்த்து அறிந்தவன் சித்தனாம்.

187. சித்தனாக இருந்தால் நூல்களை பரிசீலித்து ஆராய்ந்து வழிமுறையை கண்டறிந்து வழியே செய்வானப்பா. மூன்று உலகத்தையும் ஆட்டுவித்த துருசை முறையாக பலிதம் செய்வான். திறமையாக யோகத்தை பார்ப்பான் பார்.

188. துருசு குரு என்பது இதுதான் ஆகும். பச்சை துரிசில் பொன்னாகும். பச்சை என்பது சாதாரணம் அல்ல எல்லாமே வழிஅறிந்த முறைதானாகும்.

189. கல்லுப்பை கட்டும் வழியை என்னுடைய நூலில் சொல்லி விட்டேன். கவனித்து வாதாங்கத்தைப் பார். கடல் நீரை கொண்டுவந்து வாலை சட்டியில் ஊற்றி எரிக்க புகைநீர் ஆகும். பார்ப்பதற்கு தூய்மையான நீர்போல் காணும்.

190. கல்லுப்பு 8 படி மேற்கண்ட கடல்நீர் திராவகம் பத்துபடி கடல்நுரை சுண்ணம் இரண்டு படி ஓட்டில் இட்டு காய்ச்சி அகப்பை கொண்டு இந்த உப்பினை துணியில் வைத்து பந்து போன்று உருண்டையாக கட்டு.

191. இந்த பந்தை அனலில் காட்டி இறுக்கமாக்க வேண்டும். பிறகு துருசு ஒரு சேர், கடல்நுரை சேர் ஒன்று, குப்பைமேனி செடியின் இலை ஒரு சேர் இவை மூன்றையும் ஒன்றாக அரைத்து கல்லுப்பு உருண்டைக்கு கவசம் பூசு,

192. கவசமிட்டு காயவைத்து பத்து எருவில் புடம் போடு. இது போன்று மூன்று முறை புடம் போடு பின்பு கவசத்தை நீக்கி கல்லுப்பை மட்டும் எடுத்து கல்வத்தில் போடு.

193. நன்றாக கட்டியான இந்த கல்லுப்பில் வெள்ளை பாடாணம் சேர். கடல்நீர் திராவகத்தில் அரைத்து கட்டி உருண்டை செய்து காய வைத்து பிறகு கடல்நுரை, சீனம், குப்பைமேனி இலை மூன்றையும் அரைத்து கல்லுப்பின் மேல் கவசம் போடு.

194. கவசம் செய்த கல்லுப்பை இரண்டுமுறை இப்படியே புடம்போட தங்கத்தை போன்ற நிறத்துடனும், வைரத்தை போன்ற உறுதியுடனும் இறுகி காணும். இதை குகையில் வைத்து உருக்கிப் பார்க்க வைரம் போன்று காணும், இதனுடைய செயல் முறைகள் முனிவர்களாலும் சொல்ல இயலாததாகும்.

195. இந்த உப்பை கரியில் வைத்து உருக்கி பார்க்க கரி உறிஞ்சாது, இதனுடைய வீரியம் அதிகம். வாதாங்கத்தில் இதனுடைய செயல்களை சொன்னேன். பொறுமையாய் இதை கொண்டு வாதம் பார்க்க பலிதமாமே.

196. சித்தியாக வேண்டும் என்றால் கல்லுப்புடன் வெள்ளைப் பாடாணம் சேர்த்திட உப்பு உருகி நிற்கும். வேதையின் முடிவு காணும். பாடாணம் சேர்க்கவில்லை என்று சொன்னால் பலிதமில்லை வீணாக போகும் வாதம்.

197. இக்கல்லுப்பு சத்தை கரியில் வைத்து உருக்கி பார்க்க சரிவராமல் போனால் திரும்பவும் மறுமுறை உருக்கி பார்த்திடு. வைரம் போன்று காணும் இம்மாதிரி வரும் பதம் சரியானதாகும்.

198. வைரம் போன்ற இவ்வுப்பு சத்து நான்கு பலம் உருக்கி கொண்டு தங்கத்தை நான்குக்கு ஒரு பாகம் சேர்த்து உருக்கி தங்கத்தின் எடைக்கு நாகம் சேர்த்து பார்க்க களங்காக நிற்கும் நவலோகத்தில் நூறில் ஒரு பாகம் சேர்த்து உருக்கி பார்த்திடு.

199. உருக்கி பார்க்க நவலோகத்தில் களங்கு உட்சென்று பத்தரை மாற்று தங்கமாய் மாறும். உப்புக்கும், காவிக்கல்லுக்கும் சிதறி ஓடாமல் நிற்கும். தங்கத்தை செய்து நல்கவனம் வைத்து வாழ்ந்திடு.

200. வாதம் என்பது சாதாரணம் அல்ல. அமைதியாக இருந்து அறிவு தெளிவு கொள்ள வேண்டும். மனம் துணிந்து வாய் பேச கொன்று விடுவார்கள் உலகத்தோர். எனவே கெட்ட அறிவு கொண்டு வாழாமல் நல்ல புத்தியுடன் வாதவகை பார்த்திடு

201. கல்லுப்பை கட்டி அதனுடன் வெள்ளைப் பாடாணம் சேர்த்து புடம் போட்டு பார்க்க கல்லுப்பு ஈயம் போன்று உருகி சத்தாகும். இப்படி வெண்மையாய் பளிங்கு போன்று காணும். இதனால் கல்லுப்பு மணிகள் செய்து கொள்ள வேண்டும்.

202. மேற்கண்ட கல்லுப்பு மணியை மாலையாக கோர்த்து அணிந்து கொண்டால் நோய்கள் அகன்று போகும். இம்மணியை கொண்டு பஞ்சாட்சர மந்திரமாகிய "நமசிவாய" என்ற எழுத்தையும், எட்டெழுத்தாகிய

"ஓம் நமோ நாராயணாய" என்கிற மந்திரத்தையும் உச்சரித்தால் உச்சரிப்போன் எதிலும் முதல்வனாவான். வாசி எனும் பிராணன் பிராணாயாமம் செய்யின் கூடிவரும். வாதம், யோகம் மற்றும் சகலமும் பலிதமாகும்.

203. கல்லுப்பை உருக்கி சத்தாக எடுத்து இதனுடன் தங்கம் சேர்த்திடு. மேலும் நாகத்தை சேர்த்திடு, வாதம் என்பது எல்லாம் கூடிவரும். உறுதிபெற உண்மையாக சொல்லிவிட்டேன். மூன்று உலக நடப்பும் பலிதமாகும்.

204. எண்ணை ஒன்று சொல்லுகிறேன். காட்டாமணக்கு எண்ணை நான்குபடி எடுத்து அதனுடன் இளநீர் விட்டு காய்ச்சி கொள். மண்டி அடியில் தங்கிவிடும் தெளிவினதை எடுத்து வைத்துக் கொள்.

205., வல்லாரை இலை, புளியோரை இலை, கையான் தகரை இலை, நிலையாவாரை இலை இவைகள் நான்கையும் சட்டியில் நீர் ஊற்றி வாயில் துணிகட்டி துணியில் இலைகளை போட்டு மேல்சட்டி மூடி புட்டு அவிப்பதை போன்று அவித்து கொள்ளு. பிறகு அந்த இலைகளை பிழிந்து சாறெடுத்து மேற்கண்ட எண்ணெயில் சம எடை ஊற்றி மூன்றுநாள் கழித்து கடுக்காய், சிவதைவேர், கடுகு, கோராசனையும் அதனுடன் சேர்த்திடு.

206. தான்றிகாய். வாலுழலை, கொத்தமல்லி, நெல்லிகாய், நீர்முள்ளி இவைகளோடு கிராம்பு, மிருதார் சிங்கி இவைகள் ஒவ்வொன்றும் 35 கிராம் இடித்து முன்பு செய்த எண்ணெயில் போட வேண்டும் போட்டு எரித்து பதமாக இறக்கி கொள்ளு.

207. இந்த எண்ணெயில் ஒரு கரண்டி அளவு எடுத்து முன்று நாட்கள் சாப்பிட்டு வர உடலில் உள்ள நோய்கள் விலகும். மேகநோய், குஷ்ட போன்ற வியாதிகள் இந்த எண்ணெயால் விலகும்.

208. இந்த எண்ணெயை சாப்பிடும்போது சர்க்கரை சேர்த்து சாப்பிடு. உடல் வாதநோய் எண்பதிநான்கும். பித்தமும் விலகிப் போகும். அண்டவாதநோயும், சிலேத்தும நோயும், க்ஷயகாசம், ஈளை, விப்புருதி இவைகள் அத்தனை நோயும் இந்த எண்ணெயினால் தீரும்.

209. ரத்தபித்தம், காசம் இவைகளுடன் பவுத்திரம் மகோதரம், பித்தமகோதரம் போன்ற கடினமான வியாதிகள் அனைத்தும் விலகியோடும்.

210. ஜீவனம் நடத்த இந்த எண்ணெய் தயாரித்து சரியான முறையில் விற்று, இதனால் வாதவகை செய்திடு. இந்த எண்ணெயால் சகல வியாதிகளும் போகும். இதை விட்டு சிலர் கொட்டைஆமணக்கு எண்ணெய் தயாரித்து விற்று வியாதிகள் தீராமல் போனதால் சாஸ்திரங்களை பொய் என்று கூறுவார்கள்.

211. உலகத்தோர்க்கு என்னுடைய வாதாங்க தீட்சைவிதி நூலில் அழகாக சொல்லிவிட்டேன். சாஸ்திரத்தை பொய்யென்று சொல்லிடும் வாதம் பார்ப்பவர்களையும் அவர்களின் செயல்களையும் தெளிவாக சொல்லி விட்டேன். எனவே நல்லதையும் கெட்டதையும் வித்தியாசம் பார்த்து வாதாங்கம் செய்து பார்த்திடு.

212. இந்த எண்ணெய் சொன்ன விதம் யாதெனில், ஈஸ்வரியும், அகத்தியரும் என் குருவும் சொன்னதாகும். இதை நான் உபதேசம் பெற்று உலகத்தில் பிழைப்பதற்காக என் குருவாகிய தேரையருடைய பாதத்தினை வணங்கி உலகத்தில் சொன்னேன்.

213. இந்த வாதாங்க தீட்சை முன்னூறில் வெள்ளி வித்தை, பொன்வித்தை போன்றவைகள் செய்முறையோடு விளக்கமாக சொல்லி விட்டேன் யோகம், ஞானம் போன்றவற்றையும் ஒரு வாதிக்கு என்ன தெரிய வேண்டுமோ அவைகள் அனைத்தையும் பற்றி கூறினேன். புரிந்து கொண்டு வழி நடந்தால் வாதம் கூடும். தங்கம் என்ற வித்தை செய்யும் வழி பிறக்கும்.

214. வெள்ளை பதங்கத்தை சொல்கிறேன் கேள், வெள்ளைப் பாடாணம், குதிரைப் பாடாணம், தாளகம் பூமியில் விளையும் உப்பு, வீரம், சாரம், துருசு, சீனம், கல்லுப்பு, வெடியுப்பு, கௌரி பாடாணம், வெள்ளை அப்பிரேகம், நாகம், வெள்ளீயம் இவைகள் எல்லாம் ஒன்றாகச் சேரு.

215. மேற்கண்ட அனைத்தையும் எருக்கம் பாலால் அரைத்துக் கொள். இப்படி ஆறரை சாமம் அரைக்க வேண்டும். இதை வெள்ளி கிண்ணத்தில் வைத்து மற்றொரு வெள்ளி கிண்ணத்தை மேல்மூடி சீலை கவசம் செய்து மூன்று கால்களை உடைய சற்று உயரமான முக்காலியில் வைத்து அதன்கீழ் அகல் வைத்து விளக்கேற்றி எரித்திடு.

216. அதாவது அந்த வெள்ளி கிண்ணத்தின் அடியில் அகல் வைத்து திரி போட்டு முன்பு சொன்ன எண்ணையை மூன்று நாட்களுக்கு அணையாமல் எரிய விடு.

பிறகு அந்த கிண்ணத்தில் உள்ள பதங்கத்தை எடுத்து வெள்ளெருக்கம் பாலால் அரைத்து உருண்டை செய்து வெய்யிலில் காய வைக்க வேண்டும். இதற்கு மேல்கவசம் சொல்கிறேன் கேள்.

217. அப்பிரேகம் 175 கிராம், வீரம் 8 முக்கால் கிராம் இவைகள் இரண்டையும் நீரால் அரைத்தால் நவநீதம் ஆகும். இதை முன்பு செய்த உருண்டை பதங்கத்திற்கு மேல் கவசம் செய்து சூரிய வெய்யிலில் ஏழு நாட்கள் காயவைத்து எடுக்க வேண்டும். (இதற்கு சூரியபுடம் என்று பேராகும்) இது வைரம் போன்ற பற்பமாகும்.

218. மேற்கண்ட பற்பத்தை கரிநெருப்பில் வைத்து உருக்கவும் வெள்ளீயம் இதனுடன் உருக்கும்போது சேர்க்க வேண்டும். அப்போது இது

வெண்மையாக உருகிவரும் அந்த பதம் பார்த்து பாதரசத்தை சமஎடை இதனுடன் சேர்க்க வேண்டும். இதே எடைக்கு வெள்ளை பாடாணம் சேர்க்கவும் பிறகு தாய்பாலில் ஒரு சாமம் அரைக்கவும்.

219. அரைத்து சூரிய வெயிலில் காயவைத்து முன்பு எப்படி கவசம் செய்தோமோ அப்படியே இதற்கு கவசம் செய்து புடம் போட்டு எடுத்து கொள். இதை வெள்ளி செம்பில் நூறு பாகத்தில் ஒருபாகம் கொடுத்து உருக்க இருபத்தைந்து மாற்று காணும். சூதவெள்ளி (பாதரச வெள்ளி) ஆகும். உலோகம் முழுதும் வெள்ளியாகும்.

220. தவறான எண்ணங்களை நீக்கி அம்பாளை தரிசனம் செய்து யோகத்தால் சியம்பு ஒலி ஓசை இன்பம் கண்டு, நடனம் கண்டு, சிவனின் சொத்தாகிய இந்த வெள்ளியை பத்திரபடுத்து. சித்தர்கள் அனைவரும் மறைத்து வைத்த வழிமுறையாகிய இதை இந்த வாதாங்க தீட்சை முன்னூறில் விளக்கமானது.

221. வெள்ளி வித்தைக்கு அடுத்து ஒன்று கூறுகிறேன். இது மிகவும் எளிது பொன்வித்தை ஆகும். நம்பிக்கையுடன் வாதம் பார்த்திடு. இந்த வாதாங்க ஞானத்தில் வெள்ளி முதன்மையானது ஆகும். இதனால் அனைத்தும் பலிதமாகும்.

222. பலிதமாகி பலனடைய வெள்ளிவித்தை பார்த்திடு உடனே கூடும். முடிவாக வேண்டும் என்றால் பொன்வித்தை பார்த்திடு. அடுத்து செம்பு வித்தை செய்து பார்த்திடு. வேண்டும் என்றால் இவைகள் நல்லபடி ஆக வேண்டும் என்றால் யோக மார்க்கத்தில் சென்றால் நல்லதாகும்.

223. வெள்ளியை சரியான முறையில் செய்து பார்த்து அதை கொண்டு ஞான வழியில் செல்வாயாக. கலகம் செய்து வாழ்வதனால் பயன் ஒன்றும் இல்லை. விளக்கம் கரு அறிந்தோன் வாதியாவான், அறியாதவன் பேதையை போன்று ஆவான்.

224. பேதை போன்று இல்லாமல் பேயை போன்று அலையாமல் இந்த நூலினை கவனித்து பார். உண்மையானவர்கள் நிச்சயமாக உண்மை வாதம் காண்பார்கள்.

225. வாதம் செய்யும் பலர் அறியாமல் வாதம் கூடும், வரும் என்று பொய்யுரை கூறுவார்கள். இவர்கள் திருடர்களாவார்கள். இவர்களுடைய பேச்சை நம்ப வேண்டாம். மாற்றி சொல்வதினால் பலன் ஒன்றும் இல்லை. நன்கு படுத்து உணர வேண்டும். முக்தி சித்தி இரண்டும் உண்டாகும்.

226. கருத்தை அறியாதவர்கள் விளக்கத்தையும், வழியையும் காணமாட்டார். திருடர்கள் உண்மையை காண மாட்டார்கள். மாறாக வீண் வார்த்தைகளை சொல்லி கொண்டு இருப்பார்கள். யோக வழி பார்த்து ஆறு ஆதாரங்களையும் பார்க்க மாட்டார்கள். பொதிகையில்

வாழும் சித்தர் நானே என்றும் பெருமைபட்டுக் கொள்வார்கள். இவர்கள் வீணர்கள் ஆவார்கள்.

227. இன்னும் ஒரு வெள்ளி வித்தை கூறுகிறேன். இதை வெளிப்படையாகவே கூறுகிறேன். எனவே புரிந்து கொண்டால் பலனுண்டாகும். வெள்ளிவித்தை பார்த்தறிந்தால் யோகம் முதலானது சித்தி ஆகும். வள்ளலார் சொன்ன வெள்ளிவித்தையை கேள்.

228. வெள்ளை பாஷாணத்துடன் நவச்சாரம் அரை சேர் சேர்த்து பொடியாக செய்து பானையில் போட்டு மேல் மூடி செய்து சீலை கவசம் செய்து எரித்து எடுத்து வைத்து கொள்ளவும்.

229. பாத இரசம் ஒருசேர் எடுத்து கல்லுப்பில் எரிக்க வேண்டும். சூதபற்பம் (ரசபற்பம்) வெள்ளை பாடாணம் இவைகள் இரண்டையும் சேர்த்து அரைத்து வெள் எருக்கம்பாலில் ஆட்டி உருண்டைசெய்து இதற்கு அப்பிரேகம் கவசம் செய்து புடம்போட்டு எடுத்து கொள்.

230. வெள்ளீயம் ஒருசேர், இரும்புத்தூள் ஒரு சேர், வெள்ளை பாடாணம் கால்சேர் சேர்த்து உருக்க உருகும். இதனுடன் வெண்காரம் பாதி அளவு சேர்த்திடு அது போன்று இரண்டு முறை உருக்கிடு. இரும்பு வெள்ளி போன்று ஆகும்.

231. இதனுடன் நவச்சாரம் சேர்த்து அரைத்து வில்லை செய்து புடம்போட்டு உருக்கி பார்த்திடு. கசடற்று கட்டியான வெள்ளி போலாகும். இந்த வெள்ளியை முன்பு வெள்ளெருக்கம்பாலால் ஆட்டி புடமிட்ட குருவில் நான்குக்கு ஒரு பாகம் கொடுத்து உருக்க பத்துமாற்று காணும்.

232. நவச்சாரத்தை விட்டால் வெள்ளியாகாது. இரும்பு ஈயத்துடன் சேராது. ஈயம் நீர் வாங்காது. பாதரசம் சேராமல் போனால் வெள்ளீயம் நீர்வாங்காது. இவைகள் எல்லாம் சேர்ந்தாலே வெள்ளிவித்தை பலிதமாகும்.

233. வாதவித்தையால் அனைத்தும் சித்தியாகும் வெள்ளி சித்தியாக வெள்ளை பாடாணம் வேண்டும். யோகம், ஞானம் இவைகளால் அறிந்து சித்திக்க எல்லாம் சித்தியாம்.

234. வெள்ளி வித்தையை முடியாது என்று நினைக்காதே சரியான வழியாக முறையோடு செய்து பார்க்க நிமிடத்தில் பலிதமாகி நிற்கும். வீணென்று நினைக்காதே ஆகும் என்று சிவபத்தர்களாகிய சித்தர்கள் சொன்னார்கள்.

235. யோகத்தை முதன்மையாய் பார்த்திடு இதனால் மூன்று உலகமும் ஞானத்தை உயர்வாக எண்ணும். முறையாக செய்தால் எல்லாம் சித்தியாகும் வெள்ளீயம் நீர் வாங்கினால் அனைத்தும் பலிதமாகும்.

236. வெள்ளி வித்தையை கண்டுக் கொண்டால் காட்டிலே அலைந்து திரியவேண்டாம்; கருத்துணர்ந்து பார்த்தால் பலிதமாம். வீணாக

திரிவதனால் பலன் ஏது? உணர்ந்து பார்க்கவில்லை என்றால் பலிதமில்லை; வானமும், விண்ணும் உன்னுடையது என நினைத்து வெள்ளி வித்தை செய்து பார்த்திடு.

237. இந்த வெள்ளி வித்தையை எளிதில் ஆக ஒருமுறை கூறுகிறேன்; ஏழைவாதிகள் கருத்துடன் உலகத்தில் செய்து பார்ப்பார்கள். நாற்று நட்டதை போன்று அழகாக பலிதமாகும்.

238. இந்த வெள்ளி வித்தை அகத்தியர் எனக்கு சொன்னதாகும். இம்முறையை மனதினால் பார்க்காமல் அறிவினால் பார்த்திடு. துரோகிகளளுக்கு இந்த வகை பலிதமாகாது. நல்ல என்னம் கொண்டோர்க்கு வழியறிந்து, முறை அறிந்து பார்த்திட சித்தியாகும்.

239. உட்கரு அறியாதவர்கள் நூலை பார்க்காதவர்களே, வழிவகை தவறி வாதம் செய்து கரியாக்கி வாதிமார்கள் கெட்டுப்போனேன் என்பார்கள். இந்த வெள்ளி வித்தை எளிமையானதாகும்; இதன் பலனறிந்தால் செய்ய செய்ய மகிழ்வுண்டாகும் உலகத்தோர்க்கு.

240. வெள்ளை பாடாணாம் ஒருசேர் கல்வத்திலிட்டுக் கொண்டு பாதரசம் ஒருசேர், நவசாரம் ஒருசேர், இந்த மூன்றையும் கல்வத்தில் பொடி செய்து கொண்டு பிறகு கேள்.

241. பானை இரண்டு எடுத்து மேற்கண்ட சரக்குகளை அதில் ஒன்றில் போட்டு மற்றொன்றை மேல்சட்டி மூடி மண்சீலை செய்து (நான்கு) எட்டு சாமம் தீஎரிக்க வேண்டும். இவ்வாறு எரித்திட மேல்சட்டியால் பதங்கம்படிந்திருக்கும்; அதை வழித்து கொள்ளு.

242. வழித்த பதங்கத்தை எருக்கம் பால் விட்டு அரைத்து உருண்டை செய்து காயவைத்து அப்பிரேக நவநீதத்தை (முன்பு சொன்னது) உருண்டைக்கு மேல் கவசம் செய்து காயவைத்து புடம்போட உருகி கட்டியாகும்; இது குருவாகும்.

243. வெள்ளீயம் ஒருசேர், பாதரசம் கால்சேர், உருக்கி புட்டு போல் செய்து கல்வத்தில் போட்டு முட்டை ஒருசேர், சுண்ணாம்பு, உவர்மண் இவைகள் போட்டு சுத்திசெய்து தூய்மைபடுத்தி எடுத்துக்கொள்.

244. வெள்ளீயம் புட்டை நீரால் அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம்போடு வெள்ளீயம் நீர்போகப் போட்டெடு பிறகு நவச்சாரம் போட்டு உருக்க வெள்ளி போன்று காணும்.

245. வெள்ளீயம் வுருகும்போது தட்டினால் சப்தம் கேட்கும். சரிகை வெள்ளி போல் காணும்; இதை உருக்கி நூற்றில் ஒருபங்கு முன்பு சொன்ன குருவில் கொடுத்து உருக்க வெள்ளி பத்து மாற்று காணும்.

246. வழி அறிந்து செய்தால் வெள்ளி வித்தை எளிதாகும். சிறந்த வழியில் செய்தால் உடல் காயசித்தி உடல் உயர தூக்கும் கவனசித்தியும்

எளிதில் கூடும். வெள்ளியால் அதிக வித்தை செய்யலாகும்; சித்தியும் கைகூடும்.

247. மேற்கண்ட விந்தையை சிவன் சக்திக்கு சொல்ல. சக்கி நந்திதேவருக்கு சொல்ல, நந்தி அசுவனி தேவர்க்கு சொல்ல, அசுவனியும் கற்றறிந்து தன் சீடரான தன்வந்திரிக்கு சொல்ல, தன்வந்திரி அகத்தியருக்கு சொல்ல அகத்தியரும் புலத்தியருக்கு சொன்னார்.

248. புலத்தியர் தேரையருக்கு சொல்ல தேரையர் யூகிமுனிக்கு சொல்ல யூகிமுனியும் மகிழ்ச்சியுற்று ஆயுள் வேதத்தை பார்த்து உலக மக்கள் பிழைப்பதற்காக இந்த வாதாங்க முன்னூறில் பெரியவர்களின் பாதத்தை வணங்கி அஞ்சாமல் எழுதினேன் வாதாங்கத்தை தானே.

249. இந்த வெள்ளி வித்தையை தாயாகிய ஈஸ்வரியும் குருவும் சொல்ல அதன் பொருளை ஆராய்ந்து சுருக்கமாக முன்னூறில் எழுதி வைத்தேன். வெள்ளியின் வித்தை போக்கை விளக்கமாக உலகத்தில் சொன்னேன்.

250. தீட்சை விதி நூலில் களங்குடன் வெள்ளியை செய்வழி சொல்லிவிட்டேன்; பார்த்து பகுத்து செய்து பார்த்திடு வாதங்க முன்னூறில் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று சொல்லிவிட்டேன் கவனித்து பார்த்திடு.

251. என்னுடைய சாத்திரமாகிய இந்த நூலை முழுதுமாக படித்துப் பார். பார்த்தால் அனைத்தும் விளக்கமாக தோன்றும் பிணம் போன்று அலைத்தால் ஆவது ஒன்றும் இல்லை. இதில் உள்ள ஒவ்வொரு விஷயங்களும் தவறாது எனவே விரைவாக பார்த்திடு. அறிவுள்ளவன் தெரிந்து கொள்வான் அறிவுடன் பார்த்திடு.

252. வெள்ளி வித்தையை உலகவாதிக்காக அன்புடன் சொல்லுகிறேன்; உலகத்தில் கேடு உடையவர்கள். (பாவம் செய்தவர்கள்) பிழைக்கத்தெரியாமல் அலைவார்கள். நன்மையான வழியறிந்தால் சித்தியாகும்.

253. சித்தியாக வெள்ளை பாடாணத்தை கொண்டு வாதம் பார்க்க பலிதமாம். விஷயமறிந்து பரம சிவயோகியாக சாது போன்று வாழ்ந்து உலகம் உயர்வாக எண்ண வாழ்ந்தால் அனைத்தும் பலிதமாம்.

254. மேற்கண்ட முறைப்படி வாழ்ந்தால் அனைத்தும் கூடிவரும்; வெள்ளி வித்தை எளிதில் ஆகும். நூல் முழுவதுமாக படித்து அறிந்து பார். உலக ஜாலவித்தை எல்லாம் இந்நூலில் அடக்கமாகும்.

255. வாதாங்க நூலாகிய இதில் கருத்து கொண்டு பரீட்சித்து பார்த்திட அனைத்தும் சித்தியாகும். செம்பு வித்தை செய்து பார் சகலமும் சித்தியாகும்; பருந்தை போன்று அலைந்து திரியாமல் கவனமுடன் பார்த்திடு.

256. வெள்ளியைவிற்று அதனால் ஞானயோகம் செய்திடு

சுழிமுனையாகிய மூலாதாரத்தில் கவனம்வைத்திடு. வாதி என்ற பெயர் இரும்பை கொண்டு முதலில் விதம் பார்த்திடு. சகலமும் விளங்கிவிடும் பலிதமாகும்.

257. நவச்சாரத்தை வெள்ளை பாடாணத்தில் சேர்த்து அரைத்திட கட்டிபோகும் முட்டை ஓட்டில் வெள்ளீயத்தை கொடுக்க நீர்வாங்கும். காரத்தை கொண்டு வெள்ளீயத்தை உருக்கி நீர்வாங்கு பதினாறு மாற்று காணும்.

258. அயச்செம்பை முதலில் செய்து செம்பு எடுத்து வெள்ளியில் கொடுத்து உருக்க வெள்ளி பழுக்கும் அனைத்து சரக்கும் இதில் மடியும்.

259. இந்த காண்டத்தில் (பகுதி) உள்ள விஷயங்கள் அனைத்தும் எடுத்து காட்டுகளாகும். விதியுடையவன் கண்டுக் கொள்வான் இல்லாதவன் வீணனர்வான். கருத்துடையவன் காண்பானப்பா உண்மை பொருள் அறிந்தால் வாதமாமே.

260. வாதி என்ற பேர் கொண்டால் சீனச்சுண்ணம், வெடியுப்பு சுண்ணம் செய்து பார். சாதிப்பவன் என்ற பேர் படைத்தால் தபம் போச்சு, சாத்திரத்தை நம்பினால் சரிதை போச்சு, வேதி என்ற பேர் படைத்தால் ஞானம் போகும். வேதாந்த பொருள் அறிந்தால் ஜோதிட நூல் பொய்யாம். பாதிமதியணிந்த சிவபிரான் சொன்னதாகும்.

261. சவுக்கார சுண்ணத்தை சொல்லுவேன். சத்தி நாதம்தான் பூநீரானது. நல்ல சுக்கான் கல்தான் வழலை என்ற கல்லானது.

262. இவைகள் இரண்டும் சேர்ந்து சவுக்காரம் என்ற பேராச்சு இதனுடன் கல்லுப்பை சேர்த்தால் கருஞ் சுண்ணமானது.

263, 264. காரத்துடன் காரமேற நல்ல சவுக்காரமானது. இந்த கல்லை எடுத்து இதனுடன் உவர் உப்பு சுண்ணம் கரைத்து கல்லையும் போட்டு எரிக்க சுத்தியாகும். இதை கரி நெருப்பில் ஊதி சுண்ணாம்பாய் செய்திடு.

265, 266, 267. பூநீறு பத்து படி அளந்து பானையில் போட்டு கல் சுண்ணம் ஒரு படி போட்டு. கல்லுப்பு சுண்ணம் ஒரு படி போட்டு குழம்பாக காய்ச்சி குழம்பை இறுத்து எடுத்துக் கொள். இந்த குழம்பினால் அதிகமாக வாதம் செய்யலாகும். ஆதி சவுக்கார குழம்பு என்று பெயராகும்.

268. எல்லா சரக்குகளும் கட்டும் ரசவாதம் எளிதாகும்.

269, 270, 271. சீனம் ஒருசேர் எடுத்து நல்ல சட்டியில் போட்டு பொரித்துக் கொண்டு முட்டையின் வெண்கருவிட்டு அரைத்திடு. இவ்வாறு ஒருசாமம் அரைத்து வில்லை செய்து சூரிய வெய்யிலில் வைத்து கல்சுண்ணம் வில்லைக்கு மேலும் கீழும் வைத்து பெரியபுடம் போட்டு எடுத்துக் கொள்ளு. இது கடும் சுண்ணமாகும்.

272, 273. இந்த சுண்ணத்துடன் முன் செய்த ஆதி சவுக்கார குழம்பில்

அரைத்து வில்லை செய்து சூரியனில் காயப் போடு பின் புடம் போட்டு எடுத்து கொள்ளு.

274, 275, 276. நவச்சாரத்தின் மேல் இதை கட்டி சூரியனில் காயவைத்து புடம்போட்டு எடுத்துப் பார். யானை தந்தத்தை போன்ற நிறத்துடன் காணும். நாகத்தை உருக்கி சமஎடை சேர்க்க உருகும். உருகி நல்ல கட்டாகும், வேதையாகும்.

277. புகையாமல் கட்டி நிற்கும், வாதம் நிலைத்து பலிதமாகும். வெள்ளியில் இதை நூற்றுக்கு ஒரு பாகம் சேர்த்து உருக்க பத்து மாற்று காணும்.

278, 279. புடம் போட அழகாக நன்கு புடம் இறங்கி நிற்கும். இதை கொண்டு விற்று நல்ல ஞானவழியில்சென்று பார்.

280, 281. எட்டு எழுத்து மந்திரமாகிய "ஓம் நமோ நாராயணாய" என்ற மந்திரத்தை ஜெபித்து மூலாதாரமாகிய சுழிமுனையில் மனம் லயித்து யோகத்தை பார்த்திடு ஜீவன் முக்தியாகும்.

282, 283. அஷ்டமா சித்திகளும் யோகத்தால் கூடும். திரியாமல் சிவபிரானை வணங்கி போற்றி அவரோடு கலந்திடு. யாருக்கும் கொடுமைகளை செய்திடாதே வாதியே.

284. நல்ல கைபாக வழிமுறைகளின் படி வாதம் செய்ய சித்தியாகும், முத்தியாகும். சிவன் சொன்ன வடமொழியாகிய சமஸ்கிருதத்தில் இருந்ததுதான் ஆகும்.

285, 286. நன்கு பாடுபட்டு வாதம், ஞானம், யோகம் பார்த்திடு. அப்படி இருந்தால் ருத்திரதாண்டவம் போல் அனைத்தும் ஆடும். எப்போதும் நல்ல சிவபூசை செய்திடுவாய்.

287. வாதம் கைகூடி வந்துவிட்டால் அதற்கு அடுத்து ஞானம் பார்த்திடு. வாதம் செய்யும்போது சரக்குகள் பாழாகாமல் கவனமாக வாதம் பார்த்திடு. அனைத்தும் வெற்றியாகும்.

288. சித்தர்களின் மறைப்புகளை நான் வெளிப்படையாக சொன்னேன். இல்லறத்தோர்களுக்கு சித்தியாக வழியும் சொன்னேன்; புத்தியாக கண்டு பார்த்திடு.

291, 292, 293. கெந்தகத்தால் பொன்னாகும்; நல்ல புகழ் உண்டாகும். நந்தி எட்டாயிரத்தில் இதைகூறினார். இரசத்தை வாதம் செய்து வெற்றிகண்டால் மற்றவிதம் நிலைபெறும். இந்த வாதாங்க தீட்சையில் வழிவகைகள் செய்ய சொன்னேன்; நல்ல வழியை கண்டுபிடித்து வாதாங்கம் பார்த்து வெற்றி கொள்.

294. வடமொழியில் சிவன் சக்திக்கு சொல்ல நந்தி கேட்டு, அஸ்வினிக்கு சொல்ல, அஸ்வினி தன்வந்திரிக்கு சொல்ல, தன்வந்திரி

அகத்தியருக்கு சொல்ல, அகத்தியரும் புலத்தியர்க்கு உபதேசித்தார்.

295. புலத்தியரும் கற்றுணர்ந்து தேரையருக்கு சொல்ல, தேரையர் பார்த்து உணர்ந்து யூகிமுனிக்கு உபதேசிக்க யூகிமுனி உலகத்துக்காக இந்த ஆயுள் வேதத்தை என் குருவின் அருளால் கூறினேன்.

296, 297. செய்முறை விளக்கங்களை இந்த தீட்சைவிதியில் சொன்னேன்; நல்லவர்களுக்காக வெளிப்படையாகவும் கருத்தாகவும் சொல்லிவிட்டேன். வாதாங்கத்தில் நல்லது, கெட்டது இரண்டையும் பகுத்துப் பார்த்து சாத்திரங்களை ஆராய்ந்து வாதம் பார்.

298. பெரியவர்கள் சொன்ன வழிமுறைப்படி பார்த்து தேர்ச்சியடை; சாத்திரத்தை பொய் என்று சொல்லாமல் பகுத்து பார்த்து உண்மை அறிந்து கவனமுடன் செய்தால் அனைத்தும் பலிதமாம்.

299, 300. பலிதமாக நூலை கருத்து வைத்து பார்த்திடு. வழிவகைகள் வகுத்து தெளிந்து சென்றிடு. பொருளை தேடி நரகில் விழாதே. வாதாங்கத்தை நினைவில் கொண்டு கவனமுடன் வாதம் பார்.

301. சிவனுக்கும், சத்திக்கும் வணக்கம்; நந்திக்கு வணக்கம், அகத்தியருக்கு வணக்கம், தன்வந்திரிக்கு வணக்கம், புலத்தியர்க்கு வணக்கம், தேரையருக்கு வணக்கம் இதை யூகிமுனியாகிய நான் கூறுகிறேன்.

302. கருத்துடைய படிப்பாளிக்கு இந்நூல்கிடைக்கும். இதனால் பெரிய, பெரிய வாதம் எல்லாம் எளிதில் ஆகும். இவ்வுலகர்தோர்க்கு மனது வந்து நானும் ஆயுள் வேதத்தை கருத்தாக சொல்லிவிட்டேன்; சித்தி-முத்தி கிடைக்கும் பார்ப்பாய்.

முற்றும்

இணைப்பு-2

யூகிமுனி

வாத வைத்திய விளக்கம் 200

1. சிவபிரானின் பாதமலர் கமலங்களை வணங்கி, வினாயகனின் பாதங்களை நினைத்து வணங்கிக் கொண்டு எனது குருவினுடைய பாதங்களையும் பணிவுடன் வணங்கி இந்த வாத வைத்திய விளக்கம் தன்னை அனைவருக்கும் கூறுகின்றேன்.

2. சிவன் சக்திக்கு சொல்ல, சக்தி நந்திக்கு சொல்ல, நந்தி தன்வந்திரிக்கு சொல்ல, தன்வந்திரி அகத்தியருக்கு சொல்ல, அகத்தியரும் கேட்டறிந்து புலத்தியருக்கு உபதேசிக்க,

3. புலத்தியரும் தேரையருக்கு சொல்ல, தேரையரும் யூகிமுனிக்கு குறிப்புடன் சொல்ல நானும் உலகத்தில் அனைவரும் பிழைக்க இதை கூறுகிறேன். சாத்திரத்தை வெற்றி பெற படித்தால் சித்தியாம்.

வழலையுப்பு

4. பூநீறு நான்கு படி, சுக்கான் கல் நான்கு படி, சிறு நீர் எட்டுபடி, இவைகள் எடுத்து பானையில் போட்டுளிரித்து எடுக்க வழலை உப்பாகும்.

5. மேற்கண்ட வழலை உப்பெடுத்து கல்வத்தில் போட்டு அரைத்து ஐந்து சுண்ண குகையில் வைத்து புடமிடு.

குறிப்பு:-

(இந்த ஐந்து சுண்ண குகையை பற்றி வாதாங்க தீட்சையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது பார்த்து அறிந்து கொள்க.)

இவ்வாறாக புடமிட சவுக்காரமாகிவிடும்; சரியாக முறையுடன் செய்யா:விடில் கைகூடாமல் போய்விடும்.

சகல ரோகத்திற்கும் சீனவன்னி பஸ்பம்

6. குஷ்டமுதல் சர்வரோகமும் தீர சீனத்தை மேற்கண்ட முறையோடு சோத்தரைத்து காடாக்கினியாக எரித்திடு; வெள்ளையானபற்பமாகும்; இதனால் நோய் போகும்; இதனால் வாதம் பார்த்திடலாகும்.

கருவங்க கற்பம்

7. பாதரசம் 35 கிராம், கருவங்கம் 35 கிராம் எடுத்துக்கொண்டு இதனுடன் காற்றாழைச் சாறுவிட்டு அரைத்து சட்டியிலிட்டு எரிக்க வேண்டும், இம்மாதிரி ஐந்து முறை எரித்திட வேண்டும். இந்த பற்பத்தால் சகல நோய்கள் போகும், இந்த வாதத்தை பழிப்பவர்கள் நரகத்தில் செல்வார்கள் இது உண்மையே.

பூர தாளக பற்பம்

8. கற்பூரத்துடன் அரிதாரம் சமஅளவு எடுத்து அரைத்து சட்டியில் போட்டு எரிக்க பூர தாளக பற்பம் அடியில் நிற்கும். நோயாளிக்கு பணஎடை கொடுக்க க்ஷயகாசம், இருமல் போகும்.

வெடியுப்பு செயநீர்

9. வெடியுப்பு 80 கிராம், அதே எடைக்கு சீனம், நான்கு புளி சேர்த்து இடித்து பார்க்க இது சுண்ணாம்பாம், இதை செயநீர் செய்ய சரக்குகளை கட்டும்.

தாளக பற்பம்

10. சீனம், வெடியுப்பு இவைகளை சேர்த்தரைத்து சுண்ணம் செய்து அரிதாரத்தின் மேல்பூசி புடம்போட்டால் பற்பமாகும். இதனால் க்ஷய காசம் போகும். வாதம் தெரிந்த வைத்திர்க்கு வழி தெரியும்

சீன சூத பற்பம்

11. சீனம் 35 கிராம் இதற்கு சமஎடை பாதரசம் சேர்த்து பானையில் போட்டு எரித்து எடுக்க வெள்ளையாக இருக்கும். இதில் கடுகளவு நோயாளிக்கு கொடுக்க நோய்கள் பறந்து போகும்.

செயசூதபற்பம்

12. நாட்டு உப்பு நான்குபடி, செங்கல்தூள் நான்குபடி, சட்டியில்விட்டு இது மூழ்கும்படி மூடி சீலைமண் செய்து முன்நூறு நாழிகைகள் எரித்தெடுக்க செயசூத பற்பமாகும். இதனால் சகல நோய்களும் காணாமல் போகும்.

துருசு செம்பு

13. இரும்புத்தூள் மூன்று பாகம், துருசு நான்கு பாகம், சீனாகாரம் ஒருபாகம் சேர்த்து தைலத்தில் விட்டு காய்ச்சி பிறகு உருக்கு பார்க்க செம்பாகும், ஏழு மாற்று காணும் செம்பாம்.

சீனரச பற்பம்

14. மேற்கண்ட செம்புடன் சீன ரசம் சேர்த்து எரிக்க பற்பமாகி நிற்கும் இந்த பற்பத்தை திரிகடுகில் (சுக்கு, திப்பிலி, மிளகு) மூன்று நாட்கள் உள்ளுக்கு கொடுக்க கருங்குட்டம் போகும். வாத பித்த சிலேட்டுமத்தினால் வருகின்ற நோய்கள் விலகும்

தாளகபற்பம்

15. அரிதாரத்தின் மேல் வளையலுப்பை கவசம் செய்து சுட்டெடுக்க சிவப்பாக நிற்கும், சீன சுண்ணத்தை இதற்குமேல் கவசம் செய்து வழியுடன் புடமிட வெண்மையாய் காணும். இதனால் க்ஷயங்கள் போகும்.

சிவப்பு செம்பை வெள்ளியில் கொடுக்க

16. மேற்கண்ட நல்ல சிவந்த நிறச் செம்பை எடுத்த வெள்ளியில் எட்டல் ஒருபாகம் சேர்த்து உருக்க தங்க மாகிவிடும். இதை கொண்டு ஞான யோகத்தில் சுழிமுனைதியானம் செய்திடு.

அயச்செம்பு வேதை

17. அயச்செம்பு செய்தால் வெள்ளியில் நான்கில் ஒருபாகம் கொடுத்து உருக்கி அதற்கு சமஎடை தங்கம் சேர்த்து காவிக்கல் புடம்போட தங்கமாகும் அத்தனையும்.

நாகச் செம்பு

18. நாகம் ஒரு பலம் எடுத்து அதே எடை பாதரசம் விட்டு உருக்கி பார்க்க புட்டுபோல் காணும். இதனுடன் வீரம் சேர்க்க பற்பமாகும். இதனுடன் மனோசீலை பாடாணம் சேர்த்து உருக்க செம்பாகும்.

19. மேற்கண்ட செம்பை எட்டில் ஒருபாகம் கொடுத்து உருக்க தங்கமாகும், மாற்று காணும். யோகத்தை செய்திட ஞானம் வரும். சிவபூசை செய்து வாழ்பவனுக்கு இச்செல்வம் வரும்.

நாக சுத்தி

20. நாகத்தை ஒரு பலம் எடுத்து உருக்க இலுப்பை எண்ணெயில் போட சுத்தியாகும் உண்மையாம்.

நாகரச சிந்தூரம்

21. நாகத்தை சுத்தி செய்து நாகத்தின் சமஎடை ரசத்தை போட்டு உருக்கி பிறகு செயநீரில் அரைத்து வில்லைசெய்து பானையில் போட்டு எரித்தெடுக்க சிவப்பாக காணும் சிந்துாரமாகும்.

சுரப்புக்கு அயகாந்தம் சூரணம்

22. கரும்புசாறு, சுரைவிதை, சுக்கு இவைகளை சமஎடை எடுத்து இரும்பு காந்தம், பதினாறு கடுக்காய், பதினாறு நெல்லிவிதை, இவைகளுடன் சேர்த்து உண்டுவர வருகின்ற நோய்கள் எல்லாம் விலகி போகும்.

அமுரி முறிக்காதவன் வாதியல்லயெனல்

23. சாத்திரத்தை பொய் என்று அறியாதவர்கள் சொல்வதினால் சாத்திரம் பொய்யாகுமா, நல்லவாதம் சரியாகச் செய்திட வாதம் பொய்யாகுமோ, அமுரியை முறித்தாலே காரமாகும்; அமுரி என்ற சிறுநீரை முறிக்காதவன் ஊனமான விதியாவான்.

மூத்திர முறிக்கும் விபரம்

24. சிறுநீர் ஆறுபடி கற்றாழை சார் சமஎடை சேர்த்துக் காய்ச்சிட எ!ண்ணை உப்பு அடியில் நிற்கும். சவுக்கார சுண்ணம் போன்று கருங்காரமாக இருக்கும்; இதனால் இரசம் மடியும்.

துருசு சுண்ணம்

25. இரசம் 35 கிராம், இதற்கு எடை வெள்ளீயம் சேர புட்டாகும். இதனுடன் மேற்சொன்ன எண்ணையுப்பு சமஎடை சேர்த்துப் புடமிட சுண்ணமாகும்.

வாத சுரத்திற்கு பாடாண குளிகை

26. வெள்ளை பாடாண எடைக்கு வெள்ளைமிளகு சேர்த்து அரைத்து இஞ்சி சாறுவிட்டுக் கலந்து கடலை அளவு உருண்டை செய்து நோயாளிக்குக் கொடுத்திட தீரும் நோய்கள் வாதம் சுரம் இவைகளும், சகல நோயும் பறந்துவிடும்.

சங்கத் திராவகம்

27. வெடியுப்பு பத்து பலம், சீனம் இருபத்தி நான்கு பலம் இவைகள்

இரண்டையும் வாலை சட்டியில் போட்டு சங்கு நீர் பலம் உடன் போட்டு எரித்திட மஞ்சள்நிற திராவகம் வெளியாகும்.

செம்புகரி

28. செம்பு ஒரு பலம், இரும்புத்தூள் முக்கால் பலம் எடுத்து வீரம் சேர்த்து அரைத்துப் புடமிட்டு எடுத்துக்கொள். இதை வெள்ளியில் சேர்த்து உருக்க மூன்று மாற்று காணும்.

அயச்செம்பு

29. இரும்பையும், செம்பையும் வீரம் சேர்த்து இதனுடன் கெந்தகத்தையும் வகைக்கு ஒருபலம் எடுத்து உருக்க இவைகள் அனைத்தும் செம்பாகும். இச்செம்பு ஏழு மாற்றாகும்.

ரசச்செந்தூரம்

30. கெந்தகத்துடன் ரசத்தை சமஎடை எடுத்து உருக்கி சீனத்தை அதே எடைக்கு கூட்டி அரைத்து சட்டியில் போட்டு எரிக்க. குறிப்பு, (இதுபோன்று சட்டியில் போட்டு எரிக்க என்று வந்தால் முறைப்படி மேல்சட்டி மூடி சீலைமண் செய்து புடமிடுதல் ஆகும்) சிந்தூரம் ஆகும் இதை முறையோடு உண்ண வாத நோய்கள் ஓடும்.

தாம்பிரகரி

31. தாமிரத்தை தகடாக செய்து அரளி பூ அரைத்து அதன்மேல் பூசி புடமிட்டு நான்குக்கு ஒருபாகம் வீரம் சேர்த்து அரைத்து வெள்ளியில் சேர்த்து உருக்க எட்டு மாற்றாகும்.

அயச்செம்பைக் கரிபண்ணி

32. அயச்செம்பை எடுத்து அதற்கு எடை தங்கத்தை சேர்த்து இதனுடன் கெந்தகம், வீரம் சமஎடை சேர்த்துக் கொண்டு மூன்றுமுறை புடமிட செம்பாகும்; இச்செம்பை வெள்ளியில் பத்திற்கு ஒருபாகம் கொடுத்து உருக்க தங்கமாகும்.

பேதிமருந்து

33. அரப்பொடியை ஓரளவு எடுத்து அந்த அளவு ரசம் சேர்த்து அரைத்து புடமிட்டு எடுத்து இதற்கு எடை சுரை விதை போட்டு அரைக்க வேண்டும் அரைத்து எடுத்து பத்திரப்படுத்தவும், இந்த தைலத்தை உண்ண பல நோய்கள் போகும்.

கல்லுப்பு சுண்ணம்

34. கடல் நுரையும் நாட்டு உப்பும் சமஎடை எடுத்து அரைத்து புடமிட சுண்ணாம்பாம். இதை லிங்கம் சேர்த்து நோயாளிக்கு கொடுக்க வலி, குன்மம் போகும்.

துருசு களங்கிற்கு எண்ணை சுருக்கு

35. அரப்பொடி ஒரு பலம், வீரம் கால் பலம் இவைகளை இரும்பு கரண்டியில் காய்ச்சி இதனுடன் துருசு சேர்த்து கொண்டால் இதில் சுருக்கிட செம்பு, வெள்ளி இவைகள் தங்கமாகும்.

சுரத்திற்கு பாடாண மாத்திரை

36. வெள்ளை பாடாண மாத்திரை ஒரு சட்டியில்ிி போட்டு மேல்மூடி சீலை கவசம் செய்து எரித்துதெடுக்க மேல் சட்டியில் பாடாணம் படிந்திருக்கும். அதை வழித்து இஞ்சிசார், மிளகு சேர்த்து அரைத்து ஒரு வீசை எடை நோயாளிக்கு கொடுக்க சுரம் அனைத்தும் போகும்.

காமாலை மருந்து

37. பசும்பால் ஓர் படியில், கீழாநெல்லி ஒருபடிசார் கலந்து குடிக்க காமாலை போகும். பத்தியம் உப்பை விலக்கவும்.

துருசுகரிய செம்பு

38. ரசம் ஒரு பலம், சுத்தித்த கெந்தகம் ஒரு பலம், துருசு இரண்டு பலம் இவைகளுடன் காரீயம் சேர்த்துக் காய்ச்சி தெளிவிருத்து பார்க்க தங்கமாம்.

39. குரு போன்ற செம்பை எடுத்து ரசம், கெந்தகம், வீரம் இவைகளை சமஎடை சேர்த்து அரைத்து புடம் போட சிவப்பாக மாறும், இதை வெள்ளியில் கொடுத்து உருக்க தங்கமாம்.

துருசு சத்து

40. அரப்பொடி அதே எடைக்குத் துருசு சேர்த்து அரைத்து புடமிட்டு அதன்பின் வீரத்தை நான்கில் ஒரு பாகமும், இரசமும் சேர்த்து உருக்க தங்கமாகும்.

மூடர்களின் செய்கை

41. செம்பு சத்து செய்ய தெரியாதவர்கள் மூடர்களாவார்கள்; இவர்கள் புத்தியில்லாமல் அலைந்து திரிவார்கள் சோதித்து நிலையான வாதத்தை செய்யவேண்டும்.

தங்கம் வாதத்திற்கு வித்து

42. உடலுக்கு விந்துதான் விதையாம். போகத்தில் மனம் போனால் உடல் போகும். அதைபோல் வாதத்தில் தங்கத்தை விட்டால் விதையில்லை என்பதாகும்.

வெடியுப்பு சுண்ணம்

43. வெடியுப்பு பத்து பலம், சீனம் இரண்ட பலம், நவசாரம் இரண்டு பலம் இவைகளுடன் புளி சேர்த்து அரைத்து எரித்து எடு. அதுவே

வெடியுப்பு சுண்ணமாகும்; இதை சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளுடன் சேர்த்து நோயாளிக்கு கொடுக்க குன்ம நோய் போகும்.

வாளசுத்தி

44. சுரை விதை தோல் போக்கி அவித்து நீர் இறுத்து விளக்கெண்ணையில் வறுத்து எடுங்கள். இதனால் சுத்தியாகும். வாளம் (நேர்வாளம்)

அயகாந்த சிந்தூரம்

45. இரும்பு காந்தம் ஒரளவு எடுத்து கல்வத்தில் இடித்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஏழரை நாட்கள் ஊறவிட்டு ஆட்டு. ஏழுநாள் சென்றபின் வன்னி (லிங்கம்) நான்கில் ஒரு பாகம் சேர்த்து அரைத்து உண்ண வெட்டை நோய் தீரும்.

நீர்கட்டுக்கு வெண்கார பஸ்பம்

46. வெண்காரத்தை பொரித்து வெந்நீர்விட்டு கலக்கி நோயாளிக்கு கொடுக்க நீரடைப்பு, மல சிக்கல் இரண்டும் போகும்.

கண்ணுக்கு மை

47. காசி கட்டி ஒரு பலம், களிப்பாக்கு அரைபலம் எடுத்து பொன்னாகண்ணி சாறுவிட்டு அரைத்து செம்பால் செய்த பாத்திரத்தல் வழித்து எடுத்து வைத்துக்கொண்டு கண்ணில் தீட்ட கண் நோய்கள் பறந்து போகும்.

மகோதரத்திற்கு குடிநீர்

48. கொத்துமல்லி அரைத்து அதன் சாறு ஒரு சேர் அளவு எடுத்து வெண்காரம் பத்து சுழஞ்சு எடுத்து பொரித்து மேற்கண்ட கொத்துமல்லி சாற்றுடன் கலந்து சாப்பிட பித்தம், மகோதரம் இவைகள் போகும்.

துருசு அரிதார செம்பு

49. அரிதாரம் ஒரு பலம், துருசு சேர்த்து உடன் பொரிகாரம்-(சீனாகாரம்) போட்டு அரைத்து உருண்டை செய்து உப்புச் சுண்ணம் கவசம் செய்து புடமிட்டு எடுக்கவும். இதனால் நவலோகம் கொடுத்து உருக்க தங்கமாகும்.

களங்குகளுக்கு புடம் மீறக்கூடாது

50. அயச்செம்பை விட்டால் கருத்தான ஞானம் வராது. களங்கும் எரிக்கும்போது நேரம் அதிகம் ஆனாலும் உதிர்ந்து மண்ணாகி போகும். களங்கை உருக்கினாலும் உருகாது.

51. உடைந்து போனதென்று சரக்குகளை எடுத்துப் போடாமல் அதை வெள்ளியிலே துருசு சேர்த்து உருக்கி உப்பு சேர்த்து புடம்போட தங்கமாகும். முறை தவறினால் பதம் வராது உலகத்தாரே.

தாதுவிர்த்திக்கு மருந்து

52. தளந்து போன உடலுக்கும், விந்து சுரக்காதவர்களுக்கும் மிக நுட்பமான மருந்தாகும். சாதிக்காய் ஒரு பலத்திற்கு உள் உண்டு வர விந்து அதிகரிக்கும்.

வெள்ளிவித்தை

53. இரசத்துடன் வெள்ளியைச் சமஎடை சேர்த்து அரைத்து வில்லை செய்து புட-மிடவும்; இதை வெள்ளீயம் நூற்றுக்கு ஒரு பாகம் கொடுத்து உருக்க வெள்ளியாகும்.

விக்கலுக்கு மருந்து

54. விக்கலுக்கு வெல்லத்திற்கு சமஎடை சாம்பிராணி சேர்த்து அரைத்து உள்ளுக்குக் கொடுக்க வாதவிக்கல், பித்த விக்கல் இவைகள் போகும்.

கள்ளு குடித்து மயக்கம் உண்டாக

55. கள்ளு குடிப்பதனால் அவ்வளவாக போதையும், காரமும் இருப்பதில்லை; எனவே சாதிக்காயை உடன் சேர்த்து ஊற வைத்துக் குடித்தால் போதை அதிகரிக்கும், காமம் அதிகரிக்கும்.

தங்க சிந்தூரம்

56. தங்கத்தை ஓரளவு எடுத்து அதே எடை இரசம் சேர்த்து அரைத்து செயநீரில் போட்டு வைக்க சிறிது நாள் சென்றால் பூக்கும்; அதை குப்பியில் போட்-டு எரித்து எடுக்க சிந்தூரமாம்; இதை உலோகங்களில் கொடுத்து உருக்க தங்கமாகும்

நாக சிந்தூரம்

57. லிங்கம், இரசம் நான்கு பலம் எடுத்து அதே எடைக்கு நாகம் சேர்த்து அரைக்க புட்டு போல் ஆகும்; இதை செயநீர்விட்டு அரைத்து சட்டியில் இட்டு புடம் போட சிந்தூரமாகும். இச்சிந்தூரத்தை நவலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாகும்.

துருசு களங்கு

58. இரும்பு பலம் ஒன்று, துருசு அதே எடை, வீரம் கால் பலம், இதற்கு கந்தகம் ஒரு பலம் சேர்த்து அரைத்துக் கொண்டு வெண்காரத்தினை அளவோடு சேர்த்து உருக்க பத்து மாற்று தங்கமாகும்.

அயச்செம்பு

59. இரும்புப் பொடியுடன் செம்பு நான்கு பாகம் சேர்த்து கந்தகத்தைப் போட்டுக் கல்வத்தில் அரைக்க வேண்டும்; பின்பு புடமிட்டு எடுத்து அதனுடன் வெண்காரம், வீரம் போட்டு உருக்க ஏழு மாற்றுள்ள வெள்ளியாகும்; இரும்பைக்கொண்டு செம்பு செய்து தங்கமாக்கும் விகம்

இதுவேயாகும்.

60. அயப்பொடி முக்கால் பாகம், வீரம் நான்கில் ஒரு பாகம் எடுத்து தைலம்விட்டு அரைக்கவும், பிறகு காய்ச்சி வெள்ளியில் நான்கில் ஒரு பலம் கொடுத்து உருக்க தங்கமாம்.

அயவுருக்கு

61. கௌரி, அயப்பொடி சேர் ஒன்று எடுத்து செம்பு சேர்த்து கல்வத்தில் போட்டு அரைத்து புடமிட்டு எடுத்துக் கொள்ளு; இதை வெள்ளியில் நான்கில் ஒரு பாகம் கொடுத்து உருக்க தங்கமாகும்.

அயவுருக்கும் துருசும் சேர்க்க

62. மேற்கண்ட அயஉருக்குக்கு சமஎடை இரும்புத்தூள் சேர்த்து உடன் துருசு சேர்த்தரைத்து உருக்கி வெள்ளியில் நாலில் ஒன்று சேர்த்து உருக்கு தங்கமாம்

துருசுகளங்கில் அயம்சேர்க்க

63. இரும்புத்தூள் ஒரு பலம், துருசு இரண்டு பலம் எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றில் இரண்டு சாமம் அரைத்துக்காய வைத்து சுண்ணத்தின் மேல் கட்டி கவசம் செய்து புடமிட்டு பார்.

64. புடம் போட்டு வெண்காரம் நான்கு பலம் சேர்த்து அரைத்து மீண்டும் புடமிட அயம் சிறந்து நல்ல சத்தாக நிற்கும்.

அயச்சத்து பிரிக்க

65. மேற்கண்ட சத்தில் வீரம் நான்கில் ஒரு பாகம் சேர்த்து அரைத்து இதனுடன் இரசம் சேர்த்து மீண்டும் அரைத்து பானையில் போட்டு வைத்திரு.

66. பானைக்கு அடியில் தேங்கி நிற்கும் மருந்தை சட்டியில் போட்டு தீ எரித்து கருக்கி எடு; இது செவ்அலரி பூ போன்ற சிவந்த நிறத்தையுடைய செம்பாம்.

67. இந்த அயச்செம்பை வெள்ளியில் நாலுக்கு ஒன்று கொடுத்து உருக்க ஏழு மாற்று காணும். உலகின் இதை கொண்டு ஞானவழி சென்றிடு.

தாளகசத்து

68. இரும்புத்தூள், அரிதாரம், துருசு சமஎடையாய் எடுத்து அரைத்து வில்லை செய்து புடம் போட்டு பின் இதனுடன் வெண்காரம் சேர்த்து அரைத்து உருக்க தாளக சத்தாகும் இதை வெள்ளியுடன் சேர்த்து உருக்க பத்து மாற்றாகும்.

69. தாளக சத்து எடுத்து வெண்காரம் இட்டு அரைத்து; அரைத்து உருக்க கசடு அற்று தூய்மையாகும். இதனுடன் வீரம் சேர்த்து உருக்கி செம்பு, ள்ளியில் கொடுத்து உருக்க தங்கமாம்.

சயத்துக்கு குடிநீர்

70. நெல்லிக்காய், கொத்தமல்லிவிதை இவைகளுடன் சமஎடை இஞ்சி சேர்த்து இடித்து சட்டியில் போட்டு நீர் ஊற்றி எட்டில் ஒரு பாகமாக சுண்டும் வரை, காய்ச்சி இதனுடன் சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை சமஎடை சேர்த்து உள்ளுக்கு கொடுக்க சயகாசம் போகும்.

அயச்செம்பு

71. செம்பு நான்கு பாகம், ஒழுகரை-(எஃகு) ஒரு பாகம் இதனுடன் கந்தகம், வீரம் இவைகளை சேர்த்து அரைத்து புடம்போட்டு வெள்ளியில் நான்கு பாகத்தில் ஒரு பாகம் சேர்த்து உருக்க ஆறுமாற்று காணும்.

அயச்சிந்தூரம்

72. அயச் சிந்தூரத்துடன் இலிங்கம் நான்கில் ஒரு பாகம் சேர்த்து கையான் மூலியின் சாறுவிட்டு அரைத்து உண்ண விக்கல், பித்தவெட்டை போகும்.

அயச்சிந்தூரம்

73. இரும்புத்தூள் நான்கு பாகம் இருபத்திநான்கு பலம் கந்தகம் சேர்த்து அரைத்து பதினெட்டு புடமிட சிந்தூரமாகும்; இதை சுக்கு, திப்பிலி, மிளகு, இதனுடன் சேர்த்து உண்ண பித்த வெட்டைநோய் போகும்.

நாகபற்பம்

74. நாகம் ஒரு பலம் அதே எடை செம்பு ரசம் சேர்த்து உருக்கி இதன்மேல் வளையல் உப்பு அரைத்து கவசம் செய்து புடமிடு; இந்த பற்பத்தால் கிராணி நோய் தீர்ந்து போகும்.

75. லிங்கம் அதற்கு எடை செம்பு சோத்து அரைத்து வில்லை செய்து உடன் வீரம் சேர்த்து புடமிட்டு எடுத்துக்கொள், இதனுடன் நாகம் ஒரு பங்கும் வெள்ளியும் சேர்த்து உருக்க தங்கமாம்.

76. நெல்பொறி, சுக்கு, மிளகு இவைகளுடன் வெண்காரம் சேர்த்து அரைத்து வெந்நீரில் கொடுக்க பெரியநோய்களும் மலம், சிறுநீர் அடைப்புகளையும் நீக்கும்.

77. விளக்கெண்ணெய் படியில் (சதுரக்கள்ளி) வச்சிராங்கி பால்விட்டு நன்கு காய்ச்சி சிறு கரண்டியில் உள்ளுக்கு சாப்பிட சுகபேதியாகும்.

கர்ப்ப சூர்ணம்

78. பவழம் பலம் நான்கில் குப்பைமேனி, நெருஞ்சில், கையான் தகரை ஆகிய மூலிகை சாற்றினை சேர்த்து அரைத்து உலர்த்தி உண்ண குரல் நன்கு வரும், உடலில் உள்ள வாயுக்கள் நீக்கும்.

மேற்படி சூர்ணத்திற்கு உப்பு

79. மூன்று பணஎடை கல்லுப்பில் ஊமத்தும் சாறு சொட்டுக்கள்

பிழிந்துவிட்டு உள்ளுக்கு கொடுக்க வாயு அகன்று போகும்.

பித்தளைச்செம்பு

80. பித்தளை ஒரு 'பலம் எடுத்து அதன்மேல் கல்லுஉப்பை அரைத்து பூசி நான்குமுறை புடம்போட்டு எடுக்க செம்பாகும். இதை வெள்ளியில் கொடுத்து உருக்க நான்கு மாற்றாகும்.

81. உண்மை அறியாத வாதியர்கள் அயச்செம்பை செய்வேன் என்று பலருக்கு உறுதிகூறி பேராசை கொண்டு பொய்யும் புரட்டும் கூறத் திரிவார்கள். இவர்கள் பொய்வாதிகளாம்.

குட்டத்திற்கு சூர்ணம்

82. எட்டி மரப் பட்டையை காயவைத்து வெருகடிதூள் (அளவு) சுடுநீரில் கலந்து குடிக்க மண்டலத்தில்-(48 நாளில்) குட்டம் விலகும். நல்எண்ணெய் உணவில் பண்டத்தில் சேர்க்கக் கூடாது.

துருசுகளங்கு

83. துருசு ஒரு பலம், கெந்தி, அயப்பொடி, முக்கால் பலம் அரைத்து உருக்க களங்காகும். இதை உலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாகும்.

துருசுகனங்கு சத்து பிரிக்க

84. துருசு களங்கு செய்தால் இதனுடன் வீரம், இரசம் இவைகளை சேர்த்து அரைத்து புடம்போட செம்பாகும், நல்ல வெள்ளியில் கொடுத்து உருக்க தங்கமாகும்.

க்ஷயத்துக்கு பொன்னாவரை குடிநீர்

85. பொன்னாவரை செடியின் வேர், பட்டை இவைகளை தூள் செய்து சுடுநீரில் போட்டு மூன்று நாட்கள் குடித்திட சயகாசம் போன்ற நோய்கள் விலகும்.

தாளக பற்பம்

86. இரசத்துடன் அரிதாரம் சேர்த்து அரைத்து வில்லை செய்து காயவைத்து சீனத்தை அரைத்து இதற்குமேல் கவசம் பண்ணி புடம்போட்டு எடுக்க பற்பமாம்; இதனால் சயம் காசம் விலகும்.

குட்டத்திற்கு பூர பற்பம்

87. சூடன் என்று சொல்லும் பூரத்தை எடுத்து அதே எடை சீனம் சேர்த்து கல்வத்தில் இட்டு அரைத்து உள்ளுக்கு கொடுக்க குட்டம் விலகும்.

ரோமசெம்பு

88. காந்தம் பத்து பலம் காரி-(இந்த இடத்தில் காரி என்பது வெண்காரமா அல்லது காரியமா என்பது தெரியவில்லை) ஒரு பலம், துருசு ஒரு பலம், கந்தகம் ஒரு பலம் இவைகளை நன்றாக கல்வத்தில் அரைத்து காயவைத்து உருக்கி பார்க்க உயர்ந்த மாற்றான செம்பாம்.

வாயுக்கு பிரண்டைமாவு

89. சுக்கு, திப்பிலி, மிளகு இவற்றுடன் முப்பிரண்டை (மூன்று பட்டை உடைய பிரண்டை இனம்) சேர்த்து அரைத்து பானைக்குள் வைத்து அவித்து உண்ண வாயு சம்மந்தமான நோய்கள் போகும்.

அதிதாகத்திற்கு குடிநீர்

90. தண்ணீர் குடிக்க, குடிக்க தாகம் எடுத்துக்கொண்டே இருந்தால் முன்னை இலை (உசிலம் இலை) மோருடன் அரைத்து கலக்கி குடித்தால் அதி தாக நோய் அகலும்.

கஞ்சா நொய்

91. பசுவின் பாலை ஒருபடி எடுத்து அதனுடன் கஞ்சா அரைத்து கலக்கி தயிராக்கி பின்பு தயிர்சிலுப்பி எடு; இந்த வெண்ணெய்தனை 48 நாட்கள் உண்டுவர விந்து பெருகும்.

வெடியுப்புச் சுண்ணம்

92. எழுத்தாணி பலம் ஒன்று எடுத்து வெடியுபப்பு சேர்த்து அரைத்து பூமிபுடமாக (பூமிக்குள் புதைத்து) போட்டு எடுக்க சுண்ணமாம்; இச்சுண்ணத்தால் குன்மவலி எட்டும் விலகும்

சூதக வாயுவுக்கு குழிதைலம்

93. பேய் கும்மட்டிக்காய், சுரைவிதை, கொடிவேலி-(சித்திர மூலம்) பிரண்டை இவைகளை சேர்த்து பானையில் போட்டு குழித்தைலம் எடுத்திடு, இதை காசு எடை உண்ண சூதவாயு போகும்.

பக்கசூலைக்கு எண்ணெய்

94. வெங்காரம், கழற்சிகாய், விளக்கெண்ணெய் ஒரு படி, விரை வதை பலத்துடன், சிவவிந்து (இரசம்) கெந்தகம் அதேஎடை சேர்த்து காய்ச்சி பக்குவமாய் உண்டிட சூலை பதினெட்டும் போகும்.

சீனரச பற்பம்

95. இரசம் ஓரளவு எடுத்து அதே எடைக்கு சீனம் சேர்த்து நன்றாக அரைத்து சட்டியில் இட்டு எடுத்து எரிக்க சட்டியின் அடியில் நிற்கும் பற்பத்தை எடுத்து சரியான முறையில் உண்டால் குட்டம், இரணம், பெண்களால் ஏற்படும் மேக நோய்கள் போன்றவை அகலும்.

பஞ்ச தீபாக்கினி லேகியம்

96. சுக்கு, திப்பிலி, மிளகு, கொத்தமல்லி, ஏலக்காய் இவைகளை வறுத்து பொடியெய்து இதற்கு சமஎடை சீனம் சேர்த்து தேன் கலந்து லேகியமாய் செய்துண்ண பித்தவாயு போகும்.

கிராணிக்கு கொழுக்கட்டை

97. பச்சரிசியை இடித்து மாவாக்கி நீர்விட்டு பிசைந்து சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளுடன் கஞ்சாவை சேர்த்து இடித்து மாவுடன் கலந்து கொழுக்கட்டைபோல் கையில் பிடித்து அவித்து உண்ண கிராணி நோய் விலகும்.

வெட்டைக்கு பால்

98. ஒரு படி பசும்பாலில் தேற்றான் கொட்டைகளை அரைத்து தூவி கலக்கி மூன்று நாட்கள் குடித்துவர வெட்டை நோய்கள் போகும். இத்துடன் வாயு, கிராணி போன்ற நோய்கள் விலகும்.

மூலகிராணிக்கு மருந்து

99. இளநீர் எடுத்து கண் திறந்து, பூண்டு நன்கு அரைத்து இளநீருடன் கலந்து பருக மூலநோய், விக்கல், கழிசல், கிராணி போன்ற நோய்கள் விலகும்.

பித்தவாயுவுக்கு குடிநீர்

100. கந்தகம் ஒரு சேர் எடுத்துக்கொண்டு சுக்கு, திப்பிலி, மிளகு, ஏலம், சீரகம் இவைகளை வகைக்கு பலம் சேர்த்து பானையிலிட்டு காய்ச்சி குடிநீராய் பயன்படுத்த பித்த வாயு விலகும்.

கிராணிக்கு குடிநீர்

101. பூண்டு படி எடுத்து நீர் இறுத்து இதனுடன் சுக்கு, திப்பிலி, மிளகு, கஞ்சா ஒவ்வொன்றும் ஒருபலம் சேர்த்து பானையிலிட்டு எட்டில் ஒரு பாகமாக சுண்ட காய்ச்சி உண்ண பாண்டு, கிராணி நோய்கள் போகும்.

இரசவாதம் தெரிந்த பெரியோர் செய்கை

102. இரசத்தை நீராகவும், தாளகத்தை சுண்ணம் செய்பவும், கந்தகத்தை நீராகவும், வீரத்தை சுண்ணமாகவும் செய்கின்ற பெரியோர்கள் சொல்லுகின்றவைகள் வெற்றியாம்.

நாகூ பற்பம்

103. நாகம் ஒரு பலம் அதே எடைக்கு அரசம் சேர்த்து அரைத்து இத்துடன் வீரம் கால் பலம் சேர்த்து அரைத்து நீர்புடமாய் எடுக்க பற்பமாம்; இது வெண்மையாய் இருக்கும். பணஎடை தேனில் உண்ண கிராணி நோய் போகும்.

துருசு பூர பற்பம்

104. கற்பூரம் எடுத்துக்கொண்ட அதேஎடை துருசு சேர்த்து அரைத்து புடம்போட்டு எரிக்க பற்பமாம்; இதை சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளை சேர்த்து உண்ண குஷ்டரணம்; இருபத்தி நான்கு வகையான சூலை இவைகள் போகும்.

அயச்சிந்தூரம்

105. வீரம், அரப்பொடி சமஎடை சேர்த்து அரைத்து பானையில் போட்டு நீர்விட்டு எரிக்க கடைசியில் சிந்தூரமாக நிற்கும். இதை உண்ண வலி, குன்மம் போகும்.

அயச்செம்பு

106. எலுமிச்சம்பழம் இரண்டு இரும்புத்தூள் நான்கு பலம் பழச்சாற்றில் நன்கு இந்த அரப்பொடியை அரைத்து வில்லை செய்து புடமிட்டு எடுத்துக்கொள். பின்பு செம்பு வகை சொல்ல கேள்.

107. துருசு, கந்தகம் சமஎடை சேர்த்து அரைத்து வில்லை செய்து புடமிட்டு உருக்க சத்தாகும்; இது வெள்ளி, வெண்கலம் போன்று நன்கு பளபளப்புடன் காணும்.

108. மேற்கண்ட சத்தெடுத்து நான்கில் ஒரு பாகம் நீர்விட்டு அரைத்து இரசம் சேர்த்து பானையில் இட்டு எரித்திடு.

109. நீர்வற்றி கடைசியில் நிற்கின்ற தூள் எடுத்து கரண்டியில் இட்டு தைலம் விட்டு கறுக்கி எடுக்க செம்பாகும். இதை கல்வத்தில் போட்டு அரைத்து உருண்டை செய்து சூரியனில் காயப் போடு.

110. சூரியனில் காயவைத்து உருண்டையை சம எடை உப்புச் சுண்ணத்துடன் நோத்து அரைத்து மேல் மண்கவசம் செய்து புடம்போட்டு எடுத்து கொள்ளு.

111. இதனுடன் காரம் சேர்த்து உருக்க செம்பாகும்; இதை வெள்ளியில் நான்கில் ஒரு பாகம் கொடுத்து உருக்க ஏழுமாற்று காணும்.

112. மேற்கண்ட ஏழுமாற்று வெள்ளியிலே சமஎடை தங்கம் சேர்த்து தகடாக அடித்து உப்பு நான்கு பலம் தகட்டிற் மேல்பூசி செங்கல் வைத்து புடமிட தங்கமாகும்.

113. காரியத்தை சேர்த்து இதனுடன் கல்லுப்பிட்டு அரைத்து புடமிட தங்கமாகும்; இது அருமையான வழிமுறையாகும்.

முடஞானிகட்கு புத்தி கூறல்

114. பட்டினி பசியுடன் இருந்து ஞானத்தை பார்த்திடாதே; மனம் நிலைக்கொள்ளாமல் போகும் யோகத்தில் சுழிமுனையும் கூடாது வட்டிக்கு பணம்வேண்டும் என்பதற்காக பொன்னை கொடுத்து கடைசியில் அதை அப்படியே விற்ற கதைபோல ஆகிவிடக்கூடாது.

அயச்செம்பு

115. இரும்பு ஒரு பலம், செம்பு நான்கு பலம், இவைகளை சோத்து உருக்கி தகடடித்து கந்தகத்தை அரைத்து பூசி புடமிட்டு உருக்கி கொள்ளு சத்தாகும்.

116. மேற்கண்ட சத்தில் நான்கில் ஒரு பாகம் வீரம் சேர்த்து அரைத்து பானையில் விட்டு எரிக்க அடியில் சத்தாகி நிற்கும்.

117. இச்சத்தெடுத்து சட்டியில் நல்லெண்ணெய் ஊற்றி காய்ச்சி காரமிட்டு உருக்கிட செம்பாகும்.

118. மேற்கண்ட செம்பை வெள்ளியில் நான்கில் ஒரு பாகம் சேர்த்து உருக்க ஐந்து மாற்று காணும். இதற்கு சமஎடை தங்கம் சேர்த்து உருக்கிப் பார்க்க தங்கமாகும்.

119. மேற்கண்ட தங்கத்துடன் இரசம் சேர்த்து அரைக்கவும்; பின்பு சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி புடம்போட இரசம் மேலேறி நிற்கும். அதை வழித்து எடுத்துக்கொள். இது வாலைரசமாகும்.

தாளகத்துக்கு சுருக்கு

120. முசுமுசுக்கை இலையின் சாறு பிழிந்து வைத்துக்கொண்டு தாளகத்துக்கு அனல் காட்டி சுருக்கு கொடுக்கவும். இரண்டு சாமம் சுருக்கிடவும். இந்த தாளகத்தை நவலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாம்.

நாகச்செம்பு

121. நாகத்துடன் மேற்கண்ட தாளகத்தை சேர்த்து அரைத்து கரியில் வைத்து உருக்க செம்பாகும். இந்த செம்பை நவலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாம்.

122. பல வாதியர்கள் மூலிகைகளை தேடி அலைந்து அம்மூலிகைகளை கொண்டு வாதம் பார்த்து வழிவகைகள் தோணாமல் கெட்டலைந்து போவார்கள் இது வீணாம்.

அயகாந்த சிந்தூரம்

123. இரும்பு பலம் எடுத்து இத்துடன் அங்குசம்-காந்தமும், ஆதி (இரும்பு) இரண்டு சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து பத்து புடமிடசிந்துரமாகும். இதை இரண்டு நாட்கள் உண்டிட வாய்வு விலகும்.

தாளக சுத்தி

124. தாளகம் ஒரு பலம் எடுத்து மேற்கண்ட சுண்ணத்தூள் வைத்து சட்டியில் பனிரெண்டு சாமம் தீ எரித்து எடுத்து க்ஷய காசத்திற்கு கொடுக்க நோய்கள் விலகும்.

பூரத் திராவகம்

125. கற்பூரம் பத்து பலம், சீனம் இருபது பலம் எடுத்துக்கொண்டு வாலை சட்டியில் (திராவகம் வடிக்கும் பாத்திரம்) போட்டு எரித்திட புகைநீராகும்.

126. இந்த புகைநீரை வடித்து எடுக்க காரமுள்ளதாக இருக்கும்.

லிங்கம், வீரம், தாரம் இவைகளை இந்ததிராவகம் பற்பமாக்க உதவும். இச்சுண்ணம் வெண்மை நிறமானதாக இருக்கும்.

அயச்செம்பு

127. அயச்செம்பு கூறுகிறேன். கரும்பொன் எனும் இரும்பு ஒருசேர் எடுத்துக்கொண்டு அதன் எடை துருசு சேர்த்து ஒரு பகல் அரைத்து உருண்டை செய்து காயவைத்திடு.

228. காய வைத்த உருண்டையை மகாபுடம் போட்டு எடுத்து அதனுடன் வெண்காரம் சோத்து செல்வல்லி (செவ்வாம்பல்) சாறுவிட்டு ஒரு சாமம் அரைத்து புடமிட்டு பின்பு குகையில் வைத்து உருக்கிப் பார்க்க நல்ல சத்தாகும்

129. சத்தெடுத்து பாதியளவு காரம் சேர்த்து கல்வத்தில் இட்டு செவ்வல்லிபூ சாறுவிட்டு அரைத்திடு. அரைத்து புடமிட்டு உருக்க நல்ல சத்தாகும்.

130. சத்தெடுத்து கல்வத்தில் சண்பகபூச் சாறுவிட்டு அரைத்து புடம்போட்டு எடுத்து உருக்க கசடற்று போகும்.

131. இச்சத்துடன் காரமிட்டு நன்றாக அரைத்து புடமிட்டு உருக்க வெள்ளி, வெண்கலம் போன்று பளபளப்புடன் பதம் வரும்.

132. இந்த சத்தை பிரிக்க வகை கேளு, சத்து வகைகளை பிரிக்காமல் உலோகத்தில் உருக்கினால் உலோகத்தில் கலவாது. எனவே வாதம் கரிபோல் சுட்டு தீய்ந்து போகாதவாறு வழிவகை பார்த்து தெளிந்திடு.

சத்து பிரிக்கும் வகை

133. சத்து பிரிக்கும் வகையாவது, சத்துடன் வீரம், இரசம், கற்பூரம் இவைகளை போட்டு கல்வத்தில் அரைத்து பானையில் இட்டு எரிக்க வேண்டும்.

134. அடியில் நிற்கும் மருந்தை எடுத்து இதனுடன் காரம் சேர்த்து சட்டியில் தைலம் ஊற்றி மருந்தை சுருக்கிட்டு பார்க்க கரிபோன்று காணும். இந்த கரிய தூளை குகையில் வைத்து உருக்க செம்பாம்.

135. இந்த செம்பை இரும்பில் நான்கில் ஒரு பாகம் சேர்த்து உருக்க எட்டு மாற்று காணும். இதை கொண்டு பணம் திரட்டி யோக ஞான மார்க்க வழியில் செல்வாய். பசியும் பட்டினியுடனும் இருப்பவர்களுக்கு வெளிப்படையாக சொன்னேன்.

136. இந்த அயச்செம்பை வழிமுறையோடு செய்திட வெற்றியாம். மனம் வைத்து செய்தால் நலமாகும். இதனுடைய பெருமை நன்மை அதிகமாம்.

க்ஷயத்திற்கு வாந்தி கொடுக்க

137. காட்டில் வளரும் எருக்கம் செடியின் பாலை காயவைத்து நல்ல தண்ணீரில் கரைத்து குடிக்க வாந்தி நிற்கும்.

138. அரம்-(வாழை, மஞ்சள்) எடுத்து அரைத்து இறுத்து இதனுடன் சாரம் சேர்த்து உள்ளுக்கு கொடுக்க வாந்தி நிற்கும். சயகாசம், ஈளை, பித்தம் போன்றவைகள் விலகும்.

139. கற்பூரத்தை ஓரளவு எடுத்து கல்வத்தில் அரைத்து உருண்டையாக எடுத்து காயவைத்து வளையலுப்பை கவசம் செய்து சுண்ணாம்பில் வைத்து பாரு.

140. மேற்கண்டதை சட்டியில் இட்டு மேல்மூடி செய்து வாலை அடுப்பில் இரண்டு சாமம் எரித்து பதமாக எடுத்திடு. இது குரு மருந்தாகும்.

141. இம் மருந்தால் க்ஷயம் போகும், காசம் போகும் சிலேத்தும நோய் தொண்ணூறும் காணாமல் ஓடும்.

142. விதிவிதமான நோய்கள் எல்லாம் விலகி போகும். நோய்கள் படுகுழியில் யானை தவறி விழுந்ததை போன்று ஆகும்.

அயம் துருசு சேர்த்து செம்பெடுக்கும் வழி

143. பொன் ஒரு பாகம், துருசு ஒருபாகம், கற்பூரம் மூன்று பாகம், எலுமிச்சம் பழச்சாறு விட்டு ஒரு பகல் முழுதும் அரைத்திடு. பின்பு உருண்டை செய்து காயவைத்து புடம் போட்டு உருக்கி பார்த்திடு.

144. உருக்கி பார்க்க கரிபோன்று உறுதியாக இருக்கும். இத்துடன் இரும்பை சேர்த்து உருக்கி கல்வத்திலிட்டு அரைத்து புடம்போட்டு எடுத்து உருக்க நல்ல சத்தாம்.

145. இந்த சத்துக்கு நான்கில் ஒரு பாகம் வீரம், இத்துடன் இரசம் சேர்த்து நான்கில் ஒரு பாகம் அரைத்து பானையில் இட்டு எரித்து எடுத்து பார்த்திடு.

146. இதை இரும்பு கரண்டியில் இட்டு தைலம் ஊற்றி கருக்கி பார்க்க செம்பாகும் வெள்ளியில் நான்கில் ஒரு பாகம் செம்பிட எட்டு மாற்று காணும்.

வங்க ரச பற்பம்

147. வங்கம் ஒரு சேர் அதே எடைக்கு இரசம் சேர்த்து உருக்கி, அரைத்து பானையிலிட்டு மேல்சட்டி மூடி எரித்திடு. நல்ல பற்பம் மேல் சட்டியில் படிந்து விடும்.

148. மேல் சட்டியில் படிந்திருக்கும் பற்பத்தை வழித்து எடுத்து சட்டியின் அடியில் வில்லை செய்து புடமிட வங்க ரச பற்பமாகும்.

149. வங்க பற்பத்தை அரைத்து தாளகத்தின் மேல் பரப்பி புடமிட்டு

எடுக்க குருவாகும்-(இது முதன்மையானதாகும். இதை கொண்டு பல வாதம் முடிக்கக் கூடும்.)

குரு கொடுக்கும் எடை

150. மேற்கண்ட குரு ஒருபாகம் செம்பு ஒருபாகம், வெள்ளி ஒருபாகம் சேர்த்து உருக்கி பார்க்க பத்துமாற்று தங்கமாம். இதை கொண்டு ஞானவழி பாாத்திடு.

151. சக்தியும், சிவனும் தான் சத்து என்று கூறலாகுமாம். சத்தை எடுத்து வெள்ளியில் கொடுத்து உருக்க வெள்ளி உருகும். புடமிட வெள்ளி உருகி தங்கமாகும்.

152. துத்தநாகம் நான்கு பலம் கந்தகம் அரைபலம், அரைக்கால் பலம் (கால்பாகத்தில் பாதி) துருசு சேர்த்து கல்வத்தில் போட்டு ஒரு சாமத்தில் அரைத்து உருக்க சத்தாகும்.

153. செம்பை உருக்கி தகடடித்து கந்தகத்தை அரைத்து பூசி தகட்டை ஐந்து முறை புடமிட்டு எடுக்க குருவாகும். இந்த குருவை வெள்ளியில் கொடுத்து உருக்க தங்கமாம்.

மூலத்திற்கு மருந்து

154. அரிசி படி-(வேயரிசி என்று வருமானால் மூங்கில் அரிசியை குறிக்கும்) எடுத்து சுக்கு, திப்பிலி, மிளகு சேர்த்து இடித்து தாய்ப்பால் விட்டு காய்ச்சி சாப்பிட மூல நோய் விலகும்.

நொறுக்க வெள்ளி

155. வெள்ளியை தகடு செய்து கந்தகம் அரைத்து தகட்டிற் பூசி ஐந்து முறை புடம் போட நன்கு உருகும். வீரத்தை நான்கில் ஒருபாகம் சோத்து இரசத்துடன் சேர்த்து இதனை உருக்க வெள்ளி நான்கு மாற்றாகும்.

156. வாதியர்கள் இந்த வழியை காணாமல் வங்கத்தை எடுத்து உடன் செம்பு சேர்த்து உருக்கி பார்ப்பார்கள். புடம்போட முழுவதும் வீணாக போய்விடும்.

நொறுக்கு வெள்ளிக்கு அயமும் துருசும் சேர்

157. இரும்பு ஓரளவு எடுத்து அதே எடை கந்தகம், துருசு இவைகளை சேர்த்து அரைத்து குகையில் இட்டு உருக்க சத்தாகும். இதை வெள்ளியில் கொடுத்து உருக்க ஏழு மாற்றாகும்.

158. வேதத்தை அறியாதவன்-(நூலின் சூட்சமங்களை அறியாதவன்) வீணான வாதம் செய்பவனாம். இரசத்தை காட்டுகிறேன் என்று வழிநூல் இருக்க அதை விட்டு விட்டு, வாதம் செய்து பார்ப்பான் அது புகைந்து போக ஒன்றும் காணாது போவான்.

துருசு செம்பு

159. செம்பு எடுத்து அதே எடை துருசு சேர்த்து உருக்க சத்தாகும். இதை வெள்ளியில் கொடுத்து உருக்க தங்கமாம்.

திமிர் குட்டத்தற்கு எண்ணெய்

160. சிற்றாமணக்கு எண்ணெய், பசும்பாலில் எடுத்த நெய். இவை இரண்டும் ஒவ்வொன்றும் ஒருசேர் எடுத்து கொண்டு கற்பூரம், உத்தாமணி இவைகள் நான்கு கழஞ்சி சேர்த்து அரைத்து காய்ச்சி உண்டால் திமிர், குட்டம் சொறி, மேகம் போன்ற நோய்கள் விலகும். (புளி ஆகாது.)

செத்தசெம்பு ஓடாவிதம்

161. செம்பு உருக்குகையில் ஒட்டாமல் பிரிந்து ஓடும். அப்படி ஓடாமல் நிலையாக உருக திலதமுடன் காரம் சேர்த்து வறுத்து உருக்க ஓடாது; சரியான முறையில் நிற்கும்.

காதடைப்புக்கு தைலம்

162. காதடைப்பு, சீழ்ஒழுகல் போன்றவைகள் விலக முன்பு செய்த திராவகத்தில் வேப்ப எண்ணெய் சேர்த்து காதில் விட மூன்று நாட்களில் நோய்கள் விலகும்.

வயிற்று வலிக்கு பஞ்சலவண பஸ்பம்

பஞ்சவுப்பு : 1 கரியுப்பு, 2 இந்துப்பு, 3 வளையலுப்பு, 4 கல்லுப்பு, 5 வெடியுப்பு என்பனவாகும்.

குறிப்பு : ஐம்பூத உப்புகள் வேறு, பஞ்சவுப்புகள் வேறு. ஐம்பூத உப்பில் சரக்குகள் வேறு வேறாக வரும். எனவே மேற்கண்டது சரியானது என்பதை அறிக!

163. ஐந்து வகையான இந்த உப்பை எடுத்து அத்துடன் சுக்கு, திப்பிலி, மிளகு ஆகியவற்றை உப்பின் அளவில் முக்கால் பாகம் எடுத்து கல்வத்தில் போட்டு எருக்கம் பாலினால் அரைத்து புடமிட்டு பதமாக எடுக்க பற்பமாம். இதை வயிற்று வலிக்கு கொடுக்க விலகும்.

வலி குன்மத்திற்கு மருந்து

164. பூநீறு நான்கு பலம் அதே எடை மண்ணை போட்டு அரைத்து புடமிட்டு எடுக்க காரம் கசடு அற்று இருக்கும். இதனால் வலி குன்மம் இவைகள் எட்டும் போகும்.

மூலத்திற்கு நாகபற்பம்

165. துத்தநாகம் பலம் ஒன்று, இரசம் ஒருபலம் இரண்டையும் கல்வத்தில் விட்டு திராவகத்தால் அரைத்திடு. பின்பு புடம்போட்டு எடுக்க சித்தூரிக்கும்-(பற்பமாகும்) இதனால் மூலநோய் விலகும்.

துருசு அயக் களங்கு

166. துருசு எடுத்துக்கொண்டு அதே எடை கந்தகமும் கந்தகத்தின் எடைக்கு இரும்பும் இதனுடன் காரம் கூட்டி அரைத்து புடமிட களங்காகும். இத்துடன் வீரம் சேர்த்து வெள்ளியில் கொடுத்து உருக்க ஆறுமாற்று காணும்.

வாத குன்மத்திற்கு மருந்து

167. வளையலுப்பு பத்து பலமும், வெண்காரம், வெடியுப்பு இவைகளை சமஎடை எடுத்து காய்ச்சி பின்பு இடித்து சட்டியிலிட்டு எரிக்க வளையலை போன்று சுண்ணாம்பாகும். இதை நோயாளிக்கு கொடுக்க வாயு குன்மம் விலகும்.

தாம்பூலம் தின்னக் கூடாது எனல்

168. பெரும்பாலோர் வெற்றிலை பாக்கு போடுகிறார்கள். இதன் விவரம்:- பாக்கு அதிகம் போட பித்தம் மிகும். வார்த்தையில் மந்தம் ஏற்படும். வாய் உழறும். வெற்றிலை அதிகம் போட வெறி உண்டாகும்.

169. சத்தான களங்கினை எடுத்து சத்து பிரிக்க செம்பாகும். இச்செம்பை வெள்ளியில் போட்டு உருக்க தங்கமாகும். அறிவை அதிகம் கொண்டு வாதம் பார்ப்பவர்கள் இடம் பொருள் அறிதல் வேண்டும்.

குறிப்பு : இந்த சத்து பிரிக்கும்முறை இந்நூலில் முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனரச பற்பம்

170. மல்லிகை பூ சாறுடன் சீனம், இரசம் இவைகளை கல்வத்தில் இட்டு அரைத்து சட்டியிலிட்டு கவசம் செய்து புடம்போட்டு எடுக்க சட்டியின் அடியில் சீனரச பற்பம் நிற்கும். இதை நோயாளிக்கு கொடுக்க குட்டரணம் விலகும்.

செத்த செம்பில் செயநீர்விட்டரைக்க பச்சைநிறம் ஓடாது

171. பொரிகாரத்தை பொரித்து இதனுடன் தேரை சேர்த்து அரைக்க செயநீராகும். இதை செம்பில் சேர்த்து அரைக்க குகையிலிட்டு உருக்க பச்சைநிறம் காணாது.

அயச்செம்பு

172. கந்தகத்தை ராவிய பொடி, துருசு நறும்பூ இவற்றை எலுமிச்சம் பழச்சாறுவிட்டு அரைத்து குகையில் வைத்து உருக்க சத்தாகும்; சத்து பிரித்து வெள்ளியில் கொடுத்து உருக்க ஏழு மாற்று காணும்.

நாகபற்பம்

123. புண்ணாக்கு ஒருசேர் எடுத்து நாகத்தை அதனுள் வைத்து புடம் போட நீறி சுண்ணமாக இருக்கும்.

இச்சூண்ணத்தை சுக்கு, திப்பிலி, மிளகு இவைகளைக் கூட்டி உண்ண குட்டம் தீரும்.

வேடவாதிகள் புரட்டு

174. காலில் காப்பு போட்டுக் கொண்டும், கழுத்தில் படிகமணி தரித்தும், காவி உடை அணிந்தும் வாதம் தெரியும் என்று சொல்லி பெண்களிடம் தாலி முதலானதை பறித்திடுவார்கள்; இவர்கள் பொய் வாதிகளாம்.

சீனரச பற்பம்

175. இரசம் நான்கு பலம் உப்பில் புடம் போட்டு எடுத்து பார்க்க பதங்கமாக இருக்கும்; இத்துடன் சீனம் சேர்த்து அரைத்து புடம் போட்டு எடுக்க தும்பை பூ போன்று வெண்மையாக பற்பம் காணும். இந்த பற்பத்தால் பல நோய்கள் ஓடிப் போகும். பித்தநோய் விலகும்.

176. கண்டபடி தெருவிலே அலையாமல் வழிமுறையுடன் அயச் செம்பு செய்யும் விதம் சொன்னேன். அறிந்து கொள்ளு.

காக்கைவலிக்கு எண்ணெய்

177. ஆமணக்கு எண்ணெய் ஓரளவு எடுத்து சம எடை பசுவின் நெய்யை எடுத்து நாற்பது மடங்கு நிலப்பனை கிழங்கு சாறும், சதுர கள்ளியும் சேர்த்து அரைத்து பாண்டத்திலிட்டு எரித்திட எண்ணெயாகும்.

லிங்கம் கட்ட செயநீர்

178. நாகத்துடன் சீனத்தை சேர்த்து உருக்கி அரைத்து புடமிட சுண்ணமாகும். அதற்கு எடை வடம் (ஆல், செம்பு என்று ஒரு பொருள் உள்ளது) சேர்த்து அரைத்து உருக்கி புடம் போட்டு பனியில் வைக்க செயநீராகும். இந்தச் செயநீரில் லிங்கம் கட்டும்.

தந்த வாயுவிற்கு குடிநீர்

179. காளான் ஒரு சேர் இடித்து சாறுபிழிந்து கரண்டியில் இட்டு இதனுடன் இரசம் சேர்த்துக் காய்ச்சி உண்ண தந்தவாயு, குட்டம் போன்ற வியாதிகள் ஒழிந்து போகும்.

கண்ணிற்கு களிம்பு

180. கண்பூளை மூலிச் சாற்றில் காசிக்கட்டி ஒரு பலம், களிப்பாக்கு அரை பலம் சேர்த்து உடைத்து ஊற வைத்து மூன்று நாட்களக்குப் பின் வெண்கலத்தில் உரசி தேய்த்து எடுத்து கண்ணில் மை போன்று தீட்ட வெள்ளைழுத்து நோய் போகும்.

நாகக்களங்கு

181. நாகம், இரசம், தாரம் இவைகளை சமஅளவு எடுத்து அரைத்து உருண்டை செய்து, உப்பை அரைத்து கவசம் செய்து உமிக்குள் வைத்து

உமிப்பிடமாகப் போட்டு எடுக்க களங்காகும். இந்தக் களங்குடன் செம்பு சேர்த்து உருக்க தங்கமாகும்.

செம்பு கரி செய்து வெள்ளியிற் கொடுக்க

182. அயச்செம்பு நான்கில் ஒரு பாகமும், தங்கம் ஒரு பாகமும் சேர்த்து உருக்கு. பின்பு அதே எடை கந்தகத்தை அரைத்து கவசம் பூசி புடம் போட்டு எடுக்க கரியாகும். இந்தக் கரியை வெள்ளியில் நான்கிலொரு பாகம் கொடுத்து உருக்க பத்து மாற்று தங்கமாகும்.

நாகச்சுண்ணம்

183. இரசம் ஒரு பலம், நாகம் ஒரு பலம் சேர்த்து உருக்கி தாரம் சேர்த்து இஞ்சி சாறுவிட்டு அரைத்திடுவாய் வாரம் ஒன்று பின்பு வில்லை செய்து புடம் போட நாகச்சுண்ணமாகும். இந்த சுண்ணத்தால் குன்மம் போகும், உடல் பெருத்து சுக்கிலம் மிகுதியாகும்.

காரீயத்தால் துருசு சுத்தி

184. காரீயம் நான்கு பலம் கரண்டியில் விட்டு உருக்கிடு. துருசின் மேல் சுண்ணச்சீலை-(சுண்ணம் தடவிய துணி) கட்டி காரீயத்தில் துருசை தோய்த்தெடுக்க வெண்மையாக சுத்தியாகும். பச்சை போகும், கறுப்பு நிறம் நீங்கும், தூய்மையாகும்.

துருசு சுண்ணம்

185. துருசு எடைக்கு இரசம், வெடியுப்பு இவைகளை திராவகத்தால் அரைத்து துருசுக்கு கவசம் செய்து புடம் போட துருசு சுண்ணமாகும்.

தாளகக்கட்டு

186. தும்பி இலை (கரும்பு, நெருஞ்சில், தும்பை) சாற்றால் வளையலுப்பு அரைத்து துய்மை செய்து அரிதாரத்தின் கவசம் செய்து புடமிட சிவந்து காணும் இதை தேனில் உண்ண கபம், சிலேட்டும் நோய்கள் விலகும், உடல் வசியமும் உண்டாகும்.

லிங்க கட்டு

187. கந்தகத்துடன் இரசத்தை சமஎடை சேர்த்து உருக்கி இத்துடன் வீரம் சமஎடை சேர்த்து அரைத்து பார்க்க நீராக இருக்கும். இதில் லிங்கத்தை தோய்த்து எடுக்க லிங்கம் கட்டும். நவலோகத்தில் லிங்கத்தை கொடுத்துருக்க தங்கமாகும்.

தாதுபுஷ்டிக்கு அவிழ்தம்

188. சொல் விளம்பி (வாய் விளங்கம் என்றொரு பொருள் உண்டு) இரண்டுபடி காயும் இரண்டு இவைகளை அரைத்து உண்ண விந்து இறுகும், சுக்கில நஷ்டம் ஏற்படாது. மணிபோன்று கட்டும் ஒரு மண்டலம் (48

நாட்கள்) உண்டு வர உடலில் அழகுண்டாகும் ஞானமும் உண்டாகும்.

நாபி மாத்திரை

189. விதி பிறந்த பதியதனை சுத்தி செய்து மிளகு சமஎடை சேர்த்து இஞ்சி சார்விட்டு அரைத்து சிறு உருண்டை செய்து உண்ண உடலில் உள்ள வாதகதி, பச்சை வாதம் போன்றவைகள் விலகும்.

வாய்விற்கு தைலம்

190. தேங்காய் கண் திறந்து அதில் சதுரக்கள்ளி பால்விட்டு எருவில் மூடிவைத்து மக்கியதும் எடுத்து தேங்காய் ஓட்டினை போக்கி மண் புழுவை நசுககி தேங்காயுடன் செக்கிலிட்டு அரைத்து எண்ணெய் எடுத்து கொள்ளுக இதனால் வாயு விலகும்.

துருசு செம்பு

191. செம்பு பத்து பலம் எடுத்து., துருசு இரண்டு பலம் இவைகளை எருக்கம் பாலால் அரைத்து வில்லை செய்து புடம் போட்டு எடுக்க செம்பு சிவந்து கசடு அற்று பொன்னாகி இருக்கும் இதை கொண்டு நகைகள் செய்வாய்.

லிங்க கட்டு

192. லிங்கம் நான்கு பலம் எடுத்து புளி, கெந்தகம் இதனுடன் சேர்த்து இந்நூலில் முன்பு லிங்க கட்டு சொன்னதை போன்று செய்ய லிங்கம் கட்டிமெழுகாகும். இதனால் மூலநோய், கிராணி பேதி போன்ற நோய்கள் விலகும்.

வாதிகள் புரட்டு

193-94.பொய் வாதியர்கள் சரக்கை கொண்டு அயச்செம்பு செய்வேன் என்பார். உலகத்தில் பொய் பேசி கெட்டலைவான் கொடும் வாதி. தங்கத்தை செய்வேன் என்று சொல்லி பணத்தை வாங்கி செலவழித்து ஓடி விடுவான் பொய் வாதியாம்.

வெள்ளி செய்ய பாஷாண கட்டு

195. கள்ளிபால் படி எடுத்து பாஷாண கரியில் இட்டு சுருக்கிட கட்டும் இந்த பாஷாண கட்டில் வெள்ளீயம் நூற்றுக்கு ஒரு பாகம் கொடுத்து உருக்க வெள்ளியாகும்.

வாத வெள்ளி செய்து ஊதி பின்னர் அதனை நொறுக்கி அயச் செம்பை சேர்க்க

196. வெள்ளியில் கொடுத்து உடுக்க நொறுங்கும் இதனுடன் இரும்பு சேர்த்து உருக்கி அதன்பின் செம்பு சேர்த்து உருக்கவும் இது அயச்செம்பாகும்.

அயக்களங்கு

197. இரும்புடன் துருசு, கந்தகம், தாளகம் இவைகளை சேர்த்து அரைத்து உருக்க சத்தாகும். இதைப் பிரித்து நவலோகத்தில் கொடுத்து உருக்க ஏழு மாற்று தங்கமாகும்.

198. தாளகத்தின் செம்பெடுக்க வீரம் சேர்த்து பார்க்க தானே பிரிந்து விடும். இதை பானையில் இட்டு எரிக்க செம்பாம்.

199. சித்தர்களுடைய நூல்களையெல்லாம் பெரும் செல்வமாக எண்ணி வழிவகையாய் இந்த இருநூறாக சொன்னேன். நானும் முக்தியடைந்த பெரியோரின் அருளினால் யூகி என்று பெயர் பெற்றேன். நல்லவித வைத்தியத்தின் விளக்கமாக கூறினேனே.

-முற்றும்-

இணைப்பு-3

யூகிமுனி

மதிவெண்பா-100

1. சூரியனின் ஒளியும், சந்திரனின் ஒளியும் கலந்து பிரிகின்றதை போன்று, அதாவது சூரியனிடத்தில் உள்ள ஒளியின் மூலமே சந்திரன் பிரகாசிக்கின்றது இருந்தாலும், இது பிரிந்து இரவில் நமக்கு ஒளியினை வழங்குகிறது. அதை போன்று முன்னோர்கள் கருத்தை பெற்று, இந்நூல் குருநூல் போன்று முதன்மைபெற்று கூறும்.

2. வண்ணானின் பிறப்பினை அறியாத வாதிகளுக்கு சுண்ணாம்பு இருக்கின்ற இடம் தோன்றாது. (வண்ணான்கள் உவர்நில மண்ணைக்கொண்டு சலவை செய்கின்றனர். எனவே அதுபோன்ற இடங்களில் பூநீர் பூக்கின்றது என்பதை அறியும் கருத்தாகும்.)

3. உப்பு கடல் அலையில் உள்ளது. இதை அறியாமல் வீண் வாதம் செய்கின்றவர்கள் இரசத்தை கட்ட தெரியாமல் அதை கரியில் வைத்து ஊதி உருக்கிப் பார்ப்பார்கள்; இது வீணாகும்.

4. காந்தண்மலர் (சூரியகாந்தி பூ என்று கூறலாம்) கடல்புறாவாக மாறி மார்பகத்தை கொத்தி சென்றதை போன்று, காந்தண் மலர் காட்டில் பூ பூக்கும்; காணாமல் காய் காய்க்கும். இதை நாட்டில் நாம் கேட்டதுண்டோ; இதைப் போன்று.

5. காரத்தை சுருக்கிடும் முறை தெரியாமல் இருக்கின்றீர்கள். பூரத்தின் புகைச்சலை அடக்க தெரியவில்லை, கம்பியுப்பினை கட்ட

தெரியவில்லை. வீரத்தை முறையாக உருக்க தெரியவில்லை, பூநீறுதனை கொல்லத் தெரியாமல் ஏன் இப்படி தவிக்கிறீர்கள்.

வாதிகள் அறிய வேண்டியவை

6. கடலை கடைந்து அமுதத்தினை எடுத்து வகை அறியாதவர் அந்த கடல் நீரில் உப்பு எடுத்து சரக்குகளுக்கு ஊட்ட தெரியாதவர். ஏழு சட்டை வாங்கி (ஏழுமுறை சுத்தி செய்து உருக்கி கட்டுதல்) ரசத்தை கட்டும் முறை அறியாதவர்கள் வாதிகள் என்று சொல்லிக்கொண்டு பூலோகத்தில் தூங்கி விழுந்துகொண்டு இருப்பார்கள் என்று சொல்.

இடை–பிங்கிலை–சுழிமுனை

7. மனித தண்டுவடத்தில் இடகலை, பிங்கலை, சுழிமுனை என்ற நரம்புகள் இருக்கின்றன. இதில் பிராணாயாமம் செய்யும்போது காற்றை பிங்கலையில் இழுத்து, சுழிமுனையில் நிறுத்தி இடக்கை மூலமாக விட்டு சுழிமுனை ஏற்றி ஆறு ஆதாரங்களில் விசுத்தி என்கிற ஆதாரத்தில் நிறுத்தி பார்க்க பரமன் இருக்கும் இடமும் அவன் பாதங்களையும் தரிசிக்கலாம்.

ககன குளிகை

8. தன்னைதான் அறியும் யோகநிலை கூடாதோ?, சுழிமுனை நடுவில் ஏறாதோ?, உடல் உயர பறக்காதோ? ஆறு ஆதாரங்களை கடவாதோ இப்படியானால் சுய குளிகை என்று சொல்லலாகும்.

9. சுழிமுனை இப்படி ஆறு ஆதாரங்களை கடந்து ஏழாவது சபையாகிய ஞானமாகிய பூரணத்தில் மனம்கடந்து இந்த உடல் வாழாதோ என்பதாம்.

பூநீறு

10. வானத்தின் விந்துவில் உவருப்பு உருவாகிறது.

இதன் பொருள் : வானத்தில் மேகங்கள் மோதுவதால் ஏற்படும் இடியானது பூமியில் ஈர்ப்பு விசையால் விழுகிறது. இது மிகவும் சக்தி வாய்ந்ததாகும். பச்சை மரமும் பட்டுவிடும்; காய்ந்துபோகும் அளவுக்கு மின்சாரத்தன்மை வாய்ந்தது. இது நிலத்தில் விழும் இடம் உவர் நிலமாக மாறிவிடுகிறது என்று விஞ்ஞானம் கூறுகிறது.

யோகம் உள்ள வாதம் செய்வோர்க்கு இந்த உப்பு ஏற்புடையதாகும்.

11. பெண்களின் கர்பத்தில் பெண்ணும், ஆணும் பிறப்பதுபோல் மேகமாய் நிற்கும். மழைத்துளி பூமியில் விழுவதால் உருவாவது காரமும், சாரமுமாகும்.

12. காரம் சில நேரங்களில் சாரமாக மாறிவிடும். சாரம் சில நேரங்களில் காரமாகிவிடுகிறது. பூரம் கலந்து உறவானால் வீரமாக விளங்கிடும்.

13. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று ஐம்பூத உப்புக்கள் தீ என்ற தேயுவிற்குள் அடக்கமாகிவிடும்; சிவ சக்தியின் அருளினால் முடியாதது தோஷமில்லை.

குறிப்பு :-இந்த பஞ்சபூத உப்புக்கள் என்னென்ன என்பது பற்றி பலவாறாக குறிப்பிடப்படுகிறது.

1. அகத்தியர் வழலை பன்னிரண்டு நூலில்

பிருதிவி	-	கம்பியுப்பு
அப்பு	-	பாறையுப்பு
தேயு	-	கல்லுப்பு
வாயு	-	இந்துப்பு
ஆகாயம்	-	வழலையுப்பு

2. போகர் காரசாரதுறை நூலில்

பிருதிவி	-	கல்லுப்பு, இந்துப்பு
அப்பு	-	நவசாரம், சத்திரசாரம்
தேயு	-	வெடியுப்பு, சவுட்டுப்பு
வாயு	-	வெங்காரம், துருசு
ஆகாயம்	-	பச்சைபூரம், பூநீறு

கல்லுப்பு கட்டு

14. சந்திரனுப்பு எனும் இந்துப்பினால் கல்லுப்பு கட்டும் என்பதாம். வானக்கெந்தியால் ரசம் கட்டி மணி போலாகும்.

ரசமணி செந்தூரம்

15. இந்த ரசமணியுடன் கெந்தி, தாளகம் வங்கம், நாகம், இவைகளை முறையோடு சேர்த்து புடம் போட சிந்தூரமாகும்.

16. ஈசனின் மகிமை வாய்ந்த உப்பு பூக்கும் பூமியையும், காலத்தையும் அறியாதவன் வாதியல்ல என்பதாகும்.

கல்லுப்பும் அதனை கட்டும் விதமும்

17. கடல் அலையில் திரண்டு வரும் கல்உப்பானது சிவ சக்தியின் அருளால் உண்டானதாம். கல்லுப்பானது கடலில் பாறைகளாக கட்டி இருக்கும் இந்த உப்பானது கரியில் உருக்க உருகி நிற்கும். மற்ற உப்புகள் புகையாகிவிடும்.

ரச ட்தங்களும் அதனை கல்பமாக்கும் விதமும்

18. லிங்கத்தினால் ரசம் கட்டும்; இதை கொண்(,மாக்கி

உன்ன காயம் சித்தியாகும். இது ஈசன் சொன்ன முறையாம்.

இன்னாருக்கு யோகமும் சூதமும் சித்தியாகும் எனல்

19. லிங்கத்தினால் இரசம் கட்டி வெற்றி கண்டால் மற்றதைப் பற்றி பேச வேண்டுமோ? தன்னைதான் உணர்ந்த யோகி, ஞானிகளுக்கே இந்த முறை சித்தியாகும்.

துருசை கொல்லவும் தாரபற்பம் செய்யவும்

20. உப்பில் களிம்பேறும் துருசு பஞ்சபூத உப்புகளில் ஒன்றாகிய அப்புவில் தோய்க்க மடியும் (கொல்லும்) கடுமையான சீனச் சுண்ணத்தினால் அரிதாரம் பற்பமாகும்.

21. அகாரம், உகாரம் இவைகள் இரண்டுடன் மகாரம் சேர்த்தால் அ+உ+ம்=ஓம் என்ற பொருள் உருவாகும். சிகாரமும். வகாரமும் சேர்ந்தால் "சிவ" என்ற சிவசக்தி பொருள் உருவாகும்.

இந்த ஓம் சிவ எனும் அட்சரத்தை அப்பியாசிக்க வாசி என்ற மூச்சு கட்டுக்கடங்கி "மூலாக்கினி" என்ற சுழிமுனை திறக்கும் என்பதே இப்பாடலின் கருத்து.

அக்கினி என்பது கடல்நுரை இது அகாரமாகவும், பூநீறு உகாரமாகவும் உள்ளது.

22. அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளது என்பார்கள். இதுவே ஜீவான்மா, பரமான்மா என்பதாகும் அதை உணர்ந்த ஞானிக்கு வாதத்தில் காணும் முடிவு பொன்னாகும்.

23. கடல் நுரையினால் கம்பிஉப்பு பதப்படும், சாரமும் கட்டும்.

24. சவுக்காரமும் கட்டலாம், இதை நூலில் பாடினாலும் பரிபாடையாய் இருப்பதால் அலைந்து தவிப்பீர்கள்.

ஆழி தீப்பிண்டம் என்பது கடல்நுரையே ஆகும். ஆடி ஆவணி மாதங்களில் தேடினாலும் வராது. அந்த தேதியில்.

ஜயநீர் காலம்

25. தை மாதமும், மாசி மாதமும் பனிகாலம் அல்லவா இந்நேரத்தில் செயநீர் செய்ய ஏற்ற காலமாகும்.

சுண்ணகாலம்

26. பங்குனி மாதமும், சித்திரை மாதமும் இந்த சுண்ணங்கள் செய்வதற்கு ஏற்ற காலமாகும்.

அன்று ஞானத்தில் சிறந்தவர் சொன்னதாகும்.

தாரணை யோகம்

27. தியான யோகத்தில் இருந்து கொண்டு பிராணா யாமம் செய்ய

வேண்டும். வாசி எனும் மூச்சுக் காற்றை ரேசக, பூரக, கும்பகம் செய்து மாற்றி மாற்றி பிராணாயாமம் செய்ய மூலதாரையாகிய சுழிமுனை திறக்கும். பின்பு குண்டலினி மேலேறும். இதற்கு ராசயோகம் என்று பெயர் ஆகும்.

28. ஆறு கேணி என்பது ஆறு ஆதாரங்களாகும். அவைகளில் மூலாதாரமான சுழிமுனையை ஏற்ற பிரம்மன், விஷ்ணு, ஈசன் இவர்களை காணலாகும். இதில் சுழிமுனை கணேசனாகும். ஆறாவது ஆதாரம் சதாசிவன் ஆகும்.

முப்புவின் சிறப்பு

29. காரம், சாரம், செயநீர் இவைகளை கட்டும். வீரம், பூரம் இவைகளுடன் மெழுகுகள் பல செய்யலாகும். குருமருந்தும், சிந்தூரமும் செய்யலாகும். இதோடு தைல வகைகளும் செய்யலாகும். இவைகள் அனைத்தும் உப்பினால்தான் என்பதே.

30. முப்பினால் சுகனமணி எனும் மணி செய்யலாகும். இதனால் உடல் உயரம் தூக்கும்படி செய்யலாம். ரசமணி செய்து இதனால் உடல் பலிதம் (காயசித்தி) பெறலாம். யோகம் பெறலாம் அறிக.

31. இவ்வுலகில் ரசத்தால் செய்த பற்பம், சிந்தூரம் போன்றவைகளால் காயசித்தி செய்தவர்களை கண்டால் எம தூதர்களும் கண்டு அஞ்சுவார்கள். ஐம்பூதங்களும் உடலுக்குள் ஒடுங்கி யோகியாகி பரமனை போன்று வாழலாகும்.

32. கடல் பொங்கி பிரளயம் உண்டானபோதும் யோகிகள் சாவதில்லை. ரசம் கட்டி உண்டவர்கள் உலகில் வாழ்வார்கள்.

உப்பினால் செம்பிறக்கும்

அதனை காரீயம் எழுப்பும் எனல்

33. உப்பினால் செம்பு மடிந்திடும் காரீயத்தினால் மீண்டும் செம்பாகிடும். வெள்ளியிலே சேர்த்திட தங்கமாகும்.

சீன சுண்ணத்தில் வெடியுப்பு கட்டும்

34. சீனத்தினாலும், வெடியுப்பினாலும் முடியாத சரக்கும் முடிக்கலாகும். அரிதாரத்தை சுண்ணமாக்கலாம். நாகத்தையும் கட்டலாகும்.

செம்புக்கு முடிவில் ஈயம் சேர்த்தல்

35. உறுதி இல்லாத ரசவாதம் செய்கின்றவர்கள் வாதம் பார்த்து தன்னிடம் உள்ள பொருளை இழப்பார்கள். செம்பின் வாதவகை கண்டவர்கள் மோஷம் பெறுவார்கள்.

செங்கலை பொன்னாக்கிய சுந்தரர் தன்னை அறிவினால் சிந்தித்து பாருங்கள். எனவே செம்புடன் ஈயம் சேர்த்தால் உறுதியாகிடும். இதனுடன் வெள்ளி சேர்த்தால் பொன்னாம்.

கடல் நீரினால் உப்பை கட்டி ரசபற்பம் செய்தல்

37-38.. உப்பு என்றால் என்ன என்று தெரியாதவர்களே உப்பை கடல் நீரினால் கட்ட வேண்டும். இந்த உப்புடன் இரசம் சேர்க்க ரச பற்பமாகும். இதனுடன் கந்தகம் சேர்த்து செம்பிலிட்டு பார்த்தால் படிந்திடும். இதனுடன் பாதியளவு ஈயம் சேர்த்து உருக்கி மேலும் தங்கம் இதனுடன் ஒரு பாகம் சேர்க்க முழுதும் தங்கமாம்.

இன்னதை இன்னது கட்டு (வசப்படும் பக்குவப்படும்)

39. சாரம் வெடியுப்பில் கட்டும். வெடியுப்பு வசப்பட்டால் அனைத்தும் வெற்றியாகும். உலகிலே நினைத்ததெல்லாம் தங்கமாம்.

கல்லுப்பை துருசு கட்டும். இதனால் காரம், வெள்ளை பாடாணம் போன்ற வகைகளை கட்டும் அனைத்தும் தங்கமாகும்.

40. மூலாதார சக்கரத்தில் அகாரத்துடன் உவ்வை சேர்த்து மகாரத்தை தியானிக்க (அ=+உ+ம=ஓம்) அனைத்து காரியமும் சித்தியாகும். கயிலாய கிரியையும் காட்டும்.

செம்பு கரி சேர்த்த சிங்கி

41. செம்பை புளி இலை அளவு சிறியதாக பொடி செய்து இதற்கு சமஎடை இரசம் சேர்த்து அரைத்துமேல் கவசம் செய்து கனபுடமாக போட்டு எடுக்க கரியாகி இருக்கும். இதனுடன் சமஎடை மிருதார்சிங்கி சேர்த்து அரைத்து புடம் போட்டு எடுத்து உருக்கி பார்த்திடவும்.

வெள்ளியில் சேர்த்த வேதை

42. மேற்கண்ட கரி சேர்த்த சிங்கியுடன் வெள்ளியை எட்டுக்கு இரண்டு பாகம் சேர்த்து உருக்கி பார்க்க பத்து மாற்று தங்கமாக காணும். வாசி எனும் பிராணாயாமத்தில் காற்றை மூலாதாரத்தில் தாக்கி தினமும் ராஜயோகம் செய்திடு மூக்குநுனியை பார் மூலாதாரத்தை கண்டு பிடித்திடு.

பித்தளை செம்பு

43. பித்தளை ஒரு பலம் காரம் சேர்த்து உருக்கி ஐந்து முறை பஞ்சமித்திரத்தில் தோய்த்திடு. இதை திராவகத்தில் கொட்டி சூரிய வெய்யிலில் வைத்திடு. இது கரைந்து போகும் இதற்கு எடை செம்பு சேர்த்து கல்வத்தில் சாமம் நேரம் அரைக்கவும்.

குறிப்பு: பஞ்சமித்திரம் என்பது:

1. நல்லெண்ணெய், 2.தேங்காய்ப்பால், 3.இலுப்பை பூச்சாறு, 4. பசுநெய், 5.தேன்.

44. அரைத்து பாத்திரத்தில் வைத்து வில்லைகளாக சூரியனில் காய வைக்கவும். பிறகு கஜபுடமாக போட்டு எடுக்க குரு மருந்தாகிவிடும். வெள்ளியில் எட்டுக்கு இரண்டு பாகம் சேர்த்து மேலும் காரம் சேர்த்து

பின்பு தங்கம் இரண்டு சேர்த்து உருக்க ஏழுமாற்று தங்கமாகும்.

ரசபதங்கம்

45. நாகம் ஒருசேர் அளவு எடுத்து இலுப்பை எண்ணெயில் சுத்தி செய்து ஒரு கிண்ணம் செய்து கொண்டு மேலும் இரும்பினால் ஒரு கிண்ணம் செய்து வைத்து கொள்ள வேண்டும்.

இரும்பு கிண்ணத்தில் கல்லுப்பு, செங்கல்தூள் இவைகளை போட்டு இரசத்தை ஊற்ற வேண்டும்.

46. மேல் மூடியாக நாக கிண்ணத்தை மூடி உளுந்து மண்சீலை கவசம் செய்திடு பிறகு கமலாக்கினியாக தீ எரித்திடு. இது நல்ல பதங்கமாக இருக்கும்; இதை எட்டு பாகம் செம்பில் இரண்டு பாகம் கொடுத்து உருக்க பொன்னாகும். பதங்கத்தை பணவெடை உள்ளுக்கு கொடுக்க கொடிய பிணிகள் விலகும்.

வெடியுப்பு சுண்ணம்

47. காரம், வெடியுப்பு இவைகளை சமஎடை எடுத்து இதற்கு எடை புளி சேர்த்து இடித்து வெய்யிலில் உலரவிட்டு மறு புது சட்டியிலிட்டு எரித்து எடுக்க வெடியுப்பு சுண்ணமாக இருக்கும்.

சாரக்கட்டு

48. மேற்கண்ட வெடியுப்பு சுண்ணத்தில் வீரம் சேர்த்து அரைத்து இதனுடன் சாரம் சேர்க்கவும், பிறகு வங்கம் சேர்த்து உருக்கினால் உருகும் இதை கரியில் இட தங்கமாகும்.

அயங்களங்கு

49. இரும்புடன் பாதியளவு வீரம் சேர்த்து வெடியுப்பு நீரை விட்டு சாமம் ஒன்று அரைக்கவும். முருக்கம்பூ போன்று வெண்மையாக காணும் இதை பானையிலிட்டு எரிக்க பானையில் இங்கும் அங்குமாக சிதறி இருக்கும் அனைத்தையும் ஒன்றுசேர்த்து கல்வத்தில் வைத்து அரைத்து இதற்கு சமஎடை துருசு சேர்த்திடு.

50. துருசு சேர்த்து வெடியுப்பு நீரை விட்டு அரைத்து பானையி லிட்டு எரிக்க வேண்டும். பிறகு மீண்டும் எடுத்து கல்வத்தில் இட்டு அரைத்து வில்லை செய்து கஜபுடமாக போட்டு எடுக்க நல்ல அயக்களங்காகும். இதை செம்பு வெள்ளியில் கொடுத்து உருக்க மணியாகும்.

திராவகம்

51-52. வெடி உப்பு பத்து பலம், சீனம் இருபது பலம் இவைகளை அரைத்து பானையிலிட நீராகும். இந்த திராவகத்தால் வேண்டிய வாதவகைகள் செய்யலாகும். (வெடியுப்பே பொட்டலுப்பாகும்)

சிலர் உப்பைவிட்டு பார்த்து சரிவராமல் நூல்கள் பொய் என்று

கூறுவார்கள். (மேற்கண்ட முறையை திராவக வாலை பானையில் வடித்தல் வேண்டும்)

உப்பு கட்டு

53. ஐம்பூத உப்புக்கள் என்னென்ன என்று இந்நூலில் கூறியுள்ளேன். இந்த ஐம்பூத உப்புக்கள் ஐந்து பலம், புளி ஐந்து பலம் இவைகளை சுத்தி செய்து கரியில் வைத்து உருக்க உருகும்.

54,55,56. உப்பு புளியினால் சுண்ணமாகிடும். இந்த சுண்ணத்தால் சரக்குகள் பலவும் கட்டலாகும். செம்பு தங்கமாகும்.

ரசமணி செய்வதற்கு துருசினை கட்டினால் கட்டும். கல்லுப்பை கட்டினால் இரசம் மணியாகும், பொன்னாகும். கல்லுப்பை கட்டாவிடில் பொன் இல்லை என்பதாகும்.

கல்லுப்பு ரசமணி சிந்தூரம்

57. இரசத்தை கட்டி கரியில் வைத்து உருக்கி இதனுடன் கந்தகம் சேர்த்திடு பின்பு குப்பியில் வைத்து உருக்கி தாளகத்தை இதனுடன் சேர்த்திடு.

58,59. சேர்த்து இரும்பு கரண்டி கொண்டு கிண்டி மூடி வைத்து பிறகு எடுத்து பார்க்க நீத்து சிவப்பு நிறமாக இருக்கும். இதை உலோகத்தில் நூற்றுக்கு ஒன்று கொடுத்து உருக்க பதினாறு மாற்று தங்கமாகும். யோகமும், ஞானமும் நிலைக்கும்.

60. புத்தியுள்ள வாதம் செய்வரே அறிந்து கொள். கல் உப்பிலே அனைத்தும் வசமாகும். நூலின் கருத்தினை அறிந்தவரே. கடல்நுரை உப்பில் வசப்படும் என்பதை அறிந்துகொள். (கடற்குருவி என்பது கல்லுப்பாகும்.)

61. உலோகமெல்லாம் சொல்வதற்கு முன்னால் தங்கமாகும். நெருப்பில் உருக்க பொன்னாகும், தங்கமாகும். வாதி என்று சொல்லிக்கொண்டு வீணாக கரிநெருப்பில் சுட்டு வராமல் போனால் பொய் என்று சொல்லும் மூடரே.

62. மூடர் என்று சொன்னால் அதிக கோபம் வரும். ஆண் மகனை போன்று அலைந்தால் ஆகுமா, ரசவாதம் செய்து வெற்றி கண்டால் நாடு நமக்கு உண்டு. ரசவாதத்தில் கொஞ்சம் தவறினாலும் ஒன்றும் சரிவராது.

அமுரிமுறிக்க

63,64. அமுரி உப்பின் எண்ணெய் முறித்திட கற்றாழை சாற்றில்போட முறிந்து தூய்மையாகுகி எண்ணெய் வாங்கும் இந்த எண்ணெயால் பூநீரில் இட சவுக்காரம் ஆகிவிடும். இந்த எண்ணெயால் ஈயம் மடிந்திடும், துருசு நீறுமாம்.

ரசமணி

65. நீறி இருக்கின்ற துரிசு பணவெடை எடுத்து லிராலி இலைச்சாறு

விட்டு பிறகு இரும்பு கரண்டியில் விட்டு சாற்றுடன் பாதரசம் சேர்த்து எரித்திட ரசமணியாகிவிடும்.

வங்கசிந்தூரம்

66. ஈயத்தை காற்றாழைச் சாறுவிட்டு அரைத்து புடம் போடவும். இம்மாதிரி ஐந்துமுறை புடம்போட மஞ்சள் நிறமாக காணும்; இதை உருக்கிட மடிந்து வெட்டையாக இருக்கும். இந்த வெட்டையான ஈயத்துடன் இரசத்தை சமஎடை சேர்த்து திராவகத்தை விட்டு அரைக்கவும். அரைத்து புடம்போட்டு எடுக்க சிந்தூரமாகும். இந்த சிந்தூரத்தை நூற்றுக்கு ஒன்று உலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாகும்.

67. வங்க சிந்தூரத்தை தேனில் உண்ண உடலில் உண்டாகின்ற நோய்கள் விலகும். சுக்கிலம் கட்டும். வங்க சிந்தூரத்துடன் இரசம் சேர்த்து சட்டியிலிட்டு மேல்சட்டிமூடி எடுத்திட இரசம் மேல் சட்டியில் படிந்திருக்கும்; அதை வழித்து கல்வத்திலிட்டு இத்துடன் திராவகத்தை சேர்தது அரைத்து எரித்திட சித்தியாகும்.

வங்கசுத்தி

68. ஈயம் ஒரு சேர் அளவு எடுத்து நான்குசேர் பூநீறு நீர்விட்டு வைத்து கொண்டு, கல்சுண்ணம் படிஅளந்து அத்துடன் சேர்த்து அதில் ஈயத்தை வைத்து மேல்மூடி செய்து பதமாக எரிக்க ஈயம் எண்ணெய் கக்கி சுத்தியாகும். (தூய்மையாகும்) தூய்மையான இந்த ஈயத்துக்கு சமஎடை கோழிமுட்டை ஓடு எடுத்துக்கொண்டு இத்துடன் நான்கில் ஒரு பாகம் சீனம் சேர்த்து அரைத்து ஓட்டில்வைத்து சீலை செய்து புடம் போட்டு எடுக்க கடும் சுண்ணமாக இருக்கும்.

மேலும் இந்த சுண்ணத்துடன் ஈயம் சேர்த்து உருக்கிடு இப்படி ஏழு முறை செய்ய ஈயம் தூய்மையாகி கடைசியில் வெள்ளியாகும்.

வங்கசுண்ணம்

69,70. ஈயத்தின் எடைக்கு கந்தகம் விட்டு உருக்க பிட்டு போன்று இருக்கும். இதை கல்சுண்ண நீரில் எரித்து எடுத்து எருக்கம்பால் விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து பானையிலிட்டு மேல்மூடி செய்து எரிக்க மேல் சட்டியில் படிந்திருக்கும் அதை வழித்து மீண்டும் எருக்கம் பால் விட்டரைத்து மூடிசெய்து எரிக்க வேண்டும். இப்படி ஐந்துமுறை எரித்தெடுத்து செம்பில் பத்துக்கு ஒருபாகம் கொடுத்து உருக்க வெள்ளியாகும்.

71. மேற்கண்ட செம்பு வெள்ளிக்கு சமஎடை வெள்ளி சேர்த்து உருக்க பத்து மாற்று வெள்ளியாகும். இந்த வெள்ளியை கொண்டு யோக ஞானங்கள் பார்க்க பயன்படுத்திடு. மூக்கு நுனியில் மனக்கண் நிறுத்தி சுழிமுனை யோகம் பார்த்தால் சிவயோகம் காணும்.

லிங்ககட்டு

72. கடல் நுரையோடு கரிஉப்பு சேர்த்து முட்டை வெண்குரு விட்டு அரைத்து, வில்லை செய்து கரி நெருப்பில் வைத்து எரிக்க கடும் சுண்ணமாக இருக்கும். இந்த சுண்ணத்துடன் வீரம் சேர்த்து குப்பைமேனி மூலிகை சாறுவிட்டு பார்க்க ஜலம் போன்று நீராக இருக்கும்.

73. இரும்பு கரண்டியில் லிங்கத்தை வைத்து மேற்கண்ட சுண்ண நீரில் ஒருசாமம் சுருக்கிட லிங்கம் கட்டும்.

லிங்கத்தின் எடைக்கு வீரத்தை இரண்டு சாமம் அரைக்க வெண்மையாக இருக்கும். இதை லிங்கத்தின் மேல் கவசம் செய்து கற்பூர தீபத்தின் வெப்பத்தில் வாட்டி எடுக்க மெழுகாக இருக்கும். இந்த மெழுகை உலோகத்தில் கொடுத்து உருக்க பொன்னாகும.

சமுத்திர நீர் முறிக்க

74. கடல் நீரை முறிக்க வாலை அடுப்பில்-(எரிப்பு வகையில் ஒருவித அடுப்பு) சுத்த நீர்விட்டு எரிக்க முறிந்துவிடும். அதை கொண்டு உருக்கினம் செய்வாயாக.

தாமிரத்திற்கு கெந்தி சேர்க்கும் அளவு

75. கந்தகம் அதிகம் சேர்த்தால் செம்பு உருக்கும் போது கரியாகிவிடும்; கால்பாகம் கந்தகமும் முக்கால் பாகம் செம்பும் சேர்க்க வாதத்தில் தங்கமாகும். நந்தி சொன்ன முறை; இந்த முறை புலத்தில் என்னிடம் வந்தார் அப்போது சொன்னேன் இந்த வேதை முறையை.

76. காரம் அதிகமானால் கருத்து போய்விடும். அதே சமயம் காரம் இல்லாத தங்கம் செய்யும் வகையும் இல்லை. பாரம் உள்ள கப்பல் கனத்தினால் கவிழாமல் போகும். பாரம் இல்லாத வெறும் கப்பல் தானாகவே கவிழ்ந்து விடும். வாதச் சரக்குகளில் உப்பு, புளி கூட்டவேண்டும் என்றால் அளவில் குறைவாகக் கூட்டு. வீரத்தை சேர்த்தால் சுண்ணம் ஆகும். எனவே வேதை செய்ய வீரம் சேர்த்திடு.

77. சரியாக பலிதமாக செம்புடன் கந்தகம் அதிகம் சேர்க்கக் கூடாது. அதிகமாக சேர்த்திட சத்தியமாக கரியாக போய்விடும். இதைகண்டு பிடித்து வாதம் செய்திடு. உடல் சித்தியாக சுழிமுனையில் வாசியோகம் பயிலுதல்போல, 'சிக்' என்று வாதவழி கண்டுபிடி.

துருசுச்செம்பு சிந்தூரம்

78. முதன்மையான துருசு ஐம்பது பலம் எடுத்து காரத்தையும் அதற்கு சமஎடை எடுத்து உருக்கிடு. பிறகு செம்பு பத்து பலம் எடுத்து, கந்தகத்தை தாழம்பூச்சாறு விட்டு அரைத்து செம்பை உருக்கி சுருக்கு கொடுத்து தகடு தட்டி திராவகத்தில் மூன்று நாட்கள் வைத்திட செம்பு கரைந்து துருசு போன்று ஆகும்.

79. துருசு, காரம் இவைகளை திராவகம் வற்றும் வரை எரித்து எடுத்து அரைத்து வில்லை செய்து இந்த வில்லைகளை செம்புடன் சேர்த்து குகையில் வைத்து பெரிய புடமாக போட்டு எரிக்கவும்.

80. இரும்பு பலம் எடுத்து வீரம் சேர்த்து திராவகத்தால் ஒநாள் அரைத்திடு. அரைத்து பானையிலிட்டு மேல் மூடி செய்து எரித்திட சரக்கு மேல் சட்டியில் படிந்திருக்கும்.

81. மேல்சட்டியில் உள்ளதை வழித்தெடுத்து மீண்டும் திராவகம் விட்டு அரைத்து எரிக்க வேண்டும். இப்படி ஐந்து முறை செய்ய பவழ நிறமாக இருக்கும். இதை முன் செம்பில் கவசம் செய்து கஜபுடமாக போட்டு எடுக்க சிந்தூரமாக இருக்கும்.

82. மேற்கண்ட சிந்தூரத்தை வெள்ளியில் எட்டுக்கு ஒருபாகம் சேர்த்து, மேலும் தங்கம் எட்டுக்கு இரண்டு பாகம் சேர்த்து உருக்க இரண்டே கால் மாற்று தங்கமாகும். இந்த தங்கத்தின் பெருமையை வாயில் சொல்ல முடியாது.

இறைவனை நினைத்து வாசி எனும் சுவாசத்தை சுழிமுனையில் நிறுத்தி உலகில் ஞான வழியை தேடிப் பார்த்து மனதின் மாயைகளை அகற்றிடுவாய்.

83. கடல் நீரை முறித்து உப்பெடுத்து இரசத்தோடு சேர்த்து வாதம் பார்க்க இரசம் கட்டுபடும். இரசபற்பம் செய்ய பலிதமாகும். இரச பற்பம் உண்டவர்கள் பெரியோரும், வேதங்கள் அறிந்தவரும் சாவதில்லை.

வீணாக திரிந்து அலைபவர்கள் சாஸ்திரத்தை பொய் என்று கூறுவார்கள். ஏழு கடலும் இருக்க அலையலாமோ இரசம் உண்டவர்கள் வாழ்க. மதிவெண்பாவாகிய இந்நூல் முறையோடு பார்த்தவர்கள் வாழ்க!

லிங்க ரச பதங்கம்

84. நான்கு பாகம் உப்பு, ஒரு பாகம் செங்கல் தூள் இவைகளை சட்டியிலிட்டு, இலிங்க ரசம் விட்டு மேல் சட்டி மூடி ஏழு முறை சீலை மண் செய்து அடுப்பில் வைத்து பதினெட்டு சாமம் கமலாக்கியாக தீ எரித்து எடுக்க லிங்கரச பதங்கமாகும்.

நாகக் கிண்ணியில் லிங்கரச பதங்கம்

85. மேற்கண்ட லிங்கரச பதங்கத்தை சட்டியிலிருந்து பிரித்தெடுத்து நான்கு பலம் ரசபதங்கத்தை இரும்பு கிண்ணத்தில் வைத்து மேல் மூடியாக நாகக் கிண்ணத்தை மூடி சுற்றிலும் சீலைமண் செய்து அடுப்பேற்றிடு.

86. எரிப்பது எதிலென்றால் இலுப்பை எண்ணெயில் திரிபோட்டு மூன்று சாமம் எரித்திடு. எரித்து எடுத்து பார்க்க மேல் மூடி செய்த் நாகக் கிண்ணியில் லிங்கரச பதங்கம் மேல் படிந்திருக்கும். இதை செம்பில் நூற்றுக்கு ஒருபாகம் சேர்த்து உருக்க ஆணிப்பொன்னுக்கு நிகராக

இருக்கும். புடம் போட எளிதாக இறங்கும்.

துருசுசெம்பு

87. துருசு கால்பலம் இதனுடன் வீரத்தை சேர்த்து குகையில் வைத்து செம்பை உருக்கி தகடடித்து செம்பின் எடைக்கு கந்தகமும், இரச பதங்கத்தையும் சேர்த்து கற்றாழைச் சாறு விட்டு அரைத்து மூன்று முறை இம்மாதிரி புடமிடு.

88. மூன்று புடமிட்டு எடுத்து பார்க்க கறுப்பு நிறமாக இருக்கும். இதை திராவகத்தில் விட்டு மூன்று நாட்கள் ஊற வைக்க நீல நிறமாக காணும். பீங்கான் பாத்திரத்தில் இதை வைத்து உமி நெருப்பில் காய்ச்சிடு.

89. காய்ச்சி குழம்பாக எடுத்து இதனுடன் காரம் சமஎடை சேர்த்து குகையில் வைத்து உருக்க செம்பாக இருக்கும். இந்த செம்பை வெள்ளியில் எட்டுக்கு ஒருபாகம் சேர்த்து உருக்க ஏழுமாற்று தங்கமாகும்.

வெள்ளி வித்தை

90. காரம் ஒரு எடை அளவு எடுத்துக் கொண்டு அதே அளவு கள்ளிபால் சேர்த்து நன்கு அரைத்து ஈயத்திற்கு சுருக்கிட உடைந்து நொறுங்கும். இந்த ஈயத்திற்கு சமஎடை காரம் சேர்த்திடு.

91. சேர்த்து கற்றாழைச் சாற்றில் அரைத்து எடுத்து எடைஅளவுக்கு வெள்ளி, அதே எடைக்கு இரசம், வெள்ளை பாடாணம் இவைகளை சேர்த்துருக்க அனைத்தும் வெள்ளியாகும்.

92. இந்த வெள்ளி எடையளவு எருக்ம் பால் படி விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து சட்டியிலிட்டு மேல் சட்டி மூடி எரித்து எடுக்க அனைத்து மேல்சட்டியில் படிந்திருக்கும்.

93. அதை வழித்து மீண்டும் எருக்கம் பால் விட்டு அரைத்து வில்லை செய்து காயவைத்து மேல் சட்டி மூடி எடுத்திடு. இப்படி ஐந்து முறை எரித்து எடுத்து ஈயத்தில் ஒரு பாகம் கொடுத்து உருக்க ஈயம் அனைத்தும் வெள்ளியாகும். இதை கொண்டு வாசியோகம் பார்த்திடு.

94. நினைத்து பார்க்க முடியாத வழிவகைகள் அடங்கிய இந்நூலில் இன்பமுடன் கண்ணில் உள்ள கண்மணியை போல மதிவெண்பா நூறில் பெரும் சுண்ணங்கள், சிந்தூரம், இவைகளை கூறியுள்ளேன். புத்தி உள்ளவர்கள் அறிந்து கொள்ளுவார்கள். வழி முறையோடும் செய்வார்கள். உலகில் தூய்மையான சுடர் போன்று ஆவார்கள்.

95. புலத்தியர்க்காக ஒரு லட்சம் பாடல்களில் பாடினேன். இந்த மதிவெண்பாவில் முப்பு சுண்ணங்கள் சொல்லினேன். கவனிதது பார்த்தால் வழிவகைகள் தோன்றும்.

சீனச்சுன்னம் அதனால் தார சுண்ணம்

96. சீனம் இரண்டு பலம் எடுத்து முட்டையின் வெண்கருவால் அரைத்து புடம் போட சுண்ணமாக இருக்கும்.

97. இந்த சுண்ணத்துடன் சமஎடை வீரம், காரம் இவைகளுடன் அரிதாரம் சேர்த்து அரைத்து புடம் போட்டு எடுக்க அரிதாரச் சுண்ணமாக இருக்கும். இதை உலோகத்தில் கொடுத்து உருக்க தங்கமாகும்.

98. குருவை பார்த்து வாதம் செய்திடு. குரு இல்லாமல் போனால் இந்த மதிவெண்பா நூலை பார்த்திடு. இதில் ஒரு வேதையை செய்துபார். அளவோடும் வழியோடும் செய்திடு. நூலில் கருத்தை பார்த்திடு. முக்கி விஷயத்தை பார்த்திடு. கவனமாக பாாத்து உறுதியுடன் செய்திடு.

99. தங்கம் செய்வது அருமையானதாகும். உங்கள் புத்தியைக்கொண்டு இந்த மதிவெண்பா நூலை கவனித்து பார்த்து அயச்செம்பு செய்து வெள்ளியிலே கொடுத்து உருக்க தங்கமாகும். மிகுந்த ஞானம் உண்டாகும். எனவே வாசி யோகம் எனும் சுவாச பயிற்சி செய்து சுழி முனை செலுத்திடு

நொறுக்கு வெள்ளி

100. வெள்ளிக்கு இரண்டு மடங்கு ஈயம் சேர்த்து உருக்கி தகடாக தட்டி கொண்டு வரிகற்றாழை சாற்றுடன் கந்தகம் ஒரு எடை அளவு எடுத்து நன்கு அரைத்து தகட்டிற்கு கவசம் செய்திடு.

101. கவசம் செய்து புடம் போட்டு எடுத்திடு. இம்மாதிரி ஐந்து முறை புடம் போட்டு எடுத்த பிறகு திராவகத்தில் அரைத்து வில்லை செய்து வெய்யிலில் காயவைத்து கரியில் புடம் போட்டு எடுத்து இதனுடன் காரம் சேர்த்து உருக்கிடு.

102. உருக்கி வெள்ளி தகடு செய்வது போன்று தகடு செய்து பழுக்க காய்ச்ச ஏழுமாற்று பொன்னாகும். வெள்ளியை இப்படி முறையாக செய்திடு.

103. வெள்ளியை இப்படி முறையாக செய்திட நூலுக்கு எப்படி நிறம் ஏற்றுகிறோமோ அப்படி ஆகும் இந்த வெள்ளியை புடம் போட்டால் உப்புக்கும், காவிக்கும் நன்றாக புடம் இறங்கும், உயர்வாக வேதை முடியும். நல்ல வாழ்க்கை உண்டாகும், இதை வெள்ளி, செம்பில் சேர்த்திடு பொன்னாகும்.

104. வெள்ளியை உருக்கி அயச்செம்பில் (இரும்பு செம்பு) சேர்த்து உருக்கி இதனுடன் சமஎடை தங்கம் சேர்த்து உருக்க மாற்றுள்ள தங்கமாகும்.

105. பாருங்கள் ரசவாதிகளே மேற்கண்ட வெள்ளியையும் அதன் பெருமையையும் கூறக்கேளுங்கள். வெள்ளியை முறைப்படி நொறுக்கு வெள்ளியாக்கி உருக்கி பார்க்க எப்படியும் படியும் தங்கவகை.

106. வாதம் கைகூட துணிந்து செய்தல் வேண்டும். மண்சட்டிக்கு

ஒன்றும் பொன் பகை இல்லை; எனவே பொன்னை எடுத்து உருக்கி வாதம் பார்க்க வசப்படும்-(பலிதமாகும்)

107. ரசவாதம் செய்யும் விதம் கைகூடினால் நல்வாழ்வு உண்டாகும், மனஉறுதியாக இருந்தால் வாதம் கூடும் இதை கொண்டு வாழ்க்கை நடத்திக் கொள்ளலாம்.

108. ரசத்தை கட்டும் முறை தெரிந்து செய்து வெற்றி கண்டால் பொன் செய்யலாகும், எனவே இந்த மதிவெண்பாவின் முறைபடி செய்க.

109. பாவம் உடைய பாவிகள் வாதத்தை பொய்யானது என்று சொல்லுவான். இவர்கள் வாசனை இல்லாத பூவைபோன்று ஏங்கி அலைவார்கள்; அவர்களிடம் சொல்லாதே.

110. வழலை முடிப்பேன் என்று வாய் பேசுகின்ற வீணர்கள் சொல்லுவார்கள். வீணர்கள் சொல்லுவது வீணாகவே போகும். எனவே முதலில் களங்காக செய்து அதை செம்பு, வெள்ளியில் கொடுத்து உருக்கி வாதம் செய்திடு.

111. ஒவ்வொரு உலோகம் மற்றும் சரக்குகளுக்கு சத்ரு, மித்ரு என்று பாடாணங்கள் உபரசங்கள் இவைகள் உண்டு இவைகளை கண்டு அறிந்து எதை கொண்டு வாதம் செய்ய வேண்டுமோ அதை கொன்று அதாவது சத்ருவை சேர்த்து உருக்கியோ, புடமிடவோ செய்தால் அந்த உலோகமோ அல்லது இரசமோ மடிந்திடும்; அவ்வாறாக செம்பை கொன்று வெள்ளியில் கொடுத்து உருக்க பொன்னாகும்.

112. இந்த மதிவெண்பா நூறும் வாழ்க! வெகு காலமாக இருந்த யூகி யோகி வாழ்வதைப் பார், வாதம் பார்த்து இரச பற்பம் உண்ட யோகியும், கடல் உப்பும் முதன்மையான வெண்பாவும் வாழ்கவே!

113,114. சீனச் சுண்ணத்தினால் வெடிஉப்பு கடும் சுண்ணமாகும்; இந்த சுண்ணத்தினால் ரசம் சுண்ணமாகும் நாகமும் கட்டும். ரசத்திற்கு ஏழுசட்டை உண்டு-(சட்டை என்பது அதிலுள்ள கசடு; சட்டை கழலுதல் என்பது அதன் உண்மையான பொலிவு, தூய்மை இவைகள் உண்டாதல்.) இந்த ஏழு சட்டைகளும் கழல புகைநீரை (திராவகம்) விட்டு அரைக்க கழலும்.

பித்தளைச்செம்பு

115. பித்தளை ஒரு சேர் அளவு எடுத்துக்கொண்டு அதை ஒரு துணியில் கட்டி ஒரு முழ ஆழத்திற்கு குழி தோண்டி அதில் கட்டிய துணியை வைத்து மூடி மேலே தீ இட்டு எரித்தல் முழப்புடமாகும். இப்படி எரித்து எடுக்க பித்தளை கறுப்பாக இருக்கும். பித்தளையை பீங்கானில் போட்டு திராவகத்தை விட்டு பார்த்திட நீலநிறமாக காணும். பித்தளை திராவகத்தில் கரையும் வரை வைக்கவும்.

116 பித்தளை கரைந்த பீங்கானை உமி நெருப்பில் வைத்து எரித்து எடுத்திடு, இதை கல்வத்தில் போட்டு கந்தகம் இரண்டு எடை சேர்த்து அரைத்து வில்லைசெய்து சூரியனில் காயவை, பிறகு காயவைத்த வில்லைகளை ஒட்டில் வைத்து புடமிட்டு எடுத்து இதனுடன் காரம் கால்பாகம் சேர்த்து உருக்கிடு.

பஞ்சமித்திரம் இவையெனல்

117. உருக்கி பார்க்க செம்பாகிடும். இந்த செம்பை குகையில் வைத்து உருக்கி பஞ்சமித்திரமாகிய 1.நல்லெண்ணெய், 2.தேங்காய்ப்பால், 3. இலும்பைபூ சாறு, 4. பசுநெய், 5.தேன் இவைகளில் ஏழுமுறை காய்ச்சி தோய்த்திடு.

இப்படி ஏழுமுறை உருக்கி சாய்த்திட நல்ல சிவப்பாக உண்மையான செம்பாக இருக்கும். இந்த செம்பினை வெள்ளியில் எட்டுக்கு ஒரு பாகம் சேர்த்து தங்கத்தை அதற்கு சமஎடை சேர்த்து உருக்க எட்டரை மாற்று தங்கமாகும். இது உப்புக்கும் காவிக்கும் நன்கு புடம் இறங்கும்.

119. இந்த தங்கத்தை கொண்டு வாசி யோகம் பார்த்து சுழிமுனை வாசலை நோக்கி ஓம் என்ற எழுத்துடன் "உவ்" என்ற அட்சரத்தையும் அப்யாசித்து எட்டெழுத்தை நான்கு எழுத்துடன் சேர்த்து சாஸ்திரங்களை சோதனை செய்து அறிந்திடு.

120. நூலாகிய இந்தமதி வெண்பா வாழ்க!

மாமுனி மாதவர் வாழ்க!

புலத்தியர் வாழ்க!

தங்கமும் உருக்குமுறையும் வாழ்க!

வெடியுப்பும், கல்லுப்பும் வாழ்க!

இரசம் உண்டவர்கள் வாழ்க!

மதிவெண்பா உரை

முற்றும்

ஓம் சிவாயநம

இணைப்பு-4

குணபாடம்

குணபாடத்தின் முதன்மையாக இரண்டு பிரிவுகள் உள்ளன. தாது வகுப்பு என்றும், சீவ வகுப்பு என்றும் பிரிக்கப்பட்டுள்ளது.

1. தாது வகுப்பில் உலோகம், உப்பு, பாஷாணம், உபரசம் என்ற நான்கு பிரிவுகளாக உள்ளது.

2. சீவ வகுப்பில் உயிருள்ள சீவன்களின் இறகுகள், கொம்புகள், தந்தம், குளம்பு போன்றவைகள் பயன்படுகின்றன. மேற்கண்ட இவைகள் என்னென்ன என்பதை தெரிந்து கொண்டால் இந்நூல் மிக எளிமையானதாகவும் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையிலும் தெளிவாக இருக்கும்.

உலோகம் -11
காரசாரம் -25
பாடாணம்-64
உயரம் -120

220

தாது பொருட்களின் மொத்த தொகை 110 ஆகும். இந்த இருநூற்று இருபதுக்குள் அனைத்து வாதாங்கமும் அடக்கம். சீவவர்க்கத்தின் தொகுதியை தனியே காணலாம்.

உலோகம்-*11*

தங்கம், வெள்ளி, செம்பு, நாகம், எஃகு, இரும்பு, வெண்கலம், பித்தளை, தரா, காரீயம், வெள்ளீயம்.

மேலும் உலோகங்களை மூன்று உலோகம், பஞ்ச லோகம், ஏழுலோகம், எண் வகை உலோகம், ஒன்பது வகை உலோகம் இதையே நவலோகத்தில் என்று இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ளது. யூகிமுனி நூலில் பஞ்சலோகம் பற்றியும் வருகிறது. எனவே இது பயனுள்ளதாக இருக்கும்.

மூன்று வகை உலோகம் பொன், வெள்ளி, செம்பு என்பதாகும்.

ஐவகை உலோகம் *(பஞ்சலோகம்)*

பொன், வெள்ளி, செம்பு, ஈயம், வெண்கலம் என்பதாகும்.

ஏழுவகை உலோகம்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வெண்கலம், தரா ஆகியவைகள் ஏழுவகை உலோகங்களாகும்.

எண்வகை உலாகங்கள்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தராவங்கம், துத்தநாகம் இவை எண் வகை உலோகமாகும்.

நவலோகம் (ஒன்பது வகை உலோகம்)

பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, வெண்கலம், நாகம், வெள்வங்கம், கருவங்கம், இரும்பு என்பவை நவலோகம். மேற்கண்ட பட்டியல் ஒரு சில சித்தர் நூல்களில் சற்று மாறுபட்டும் காணப்படுகிறது.

உப்பு (காராசாரம்) 25

இந்த காராசார வகைகளில் இயற்கை உப்பு செயற்கை உப்பு என்று இரண்டு பிரிவுகள் உள்ளன.

செயற்கை உப்பு 15

துருசு, வெங்காரம், இந்துப்பு, டொட்டுலுப்பு, எவட்சாரம், நவச்சாரம், சத்திசாரம், ஏகம்பரச் சாரம், கெந்தியுப்பு, திலாலவணம், கெந்திலவணம், காய்ச்சு லவணம், பீடாலவணம், சிந்து லவணம், காசிலவணம்.

இயற்கை உப்பு-10

சூடன், சீனம், பூநீறு, வளையலுப்பு, பச்சை கற்பூரம், கல்லுப்பு, கறியுப்பு, பொன் அம்பர், கடல் நுரை, மீனம்பர்.

மேற்கண்ட செயற்கை உப்பு, இயற்கை உப்பு இரண்டும் சேர்த்து மொத்தம் இருபத்து ஐந்து ஆகும்.

பாடாணம்-64

இதிலும் இயற்கை பாஷாணம், செயற்கை பாஷாணம் என்று இரண்டு பிரிவுகள் உள்ளன அவை:-

இயற்கை பாடாணம்-32

சூத பாடாணம், கற்கடக பாடாணம், கோளகம், மிருதார் சிங்கி, கந்தகம், வீரம், வைகிராந்தம், தாலம்பம், அமிர்தம், சிரபந்தம், தொட்டி, குதிரை பல், சங்கு, கௌரி, துத்தம், பலண்டுறுகம், காந்தம், இலிங்கம், சரகாண்டம், தாளகம், சிலை, ஆவுபல், சலாங்கம், கற்பரி, கற்பாடாணம், கார்முகில், கச்சாலம், சீதாங்கம், சிலாமதம், அஞ்சனம், அப்பிரகம், வெள்ளை.

செயற்கை பாடாணம்-32

செப்புதொட்டி, புத்தோட்டு தொட்டி பொற்றொட்டி, எருமைதொட்டி, ஏமசிங்கி, இரத்த சிங்கி, மிருதாரு சிங்கி, சாதிலிங்கம்,

கருமுகில், தீமுறுகல், வெள்ளை, சவ்வீரம், கோழித்தலை கெந்தி, வாணக்கெந்தி, அரிதார வைப்பு, பவளபுற்று, கோடா சோரி, பஞ்ச பட்சி, குங்கும பாடாணம் இரத்த பாடாணம், துத்தம், இரசிதம் தைலம், சூத பாடாணம். நீலம், கந்தகம், சோர பாடாணம், காகம், இலவணம், நாக பாடாணம், இந்திர பாடாணம்.

செயற்கையாக செய்யப்படும் பாடாணங்கள் சில இயற்கையாகவும் கிடைக்கிறது. உதாரணமாக வெள்ளை பாடாணம், சூத பாடாணம், வீரம் போன்றவைகள் இயற்கையாகவும் கிடைக்கிறது. வைப்பு சரக்காகவும் செய்யலாகும்.

உபரசம்–120

காந்தம், துருசு, அப்பிரகம், பொன்நிமிளை, கலநார், கருங்கல், செங்கல், சுக்கான்கல், ஈரக்கல், சூடாலைக்ககல், கருடக்கல் இராசவர்த்தக்கல், பவழம், வயிடூரியம், பச்சை, நீலம், நாகர்வண்டு, கருவண்டு, ஆமை, உலர்மண், கற்சுவடு, ஓட்டின் தூள், கற்பூரச் சிலை, காவிக்கல், சுத்த மணல், செம்மண், சொன்னபேதி, கல்மதம், வயிரம், முத்து, நீலாஞ்சனக்கல், எறும்பு, மாக்கல், தெக்கல், பூநாகம், இந்திரகோபம், கோமேதகம், புஸ்பராகம், முட்டை, மயில், எலும்பு, நண்டு, நத்தை, மான்கொம்பு, கலைக்கொம்பு, மாட்டுக்கொம்பு, ஆட்டுக்கொம்பு, ஆனைக்கொம்பு, கோழிக் கால், மாட்டுக் கால், குருந்தகல், பன்றிக்கொம்பு, அஸ்திபேதி, மஞ்சட்கலட, தவளக்கல், மாங்கிசபேதி, சிட்டகல், வெள்ளை கல், சுக்கான் கல், சிலா வங்கம், செவ்வட்டை, செம்பு மண், மீன் எலும்பு, கத்தூரி, தேன், கடல்நுரை, மயிர், கரடி, மாந்தளிர்கல், படிகக்கல், தவளை, கடற்பாசி, சாளக்கிராமம், கழுதைவண்டு, நாகப்பச்சை, கருமணல், வங்கமணல், காந்தகல், ஏமச்சிலை, ஏமமண், நாகமணல், ஈயமணல், நாய்க்கட்டம், பன்றிமுள், எலிமுள், வங்கசிலை, நாகச்சிலை, மந்தாரச்சிலை, முட்சங்கு, மாங்கிசச்சிலை, மரகதம், குருவண்டு, கெண்டசிலை, காகச்சிலை, ஈயச்சிலை, இரசிதச்சிலை, முத்துசிப்பி, பல்லி, உலோக மணல், கிளிஞ்சில், செம்புமலை, உரம், வெண்கல மலை, வனப்பக்கல், வெள்ளிமணல், அயச்சிலைகல், திமிங்கிலம், பேரோசனை, தராமலை, காண்டமிருகக் கொம்பு, புற்றாம்பழம், குளவி கூட்டு மண், நாகச்சட்டை, புறாஎச்சம், மின்மினிப் பூச்சி, மாணிக்கம், வைகிராந்தம் அன்னபேதி, சாத்திர பேதி.

யூகிமுனிவரின் வாதாங்க நூலில் புடம்போடுவதற்கான குகை, எரு, புடம், எரிப்புத்திட்டம் போன்றவைகள் குறிப்பிடப்படுகிறது.

உதாரணமாக:- பஞ்சசுண்ண குகையில் வைத்து புடம்போடுக, கஜபுடம்போடுக, கமலக்கினியாக எடுத்திடுக என்று குறிப்பிடப்படுகிறது; அவை என்னென்ன என்று இப்பகுதியில் காணலாம்.

பஞ்சசுண்ண குகை

நண்டு, நத்தை, சங்கு, சிப்பி, முட்டை ஓடு இவைகள் ஐந்தையும் கல்வத்திலிட்டு எருக்கம்பாலால் அரைத்து வில்லை செய்து காயவைத்து புடம் போடுக.

புடம்போட்டு எடுத்துப் பார்க்க சுண்ணம்பாக இருக்கும், இதை கல்வத்தில் போட்டு வெண்கருவும், எருக்கம்பாலும், கற்சுண்ணாம்பு நீரும்விட்டு அரைத்து குகை செய்து குகையின் மேல் சில்லுசெய்து இதில் வைத்து புடம்போடவும். துவே பஞ்சசுண்ண குகை என்பதாகும்.

சீலை புடம் போடுவதற்குமுன் அகல், சட்டி போன்றவைகளில் சரக்குகளை இட்டு சீலை செய்தல் வேண்டும்.

ஒரு துணியில் நன்கு அரைத்த புற்று மண்ணை ஒரு பக்கமாக தடவி இரண்டு அகல் அல்லது சட்டி இணையும் இடத்தில் துணி சுற்றி காயவைத்தல் வேண்டும். இப்படி செய்யும் சீலைக்கு "மண் சீலை" என்று பெயர்.

சிலபுடத்திற்கு மண் சீலைக்கு பதில் சுண்ணம், மாயு, செம்மண் போன்றவைகளையும் சீலை செய்ய வேண்டும்.

வரட்டி:- வரட்டி இரண்டு பலம் எடை உள்ளதாக இருக்க வேண்டும். அரை அங்கல கனமும் பனிரெண்டு அங்குல அகலமும் உள்ளதாக இருக்க வேண்டும்.

எரிப்பு:- தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினி என்று மூன்று வகையாக உள்ளது.

புடம்:- வரட்டியால் எரிக்கும் புடம் இது ஏழு வகை படும்.

காடை புடம்	-	எரு ஒன்று
கவுதாரி புடம்	-	எரு மூன்று
குக்குடப் புடம்	-	எரு பத்து (சேவல் புடம்)
மணல்மறைவு புடம்	-	எரு தொண்ணூறு
வராக புடம்	-	எரு ஐம்பது
கெஜபுடம்	-	எரு ஆயிரம்
பூமிபுடம்	-	ஆட்டெரு

ஆட்டெரு அகலம் நான்கு விரற்கடை, நீளம் நான்கு விரற்கடை இருக்க வேண்டும்.

இதை தவிர மற்றும் சில புடங்கள் உள்ளன அவை:-

பனிப்புடம்	-	பனியில் வைத்தல்

பருவபுடம் - பௌர்ணமியில் வைத்தல்

பட்டைபுடம் - மரத்தை துளைத்து சரக்கை வைத்தல்

உமிப்புடம் - உமிக்குள் வைத்தல்,

அமாவாசைபுடம் - அமாவாசையன்று வைத்து எடுத்தல்

சந்திரபுடம் - சந்திரனில் வைத்தல்,

சூரியபுடம் - சூரியனில் வைத்தல்,

குணபாடமாகிய இந்த பகுதியில் இந்த யூகிமுனிநூலின் அத்தனை செயல்முறைகளின் சரக்கு, புடம், எரிப்பு போன்றவற்றை விளக்கியுள்ளேன். இதனை உபயோகித்து நூலினை தெளிவுபடுத்தி கொள்க.

குறிப்பு:-

இந்நூலில் நாறும்பூ, நறும்பு, நாற்றம் போன்ற வார்த்தைகள் காணப்படுகின்றன; இதில், ஒன்று பல பொருட்கள் உள்ளன.

நாறும்பூ என்றால் அரளி, நாறுமரம், இரும்பு இன்பல பொருட்களும் உள்ளன.

நறும்பு - இதற்கும் பல பொருள் உண்டு.

நாற்றம் - வசம்பு, கந்தகம், கல், அங்கம்பிசை போன்ற பொருள்கள் உண்டு.

தேவி - சீதேவி, கந்தகம், மனோசிலை.

ஆதி - இரும்பு, பாதரசம், காய்ச்சற் பாஷாணம், மிருத பாஷாணம்.

வன்னி - சாதிலிங்கம், கொடிவேலி, தணக்கு வஸ்து, மது, கடல்நுரை.

சோரம் - துத்தநாகம், கல்மதம்.

போன்ற பல பொருள்கள் உள்ளதால் வாதியர்கள், நூல் படிப்போர் ஆராய்ந்து அறிக!

"சாரம்" என்று இந்நூலில் நிறைய இடங்களில் காணலாம். நவச்சாரத்தையே பெரும்பாலும் குறிப்பிட்டாலும்-எவட்சாரம், ஏகம்பரச்சாரம், காசிச்சாரம், சக்கிசாரம் போன்ற பல வகைகள் உள்ளன. இதுவும் ஆய்வுக்குறியதே.

காரம்-வெங்காரம், சீனாகாரம் இரண்டு உள்ளது. இதில் வெங்காரமே பெரிதும் குறிப்பிடப்படுகிறது. சீனகாரத்தை சீனம் என்று குறிக்கப்படும்.

தாரம்-அரிதாரம், தாளகம், இவை யாவும் ஒரே பொருள்தான்.

வேறு பெயர்கள்

சீனாக்காரம் - படிகாரம், சீனம், படிகி

சூடன் - கற்பூரம், பூரம், தீபம்

பச்சை கற்பூரம் - கதலியுப்பு, சகி, சந்திரன், பச்சைபூரம், பூரம்

பூநீறு - பூவழலை

துருசு - நீலன், கண்டர்

வீரம் - சவ்வீரம், சரக்கு சுண்ணம், பறங்கி பாஷாணம்

லிங்கம் - ஜாதி லிங்கம், காஞ்சனம், வன்னி தூரம்

சூதம் - இரசம், சூத்திரன், பாதரசம், ஈசன், ஆதி, சிலை, சிவன் விந்து செற்குறி,தூமம் போன்ற இன்னும் பல பெயர்கள் உள்ளன.

கந்தகம் - நாதம், பீஜீம், செல்விவிந்து, சத்திபீசம்நாதம், நாற்றம்.

கௌரி - சிவகாமி, ஈஸ்வரி

தாளகம் - மாலம், அரிதளம், அரிதாரம், பொன்வர்ணி, மால்தேவி.

மனோசிலை - சிலை, நான்முகன், தேவி, வில், வெள்ளச்சி, தாமரைவாசினி.

மிருதார்சிங்கி - சிங்கி, சிங்கிபாடாணம்.

வெள்ளை பாடாணம் - வெள்ளை, சங்கு பாஷாணம்.

நவச்சாரம் - சல்லிகை, இஷ்டிகை குளிகை, படு.

வெங்காரம் - பொரிகாரம், காரம், உருக்கினம், உருக்கு, மித்திரன்.

வெடியுப்பு - பொட்டிலுப்பு, பூமிகூர்மை, படைராசன்.

உலோகங்கள்

அயம் - இரும்பு, கரும்பொன், ஆதி, கருப்பி, வாழ்பூமி நாதம்.

எஃகு - ஒழுகரை, மணிவாள், கிட்டலோகம், தீஷணம்.

கருவங்கம் - ஈயம், காரியம், கருநாகம்.

காந்தம் - சூத அங்குசம், நவலோகத் துரட்டி.

செம்பு - இரவி, தாமிரம், பரிதி, வடு, விடம், கற்பம்.

பித்தளை - ஆரகூலம், இரதி, மாயாபுரி, சீருணம்.

பொன் - பீதகம், காஞ்சனம், தனம், ஏமம், சுவர்ணம், காரம், கனகம், பீதம், தேசிகம், ஈகை, ஆடகம், தபனியம், ஈழம் இன்னும் பல பெயர்கள் உண்டு,

வெண்கலம் - கஞ்சம், தாரம், உறை.

வெள்வங்கம் - வெள்ளியம், வெண்ணாகம், குடிலம், மாரசம்.

வெள்ளி - அரன்பதி, வெண்தாது, தாரம், வெண்பொன் இரசிதம்,

சுக்கிரன்.

இப்படி ஒரு பொருளுக்கு பெயர்கள் இருப்பதால் தகுந்த இடத்தில் பொருத்தி பார்ப்பது ஆய்வுக்குரியதாகும்.

நிறுத்தளவைகள்–(எடை)

இந்நூலில் பழங்காலத்து வழக்கத்தில் இருந்த பல அளவைகளும் எடைகளும் கூறப்பட்டுள்ளது. இதை அங்கங்கே எழுதுவதை காட்டிலும் ஒரு அட்டவணையாக தந்தால் உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பதனால் இதை தருகிறோம்.

1 உளுந்து எடை	-	2 கிரெயின் நிறை ஆகும்
1 குன்றி எடை	-	2 கிரெயின் நிறை ஆகும்
3 3/4 குன்றி எடை	-	1 பண எடை
32 குன்றி	-	1 வராகன் எடை (1டிராம்)
40 குன்றி	-	1 கழஞ்சு
10 வராகன்	-	1 பலம்
1 தோலா	-	1 ரூபா எடை (180 கிரெயின்)
8 பலம்	-	1 சேர்
40 பலம்	-	1 வீசை (3 பவுண்டு, 2 அவுன்ஸ்)
50	-	1 தூக்கு
2 தூக்கு	-	1 துலாம்

இது ஒரு பழைய நூலில் உள்ள ஒரு அளவையாகும்.

எரிப்புவகை–விறகுகள்

மருந்துகளுக்கு தகுந்தவாறு விறகை உபயோகித்தல் வேண்டும்.

வாதநோய்க்கு மருந்து தயாரிக்க:- மாவிலங்கம், வாகை, நுணா, வன்னி போன்ற விறகுகளை பணன்படுத்த வேண்டும்.

பித்த நோய்களுக்கு:- விளா, நெல்லி, இலந்தை, வேம்பு போன்ற விறகுகளை பயன்படுத்த வேண்டும்.

சிலேத்தும நோய்களுக்கு:- உசிலமர விறகு, வேலமர விறகு, கொன்றை, வேங்கை போன்ற விறகினை பயன்படுத்துதல் வேண்டும்.

இந்த வாத, பித்த, சிலேத்துமத்திற்குள் அனைத்து நோய்களையும் சித்தர்கள் பிரித்து நாடி பார்த்து அறிந்து கொள்கின்ற முறையை வகுத்துள்ளனர்.

பாத இரசம் சேர்த்த மருந்துகளுக்கு:- வேம்பு, பனை, தென்னைமர

விறகுகளையும், அயம் சேர்த்த மருந்துக்கு:- வேலமர விறகையும், வேங்கைமர விரகினையும் பயன்படுத்தலாம்.

அக்கினி:- மருந்து செய்யும் எரிப்பு தீயின் அளவுகளை நான்கு பிரிவுகளாக பிரித்துள்ளனர்.

தீபாக்கினி	1 கட்டை இரண்டு விரர்கடை உள்ளதாக இருக்க வேண்டும்.
கமலாக்கினி	2 கட்டை "
கதலியாக்கினி	3 கட்டை "
களாக்கினி	4 கட்டை "

குணபாடம் முற்றிற்று

தாமரை
நூலகம்